



கலீல் கிப்ரானின்
முறிந்த சிறகுகள்

ஆ.மா. சகதீசன்



ஆ.மா. சகதீசன். கலீல் கிப்ரானின் பித்தர் என்று கூறுவதை விடப் பக்தர் என்று கூறுவதே சரியாக இருக்கும்.

அவருக்கு கிப்ரானே தெய்வம். அவருடைய நூல்களைப் படிப்பதே ஆராதனை.

"கலீல் கிப்ரானே! உங்களை ஒரு தமிழனாக்கத் துடிக்கிறேன். தமிழ்த் தாய்க்கு உங்கள் நூல்கள் அனைத்தையும் அணிகலனாக்கி மகிழ வைக்க ஏங்குகிறேன்" என்கிறார் சகதீசன்.

அந்த ஏக்கம் வெறும் ஏக்கமாகவே நின்றுவிடாமல் கிப்ரானின் 20 நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். கிப்ரானை அதிகமாக மொழி பெயர்த்தவர் அவர்தாம்.

ஆ.மா. சகதீசனின் இந்த மொழி பெயர்ப்பு எளிய, அழகிய நடையில் அமைந்திருக்கிறது. அவருக்குத் தமிழ் இலக்கிய உலகு நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

- கவிக்கோ அப்துல் ரகுமான்

கலீல் ஜிப்ரானின்
முறிந்த சிறகுகள்

(நான்கு நாடகங்களும்)

1. The Broken Wings.
2. The Drama of Life.
3. Gibran Jaico Reader
4. The spiritual sayings.

ஆசிரியர் :

தமிழில்:

ஆ.மா. சகதீசன்

A.M. JAGADESAN
Cell : 9486691034

குமாரசாமி பதிப்பகம்

224, அன்னை சத்யா நகர், 6-வது தெரு,
நெசப்பாக்கம், மேற்கு கே.கே. நகர்,
சென்னை-600 078.

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	கலீல் ஜிப்ரானின் முறிந்த சிறகுகள், நாடகங்கள்
ஆசிரியர்	:	ஆ. மா. சகதீசன்
மொழி	:	தமிழ்
உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
நூல்வகை	:	நாவல், நாடகம்
பதிப்பு	:	முதல் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2015
புள்ளி	:	11
தாள்	:	13.7 கி.கி. வெள்ளைத்தாள்
பக்கம்	:	208
அளவு	:	1/8 டெம்மி
கட்டுமானம்	:	சாதாரண பைண்டிங்
வெளியீடு	:	குமாரசாமி பதிப்பகம் 224, அன்னை சத்யா நகர், 6-வது தெரு, நெசப்பாக்கம், மேற்கு கே.கே. நகர், சென்னை-600 078.
ஒளி அச்சு	:	புஷ்பலதா கிராபிக்ஸ் மேற்கு மாம்பலம், சென்னை-33.
அச்சிட்டோர்	:	ரவி ராஜ் ஆப்செட் சென்னை - 600 014.

விலை : ரூ. 130

☆ முறிந்த சிறகுகளைத் தொடுகிற நீங்கள் காதலில் தோற்றுப்போன ஆண்களா?... அப்படியென்றால் உங்களை விட்டுப் பிரிந்து போன காதலிக்கு எப்படியாவது இந்த நூலை வாங்கிப் பரிசளியுங்கள்.

☆ நீங்கள் பெண்களா...? கை கூடாமற் போன உங்கள் காதலின் மேன்மையை அறிந்து கொள்ள இந்த நூலை வாங்கி உங்களின் பழைய காதலருக்குப் பரிசளியுங்கள்.

கண்ணீர்க் காவியம்

கவிக்கோ அப்துல் ரகுமான்

கலீல் ஜிப்ரான் ஒரு கவிஞானி. ஞானக் கடலில் மூழ்கி அற்புதமான முத்துக்களை

எடுத்துவந்து உலகத்திற்குத் தந்தவர். அவருடைய எழுதுகோல் வர்ணக் காவியங்களை

வரைந்தது. அவருடைய தூரிகை பேசும் ஓவியங்களைத் தீட்டியது.

குர்ஆனுக்கு அடுத்ததாக அரபி மொழியை உலகறியச் செய்தவர் ஜிப்ரான்.

கிறித்தவக் குடும்பத்தில் பிறந்தாலும் மூட மதக் கருத்துக்களைக் கடுமையாகச் சாடிய புரட்சிக்

காரர் அவர். அதனால் அவர் மத விலக்கம் செய்யப்பட்டார்.

உலகத்தில் உள்ள இலக்கிய அன்பர்களின் இதயங்களிலெல்லாம் விளக்கேற்றி வைத்த

அவருடைய நூல்களை இருட்டு மனம் படைத் தோர் எரித்துச் சாம்பலாக்கினர்.

அவர் எழுதுகோல் ஆட்டோமன் பேரரசையே அசைத்தது.

ஆனால் அதே நேரத்தில் மொழி வீணையில் அமர கானங்களையும் மீட்டியது.

அவர் ஓர் அழகான உலகத்தைக் கனவு கண்டார். அது காதலால் ஆளப்படும் உலகம்.
அவர் எழுத்து நம்மை ஞானநீராட் டுகிறது; உயர்த்துகிறது.

வாழ்க்கையின் பேருண்மைகளை முகத்திரை விலக்கி, விளக்கேற்றி உலகத்திற்குக் காட்டிய ஞானி அவர்.

''அவருடைய பேராற்றல் ஒரு பெரிய ஆன்மிக அணைக்கட்டிலிருந்து வருகிறது. அப்படி இல்லாதிருந்தால் அது அனைவருக்கும் பொதுவாகவும் சக்தி மிக்கதாகவும் இருந் திருக்காது'' என்று கிளாட் பிரேக்டன் என்ற அறிஞர் ஜிப்ரானைப் புகழுகிறார்.

''உன் நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. நீ உன் நாட்டுக்கு என்ன செய்தாய் என்று எண்ணிப்பார்'' என்ற வாசகத்தைக் கூறியதற்காக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜான் கென்னடியை உலகம் புகழ்கிறது. ஆனால் இந்த வாசகத்திற்குச் சொந்தக்காரர் கலீல் ஜிப்ரான்.

''மனித இதயங்களைப் பற்றியும், நம்மைச் சூழ்ந் துள்ள மர்மங்களைப் பற்றியும் இத்தனை ஆழமான உட்பார்வையோடு பார்த்தவர் இனி பிறப்பதரிது'' என்று அவரை வியந்து பாராட்டுகிறார் ஓஷோ.

எனும் ரஜனீஷ்

அவருடைய 'கண்ணீரும் புன்னகையும்' படிக்காத கவிஞர்கள் இருக்க முடியாது.

தீர்க்கதரிசிகள் வேதங்களைக் கொண்டு வருவார்கள். ஆனால் ஜிப்ரானுடைய 'தீர்க்கதரிசி'யோ வேதமாகவே இருக்கிறது. அந்நூல் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுப் பல லட்சம் பிரதிகள் விற்கப்படுகிறது.

அவருடைய 'முறிந்த சிறகுகள்' லைலா-மஜ்னு, ரோமியோ-ஜூலியட் போன்ற காதல் காவியம் என்றாலும் அதில் காணப்படும் காதலின் தெய்வீகப் புனிதத்துவம் மற்றக் காவியங்களில் காண முடியாது.

செல்மா கராமி ஜிப்ரானின் முதல் காதலி அவள்தான் அவரைக் கவிஞனாக்கினாள். ஆனால் அந்தக் காதல் கைகூடவில்லை. காதல் வானத்தில் கானம் பாடிப் பறந்த ஜிப்ரானின் சிறகுகள் விதியின் கரம் கருணையின்றி முறித்துப் போட்டது.

ஒவ்வொருவருக்கும் ஒரு செல்மா இருப்பாள்.
ஆனால் ஜிப்ரான் தம் கண்ணீரைக் காவியமாகியது போல் மற்றவர்களால் முடியுமா என்பது ஐயமே.

அந்தக் கண்ணீர்க் காவியம்தான் 'முறிந்த சிறகுகள்! பெயர் 'முறிந்த சிறகுகள்' என்றிருந்தாலும் இலக்கிய வானத்தில் மிக உயரமாகப் பறந்த நூல் இது.

ஆ.மா. சகதீசன் கலீல் ஜிப்ரானின் பித்தர் என்று கூறுவதை விடப் பக்தர் என்று கூறுவதே சரியாக இருக்கும். அவருக்கு ஜிப்ரானே தெய்வம். அவருடைய நூல்களைப் படிப்பதே ஆராதனை.

''கலீல் ஜிப்ரானே! உங்களை ஒரு தமிழனாக்கத் துடிக்கிறேன். தமிழ்த் தாய்க்கு உங்கள் நூல்கள் அனைத்தையும் அணிகலனாக்கி மகிழ வைக்க ஏங்கு கிறேன்'' என்கிறார், சகதீசன்.

அந்த ஏக்கம் வெறும் ஏக்கமாகவே நின்றுவிடாமல் ஜிப்ரானின் 24 நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஜிப்ரானை அதிகமாக மொழிபெயர்த்தவர் அவர்தாம்.

இப்போது 'முறிந்த சிறகு'களை நேஷனல் பப்ளிஷர்ஸ் வெளியிடுகிறார்கள். ஆ.மா. சகதீசன் மொழிபெயர்த்த ஜிப்ரானின் அத்தனை நூல்களையும் வெளியிடும் திட்டம் நேஷனல் பப்ளிஷர்ஸுக்கு இருக்கிறது என்பதை அறிந்து மகிழ்கிறேன்; அவர்களைப் பாராட்டகிறேன்.

ஆ.மா. சகதீசனின் இந்த மொழிபெயர்ப்பு எளிய, அழகிய நடையில் அமைந்திருக் கிறது. அவருக்குத் தமிழ் இலக்கிய உலகு நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

-கவிக்கோ அப்துல் ரகுமான்

கலீல் ஜிப்ரான்

"இலக்கிய விமர்சகர்"
சே. சேவற்கொடியோன்

கோவை

"நாடு கடத்தப்பட்டுத் தொலை
தூரத்தில் தவித்த பொழுதும்
தன் தாய் நாட்டையே எண்ணி
மகிழ்ந்து, தன் லெபனான்
பள்ளத்தாக்குகளையே
உள்ளத்தாக்குகளாக்கி
உயிர்க்குலம் சிறக்கக் கவிதைகளை,
ஓவியத்தை, தத்துவத்தைத்
தந்தவர் கலீல் ஜிப்ரான். அவரது
'முறிந்த சிறகுகளின்' துணையால்
காதல் வானத்தில் பறக்காத
காதலர்கள் உலகத்தில் இல்லை.
அவரது கண்ணீரையும், புன்னகையையும்
களவாடாத மேதாவிகளில்லை.
இதய தாள லயங்களில்
எதிரொலிக்கின்ற வாழ்க்கைப்
பாடல்களை ஸ்வரப்படுத்தி
ரத்த தமணிகளைச் சங்கீதம்
பாட வைத்தவர் கலீல் ஜிப்ரான்"

மனித வாழ்வும் முறிந்த சிறகும்

கவிஞர் அனிதா
திருப்பூர்

கலீல் ஜிப்ரானை நான் படிக்கத் தொடங்கியது 1983-ஆம் ஆண்டின் ஒரு கோடைக்காலப் பொழுதில் தான். அதற்கு முன்பெல்லாம் கலீல் ஜிப்ரான் என்கிற பெயரைக் கேட்கும் போதெல்லாம் ஒரு வசந்தமான கவிதை அழகில் மயங்கிப் போகும் வாசகனாகவே வாழ்ந்திருக்கிறேன்.

எல்லாக் கவிஞர்களிடமும் துயரமும், வேதனையும் வாழ்க்கையின் முறிந்த சிறகுகளாய் அவர்களுடனே வாழ்கிற போது-ஜிப்ரானிடமும் அவை வாழ்ந்திருக் கின்றன.

ஆகவே தான் ஜீப்ரானின் எல்லா எழுத்துக்களிலும் துயரத்தின் சாயலும் தொடர்ந்து வருகிறது.

இவருடைய முறிந்த சிறகுகளுக்கு இணையான ஒரு காதல் காவியத்தை எந்தப் பாடைப்பாளியும் இதுவரை படைத்த தில்லை. இந்த நூலைப் படிக்கிற எல்லோருமே ஜிப்ரானிடம் இதயத்தைப் பறி கொடுத்தே ஆக வேண்டும்.

காதலில் தோற்றுப் போனவர்கள் படைப்பாற்றல் மிக்க வர்கள் என்பதற்கு ஜிப்ரானே ஆதாரம். இவருக்கு கிடைத்த செல்மா கராமி மாதிரி பெண்கள் எல்லா படைப்பாளி களுக்கும் கிடைத்திருந்தால் உலகத்தின் இலக்கியச் சட்டம் வேறு மாதிரி அமைந்திருக்கும்.

வார்த்தைகளின் ஒளியை வெகு இயல்பாக உலகத்தின் மீது பாய்ச்சியவர் ஜிப்ரான்.

''ஒரு பெண்ணின் பார்வை ஆணிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். அதே பெண்ணின் ஒரு சொல் அவனை செல்வந்தனாக்கும். ஆனால் ஆணின் ஒரே ஒரு வார்த்தை அவனை வறியவனாக்கி விடும்.'' என்பார் ஜிப்ரான்.

ஜிப்ரான் செல்மாவை மணம் முடிக்க நினைக்கிறார். காதலிக்கிறார். உலகத்தின் பல மூலைகளுக்கும் காதல் என்பது ஒன்றுதானே. அதனால் மணம் முடிக்க முடிவ தில்லை. பின்னர் செல்மா வேறு ஒருவரின் மனைவியா கிறாள். கட்டிய கணவனோ குடிகாரன், போக்கிரி, பணத்திமிர் பிடித்தவன். ஆயினும் செல்மாவின் மனதில் ஜிப்ரானின் மேல் ஆழ்ந்த அனுதாபங்கள் வளருகிறது. அவள் தன் நினைவை வைத்துக் கொண்டு சக்தி வாய்ந்த கவிஞனாக, ஓவியனாக, ஜீப்ரான் மாற வேண்டும் என விரும்புகிறாள்...! ஜிப்ரான் எப்படி மாறுகிறார்? செல்மா என்ன ஆகிறாள்...?

இதைச் சொல்வதற்காக தனது எழுதுகோலை எடுக்கிற ஜிப்ரானின் சிந்தனைத் தேர் செல்கிற இடங்களை நீங்களும் உங்கள் மனத்தால் பார்க்கிற போது, உங்களுக்கு மேலெழுப்பிய வினாக்களுக்கு மட்டுமே விடை கிடைக்கும் என எண்ண வேண்டாம்.

வாழ்க்கையின் சகல அம்சங்களையும் குறித்து உங்களுக்கு ஏற்படுகிற எல்லாவித சந்தேகங்களுக்கும் சேர்த்தே விடை கிடைக்கும்.

எல்லா மனித இதயத்துள்ளும் ஒரு முறிந்த சிறகைப் பார்க்கலாம். இதனை ஜிப்ரான் பார்த்த விதமே இந்த மிகச் சிறந்த நூலாக வந்திருக்கிறது.

ஜிப்ரான் ஓவியத்தில், தத்துவத்தில், கவிதையில், உருவகக் கதைகளில் மிகச் சிறந்து விளங்கினார்.

இவரது இலக்கிய வெளிப்பாடுகளில் ஒவ்வொரு வரியும் மிகச் சிறந்த வைரங்களாய், கலைப் பெட்டகமாய்த் திகழ்ந்தது.

மதம் என்கிற அபினி மனிதனை எப்படியெல்லாம் மயக்கும் என்று எழுதுகிற போது கூட எங்கோ இருந்து கொண்டு இந்திய மண்ணின் மத பீடத்தையும் தன் எழுத்தால் அசைத்துக் காட்டியவர் ஜிப்ரான்.

ரஷ்யப் புரட்சியை வரவேற்று தமிழ் நாட்டில் இருந்து கொண்டு பாரதி கவிதை பாடிய அதே காலத்தில் ஜிப்ரான் கிறித்துவ மதத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். இவ்வளவுக்கும் 'மரோனைட் கிறுத்துவர்' என்கிற பிரிவைச் சேர்ந்த ஜிப்ரானின் தாய் கிறித்துவ மதம் பரப்பும் பெண் பாதிரியாகவே இருந்திருக்கிறார்.

புதிய கண்டுபிடிப்புகளைச் சொன்ன விஞ்ஞானி களின் கண்ணைத் தோண்டுகிற சமுதாயம்- ஜிப்ரானின் நூல்களை பெய்ரூட் நகரத் தெருக்களில் வைத்து தீ வைத்துக் கொளுத்தியது.

ஒரு உன்னதமான ஞான ஆசிரியரின் கருத்துகளை பெய்ரூட் நகரம் தீ வைத்துக் கொளுத்தியதாலோ என்னவோ... இன்று வரை அந்த நகரம் தீ நாக்குகளின் கோரப்பிடியில், துப்பாக்கிக் குண்டுகளின் ஓங்கிய சத்தத்தில் சிக்கித் தவிக்கிறது.

மிக உயர்ந்த சிடார் மரக் காடுகளில், சலசலக்கும் ஓடைகளில், லெபனான் பள்ளத்தாக்குகளில் பரவி யிருக்கவேண்டிய ஜிப்ரானின் ஞான ஒளி-பரவாமல் போனதற்கு லெபனான் மக்களே காரணகர்த்தாக்கள்.

இப்போதைய லெபனான்-பெய்ரூட் விமான நிலையத் திற்கும் அதன் சாலைக்கும் ஜிப்ரானின் பெயரை வைத்திருக் கிறார்கள். அதை விட ஜிப்ரானின் எண்ணங் களை உலக மெங்கும் பரப்ப வழி செய்திருக்கலாம்.

மற்ற எல்லா மொழிகளிலும் ஜிப்ரானின் நூல்கள் வந்திருக்கும் போது தமிழில் வரவில்லையே என்கிற எண்ணத்தை ஆ.மா. சகதீசன் போக்கியிருக்கிறார். வி.ஸ. காண்டேகருக்கு ஒரு கா. ஸ்ரீ. ஸ்ரீ. என்றால் ஜிப்ரானுக்கு ஒரு ஆ.மா. சகதீசன்...

இதனை தமிழ் உலகம் நன்கு உணர்ந்து செயல் பட்டால் ஜிப்ரானின் சிந்தனைகளைப் படித்து நாமும் வளம் பெறலாம்.

படிப்பதற்கு முதலில் சிரமமாக இருக்கலாம். ஆனால் படிக்கப் படிக்க இந்நூலின் அழகை, உவமையை, காதலை நீங்கள் உங்கள் இதயத்திற்கு நெருக்கமாகிக் கொள்வீர்கள். படியுங்கள்.

மனித வாழ்வு கூட முறிந்த சிறகு தானே?

கவிஞர் அனிதா
திருப்பூர்

கலீல் ஜிப்ரான் கூறுகின்றார்

எனக்கு வயது 18. செல்மா கராமி எவ்வளவு அழகான மடந்தை. என் காதல் கண்களைத் திறந்தவள் அவளே! ஆத்மாவைத் துடித்தெழச் செய்தாள். அவள் விரல்களிலே என்ன தீச்சுடர் இருந்ததோ! காதல் நந்தவனத்திலே என்னை அழைத்துச் சென்று ஒரு உலகையே காண்பித்தாள். அங்கே கழித்த நாட்கள் கனவுகளே!

செல்மா கராமி, அவள் அழகின் உருவம்; காதலின் உட்பொருளை உணர்த்தினாள்; இரகசியங்களை வெளிப் படுத்தினாள். என்னைக் கவிஞனாக்கினாள்.

முதற் காதல்! மறக்க முடியாத முதல் காதல்; நினைக்கவே மகிழ்ச்சி; உணர்வே கவிதைகளின் கரு! நினைக்க நினைக்க இனிக்கும்; சுவைக்கும்.

ஒவ்வொரு இளைஞனுக்கும் ஒரு முதல் காதலி இருப்பாள்; அவனை இரவிலும் பகலிலும், நினைப்பிலும் கனவிலும் உயிரூட்டி ஆனந்தக் கவிதைகளின் நீர் ஊற்றாய்த் திகழ்வாள்.

நான் கற்பனையில் மிதந்தேன்; இயற்கையைத் தேடினேன்; நூல்களிலே ஆழ்ந்தேன். எல்லா இடங் களிலும் செல்மா கராமி தோன்றினாள்; முத்தமிட்டாள். காதிலே கவிதை புகன்றாள்; ஒளியூட்டினாள். காதல் கோபுரமாய் உயர்ந்தாள்.

ஆதாமுககு ஏவாள். ஜிப்ரானுக்கு செல்மா! ஏவாள் ஆதாமை சொர்க்கத்திலிருந்து பூவுலகிற்கு அழைத்து வந்தாள். செல்மா என்னை உலகினின்று சொர்க்கத்திற்கே அழைத்துப் போனாள்.

என் வாழ்வும் ஆதாமின் வாழ்வு போலவே அமைந்தது. காதல சொர்க்கத்தை இழந்தேன். வீழ்ந்தேன். தேடுகின்றேன்; வாடுகின்றேன்.

'செல்மா' என்று வாழ் நாளெல்லாம் கூவுகின்றேன்.

எஞ்சியது அவள் நினைவு, கண்ணீர், ஏக்கம், துயரம், வேதனை. என் அழகு செல்மா இறந்து விட்டாள். என் காதல் உள்ளம் உடைந்தது. உயர்ந்த சைப்ரஸ் மரக் காட்டிலே அவள் கல்லறை. அது அசையாது; நான் உலவுகின்றேன்.

அவள் உடம்பின் தாதுப் பொருள்கள் மண்ணோடு மண்ணாகி மரங்களை வளர்த்து ஓங்கி உயர்கின்றது.

என் இதயமான கல்லறையிலே செல்மா அழகு, காதல், ஏக்கம், மரணம் எல்லாவற்றையும் வளர்க் கின்றாள்; வான்முட்ட உயர்கின்றன.

ஓ என் இனிய இளைய 'பெய்ரூட்' நண்பர்களே! அடர்ந்த மரங்கள், அமைதியான அவள் கல்லறை, நில்லுங்கள். என் பெயரைச் சொல்லுங்கள். கட்டாயம் செல்மாவிற்கு கேட்கும்.

இங்கே தான் கடல் கடந்து வாழும் கலீல் ஜிப்ரானின் நம்பிக்கை, காதல், இன்பம், சுகம், எல்லாம் புதைக்கப் பட்டுள்ளன! செல்மா, உன்னையே எண்ணி எண்ணி கண்ணீர்க் கடலிலே மிதக்கின்றேன். நீயே நெஞ்சில் நிறைந்தாய்; உயிரில் ஊறி விட்டாய்! கல்லறையைத் தொட்டு முத்தமிடுங்கள்! மலர் மாலை சூடி வாழ்த்துங்கள்.

'செல்மா! செல்மா!'' என்று கூவுகின்றான் ஜிப்ரான் என்று முழங்குங்கள்.

-கலீல் ஜிப்ரான்

என்னுரை

நீங்கள் எத்தனையோ காதல் கதைகளை, நாவல் களை படித்திருப்பீர்கள். லைலா-மஜ்னு, அம்பிகாபதி- அமராவதி, சீசர்-கிளியோபேட்ரா, ரோமியோ-ஜுலியட் எனப் பலப் பல முறிந்த சிறகு களைத் தமிழில் பேராசிரியர் பெருமாள், கவிரத்ன நலங்கிள்ளி, கவிஞர் முழு முதலோன் (கி. கணபதி) இவர்கள் தமிழில் மொழியாக்கம் செய்து நூலாக வெளி வந்துள்ளது.

நானும் கலீல் ஜிப்ரானின் 25 நூல்களையும் மொழி பெயர்க்க வேண்டும் என்ற வெறியில் அரக்கோணம் கவிரத்ன நலங்கிள்ளியும் பங்கு போட்டுக் கொண்டு மொழி பெயர்த்தோம். நான் 20 நூல் களையும், அவர் 5 நூல்களையும் தமிழாக்கினோம்.

என் மொழி பெயர்ப்பு மிகவும் சுருக்கமாகவும், நீண்ட சொற்றொடர்கள் இன்றி அழுத்தமாக அழகை உள்ளத்தில் பதியும்படி அமைந்துள்ளது எனலாம்.

எந்த வயதினரும் படித்து ரசித்து சுவைக்க முடியும். 'முறிந்து சிறகுகள்' என்ற தொடர் உதயமாகக் காரணமாக இருந்தவர் கலீல் ஜிப்ரானின் தாயார் 'கமீலா'.

அழகு, அறிவு, அடக்கம், ஆற்றல், பணிவு, தாய்மை, தெய்வீகத் தன்மை, ஒழுக்கம், தியாகம்,

இனிய குரல் வளம், இசை ஞானம் எல்லாம் ஒழுங்காக பெற்ற தாய்தான் கமீலா.

மேரி எலிசபெத் அக்ஸல் என்பவர் லெபனான் நாட்டுப் பெண்மணி. ஜிப்ரானை விட 10 முத்தவர்., பள்ளிக்கூட முதல்வர் சொந்தமாகபாஸ்டன் நகரில் பள்ளிக்கூடம் நடத்தியதும, கலீல் ஜிப்ரானின் உயர்வு திறமை, புலமை அறிந்து ஊக்குவித்து, பண உதவி செய்து புத்தகங்களை யெல்லாம் திருத்தி ஒழுங்குபடுத்தி பதிப்பிக்க உதவி, வழிகாட்டியாய் அமைந்தவர்.

God Mother இறைமைத் தாய் எனில் பொருந்தும். எகிப்து நாடடில் பத்திரிக்கை நடத்தி வந்த மே செய்டாவும் கலீல் ஜிப்ரானும் உள்ளத்தால் உணர்வால், புணர்ச்சி பழகா காதலர்கள். முதல் பிரதி முறிந்த சிறகுகளை அவருக்கு அனுப்பி வைத்தார். அவர்தான் இதன் கதைக் கருவை மறுத்தார்.

இந்த நூலைப் பலமுறை படித்தால்தான் இதன் இனிமை, பெருமை, புனிதம் புரியும்.

கவிஞர் அனிதா கிருஷ்ணமூர்த்தி என் நண்பர். ஜிப்ரான் நூல்களில் ஆழ்ந்த வெறி கொண்டவர். என்னை புத்தக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். மறக்க முடியாதவர்.

இந்த நூலிற்கு அணிந்துரையும் வழங்கி என்னை கௌரவப்படுத்தி மகிழும், கவிஞர்களின் அரசன் 'கவிக்கோ அப்துல் ரகுமான்' அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியும், வணக்கங்களும்.

நீங்கள் முறிந்த சிறகுகளுடன் கற்பனை வானில் பறந்து லெபனான் நாட்டிற்குப் போய் கலீல் ஜிப்ரானுடன் உறவாடுங்கள்.

இப்போது உயர்திரு L.R.வேலாயுதம் வேமன் பதிப்பக உரிமையாளர் 'முறிந்த சிறகுகள்' நூலையும் 'நான்கு நாடகங்கள்' நூலையும் இணைத்து ஒரே நூலாக வெளியிடுகின்றார். அவருக்கு என் வாழ்த்துக் களும் வணக்கமும் உரிமையாகின்றது. இது அவர் என் 90-வது வயதில் அளிக்கும் பாராட்டுப் பரிசாகக் கருதுகின்றேன்.

செல்மாவின் சமாதியிலே மலர் தூவுங்கள். நிறை, குறைகளை எனக்கு எழுதுங்கள்.

ஆ.மா. சகதீசன்

10, 12-வது கிழ. குறு. சாலை — *செல் : 9486691034*
காந்தி நகர் — *9442411034*
வேலூர்-632 006.

நுழைவாயில்

தமிழில் வெளியாகும் நாடக நூல்களே மிகக் குறைவு. கதை, கவிதை, கட்டுரை, நவீனம் எல்லாம் வெளிவரும். ஆனால் நாடக நூல்கள்...

கலீல் ஜிப்ரானின் நூல்கள் 55-க்கும் மேல் தமிழ் மொழி பெயர்ப்பில் வெளியாகிவிட்டன.

மிக அதிகமாக கவிஞர் புவியரசர், கவிரத்தின நலங்கிள்ளி, ஆ.மா. சகதீசன், கிருஷ்ணபிரசாத் பேராசிரியர் லோகநாதன் துறவி மொழி பெயர்த்துள்ளனர்.

கலீல் ஜிப்ரானின் 4 நாடகங்கள் என்ற இந்த நூலில் 1. இராம்-கம்பீரத் தூண்கள் நிறை நகர், 2. குருடன், 3. லாசரசும் காதலியும், 4. அசில்பான் என்ற நாடகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

கலீல் ஜிப்ரானின் மற்ற 3, 4 நாடகங்கள் இன்னும் ஆங்கில மொழியில் வெளியாகவில்லை.

1. பென்ஷீ (Banshee) என்ற நாடகத்தில் ஒரு 'கறுப்புப் பெண்மணி' ஒப்பாரி பாட்டுப்பாடி கவிஞர் 'ஓ ஷாக்னுஷே' காலடியில் சத்தியத்திற்காக மன்றாடுகின்றாள்.

2. 'கூனன்' (அ) உருதெரியா மனிதன் என்பது. (The Hunch Back or The Man unseen) இதில் ஒரு பிரதம மந்திரியின் மரண ஆசை விளக்கப்படுகிறது.

3. The Last Unction இதை ''கடைசி இறையருள்'' ''கடைசி போலி பக்தி'' எனலாம். இது 1916-ல் ஒரு அரபிக் மாத இதழில் வந்தது. மறுபடியும் 1920-ல் 'புயல்'

என்ற ஏட்டில் வெளியானது. இன்னும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவில்லை.

இதில் ஒரு பாதிரியார் தனிமையிலே பேசிக்கொள் கின்றார். (Monologue) தன்னிடம் 'புனித இறையருள் சான்றை'ப் பெற்ற பெண்மணியிடம் மன்றாடுகின்றார்.

சரி, சரி. வெளியாகாத நாடகம் பற்றி கூறுகின்றீர்களே இதில் உள்ள நாடகங்கள் பற்றி சொல்லுங்கள் என் கின்றீர்களா?

1. ஆம் இதில் முதல் நாடகம் இராம-கம்பீரத் தூண்கள் நிறை நகர். இந்நாடகம் கலீல் ஜிப்ரானுடைய Khalil Gibran Reader Jaico Pub. Books என்ற நூலில் மட்டும்தான் வெளிவந்துள்ளது. மற்ற எந்த நூலிலும் தொகுதியிலும் விமர்சகர்களின் குறிப்பிலும் காணப்படவில்லை. Iram-The City of Lofty pillars இதன் தலைப்பு. இதை அரபிக் மொழியி லிருந்து 1947-ல் அந்தோனி ரிச்கலையா மொரிஸ் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மார்ட்டின். L. உல்ப் என்பவர் பதிப்பித்து வெளியிட்டார். இந்தியாவில் இது 1977-ல் வெளி வந்தது. ஜெய்கோவின் Readerல் வெளியானது.

இதை நான் 1988ல் மொழி பெயர்த்தேன். இந்த நாடகத்தில் தெய்வீக அமீனா எனும் பெண் உலக தத்துவத்தை மிக ஆழமாக, விளக்கமாக நாசீப், செயின் என்ற இருவருக்கும் உரையாடல் மூலம் விளக்கு கின்றாள். இதைப் பலமுறை படித்து படித்து, உள் மனத்தால் உணர்ந்தால் தான் பேருண்மைகள் புரியும்.

2. குருடன் (The Blind) என்ற நாடகம் 1981-ல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இதை நூலாக்கியவர்கள் கலீல் ஜிப்ரானின் வாரிசான சிற்பி ஜிப்ரான் என்ற உறவினரும் அவரின் மனைவி ஆசிரியை ஜேன் ஜிப்ரானும்தான். இவர்கள் பாஸ்டனில் வசிக்கின்றனர்.

இந்த நாடகமும் லாசரஸும் காதலியும் என்ற இரு நாடகங்களும் ஒரே நூலாக Dramas of life என்று 1982-ல் வெளியானது.

இந்த நூலை பேராசிரியர் மா.ரா.போ.குருசாமி, கோவை அவர்கள் அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்தார். இது கவிஞர் அனிதா கிருஷ்ணமூர்த்தி சூரியன் பதிப்பகம் எனக்கு அளித்தார். அதை நான் தமிழில் மொழி பெயர்த்தேன். ஆ.மா. சகதீசன்.

இந்த நாடகத்தில் வரும் எல்லா பாத்திரங்களையும் ஓவியமாக வரைந்திருக்கிறார் ஜிப்ரான்.

இந்த நூலில் வரும் முன்னுரையும், நாடக விமர்சனத் தையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன். அதுவே ஒரு நூலாகும். இது தனி நூலாக வேமன் வெளியிட்டுள்ளார். ஆ.மா. சகதீசன்.

இந்த நாடகத்தில் இளைஞன் குருடன். தன்னைவிட முத்த வயதுள்ளவளை மணக்கின்றார். உள்ளம், உயிர் ஒன்றவில்லை. மனைவியின் முதல் கணவன் மூலம் பெற்ற மகள் உணர்வால், கலை ரசிகத்தன்மையால் புரிந்து கொள்கின்றாள். மனைவி மற்றொரு மனிதனுடன் நட்பு கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகின்றாள். பைத்தியக்காரன் என்ற பாத்திரம் ஒவ்வொரு நிலையிலும் தத்துவார்த்த விளக்கமும் விமர்சனமும் அளிக்கின்றார்.

கலீல் ஜிப்ரான் இதில் மேற்கு நாட்டுப் பண்பாட்டில் தன் மனம் மாறி விரிவடைவதை நாசுக்காக விளக்கு கின்றார்.

3. லாசரஸும் காதலியும் என்ற நாடகம் பைபிளில் வரும் கதாபாத்திரங்களை வைத்து ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபின் உயிர்த்தெழுந்து வருவதை அடிப்படை யாகக் கொண்டு லாசரசின் ஏக்கத்தை, தேடலை மலையில் வாழும் நாடலை விளக்குகின்றது.

கிருத்துவ தத்துவங்களுக்குத் திறவுகோல். விளக்க வுரை. குடும்பத்தில் தாய், சகோதரிகளின் பாசம், நேசம், அன்பு, அருள் விளக்கம்.

4. அசில்பான் (Assilbon) என்ற நாடகம் The Spritual Sayings என்ற நூலில் மட்டும்தான் வெளியாகியுள்ளது. 1963-ம் ஆண்டு Heinemann London வெளியிட்டது. இதை மொழி பெயர்த்தவர் அந்தோனி சிச்கலையா பெர்ரிஸ் என்பவர் 1963-ம் ஆண்டு. பெர்ரீஸ் அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் ஆஸ்டின் நகரில் வசிக்கும் லெபனான் நாட்டுக்காரர். அரபிக்கிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவர் ஒரு மிகச் சிறந்த ஜிப்ரான் சீடர், ரசிகர்.

இந்த நாடகத்தில் ஒரு இசைக் கலைஞனின் தன்மானம், கௌரவம், பெருமிதம், சுயமரியாதை, இசையின் ஈடுபாடு எல்லாம் விளக்கப்படுகின்றது. பால் அசில்பானை உளமார ரசிக்கும் எலன் என்ற பெண்மணியை சிறப்பிக்கின்றார்.

நீங்கள் நாடகம் பார்க்கத் துடிக்கின்றீர்கள் இல்லையா? பலமுறை திரும்பத் திரும்பப் பார்க்க! படிக்க! ரசிக்க!

வேமன் L.R.வேலாயுதம் இரு நூல்களையும் இணைத்து வெளியிடுகின்றார்.

கதை, கட்டுரைகளைத் தொடர்ந்து ஜிப்ரான் 'உருவகக் கதைகள்' , 'நாடகங்கள்' நூல் வடிவம் பெறு கின்றன! வாழ்க !

ஆ.மா.சகதீசன்

10, 12-வது கிழ. குறு. சாலை
காந்தி நகர்
வேலூர்-632 006.

செல் : 9486691034
9442411034

பதிப்புரை

கலீல் ஜிப்ரான் என்கிற மாபெரும் ஞானி நம் நாட்டு மகாகவி பாரதியின் சமகாலத்தவர். ஏறக்குறைய ஒரே வயதுடையவர்கள். ஜிப்ரான் லெபனானில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்தவர். மிகச் சிறந்த சிந்தனையாளர், கவிஞர், ஓவியர், தத்துவவாதி. கிழக்கு மற்றும் மேற்கு நாட்டுப்பழைமைகளைச் சாடியவர். அதற்காகவே கிறிஸ்துவ மதத்திலிருந்து விலக்கப்பட்டவர்.

இவரது நுல்கள் உலகெங்கிலும் உள்ள அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. தமிழில் இவரது எல்லா நூல்களையும் வெளியிட்டு, தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்பது எங்கள் பேரவா.

ஜிப்ரான் 1883-ஆம் ஆண்டு பிறந்தவர், 1931-ஆம் ஆண்டு காலமானார். தமிழுக்கு இப்போது கிடைத்திருக்கிற ஏராளமான புதுக் கவிஞர்களுக்கு ஆதாரமே ஜிப்ரான்தான். வசன கவிதைகளின் முன்னோடியாய் திகழ்ந்தது இவரின் ஒப்பற்ற நூல்களுள் 'முறிந்த சிறகுகள்' மிகச் சிறந்த நூலாகும்.

இந்த நூலை அழகிய, எளிய நடையில் தமிழாக்கம் செய்திருக்கின்றார் திரு. ஆ.மா. சகதீசன் அவர்கள். அவருக்கு எங்கள் உளம் கனிந்த பாராட்டுக்கள்!

இந்த நூலையும், ஆ.மா. சகதீசன் தமிழாக்கம் செய்த ஜிப்ரானின் அனைத்து நூல்களையும் வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுகிறோம்.

நன்றி !

-பதிப்பகத்தார்

IRAM-THE CITY OF LOFTY PILLARS

இராம்-கம்பீரத் தூண்கள் நிறைநகர்

மொழிபெயர்ப்பாளரின் முகவுரை

இராம் நகராண்ட 'ஆட்' அரசனை
கடவுள் எப்படி ஆட்டி வைத்தார் பார்!
இராம் நகர் போல் மனித சகாப்தத்திலேயே
வேறோர் நகர் அமைந்ததுண்டோ! சொல்.

-'தெய்வீகக் குரான்'

'ஆட்' மக்களைப் பற்றியும், அவர்களின் தீர்க்கதரிசி 'ஊட்' பற்றியும் திருக்குரானில் பல இடங்களில் எடுத் துரைக்கப்படுகின்றது. 'ஆட்' மக்களின் சந்ததியினர் பழமையான அரேபியாவைச் சார்ந்தோர்.

அவர்களின் பரம்பரையின் முன்னோர்களில் 'நோவா' வின் வழித் தோன்றல்களின் நான்காவது தலைமுறையைச் சார்ந்தோர் 'ஆட்' மக்கள்.

'நோவா'- ஆயூஸ்ஸின் மகன்.

'ஆயூஸ்'- அராமின் மகன்

'அராம்'- 'செம்'மின் மகன்

'செம்'-'நோவா'வின் மகன்.

இந்த வம்சத்தினர் தென் அரேபியாவின் பெரும் பகுதியில் குடியேறி ஆக்ரமித்திருந்தனர். பெர்சியன் வளைகுடாவில் உள்ள 'உம்மான்' முகத்துவாரத்தி லிருந்து 'ஆட்மொட்', 'ஈமென்' பகுதி, செங்கடலின்

தென்முனை வரை பரந்து விரிந்ததிருந்தது. அவர்களின் இராஜ்ஜியத்தில் கால்வாய்களின் மூலம் நீர்ப்பாய்ச்சி பெரும் மணல் பரப்பு களில், நீண்டு வளைந்த பரப்பான மணல்வெளியில் விவசாயம் செய்தனர்.

இப்பகுதி மக்கள் மிகவும் உயரமாகவும், பலமிக்கவ ராயும் இருந்தனர். இவர்கள் கட்டிடக் கலையில் வல்லவர்கள். இருந்தாலும், எல்லாக் காலங்களிலும் நிகழ்வது போலவே, உண்மையின் கடவுளை உதறித் தள்ளி ஒதுக்கினர்; அரசர் களும் தலைவர்களும் மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஒடுக்கி மிகவும் மோசமாக அமுக்கி வைத்தனர்.

கடும் பஞ்சம் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கொடுமைப்படுத்த, இந்த அபாய நிலையை அறியாததால், மிகப்பெரிய மணல் புயல் வேகமாகச் சுழன்றடித்து இம் மக்களினத்தின் நாகரீகத்தையே அழித்து மக்களினம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்ட மாக்கியது. அதிலே எஞ்சி நின்ற இரண்டாம் 'ஆட்' அல்லது 'தாமூத்' மட்டும் உயிர் வாழ்ந்து மீட்கப் பட்டார்கள். இருந்தாலும் மக்களின் பாவ காரியங்களால் இவர்களும் முன்னோரின் விதிப்படியே துன்பப்பட்டு அழிந்தார்கள்.

'ஆட்ர மாட்டி'ல் உள்ள தீர்க்கதரிசி 'ஊட்'டின் சமாதியை இன்னும் அங்கு வரும் பயணிகளுக்குக் காண்பிக்கின்றனர். 'ஆட்ரமாட்' நகரம் 16 டிகிரி அட்ச ரேகைக்கு வடக்கேயும், 49ஸீ டிகிரி தீர்க்கரேகைக்குக் கிழக்கேயும் உள்ளது. இது 'முக்கால்லா' விற்கு வடக்கே 90 மைல் தூரத்தில் உள்ளது. இடிபாடுகளும் கல்வெட்டுக் களும் இந்தப் பிராநதியத்தில் நிறைய இருக்கின்றன. இந்த நகருக்கு ஆண்டில் ஒருமுறை 'ராஜாப்' மாதத்தில் மக்கள் புனிதப் பயணம் செல்வர்.

'இராம்' ஓர் பழமையான 'ஆட்' தலைவர். இது தென் அரேபியாவில் உள்ளது. இந்த நகரின் கம்பீரமான உயர்ந்த கட்டிடக் கலை பற்றிப் பேசி பெருமைப்படலாம்.

இதற்கு நேர் எதிர்மாறாகச் சில சரித்திர ஆசிரியர் களும், புராதானக் கலை வல்லுநர்களும் 'ஆட்' பரம்பரையில் உதித்த ஒரு மிகப்பெரிய மாவீரன்தான் 'இராம்' என்றும் நம்பு கின்றனர். இது உண்மையானால் 'இராம்' கம்பீரத் தூண்கள் எனும் அடைமொழி இந்த நகரைக் குறிக்காமல் இதன் உயர்ந்த கட்டிடங்களைக் குறிப்பிடாமல், 'ஆட்' மக்கள் மிகவும் கம்பீரமாயும் நெடிதுயர்ந்த தோற்றமுள்ளவராயும் இருந்தனர் எனப் பொருள் தந்து இம்மக்களினத்தையுமே குறிப்பதாகும்.

இந்தப் பெரும்பகுதி நிலப்பரப்பை அரேபிய 'பிளிக்ஸ்' என்றும் கூறுவர்; இந்தப் பகுதி மிகவும் வசீகரமான, கவர்ச்சி மிக்க, புனிதமான, வளமிக்க ஊற்றுக்காலாக அரேபிய மக்களுக்குத் தோற்றமளித்தது. இந்த இடிபாடுகளிலே பழமையின் சான்று கூறும் கணக்கிலடங்காப் பொருள்களும், சரித்திரச் சான்றுகளும், மதச் சின்னங்களும், மதிப்புமிக்க பொன்னும் பொருளும் காணக் கிடைக்கின்றன. 'மவுவீவ'வின் காலத்திலே விலை மதிக்க முடியாத மாணிக்க, வைர, வைடூரியக் கற்களும் கிடைத்தன.

சமீப காலத்தில் 'நஞ்ராம்' எனும் இடத்திலே பொன், வெள்ளி, செம்பால் ஆன சிலைகளும், 'சபாயின்' கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அனைத்தும் 1937-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி வெளியான பிரிட்டிஷ் தொல்பொருள் காலாண்டு இதழ் களிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

திருக்குரானிலும் இதற்கான பூகோளச் சான்றுகளும், ஆதாரங்களும் உள்ளன.

கலீல் ஜிப்ரான் அநேகமாக இந்தச் சரித்திரச் சான்றுகளின் அடிப்படையில்தான் 'இராம்-கம்பீரத் தூண்கள் நிறைந்த நகர்' என்ற இந்த நாடகத்தை எழுதி இருக்க வேண்டும். இந்தச் செய்திகளின் தொகுப்பே இதன் அடிப்படை.

கீழ்க்கண்ட அராபிய கற்பனையின் அடிப்படையில் உலவும் கிழக்கிந்திய இதிகாசம்தான் இதன் பொதுவான இரத்த நாடியாக இருக்கும. அது பின்வரும்:

''ஆட்' இன மக்கள் 'ஷாடாட்', உலகத்தின் மிகப் பெரிய சக்கரவர்த்தியானான். அவன் தன் கீழ் உள்ள ஆயிரம் குறுநில மன்னர்களை அழைத்து ஆணை யிட்டான். ஒவ்வொருவரும் ஆயிரம் வீரர்களை அழைத்துச் சென்றனர். சக்கரவர்த்தியின் ஆணை இதுதான்:

'மிகப் பரந்த நிலப்பரப்பும் அதில் வற்றாத நீர்வளமும், தூய்மையான காற்றும் இருக்க வேண்டும். மலைப் பிரதேசங் களுக்கு வெகுதூரத்தில் ஓர் பொன்னால் ஆன பெரு நகர் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும்ம்' என்றார்.

இப்படிப்பட்ட நிலப்பரப்பைக் காண உலக மெல்லாம் தேடி அலைந்தனர் அந்த ஆயிரம் குறுநில மன்னர்களும்.

அப்படிப்பட்ட நிலப்பரப்பைக் கண்டுபிடித்தவுடன் 120 மைல் நீளமும் 120 மைல் அகலமும் உள்ள ஓர் பெரிய நகரை கட்டிடக்கலை வல்லுநர்களும் கலைஞர்களும் நிர்மாணித் தனர். மிகப்பெரிய சுவர் 22 அடி அகலம் உடையதாய்ப் பெரும் கற்களால் நகரைச் சுற்றிக் கட்டினர். அதன் மேல் தங்கத் தகடு கொண்டு மூடினர். சூரிய ஒளியிலே பார்ப்பவர் கண்களைக் கூசச் செய்தது.

'ஷா டாட்' சக்கரவர்த்தி தன்னுடைய மக்களை யெல்லாம் ஏவி உலகில் பூமிக்கு அடியில் உள்ள தங்கத்தை யெல்லாம் வெட்டி எடுத்து வந்து பொன்னையே சுண்ணாம்பாக உபயோகித்துக் கற்களைக் கொண்டு கட்டிடங்களைக் கட்டினான்.

அந்த நகரின் சுற்றுச் சுவர்களுக்குள் நூறு ஆயிரம் அரண்மனைகளைக் கட்டினான். தன் பேரரசின் அதிகாரிகள் வாழ்வதற்கு அந்த அரண்மனையின் தூண்கள் எல்லாம் இரத்தினம், மாணிக்கம், பொன், வைரங்களால்

பொதியப் பட்டு ஒவ்வொரு தூணும் வானுலகை முட்டும்படி 150 அடி உயரம் கொண்டதாய் அமைக்கப் பட்டது.

எல்லா நதிகளையும் அந்த நகருக்குள் திருப்பி விட்டான்; அதன் உப நதிகள் ஒவ்வொரு அரண்மனைக் குள்ளும் திருப்பப்பட்டது. அந்த நகரின் வீதிகள் பொன்னால் பரப்பப் பட்டு மாணிக்க, பவள, வைரக்கற் களால் வேயப்பட்டன. அரண்மனை எல்லாம் வெள்ளி யாலும், பொன்னாலும் மூடப்பட்டன. மரங்கள் நதிகளின் இரு கரைகளிலும் நாட்டப்பட்டன. அதன் கிளைகள் பொன்னாலும், இலைகள் வெள்ளியாலும் செய்யப்பட் டிருந்தன. அதன் பழங்க ளெல்லாம் முத்துக்கள், மரகதங்கள்! அந்த அரண்மனைச் சுவர்கள் எல்லாம் புனுகு, ஜவ்வாது கொண்டு பூசி மெழுகப் பட்டிருந்தது.

'ஷா டாட்' சக்கரவர்த்தி தன் அரண்மனை நந்தவனத் திலே மரகதக் கற்கள், பவளம், இரத்தினம் கொண்டு மரங்களை அமைத்து, அந்தக் கிளைகளின் மேல் பொன்னால் ஆன பாடும் பறவைகளை அமைத்தான்.''

இப்படியாக அந்த இதிகாசம் விவரிக்கிறது.

கலீல் ஜிப்ரான் பல கவிதைகளும், காதல் கதை களும், கட்டுரைகளும் எழுதி இருந்தாலும், நாடகமாக எழுதப்பட்டது மொத்தம் 7 நாடகங்கள் அதில் 4 நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டன. மீதி 3 நாடகங்கள் அரபிக் மொழியிலேயே உள்ளது. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவில்லை

கலீல் ஜிப்ரர்ன் எழுதியுள்ள இன்னும் எத்தனை நாடகங்கள், கதை, கவிதை கட்டுரைகள் ஓவியங்கள் ஆவணங்களில் பொதிந்து, மறைந்து உள்ளனவோ? !

ஆ.மா. சகதீசன்

9486691034

பொருளடக்கம்

1

துயரத்தின் சகாப்தம்

நான் ஓர் கைதி. என் இளமைக்காலச் சிறை வாழ்க்கையை நினைக்கின்றேன். உங்களுக்கு இளமை ஓர் சுதந்திர சொர்க்கம்! எனக்கோ என் இளமை துயரத்தின் சகாப்தம். என் இதயத்திலே அன்பு விதைத்தது அறிவும் வளர்ந்தது; காதலும் பூத்தது. காதல் எனக்கு ஒளிப் பிழம்பாய் வளர்ந்து பேரொளியைப் பரப்பியது. காதல் கொடுத்தது கண்ணீர்!

நான் என் காதலி செல்மாவுடன் நடந்த நந்த வனங்கள், ஓடிவிளையாடிய பழத்தோட்டம், உரையாடிய தெரு முனைகள், மயங்கிய மாலை நேரங்கள் அனைத்தையும் நினைக்கின்றேன்.

வட லெபனான் என் பிறப்பிடம். அழகான மலைச் சிகரங்கள், பரந்த புல்வெளிகள், மேயும் ஆட்டு மந்தைகள், என்ன கம்பீரம்? எவ்வளவு மேன்மை! நகர நெரிசல் சந்தடிகளிலிருந்து விலகினேன். மலைகளில் குயிலின் கீதம் கேட்டேன்; சிற்றோடைகளின் சங்கீதம் என்னைக் கவர்ந்தது. ஒரு குழந்தை தன் தாயின் முகம் காண எவ்வளவு ஏங்கும்?

மார்புகளை வாயில் உறிஞ்ச எவ்வளவு துடிக்கும்? நான் என் இளமைக்காலமெல்லாம் மலைகளைக் காணவும், சம வெளியில் ஓடவும், அருவிகளின் இசையிலே மயங்கவும் 'பெய்ரூட்' நகரினின்று தப்பி ஓடுவேன். கூட்டிலிருக்கும் கிளி வெளியில் பறக்கும் குயிலைக் கண்டு பொறாமைப்படுமே!

ஆம். அப்போது நிகழ்ந்த கசப்பான எண்ணங்கள் என் இதயத்தைச் சுற்றி நம்பிக்கையின்மை என்னும் வலையைப் பின்னி என்னை அதில் சிக்க வைத்து விட்டதே!

வயல்களில் ஏமாந்தேன்; விளங்கவில்லை. நீல வானம் என் இதயத்தைச் சுருக்கியது! குயிலின் கீதம் வேதனையை அளித்து; இளவேனில் என்னைச் சுட்டது. காரணம் புரிய வில்லை. வெறுமை ஆட்சி கொண்டது.

செத்தே பிறந்து விட்ட மனிதனல்ல. நான். உணர்ச்சியோ அதிகம்; அறிவோ கொஞ்சம்.

இருபெரும் சக்திகளால் நான் கிழிக்கப்பட்டேன்! ஒரு சக்தி கனவுலகிலே மேகத்திற்கே ஏந்தி உயர்த்தியது. வேறொரு சக்தி மண்ணோடு புதைத்து கண்களிலே புழுதியை நிரப்பியது! பயம், இருளில் உழன்றேன்.

தனிமை மிருதுவானதுதான்; ஆனால் என் இதயத்தை வலிமை கொண்டு அழுத்தியது. வேதனை இரத்தம் பீறிட்டது. தனிமையே ஆன்மிக மேன்மைக்குத் துணைவன்.

என் ஆத்மா துயரத்துடன் போராடியது. அதுவே மொட்டவிழ்ந்த தாமரை, காலையில் இதயம் திறந்தது மாலை இருளிலே இதழ் மூடியது.

எனக்கு நண்பரில்லை, பொழுது போக்கில்லை, விளையாட தோழரில்லை. வாழ்க்கையே ஒரு சிதை. அதில் தனிமையே சிலந்திக்கூடு பின்னிற்று.

என் துயரமெல்லாம் என் மனோ வேதனையே!

நான் தேங்கிய நீரானேன். கடலோடு கலக்கும் நதியாய் மாறவில்லை. என் இளமைச்சிறகுகள் பறக்கவில்லை. ஆடிப்பாடி மகிழ்ந்து நண்பர்களுடன் நான் இன்பம் துய்க்கவில்லை. தனிமையிலே நலிந்தேன்.

என் வயது 18. ஒரு புது வாழ்க்கை புகுந்தது. தனிமை மடிந்தது. மறுபிறவி பெற்றேன். வாழ்க்கைப் புத்தகத்திலே வண்ண ஓவியங்கள் வரையப்பட்டன. ஏடுகள் கவிதைகளால் படபடத்தன.

என் செல்மா என்னை ஆட்கொண்டாள்! வாழ்க்கையிலே இணைந்தாள்; என்னைக் கவிஞனாக்கினாள்!

○○○

2

துயரத்தின் சகாப்தம்

நான் பெய்ரூட்டில் மாணவன். நிலமெல்லாம் பச்சைப் புல் கம்பளம். மரங்களிலெல்லாம் மலர்கள். மண்ணும் விண்ணும் எண்ண எண்ண வண்ணம் பல காட்டின. கவிஞர்களின் கற்பனைச் சிறகு விரிந்தது. காதல் விண்ணிலே பறந்தது. மரங்களிலே காய்த்துக் குலுங்கும் கனிகள்; செடிகளிலே மலர்கள்; கொடிகளிலே திராட்சைக் கொத்துக்கள்.

லெபனானில் இளவேனிலின் அழகே அழகு! மன்னர்கள், தீர்க்க தரிசிகள், வற்றாத செல்வம், இணையற்ற பேரறிவு எல்லாம் லெபனான் நாட்டின் சீடார் மரத்தைவிட உயரமாக முடியுமா? எங்கள் நதிகள் இசைக்கும் சங்கீதத்திற்கு நிகர் ஏது? எங்கள் கடலினும் விரிந்த ஞானம் ஏது?

இளவேனிலிலே கடற்கன்னி ஓடைக்கரையிலே தன் தங்கமேனி கதிரவனின் பொன்னொளியிலே சூடேற்றுவாள். அழகே அழகு!

பெய்ரட்நகர் அருகில் ஒரு பெரிய தோட்டம். அழகான வீடு. அதன் தலைவனுக்கு 65 வயது. கம்பீரத் தோற்றம். பெயர் 'பெரீஸ் எப்பாண்டி கராமி'. என் நண்பன்

அறிமுகம் செய்தான். என்னைப் புகழ்ந்து 'கலீல் ஜிப்ரான்' என்று கைகளை இணைத்தான்.

அந்த முதியவர் பழைய நினைவுகளிலே தோய்ந்த ஒரு நினைவு பளிச்சிட்டது. 'ஓ, ஜிப்ரான்' நீ என் நெருங்கிய நண்பனின் மகன். 'அவரையே உன்னில் காண்கிறேன்' என்றார். சொல்ல வேண்டுமா?

மனம் உருகினேன்; ஈர்க்கப்பட்டேன். புயலுக்கு கூண்டிலே சரணடையும் பறவை போல் அவருடைய அன்பில் புகலடைந்தேன்.

பழைய நினைவுகள், என் தகப்பனாரின் நட்பு. இருவரும் வாழ்ந்த, அனுபவித்த, ரசித்த, ருசித்த இளமை அனுபவங்கள் எல்லாம் கதை கதையாய் வெளி வந்தன. முதியவரின் இளமை நினைவுகள் வெளிநாட்டிலிருந்து தாய் நாடு திரும்பும் உணர்வை உண்டாக்கும். ஒரு கவிஞன் தன் கவிதைகளையே படித்துப் படித்து உருகுவதில்லையா?

முதியவர், தன் இளமை வசந்தத்தில்தான் வாழ முடியும் எதிர்காலம் ஏது? அது கல்லறை தானே! நிகழ் காலம் வாழ்வின் பளு நிறைந்து அழுத்தும்.

கராமி என்னை அடிக்கடி வரவேண்டினார். 20 ஆண்டுகளாய் பார்க்காத என் தந்தையின் இடத்தை நான் கவர்ந்தேன். நன்றி கூறினேன். நகர்ந்தேன்.

பின் என் நண்பன், கராமி பற்றி சொன்னான்.

''பெய்ரூட்டின் பெரியார். உதாரகுணம், கனிவு, பண்பட்ட உள்ளம். ஆனால் திடமான மனமில்லை. நெகிழ்வு அதிகம். அவருக்கு ஓர் மகள்; குணக்குன்று; அழகும் அறிவும் சொல்ல முடியாது. அப்பாவின் சொல்லே வேதம். பணிவுக்கு அளவில்லை.''

இருவரையும் முழுமையாக அறிந்தவர் பாதிரியார்; பாவத்தின் நிழலே அவர் குடியிருப்பு. தன்னலம் அவர்

சொத்து. கராமியும் செல்மாவும் பாதிரியாரின் கைப் பாவைகள். ஆடுகள் நம்புவது கசாப்புக் கடைக் காரனையே! பாவம் ஆடுகள் கராமியும் செல்மாவும். பாதிரியார் நம்ப வைத்து அடிமை கொண்டு ஆட்டி வைக்கின்றார்.

பாதிரியின் மைத்துனன் ஒரு வஞ்சகன்; ஊழலின் உருவம்; பாதிரி திட்டம் தீட்டினார். மைத்துனனுக்கு செல்மாவை மணம் முடித்தால் கராமியின் சொத் தெல்லாம் தனதே! முயன்றார்! முடியாதா பாதிரியால்?

ஜிப்ரான், நண்பனின் விளக்கம் கேட்டார்! வியந்தார்!

நண்பன் விடை பெற்றான். நான் இனி கராமியை அடிக்கடி சந்தித்து என் தகப்பனாரின் நட்பை நிலைநாட்ட விவரிக்க எண்ணினேன்; கூறினேன்.

நண்பன் வியந்தான்; 'காதல், கருணை, பயம் மூன்றையும் ஒரு சேரக் கண்டேன். அவன் பார்வையே தீர்க்க தரிசியின் ஊடுருவும் புனிதப் பார்வையாய் தெரிந்தது.

அவனுடைய விசித்திரப் பார்வையின் பொருள் எனக்கு பல ஆண்டு அனுபவமும், இதயங்களின் இணைப்பும், உள்ளுணர்வின் ஒற்றுமையும், அறிவின் முதிர்ச்சியும் பெற்ற பின்பே, பொருள் புரிந்தேன். ஆழம் அறிந்தேன். உலகை உணர்ந்தேன்.

○○○

3

கோயிலில் நுழைந்தேன்

தனிமையில் தவித்தேன்; அறிவு நூல்களும் ஆறுதல் தரவில்லை, படிப்பிலே வெறுப்பு; இசையிலே ஒரு கசப்பு, தவித்தேன். வண்டி அமர்த்தி கராமி தோட்டம் தேடி பயணமானேன்.பாதையின் இருபுறம் அடர்ந்து உயர்ந்த தேவதாறு மரங்கள், பூத்துக் குலுங்கும்செடிகள் கொடிகன், பச்சைப் புல்வெளி, அழகிய திராட்சைத் தோட்டம்; குலைகள் விருந்துக்கு அழைத்தன. தென்றல் காற்றின் சுகமே தனி இன்பம்.

பெரியவர் கராமி என்னை எதிர் கொண்டழைத்தார். நல்வரவு கூறியதிலே தனிக்கனிவு; நெடு நாள் பிரிந்த மகனை அணைக்கும் பரிவு; மகிழ்ச்சி, என்னிடம் ஆயிரம் கேள்விகள். திணறினேன்.

அப்போது கவர்ச்சி, அழகு, பட்டாடை, இளமை எல்லாம் ஒரு சேர அமைந்த செல்மா திரை விலக்கி தேவ நங்கையாய் நகர்ந்து எங்களை அணுகினாள்.

பெரியவரும் நானும் மாயச்சக்தியால் கட்டுண்டு எழுந்து நின்றோம். என்னிடம் ''செல்மா, என் அருமை மகள்; என் வாழ்க்கையின் ஒரே நம்பிக்கை'' என்று அறிமுகம் செய்தார்.

செல்மாவிடம் ''மகளே! என் இனிய இளமைக்கால நண்பரின் மகனையே எனக்குக்கொடுத்திருக்கின்றது விதி. கலீல் ஜிப்ரான் என் மகன் போலவே, மாணவன், கவிஞன், அறிஞன் இனியவன் பழக'' என்றார் பெரியவர்.

செல்மா என்னை ஊடுருவி உள்ளே நுழைந்தாள். கை குலுக்கினாள். அவள் கை ஓர் அல்லி மலர். முகமோ செந்தாமரை! குரலோ குயிலின் கீதம், கண்களோ மீன் விழி; பற்களோ முத்துக்கள்; கனி இதழ்களோ பவளம்.

என்ன சொல்வேன்...என்னுள் ஒரு புதுமையான இன்ப அதிர்ச்சி; உள்ளத்திலே மலர்ச்சி; உயிரிலே ஒரு துடிப்பு, உடலெல்லாம் மின்னோட்டம்.

நாங்கள் மூவரும் அமர்ந்தோம். அவள் மௌனத்திலே கண்ணியம். அவளுடைய பொலிவின் பேரொளி எங்கும் பரவியது. தெய்வமங்கையின் சாந்தம், கம்பீரம், சிறப்பு, பூரிப்பு படர்ந்தது.

செல்மா புன்னகைபூத்து, ''என்தந்தை பலசமயங்களில் தன் இளமை நண்பன். இனிய துணைவன், உன் தகப்பனாருடன் கழித்த காலத்தைப் பற்றி வெகுவாகக் கூறி மகிழ்ந்திருக்கின்றார். நீங்களும் நானும் புதியவரல்ல; நம் சந்திப்பும் பழைமையானதே! நீங்கள் என்ன நினைக் கின்றீர்கள்'' என்றாள்.

பெரியவருக்கு மகளின் உரையாடல் மட்டில்லாத மகிழ்ச்சி அளித்தது. இருவர் மூவரானோம்.

கராமி, ''செல்மா மென்மையானவள்; உணர்ச்சி மிக்கவள்; அவளுடைய ஆத்ம ஞானக்கண் ஆழமாய் காணவல்லது'' என்றார்.

மூவருடைய உரையாடல் தொடர்ந்தது. பேசினோம். சிரித்தோம்; மகிழ்ந்தோம்; மாலை இனிமையாய் கழிந்ததே தெரியவில்லை.

நான் ஒரு சிறிய செடி. கராமி வானுயர வளர்ந்த மரம். வருங்காலம் எனக்கு கனவு, அவருக்குக் கடந்த காலம் இன்ப நினைப்பு! செல்மா பெரியவருடன் மட்டுமே பழகியவள். தன் மறத்துப்போன உணர்ச்சிகளுக்கு ஒரு புதிய இளவேனில் நான்; இளமையின் துடிப்புடன் பேசும் ஒரு பெரிய மாற்றம். புது தெளிவு. தெம்பு.

அவளுடைய ஆழமான அமைதி. மாறிமாறி பார்க்கும் பார்வையிலே கனிவு; பெரியவர் பேசப் பேச அவர் துயர மெல்லாம் மகிழ்ச்சியாக மாறியது.நான் மகிழ்ந்து ஆர்வமாய் ஆழ்ந்து கேட்டேன்.

செல்மா பேசவில்லை. கண்களிலே துயரம்; அவளுடைய உன்னத சொர்க்கத்தின் சௌந்தர்ய மொழியை கண்கள் பேசின. அழகு அவள் மொழி; அந்த மௌனம் காலத்தைக் கடந்தது. கண்ணிமைகளின் அதிர்விலே சிற்றோடையின் சங்கீதம் கேட்டது.

அழகை உணரவல்லது ஆத்மா; கண்களல்ல. நம் உள்ளத்தைக் குழப்பும் புதிர்; முடியாத மன எழுச்சி யூட்டும் புலனுணர்வு எட்ட இயலாதது. உண்மை அழகே ஆத்மாவின் புனிதத்திலிருந்து பீறிட்டெழும். உன்னத ஒளிக்கற்றை; மண் மலருக்கு வண்ணத்தையும் மணத்தையும் அளிக்கும். அழகு, ஆண் பெண் இருவரின் காதலில்தான் மலரும்.

என் ஆத்மா செல்மாவின் ஆத்மாவையே சுற்றி வந்து ஒன்றி விட்டதா? எனக்கு உலகின் அழகெல்லாம் திரட்டி உருவளிக்கப் பட்டதாய் செல்மா காட்சி அளித்தாள். என் இளமைத் துடிப்பு மயங்க வைத்ததா? என் கற்பனை இல்லாத எல்லாவற்றையும் செல்மாவிலே கண்டதா?

என் இளமை கண்களை மறைத்து. அவளை ஒளிமிக்க, இளமை பொங்கும், கனிவான காரிகையாய் கற்பனை செய்ததா? செல்மா எனக்குக் காதலின்

ஆனந்தத்தைக் குவித்தாள்; அத்துடன் துயரமும் பிறந்தது. அவள் கண்ணொளி, வாயின் தேனிசை என்ன சொல்வேன்!

எனக்கு ஒரு புத்துணர்வு; இதயத்திலே கனிவான இனிமை; உடலிலே உயிரிலே பேரன்பு. இதற்கு யார் யாரோ என்னென்னவோ பெயரிட்டனரா?

இன்பமும் துன்பமும் பிறந்த முதல் சந்திப்பு. காலம் ஓடியது. செல்மா என்னை இளமையின் அடிமைத்தனத்தி லிருந்து, என் தனிமைச் சிறையிலிருந்து மீட்டு 'காதல் ஊர்வலம்' நடத்தினாள்.

உலகிலே காதல் ஒன்றுதான் மனிதனின் சட்டதிட்டம். இயற்கையின் புலனுணர்வு. எல்லா வற்றுக்கும் மேலே உயர்ந்து ஆத்ம வானில் மிதந்து விடும்.

கராமி விடை அளித்தார். அடிக்கடி வந்து பேசி தகப்பனாரின் உறவை இணைக்க வேண்டினார். கராமி செல்மாவின் ஒப்புதலை கேட்க, அந்த அழகு தேவதை தன் பார்வையால் கெஞ்சினாள்.

எங்களை அன்பு இணைத்தது. தந்தையின் பரிவு பாசம் அரண் அமைத்தது. சொர்க்க கீதம் மிதந்தது.

இதழ்கள் துடித்தன! இனிப்பும் கசப்பும், இன்பமும் துன்பமும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

காதல் கோயிலின் கதவுகள் திறந்தன.

○○○

4

வெண்ணொளிக் கதிர்

அடிக்கடி பெரியவர் கராமி இல்லம் சென்றேன். செல்மாவின் அழகு ஒளி பரவும்; அவள் அறிவு ஒளியில் திகைப்பேன். தோட்டத்திலே நேரம் நகரும்.

அவளுடைய அழகு எனக்குப் புதுப்புது அர்த்தத்தைக் கற்பித்தது. அவளுடைய ஆர்வம் என் உள்ளுணர்வுகளை விரிவாக்கியது. அவள் எனக்குக் காவியம் ஆனாள். நான் முழுமையாகப் படிக்க முடியாத கவிதை அவள். ஒவ்வொரு நாளும் ஒரே கவிதைக்குப் பலப்பல பொருள்களாய் திகழ்ந்தாள். அவள் உணர்ச்சி பூர்வமான அழகு; உடல் உண்மையின் உருவம்; மர்மம் வெளிப்படாத ஓவியம்; பண்பின் பரிமாணம்; வர்ணனையைக் கடந்த பெண்மணி; காற்றிலே மிதக்கும் கற்பனை.

அவள்தான் செல்மா! உடல் அழகு மட்டுமோ? உள்ளத்தின் அழகை யார் அறிவார்? குயிலின் கீதம்; மனோரஞ்சிதத்தின் நறுமணம்; சிந்து பாடும் அருவி; இவைகளே செல்மா! ஓவியனால் தீட்ட முடியாத உயிர்

ஓவியம் அவள். அவள் பெருமை கூற வார்த்தைகளில்லை. பார்த்தவர் பழகியவர் புரிந்தவர், தெரிந்தவரே செல்மாவை உணர முடியும்.

செல்மா திங்களின் அழகிய ஒளிக்கதிர்; அவள் அசைவு பொற்கொடி; நடையிலே தாளத்தின் ஒழுங்கு; குரலொலி காற்றினிலே வரும் கீதம்! சொற்கள் மலரினும் மென்மை! பார்வை பனித்துளி.

ஆனால் செல்மாவின் முகத்திலே உள்ளுணர்வின் வேதனை மின்னக் கண்டேன்; சொர்க்கத்தின் ஒப்புயர்வு மிக்க பிரதிபலிப்பு!

செல்மாவிற்கு நிகர் செல்மாதான்! உங்கள் வாழ்விலும் ஒரு செல்மா கட்டாயம் இருப்பாள்.

செல்மாவின் முக அழகு கலைக்கு இலக்கணம் அளவிட முடியாத இரகசியம்; ஓவியனின் எல்லைக்கு அடங்காத அழகு; பொன்மயமான கூந்தலிலே எவ்வளவு தூய்மை; கண்களின் ஒளி வீச்சிலே எவ்வளவு கனிவு; வெந்நிற உதடுகள் சிந்தும் சொல்லிலே பால், தேன், உமிழ் நீரின் கூட்டு, கடைந்தெடுத்த தந்தக் கழுத்து, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே அளவில் அடங்காத பேரொளி வெள்ளம்! இவளே செல்மா!

சிந்தனைச் சுரங்கம்; மௌனம் இனிய இசைப்பண்; கனவிலே மிதக்க வைக்கும் நாணம்; பண்பின் பாவை; அறிவின் இமயம் என் செல்மா.

செல்மாவின் வாழ்க்கையிலே ஆழ்ந்த துயரம் தாய்மையின் பாசமும் பரிவும் இல்லாத ஏக்கம்; காலப்பனி யூடே தோன்றும் பூமரம் அவள்.

இன்ப உணர்வை விட துன்பமும் துயரமும் தான் இரண்டு ஆத்மாக்களை இணைக்கும், பிணைக்கும். அவளுடைய தாயற்ற தவிப்பை நான் தெரிந்தேன். என் தனிமையின் கொடுமையை அவள் புரிந்து கொண்டாள்.

துயரத்தின் அடிப்படையிலே ஒருங்கிணைந்த இருதயங் களை மகிழ்ச்சியின் மேன்மையால் பிரிக்கவே முடியாது.

கண்ணீர் சிந்தி தூய்மைப்படுத்தப்பட்ட காதல் அழியாது; அழகு குன்றாது; தூய்மை கெடாது.

மரணமற்ற பெருவாழ்வு!

அருள் பொழியும் வெண்ணொளிக் கதிர்!

○○○

5

சீறிப்பாயும் விதி

ஒரு நாள் பெரியவர் கராமி விருந்துண்ண வீட்டிற்கு அழைத்தார். செல்மா செய்யும் தெய்வீக ரொட்டியை உண்ண ஆத்மா துடித்தது. அன்புமிகுந்தவர் பரிமாற உண்ண, உண்ண பசி அதிகமாகும் இல்லையா?

இத்தாலியக் கவிஞர் தாந்தே, அரேபியக் கவிஞர் உமர்கயாம், கயாஸ் எல்லோரும் இப்படித்தான் தங்களின் இதய தெய்வங்களின் ரொட்டியை உண்டதால் இதயம் காதல் கவிதைகளைப் பொழிந்ததா?

தேவதைகளின் முத்தமும் இனிமையும் கண்ணீரும் கசப்பும் கலந்து தயாராகுமா இந்த ரொட்டி;

கராமியின் தோட்டத்தில் நுழைந்தேன். என் செல்மா மரத்திலே தலை சாய்த்து ஒரு புது மணப்பெண் போல், தோட்டத்து வனதேவதையாய் விளங்கினாள்.

மௌனமாய் அவள் அருகே அமர்ந்தேன். நான் பேசவில்லை; மௌன மொழியே எங்கள் இதய மொழி யானது. உள்ளங்கள் பேசின. கண்கள் பேசின. நேரம் நகர்வது தெரியவில்லை.

பெரியவர் கராமி அங்கே வந்து எங்களை வாழ்த்தினார். நாங்கள் எங்கள் மர்மத்தை வாழ்த்துவதாய்

மகிழ்ந்தோம். விருந்திற்கு அழைத்தார். அவரைத் தொடர்ந்து வீட்டினுள் சென்றோம். புத்துணர்வு எங்கள் கண்களிலே கொஞ்சின.

உணவினை சுவைத்தோம்; திராட்சை ரசம் குடித்தோம். எண்ணங்கள் எதிர்காலத்திலே அலைந்து கனவு கண்டது.

நாங்கள் மூவர். எங்கள் உள்ளங்களிலே எண்ணங்கள் எங்கெங்கோ! மூன்று அப்பாவிகள்; உணர்ச்சி ஒன்றே அன்பும் ஒன்றே. அறிவு மட்டும் கொஞ்சமே! மகளின் மேல் உயிரையே வைத்து வளர்த்த வருங்கால கனாக் காணும் பெரியவர் கராமி.

அவளுடைய சுகமே கராமியின் கவலை. ஏங்கி எதிர் பார்க்கும் செல்மா. வாழ்க்கை மதுவை சுவைக்காத, இனிமை தெரியாத, காதல் அறிவு பெருக, உயராத இளைஞனாக நான். மூவரின் சிந்தனைகளும் மும்முனை.

ஆனாலும் அனைவருக்கும் அடிப்படை கசப்பு வேதனை. நாங்கள் அமர்ந்து, உண்டு, பேசி, உரையாடி இருந்தபோது வேலைக்காரி வந்தாள். கராமியைப் பார்க்க ஒரு மனிதர் வந்ததாய் தெரிவித்தாள். பெரியவர் அவரை வரச் சொன்னார். தீர்க்கதரிசி விண்ணின் இரகசியம் அறிய கூர்ந்து தேடுவது போன்ற பார்வையால் செல்மாவின் முகத்தைப் பார்த்தார்.

அந்த மனிதர் வந்தார். பெரியவர்கராமியை பாதிரியார் அழைத்து வர தன்னுடைய சொந்த வண்டியை அனுப்பி இருப்பதாய் கூறினார்.

பெரியவர் முகம் கறுத்து மாற்றமடைந்தது. சிந்தனை படர்ந்தது. என்னிடம் ''செல்மாவின் தனிமைக்கு துணை யாயிரு. நான் விரைவில் வருவேன்'' என்றார்.

செல்மாவைப் பார்த்துப் புன்னகை பூத்தார். செல்மா தலை அசைத்து, கன்னங்கள் சிவக்க, யாழிசையினும் இனிய குரலிலே ''அப்பா, போய் வாருங்கள். நான் ஆவன செய்கின்றேன்'' என்றாள்.

பெரியவரின் வண்டி விரைந்தது. செல்மா வந்து பட்டு மெத்தையிலே அமர்ந்தாள். சுற்றும் பசும் புல்வெளி இளங்காற்றில் அசையும் கொடியானாள் செல்மா.

உதடுகளும் நாவும் உதிர்க்கும் சொற்கள் இதயங்களை இணைப்பதில்லை. மௌனத்தின் பொருள். பேச்சுக்களை இதயங்கள் தான் பேசும் வாய்ச் சொற்களிலும் தூய்மை யானது மௌனம். இதயத்தில் ஒளியூட்டும்; இணைக்கும்; சொர்க்கத்தை அருகில் கொணரும். ஆம் நம் உடம்பு சிறை. உலகம் நாடு கடத்தப்பட்டோரின் வாழ்விடம்.

செல்மா பார்த்தாள். கண்கள் இதயத்தின் ரகசியத்தை, இமைத்துக் காட்டின. அவள் ''அன்பரே! மலைகளி லிருந்து வெளிக்கிளம்பும் நிலவினைக் காண்போமா?'' என்றாள்.

எழுந்தோம். தோட்டத்தில் நடந்தோம். இருள் மரங் களை தன்னுள் மறைத்துக் கொண்டது. நிலவு தோட்டத்தை ஒளிமயமாக்கட்டும், பார்க்கலாம்.

செல்மா ''இருள் மரங்களை மறைக்கலாம். ஆனால் நம் இதயத்திலே ஒளிவிடும் காதலை மறைக்குமா?'' என்று கேட்டாள்.

அவள் வார்த்தைகளின் பொருளை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்; வியந்தேன்; மனம் விம்மியது; உடல் பருத்தது; கண்கள் பனித்தன.

அவள் பார்த்த பார்வை, உதிர்த்த சொற்கள் என்னை மயக்கின. உள்ளத்திலே தெளிவான, விரிவாக திரும்பத் திரும்ப ஒலித்தன. அப்படியே நெஞ்சத்தின் அடி ஆழத்திலே அமிழ்ந்து பொங்கிப் பெருகின.

மனிதன் எண்ணினான். சிந்தனை செயலானது. நினைத்தான். திட்டமிட்டான். எகிப்தின் பிரமிட்டுகள் நிலைத்தன. துன்பப்படும் மக்களின் மத்தியிலே ஒருவன் ஆழ்ந்து சிந்தித்தான் புரட்சி வெடித்தது; மக்கள் நிகர் ஆயினர்; இஸ்லாம் உயர்ந்தது; அலெக்சாண்டிரியா

விடுதலைச் சாம்பலானது. ஒரு பெண்ணின் எண்ணத்தின் முதிர்ச்சியே அழகு. மனித வாழ்க்கையின் நீரோட்டம் பலமுறை தடம் புரண்டன; வெள்ளம் திசை மாறியது. சரித்திரம் திருப்பப்பட்ட சம்பவங்கள் பல.

மனித மனத்தில் உந்து எண்ணம் உன்னை யோகி யாக்கும். அதுவே திசை திரும்பினால் பைத்தியக்கார னாக்கும்.

மங்கையின் கண்பார்வை உன்னை மகிழ்ச்சி மிக்க வனாக்கும்; ஒரு சொல் உன்னை செல்வனாக்கும். உன் ஒரு வார்த்தை உன்னை வறியனாக்கும்.

எவ்வளவு விசித்திரங்கள் பார்!

செல்மாவின் சொற்கள் என்னைத் தனிமையி லிருந்தும் இளமை உறக்கத்தினின்றும் விழித்தெழச் செய்தது. வாழ்க்கையும் மரணமும் நடனமாடின. எதிர் காலம் கேள்விக் குறியாய் இருந்ததை மாற்றி உற்சாகமாக மாற்றி உந்தியது.

நாங்கள் அமர்ந்தோம் சொரியும் மரமல்லிகை; மணக்கும் தென்றல்; வெளிப்பட்ட வெள்ளி நிலா; நீல விண்ணிலே கண்ணைப் பறிக்கும் நட்சத்திரங்களின் வைரக்குப்பை. மலைமேல் ஒளி வெள்ளம். கடல் மேல் தங்க அலைகள். லெபனானின் சமவெளியெங்கும் வெண்பனிப்போர்வை.

மேனாட்டுக் கவிஞர்களுக்கு லெபனான் தான் மனிதத் தோற்றத்தின் ஆதாம் ஏவாள் எனும் பழத் தோட்டம். தீர்க்கதரிசிகளின் பிறப்பிடம். சாலமன் டேவிட் இவர்களின் சாம்ராஜ்யம், சலவைக்கற்கோயில்கள்; தாமிரத் தூண்கள்; கடவுள்களின் வாழ்விடம்; வளர்விடம்... போற்றினர் கவிதை பாடினர்.

அழகு, வசீகரம் என்றும் வாழும்; உணர்ச்சி வேகத்திற்கு ஏற்ப தோற்றம் மாறும்.

செல்மா! தங்கச்சிலை; அழகு வடிவம்; காதல்

தெய்வம்! சிற்பி செதுக்கிய தந்த தேவதை; ஓவியனின் காவியப் பெண்!

செல்மா என்னை நோக்கினாள். ''ஏன் பேசாமல் இருக் கின்றீர்கள்? உங்களின் கடந்த காலம் பற்றி கவிதை பாடுங் களேன்'' என்றாள்.

''தோட்டத்தில் மலர்கள் சிரித்தன; இலைகள் பேசின; வண்டுகள் ரீங்கரித்தன; பறவைகள் பாடின. என் இதயமும் அவைகளுடன் பாடினவே'' என்றேன்.

செல்மா ! நான் உன் இனிய குரல் கேட்டேன் காற்றிலே மிதந்த கீதம்! உலகையே நடுங்க வைத்தது உன் இன்னிசை கீதம்'' என்றேன்.

செல்மா கண்களை மூடினாள்! ஆனந்தப் புன்னகை! அதிலே ஒரு துயர ரேகை! ''ஆமாம் விண்ணை விட உயர்ந்தது; கடலினும் ஆழமானது; வான் வெளியை விடப் பரந்தது; எல்லையே இல்லாத ஒன்றைக் கண்டேன்; இன்புற்றேன். கண்டு உணர முடியாத ஏதோ ஒன்றைப் பெற்றேன்'' என்றாள்.

செல்மா எங்கோ உயர்ந்தாள்; ஆத்மாவின் உன்னதக் கனவாய் மிதந்தாள்; என்னையே ஆளும் உணர்வலையாய் மாறினாள்.

காதல் ஆத்மக்கூட்டுறவின் சந்ததி. அது பல தலைமுறை களில் வளர்வது; வாழ்வது.

செல்மா நெகிழ்ந்தாள்; மகிழ்ந்தாள். ''நேற்று வரை நீ என் சகோதரன்; உடன் வாழ்ந்தவன். இன்று சகோதர பாவத்தையும் தாண்டி எங்கோ நிற்கின்றாய். இனிமை, அபூர்வம், பெருமிதம், கம்பீரம் அனைத்தையும் மிஞ்சி நிலவும் இந்த ஈர்ப்பின் குணம் அறியேன்; காதல் பயம் கலந்த ஓர் ஆனந்தமும் துக்கமும் நிரம்பி வழிகின்றதே'' என்றாள்.

அவள் முகம், அல்லி மலர் மீது திரண்ட பனித்துளிகள் போல் கண்ணீர் துளிர்த்தது.

''நாம் வாழ்க்கையின் புனிதத்திலும் புனிதமான இடத்திலே உலவுவதை யார் நம்புவார்? சந்தேகம் சங்கடம் அனைத்தையும் கடந்து வென்றோம்'' என்றாள்.

அவளுடைய கை விரல்கள் என் தலையின் மேல் மெல்ல தடவிக் கொண்டிருந்தன. எனக்கு அரச கிரீடமாய், மலர் மகுடமாய் அவளின் அன்புக் கைகளை விரும்பி ஏற்றேன்.

நான், ''செல்மா! உலகில் காதல் ஒன்று தான் பருவ காலங்களின் துணையின்றி முளைத்து செடியாகி அரும்பு விட்டு மொட்டாகி மலரும் மலர். நம் இரு ஆத்மாக்களும் நாம் பிறப்பதற்கு முன்பே நெருங்கி, இணைந்து, பிணைந்து புனிதத்தின் புனிதமாய் இரவும் பகலும் எந்த நேரமும் எங்கும் வாழ்கின்றது! மனிதன் வாழ்க்கை கருப் பையிலே தோன்றி வளர்ந்து வாழ்ந்து கல்லறையிலே முடிவதல்ல! இந்த அகண்ட பரந்த விரிந்த அண்ட கோளம், விண்மீன், சூரியன் சந்திரன் கிரகங்கள் எல்லாம் காதல் வயப்பட்ட ஆத்மாக்களாலும் புறக்கணிக்கப்பட வில்லை அல்லவா?'' என்றேன்.

செல்மா என் தலைமேல் இருந்து கைகளை மெல்ல எடுத்தாள். என் உடலெல்லாம் மின் அதிர்வு போன்ற உணர்ச்சி பரவியது. குளிர்ந்த காற்று வீசியது. மயிர்க் கூச்செறிந்தேன்; வியந்தேன், உணர்ந்தேன். பக்தன் பலி பீடத்தை முத்தமிட்டு இறையருளை வேண்டுவது போல் நான் செல்மாவின் கைகளிலே, என் காதல் கனல் கொழுந்து உதடுகளால் நீண்ட முத்தம் கொடுத்தேன். இதயம் உருகியது; உயிரின் நற்பண்புகள் மேலெழுந்தன.

நாங்கள் உலகை மறந்தோம். திடீரென குதிரையின் குளம்படி ஓசை. வண்டி நின்றது. பெரியவர் கராமி கீழ் இறங்கினார். அவர் தோற்றத்திலே தொய்வு. பாரம் அழுத்தியது; நிமிர்ந்த உருவம் குனிந்து நடந்தது.

செல்மாவை அணுகினார்; தோள்களில் கைகளை ஊன்றினார்; கன்னங்களிலே கண்ணீர்; துடிக்கும்

உதடுகள்; திணறும் குரல்; கராமி, ''என் உயிரே! செல்மா! விரைவில் நீ என்னை தனியே தவிக்க விடப் போகின்றாய்! தோட்டம் என் பூங்குயில் செல்மாவின் குரலைக் கேட்காமல் ஏங்கும்; ரோஜாமலர் உன் அழகு முகம் தேடி அழும். செல்மா நான் பாதிரியார் பிடியில் சிக்கினேன். நீ விரைவில் பாதிரியார் மைத்துனன் மன்சூர் பேக்கலீப் மனைவியாவாய். வழி அறியேன்; தவிக் கின்றேன்'' என்றார். சோர்ந்தார்; துடித்தார் பதைத்தார்.

செல்மா முகம் இருண்டது. குண்டு துளைத்து பறவை துவண்டு வீழ்ந்தது; உணர்வற்று கண்கள் நிலைத்தன. ''அப்பா! அந்தப் பாதிரி வஞ்சகன்; கொடியவன்; என் சிறகுகளை ஒடித்து விட்டான். சிறைக் கூண்டு தயாராகி விட்டதா? அப்பா! நீங்கள் ஒப்புதல் தந்தீரா? உங்களுக்கு விருப்பமா?'' என்றாள்.

கராமி என்ன சொல்வார்? பேரலை என்னைக் கவர்ந்தது; துன்பக் கடலடிக்கு ஆழ்த்தியது. தவித்தேன் இனியும் அங்கு என்னால் நிற்க முடியவில்லை. பயண மானேன்.

கராமி என் கைகளைப் பற்றி, ''மகனே! என்னை மன்னித்துவிடு! இனி நான் தனியனாய் தவிப்பேன். இளமை யானது முதுமைத் தளர்வுடன் பொருந்துவ தில்லை. இந்த உன் தகப்பனின் நண்பனை நாடிவா! என் அந்திமாலையில் நீ பாடிட ஓடிவா!'' என்றார்.

நான் கைகளைக் குலுக்கினேன். கராமியின் கண்ணீர் துளிகள் கைகளின் மேல் தெரித்தன. எனக்கு உடல் நடுக்கம்; மூச்சு திணறியது; பேச நா எழவில்லை. கராமி என் தலை தாழ்த்தி என் நெற்றியிலே முத்தமிட்டு ''மகனே வா, தினமும் வா'' என்றார்.

செல்மா! என் செல்மா! காதல் பிறந்த அன்றே சாவின் முகத்தைத் தழுவிக் கொண்டேன்.

○○○

6

எரியும் தணல் ஏரி

வெள்ளித் தாமரை மலர்; சங்கு போல் வெண்மை;
தாமரைக்குத் தாய் தண்ணீர்; தந்தை தான் சூரியன்;
தாமரைத் தண்டைக் கொய்து நீரில் இட்டால்
தாய்த் தண்ணீரே அழுகச் செய்து கொல்லும்
கரைமேல் போட்டால் சூரியன் காய்த்துக் கொல்வான்.

என் செல்மா தாமரை மலர் தன் தந்தையிடமிருந்து கொய்து எறியப்பட்டாள். இனிமேல்...

மனிதன் இருட்டிலே செய்வதை வெளிச்சத்தில் செய்ய அஞ்சுவான். இருட்டு கொடுமைக்குப் புகலிடம். மனிதன் இருட்டறையில் மறைப்பதெல்லாம் நடுத் தெருவிலே சந்தி சிரிக்கும் பொருளாகும்.

மதக்குரு இருட்டிலே திட்டமிட்டார்; பெரியவர் கராமியைப் பணிய வைத்தார்; அடுத்த நாள் இது பற்றி ஊரெல்லாம் பேச்சு. மதக்குருவின் சதித்திட்டம் வென்றது; தன் மைத்துனன் 'மன்சூர் பேக்லீப்' என்பவனுக்கு செல்மாவை மணம் முடித்தார்.

செல்மா மட்டும் இடம் மாறமாட்டாள்; அவளுடன் கராமியின் பெரும் செல்வமும் கை மாறும். காதலோ அன்போ அழகோ அறிவோ பாதிரியாரைக்கவரவில்லை;

ஆனால் பாழும் பணம், திரண்ட செல்வம் பேராசையைத் தூண்டியது. செல்மா கொலைக்களத்திற்கு துரத்தப் பட்டாள்.

கீழை நாட்டுச் சமயத்தலைவர்கள் தங்களுடைய தயை, கருணை, பக்தி, அன்பை வளர்த்துப் பரப்பாமல் உயர்வு, மேன்மை, அந்தஸ்து, அதிகாரம், வளம் இவற்றை வளர்க்க தங்கள் உறவினரை உயர்த்துகின்றனர்.

ஆனால் முற்றும் துறந்து விட்டோம் என்று கூறும் கிறித்துவப் பாதிரியும், முஸ்லீம் இமாமும், இந்து தர்மக் காவலராம் ஆசாரியார், மடாதிபதிகளும் தங்கள் இனத்தை, உறவினரை, செல்வச் செழிப்பால் உயர்த்த மத தர்மத்தையே உபயோகிக்கின்றனர்.

பாதிரியார் கராமியைப் பணிய வைத்த போது கராமியின் கண்ணீர் தான் பதிலாய் இருந்தது.

திருமண ஏற்பாட்டால் மகளை இழக்கின்றோம்; மருமகளைப் பெறுகின்றோம்.

கராமிக்கு மன்சூரைப் பற்றித் தெரியும். வஞ்சம் கொடுமை, பகைமை நிறைந்தவன். பாதிரியாரை பகைக்க முடியுமா? எதிர்த்தால் விளைவு விபரீதம். மதத் தலைவரை எதிர்த்து எவனும் வாழ முடியாது. கீழ்படிய மறுத்தால் வாள் கையை வெட்டும்; ஈட்டி கண்ணை நோண்டும்; பெயர் நடுத்தெருவில் கேவலப்படுத்தப் படும். மதவாதிகளின் சக்தி அப்படி; அன்றும் இன்றும் என்றும் இதுவே நிலை.

பெரியார் கராமி இந்தத் திருமண ஏற்பாட்டை மறுத்திருந்தால் செல்மாவின் நற்பெயர் அழிக்கப்பட்டு மாசு படிய வைத்து ஊரார் நாவெல்லாம் தூற்றப்பட உயிருடன் தீயிடப்படுவாள். கராமிக்கு தெரியும்; விளைவு களை எண்ணி செல்மாவை இழக்க உடன்பட்டார். பரிதாபத்திற்கு உரிய பெண்மணிகள்.

பாதிரியார் கண்ணி வைத்தார். சுதந்திரக் காதல்

பறவை, அழகே உருவான செல்மா சிக்கிக் கொண்டாள்.

அளவிற்கரிய செல்வம், துயரத்தின் குவியல். எல்லோரும் வணங்கும் பணம் இதயத்தின் மரணத்திற்குக் காரணம்.

பேராசைக்கு செல்மா பலி. அவள் ஏழையாய் இருந்திருந்தால் ஆனந்தமாய் வாழ்ந்திருப்பாள். அடிமையாகி இறந்திருக்க மாட்டாள்.

செல்மா! அவளின் தெய்வீகக் காதல் மகிழ்ச்சியில் திளைத்தேன்; அக்காதல் என்னைக் காலையில் எழுப்பி, வாழ்வின் பொருள் அகற்றி இயற்கையின் இரகசியம் கூறி ஆனந்தப் பண் இசைத்து தாலாட்டு பாடி என்னையே மறக்கச் செய்தது. எனக்கோ அன்புப் பசி. அவள் ஆத்மா என்னை ஆட்கொண்டது; உள்ளத்தில் திருப்தி; பூமியை சொர்க்க மாக்கியது; அது நம்பிக்கையின் நளினம்; அழகிய இனிய கனவு; இயற்கைக்குப் பல பொருள் கண்டேன். கடல் அலை களிலே காதல் பண் கேட்டேன்; மக்களிலெல்லாம் நான் மானுடத்தின் அழகையும் மேன்மையையும் கண்டேன்.

பாதிரியாரின் வலையில் கராமி திணறினார்; செல்மா சிக்குண்டாள். நான்? காதல் ஆவியாகி மேகமாய் மறைந்தது; துயரமே எஞ்சியது; வசந்தத்தின் அழகு அழிந்தது; குளிரின் குரூரம், கடும் புயலின் சீற்றம் பாய்ந்து தாக்கியது. கடல் அலைகள் பெரும் பாறையில் மோதின. தோல்வி, ஏமாற்றம், சித்திரவதை இதுவே நான் உணரும் வாழ்க்கை பயங்கரமான இரவுகள். கசப்பு மிக்க காலை, வேதனையால் வாட்டம், பகல்கள் எல்லாம் சொந்தமாயின.

வேதனை உந்த நாள் செல்மாவின் இல்லம் சென்றேன். அது புனிதக் கோயில்; அழகுக் கட்டுக் கோப்பு; காதல் ஆசீர்வாதம், ஆத்மாவின் வணக்கம்; இதயத்தின் பிராத்தனை. இதுவே அவளில்லம்.

தோட்டத்தில் நுழைந்தேன்; அதே மரமல்லிகை மரத்தடியில் என் செல்மா அமர்ந்திருந்தாள். இயற்கையை மீறிய போராட்டம்; கொடுமைக்கு அப்பாற்பட்ட உலகம்; இறைநிலை கடந்த மெய்யுணர்வு; ஒரு தனி உலகில் நுழைந்தேன்.

செல்மா அசையவே இல்லை; ஆனால் என் வருகையை உணர்ந்தாள். என்னைப் பார்த்தாள்; தலையை உயர்த்தினாள்; வானிலே கண்கள் எதைத் தேடின?

நடுங்கும் கரங்களால் என் கைகளைப் பற்றினாள்.

''என் அன்பே! அன்பின் அன்பே! என் முகத்தைப் பார். அதில் நீ என்ன அறிய விரும்புகின்றாயோ அதைத் தேடி அறிந்து கொள்! என் அன்பே! என் முகம் பார்'' என்றாள்.

முகத்தை உற்று நோக்கினேன்; சிரித்த உதடுகள், படபடத்த கண் இமைகள்; மலர்ந்த முகம் எல்லாம் மங்கி மறைய குழிவிழுந்த கண்கள், உலர்ந்த உதடுகள், வேதனையால் ஒளி இழந்த முகம் அவைகளே தெரிந்தன. தந்தத்தால் கடைந்தெடுத்த கழுத்து தலைபாரம் தாங்காமல் வளைந்து தாழ்ந்தது. ஒளியில்லை, வண்ண மில்லை, வாடி வதங்கிய வதனம். எவ்வளவு பெரிய மாற்றம்?

சந்திரனை மேகங்கள் மறைத்தன. செல்மாவின் முகத்தை வருத்தம், வேதனை, ஏமாற்றம் மறைத்தன.

காதல் கொப்பளிக்கும் போது துயரமும் வேதனையும் கூட, அழகை அதிகமாக்கும்; ஆனால் ஏக்கமும் ஏமாற்றமும் அழகை அழித்து உணர்ச்சிகளைப் புதைத்து, அமைதியை மூடிவிடும்.

மதுவண்ணம் கண்ணாடிக் குவளையில் வெளிப்படா விடில், மதுக்கிண்ணம் உதடுகளைக் கவர்ந்திழுக்குமா?

செல்மா ஒரு தெய்வீக மாது; பெண்மையின் சின்னம்; தாய்மையின் தோற்றம்; அமைதியின் வாழ்விடம்;

காதலின் வளர்விடம்.

செல்மாவை உற்றுப் பார்த்தேன். வேதனைக் குரல் கேட்டேன்; துடித்தேன், துன்புற்றேன், துவண்டேன். உலகின் இயக்கமே நின்று விட்டது.

அவளுடைய பெருங்கண்கள் என்னை மட்டுமே இமைக்காமல் பார்த்தன. குளிர்ந்து நடுங்கும் கைகளை உணர்ந்தேன். மயக்கத்திலிருந்து மீண்டேன்.

''அன்பரே! பயங்கரமான எதிர்காலம்; என் மரணத்தை நோக்கிப் பயணமாக, என் அப்பா, பாதிரியார் வீட்டிற்குப் போய் இருக்கின்றார். இந்த அடிமையை ஆட் கொள்ளும் எஜமானனைத் தேடிப் போய் இருக்கின்றார்!

''எனக்குத் தாயாக சீராட்டிப் பாராட்டி வளர்த்த தந்தை என்னைப் பிரிந்து எப்படி வாழ்வாரோ! என் வருங்கால துணைவனைத் தேடி மணமுடிக்க நிச்சய மாக்கப்போய் உள்ளார்.

''சென்ற வாரம் இதே நாளில் என் இனிய மரமல்லிகை மரத்தடியிலே என் காதல், மல்லியாய் சொரிந்து மலர்ந்தது; மகிழ வைத்தது. அதே நேரத்தில் விதி என் வாழ்க்கையை பொருளாசை கொண்ட பாதிரியாரின் பசிக்கு இரை யாக்கியது.

''நீர் ஊற்றின் கரையெல்லாம் பசிமிக்க பாம்புகள் நெளிகின்றன. உன் ஆத்மா எனும் பறவை வானில் வட்டமிடுகின்றது. இரவு எவ்வளவு மகத்தானது! இரவின் இரகசியம் எவ்வளவு ஆழமானது?'' என்றாள் என் செல்மா.

அவநம்பிக்கையெனும் கரிய பூதம்; குழந்தையான காதல், அதன் கைப்பிடியிலே அகப்பட கழுத்தை இறுக்குவதாய் உணர்ந்தேன்.

''அன்பே இந்த வானம்பாடிப் பறவை விண்ணிலே பறக்கிறது; அது பறந்து கொண்டே இருக்கும். தாகம், பசி, தளர்ச்சி எல்லாம் தாக்க, பறவை நீரூற்றில் விழும்;

பாம்புகளின் ஆகாரமாகும்'' என்றேன்.

செல்மா, ''என் அன்பே! இந்த வானம்பாடி, உலகம் உள்ள மட்டும் பறந்து கொண்டே பாட வேண்டும். இனியகுரல் ஓயக்கூடாது. அப்போதே என் இதயத்தில் உயிர் வாழும்; இறகின் படபடப்பு, என் இதயத்தைக் கவ்வும் மேகத்தை விரட்டும்'' என்றாள்.

நான், ''அன்பே! தாகம் களைப்புண்டாக்க, பயம் அதனைக் கொன்று விடும்! சிறகுகள் முறியும் நீரூற்றில் விழும்; பாம்புகளுக்கு உணவாகும்!'' என்றேன்.

செல்மாவின் உதடுகள் துடித்தன. சோர்வு படிந்தது. ''மண்ணின் தாகம் மதுவை வேண்டுமோ! உடலின் பாதுகாப்பு உயிரின் அச்சத்தினும் அதிகமோ! வாழ்க்கைப் பாதையே இருண்டு விட்டது; கைக் கோலற்ற குருடனாய் தவிக்கின்றேன். அன்பான அப்பாவின் செல்வம் என்னை அடிமைச் சந்தைச் சரக்காக்கி விற்றுவிட்டது; பாதிரிக்கும் அவர் மைத்துனருக்கும் என் அன்பு வேண்டாம்; உடல் வேண்டும். என் காதல் வேண்டாம்; செல்வம் வேண்டும். எனக்குக் காதல் இல்லை. இனி வாழ்க்கையைக் கற்றுக் கொள்வேன். கீழ்ப்படிவேன்; பணி செய்வேன்; மகிழ வைப்பேன்; ஆனால் வலிமையற்ற நான் என்ன தர முடியும்?'' என்றாள்.

மேலும் செல்மா தொடர்ந்தாள். ''அன்பரே! நீங்கள் வாழ்க்கையை இனிமேல் தான் ஆரம்பிக்க வேண்டும். உங்கள் பாதையில் மலர் பரப்பி உள்ளது. உங்கள் இதயமே உங்கள் வழி நடைப்பாதையை ஒளியூட்டும் தீப்பந்தம். சுதந்திரமாக சிந்தியுங்கள்; பேசுங்கள்; நடந்து காட்டுங்கள்; நீங்கள் ஆண்; அடிமைச் சந்தையில் நீங்கள் வியாபாரப் பொருள் அல்ல; நீங்கள் ஒரு பெண்ணை மணந்து அவள் மனமறிந்து, எண்ணங்களைப் பரிமாறி, நேசித்து பாசமுடன் காதல் பொங்க வாழ வேண்டுகின்றேன்.''

செல்மாவும் நானும் மௌனமாய் இருந்தோம். பிறகு செல்மா சொன்னாள். ''நீங்கள் மனிதனில் மேன்மையை அடைவீர். 'நான் மடந்தையின் கடமையைச் செய்வேன்' நாம் கிழிக்கப்பட்டோம்; பிரிக்கப்பட்டோம். நம்மிரு உள்ளங்களும் இணைந்ததே பிரிவதற்காகவா? நம் காதல் மலருமுன்பே கருகி விடவா? பறக்க உயர்ந்த பறவை சிறகு முறிந்து விழவா? சொர்க்கம் நோக்கிப் பயண மானதே நரகில் மடியவா? நம் ஆவிகளே இந்த இரவுக் காற்றைப் புயலாக மாற்றி பள்ளத்தில் வீழ்த்தி மூடி மறைக்கவா?

''நாம் சமயக் கட்டளைகளை மீறவில்லையே! தடை செய்யப்பட்ட பழத்தை உண்ணவில்லையே! நாம் சதியாலோசனை செய்யவில்லையே! தேவையற்ற புரட்சி செய்யவில்லை! பின் ஏன் சொர்க்கத்திலிருந்து நரகில் வீழ்த்தப்பட்டோம்! இந்த வாழ்க்கையே நம்மை கொன்று விடுமானால் இனி மனம் தான் நம்மை இணைக்க முடியும்.

''பெண் மனம் கால மாற்றத்தால் பருவங்களுக்கு ஏற்ப மாறாது. பெண் மனம் போர் நடந்த வயல் போல. மரங்கள் வேரோடு சாய்ந்தன! புல் எரிந்து சாம்பலானது! பாறை களிலெல்லாம் இரத்தக் கரை பட்டுச் சிவந்தன. மண்டை யோடுகளும் எலும்புக்கூடுகளும் மலையாய் குவிந்தன. ஆனால் பூமித்தாய் மட்டும் அப்படியே இருக் கின்றாள்!

''நம் காதல் உறக்கத்தில் தோன்றி கனவாய் மறைந்ததா? காலையில் வந்த காதல் விருந்தாளி, இருட்டிலே மறைந்து ஓடி விட்டதா? நாம் பிரிகின்றோம்; எப்போது கூடுவோம்?

''அன்பே! தலையை உயர்த்துங்கள்! நான் நன்கு பார்க்கின்றேன்! உதடுகளை அசையுங்கள்! நான் கேட் கின்றேன்! நம் காதல் கப்பல் புயலில் சிக்கி மூழ்கி விட்டது! இரவின் அமைதியிலே என் காதல் கீதம்

கேட்குமா உங்களுக்கு? மாலை வெயிலின் நிழல் போல் வளர்ந்த காதல் சூரியன் மறைய எங்கோ ஒளிந்து கொண்டதா? என் கண்களின் ஒளியாய், காதுகளின் இன்னிசையாய் என் உயிரின் விரிந்த இறக்கையாய் இருக்கும் நீங்கள் இனி என்ன ஆவீர்கள்?'' என்றாள்.

நான், ''செல்மா ! நீ என்னவாக இருக்க விரும்பு கின்றாயோ நான் அதுவாகவே இருப்பேன்'' என்றேன்.

செல்மா தொடர்ந்தாள். ''நீ ஒரு கவிஞனாய் இரு; நான் உங்கள் துயர நினைவாய் இருப்பேன்! பாலை வனத்தில் உள்ள சோலையிலே தாகம் தீர்ந்த பயணி தன் நிழலை எப்படி பார்த்து மகிழ்வானோ அப்படி, என்னை நினைத்து மகிழுங்கள். உலகில் பிறந்தவுடன் இறந்து விட்ட குழந்தையை அதன் தாய் எப்படி ஆழ நினைப்பாளோ அப்படி, என்னை நினைவு கூறுங்கள்! கருணைமிக்க அரசன் தன் அறியாமையால் கொலை குற்றம் சாட்ட, பின்பு மன்னிக்க நினைத்த போது கைதி கொலையுண்டான் என்று கேள்விப்பட்டு துடிக்கும் மன்னன் நிலையில் நான்!

''அன்பரே! இனி தனிமையிலே தவிக்கும் என் தகப்பனாருக்கு நீங்களே துணை; ஆறுதல்; அமைதி; நம்பிக்கை; அன்புமகன். நான் பிரியப் போகின்றேன். என் செய்வேன்?''

நான் நெகிழ்ந்தேன்; உருகினேன்; துவண்டேன்.

''செல்மா! உன் விருப்பமே என் செயல்; உன் வேண்டுகோளே என் கடமை. உன் காதலின் சிறையே என் இதயம். உன் துயரத்தின் கல்லறை என் நெஞ்சமே; இந்த கிராமக் கோயிலின் மணியோசை போல் உன் பெயரை என் இதயம் ஒலிக்கும். நான் உயிரின் மொழி. வேற்று நாட்டிலிருந்து தாய்நாட்டை நினைக்கும் அன்னியன் போல் உன்னையே நினைப்பேன். அரசிழந்த மன்னவன் தன் கீர்த்தி மிக்க நாட்களை நினைப்பது போல் நான் உன்னை நினைத்துக் கொண்டே இருப்பேன். இடையன்

தன் ஆடுகள் மேய புல்வெளிக்கு ஏங்குவது போல் ஏங்குவேன். நீயே என் பாலைவனச் சோலை. நான் உன் நினைவிலேயே வாழ்வேன்! செல்மா! செல்மா! என்றே என் மரணம் என்னைத் தழுவும்'' என்றேன்.

செல்மா நான் சொல்வதை எல்லாம் கேட்டாள். துடித்தாள்; கண்ணீர் சொரிந்தாள்; மயங்கினாள்.

''செல்மா! விதி என்னைப் போராடும் உலகில் தனியே தள்ளி விட்டது. துன்பமும் அவலமும் நிறைந்த வாழ்க்கையை வாழ்வேன். சாவின் வாயிலிலே நுழைவேன். என் காதலுக்கு சிலை எழுப்பி மரணப் பள்ளத்தாக்கிலே மண்டியிட்டு வணங்கி நிற்பேன். உன் இனிய அன்பும் பண்பு மிக்க காதலும் என்னை என்றும் வாழவைக்கும்'' என்றேன்.

''காதல்! என்னைக் காலையில் துயிலெழுப்பும்; வயல் வெளியிலே பாடச் செய்யும்; பகலிலே மரநிழலிலே காதல் நினைவிலே மயங்குவேன்; பண்பாடும் பறவைகள் எனக்கு செல்மாவின் பேச்சாகும்; விண்ணிலே தவழும் கரிய பெரிய மேகங்கள், உலாவரும்; இரவு நெருங்க காதல் என்னைத் தழுவ நான் உறங்கி விடுவேன். பின்பு என் தூக்கமெல்லாம் கனவுகளே! அது ஒரு சுவர்க்க பூமி; அங்கே தடை இல்லை; சுவரில்லை; பேதமில்லை; அடக்குமுறையில்லை; வறுமை இல்லை; போரில்லை; மதமில்லை.பாதிரிகள் இல்லை. எல்லாம் இன்பமயம். வசந்தம் வரும் காதலுடன் நடப்பேன்; மல்லி மலர் சொரியும்; அல்லி மலர் குவளைகளில் குவியும். மாரியிலே பனித்துளிகள்; மழையிலே நனைவோம்; நடுங்கும் குளிர்; காதலர் கட்டி அணைப்பர்; வேனிற் காலம்; வயல்வெளியிலே தரையே படுக்கை; வைக்கோலே தலையணை; வான்வெளியெங்கும் வைரக் குப்பை; வட்ட நிலா மிதக்கும் பால் வெளி அண்டம்; கோடி கோடி கனவுகள்!

இலையுதிர் காலம் வரும்; திராட்சைத் தோட்டம்; ரசம்

பிழியும் ஆலைகள்; வண்ண வண்ண ஜோடிகள்; கிண்ண மெல்லாம் வழியும் திராட்சை ரசம்; அருந்திக் களிப்போம்; பாடும் குயில்கள்; ஆடும் மயில்கள்; பலப்பல பண்பாடும் கோடி கோடி பறவைகள். மாரிக்காலம்; கணப்புத் தீ; காதலர்கள் குளிர்காயும் அழகு; அவர்களின் நெருக்கம்; கதைகள் பல;

இளமையிே லகாதல் என் ஆசான்;
இடைக்காலத்தே காதல் என் துணை;
முதுமையிலே காதல் என் ஆனந்தம்;
இறுதிக்காலத்தே காதல் என் கனவு;
இறப்பிலே காதலே கடவுள்.

இவையெல்லாம் என் இதய ஆழத்திலிருந்து மேலெழும்பின. தீப்பிழம்பாய் ஒளி வீசின!

செல்மா! கண்ணீர் தடாகமானாள். செல்மாவின் ஆத்மாவும் என் ஆத்மாவும் ஒருங்கிணைந்து மேலே மேலே உயர்ந்தன. காதலர்களே பறக்க முடியும்; காதலர்களே காண முடியும்; உணர முடியும். காதலை அறிந்தவர், புரிந்தவர், அனுபவித்தவர்களே எங்கள் நிலையை உணர முடியும்.

ஓடுகின்ற ஆறு கடலிலே கலக்கும் இல்லையா? பனித்துளியைச் சிந்தாத மலர்கள் உண்டா? காதல் கோப்பையின் மதுவைச் சுவைக்காதவர் மனிதரா? காதல் கோயிலிலே புகுந்து பலி பீடத்தில் மண்டியிடாத ஆத்மா என்ன ஆத்மா?

செல்மா விண்வெளியை நோக்கினாள்; விண்மீன்கள் மின்னின; கைகளை மேலே உயர்த்தினாள்; கண்கள் அகன்றன; உதடுகள் துடித்தன; முகத்திலே சோகம்; கதறினாள்; கூவினாள்; ஓலமிட்டாள்.

''ஊ இறைவா! நான் என்ன செய்தேன்? எனக்கேன் இக்கொடிய தண்டனை? என்ன பாபம்செய்தேன்? ஓ வலிமை மிக்க கடவுளே! வலிபெற்ற என்னை ஏன்

வேதனையில் துன்புறுத்துகின்றாய்? நான் ஒரு புழு! உன் பலமிக்க காலால் என்னைஏன் நசுக்குகின்றாய்? நான் ஒரு தூசு! நீயோ வெறும் சூறாவளிப் புயல்! என் மேல் ஏன் போர் தொடுக்கின்றாய்? நீ கருணைக் கடல் தானே!

எனக்குக் காதலைக் கற்பித்தாய்! உயர்த்தினாய்! பின் ஏன் தாழ்த்துகின்றாய்? சொர்க்கத்திற்கு அழைத்து நரகத்தில் தள்ளி விட்டாயே, ஏன்?

அவளுக்குக் காதல் வாழ்க்கையின் மூச்சை நிரப்பினாய்; ஆனால் அவளின் இதயத்திலே மரண விதைகளை ஊன்றி விட்டாய்!

அவளுக்கு மகிழ்ச்சிப் பாதையை காட்டினாய்; ஆனால் துயரப் பாதையிலே துரத்தி விட்டாய்!

அவளுடைய ரண காயங்களுக்கு மருந்திட்டாய்; ஆனால் அவள் உடலையே பயங்கரத் துன்பம் சூழ்ந்து கவ்வும்படி ஏவி விட்டாய்!

அவள் படுக்கையிலே அமைதி ஆனந்தம் தவழ விட்டாய். ஆனால் படுக்கையைச் சுற்றி பயத்தையும் தடைகளையும் எழுப்பி விட்டாய்!

அவள் காதலும் அன்பும் பொங்கும் ஊற்றாக்கினாய். ஆனால் அவள் அவமானமும் தோல்வியும் தொடர்ந்து வர வாழ்க்கையையே பாலை வனமாக்கினாய்!

நீயே அவளுடைய மரணக்குவளையிலே வாழ்க்கைத் தேனையும், வாழ்க்கைக் குவளையிலே மரண நஞ்சையும் பருக வைத்தாய்!

அவளைத் தூய்மையாக்க கண்ணீரைக் கொட்டினாய். ஆனால் கண்ணின் வெள்ளத்திலே அடித்து செல்லப் பட்டாள்!

இறைவா! நீ என் காதல் கண்களைத் திறந்தாய்! ஆனால் அவற்றையே குருடாக்கி விட்டாய்!

உன் உதடுகளால் முத்தமிட்டாய். ஆனால் வலிய

கரங்களால் இறுகப்பிடித்துக்கொன்று விட்டாய்!

என் உள்ளத்தை வெள்ளை ரோஜா செடியாக்கி மலரச் செய்தாய்; ஆனால் முள்வேலியால் அதை மூடி மறைத்து விட்டாய்!

இந்த இளைஞனுடன் என் உயிரைப் பிணைத்தாய்5? காதலால் இணைத்தாய்; ஆனால் முன்பின் அறியாத ஒருவனுடன் என் உடலை உடைமையாக்குகின்றாய்!

இறைவா! எனக்கு இந்த வாழ்க்கையா? மரணமா என்ற போராட்டத்திலே மரணம் வரை உண்மையோடும் பண்போடும் வாழ வையுங்கள்!'' என்றாள்.

உடைந்த உள்ளம்; ஒளியிழந்த முகம்; தாழ்ந்த தலை; மேலே உயர்த்திய கைகள். ஆம், பெரும் புயலிலே முறிந்து போன மரமாய் தோன்றினாள்.

அவளுடைய குளிர்ந்து துவண்ட கைகளிலே முத்த மிட்டேன். தேற்ற முயன்றேன். யார் யாருக்கு தேறுதலும் ஆறுதலும் கொடுக்க முடியும். இருவரும் இடிந்து, சரிந்து, தளர்ந்து இருந்தோம்.

பூகம்பத்தால் மண்ணில் புதையுண்ட கோயிலாய் இருந்தோம். செயலில்லை; நினைவில்லை.

எங்கள் இதய நூலிழை மெலிந்து, வலுவற்று இருந்தது மூச்சுவிட்டாலே அறுந்து விடுமோ!

நள்ளிரவு; லெபனான் மலை வாயிலில் சந்தின் மறைந்தான். விண்மீன்களிடையே சவப் பெட்டியில் உள்ள பிணத்தின் முகத்தை மெழுகுவர்த்திகள் ஒளியூட்டியது போல இருந்தது நிலவும் வானும். லெபனான் நகரெல்லாம் வளைந்த முதுகும் ஊடுருவும் இருளும் தூக்கமின்றித் துவண்ட உடலும் போல் இருந்தது. இருளிலே ஊடுருவும் பார்வையுடன் விடியலை எதிர் நோக்கும் கிழவனாய் இருந்தது. இடிந்த தகர்ந்த அரண்மனையின் குவியலின் மேல் நாடிழந்து அரசன் அமர்ந்திருபபதைப் போல் இருந்தது.

மனிதன் தன் உணர்ச்சியால், அனுபவங்களால், மாறுதல் அடைகின்றான். இயற்கையும் பருவங்களால் மாறுகின்றன.

காலையில் மின்னி, குதித்து, சிந்து பாடிய சிற்றாறு மாலையிலே குழந்தையை இழந்த தாய் கதறி ஓலமிடுவது போல் ஓடுகின்றது.

பகலிலே கம்பீரமாய் அசைக்க முடியாததாய் தோன்றும் மாலை, இரவிலே பரிதாபமாய் காணப்படும்.

ஒரு வாரத்திற்கு முன்பு இருந்த நானும் செல்மாவும் இப்போது எப்படி இருக்கின்றோம்? தனிமை, துக்கம், தவிப்பு இவற்றால் வருங்காலமே இருண்டு துடிக்கின்றோம்.

நாங்கள் எழுந்து நின்றோம். பிரியாவிடை பெற்றோம். காதலும் அவ நம்பிக்கையும் எங்கள் குரல் வளையை அழுத்த, சிறகு விரிய முறிந்த சிறகுகளாய் பறக்க இயலாமல் தரையில் வீழ்ந்தோம்.

நான் செல்மாவின் கைகளிலே முத்தமிட்டேன்; செல்மா என் தலையைத் தடவி முகத்திலே முத்தமிட்டாள்.

''ஓ இறைவா? என் முறிந்த சிறகுகளை குணமாக்க மாட்டாயா?'' என்றாள்.

மரங்களின் அழகு, சந்திரனின் ஒளி, ஆழ்ந்த அமைதி எல்லாம் விகாரமாய் பயங்கரமாய் மாறின. இதய ஒளி நெருப்பாய் தகித்தது; தேவகீதம் சிங்கப் பிளிறலாய் மாறியது.

நான் நகர்ந்தேன்; அறையை அடைந்தேன்; படுக்கைமேல் வீழ்ந்தேன்.

''செல்மா; என் செல்மா! என் முறிந்த சிறகுகள் குணமாகுமா?'' என்று கதறி அழுதேன்.

○○○

கோடை, மாரி, இலையுதிர்காலம், இளவேனில், முது வேனில் காலத்திற்குக் கவலையேது? ஆனால் எனக்கு? செல்மாவின் மேல் என் காதல் வளர்ந்தது. காதல் அதிலே உடலோ, சதையோ அடிமையாகாமல் என் உள்ளம், உயிர், ஆத்மா, பாசம், நேசம், ஆசை, அன்பு இவைகளே வளர்ந்தன. கண்ணீர் அருவியானது; இதயத்தின் இரத்தம் உறிஞ்சப்பட்டது. நான் செல்மாவும் அவள் கணவனும் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென பிரார்த்தனை செய்தேன். கராமிக்கு அமைதியும் இன்பமும் ஆறுதலும் கொடுக்க வணங்கினேன்.

ஆனால் எல்லாம் வீண்; செல்மாவின் பெரும் துன்பம் அவள் உள்மன வியாதியாகிமரணமே குணமாக்கும் மருந்தாய் மாறியது.

செல்மாவின் கணவன் சுகபோகி; பேராசைக்காரன்; திருப்தி அற்றவன்; செல்மாவின் தகப்பனின் சொத்தை யெல்லாம் மெல்ல மெல்லக் கவர்ந்தான். கராமி இறந்தால் தோட்டம், பூங்கா எல்லாம் தனக்கே என்று அவர் மரணமடைய இறைவனைப் பிரார்த்தனை செய்தான்.

பாதிரியும் மருமகனும் ஒழுக்கத்தில் ஒன்றானவர். பாதிரியாரின் கபடம், வஞ்சகம், காமம் எல்லாம் மாதா கோயிலின் புனித அங்கியிலே மறைக்கப்பட்டது. கழுத்திலே தொங்கும் தங்கச் சங்கிலியும் சிலுவையும் அவர் இரகசியங் களை, மறைவிலே அனுபவிக்க வழி செய்தது.

இந்த மருமகனோ ஒளிவு மறைவின்றிப் பகிரங்கமாக அனுபவித்தான். குடித்தான்; சிற்றின்ப வேட்கையை தணித்துக்கொண்டான். செல்மா ஒரு சிதைந்த சித்திர மானாள். அழகு அழிந்தது; வளமை குறைந்தது.

பாதிரியார் காலை நேரத்தை மாதா கோயிலில் கழித்தார். மீதி நேரத்தை விதவைகள், அனாதைகள், அனுபவம் அற்றவர், களங்கமில்லாதவர் இவர்களிடம்

உள்ள பணம், பொருள், பெண்மை அனைத்தையும் சிறுகச் சிறுக இரகசியமாய் கொள்ளையிட்டார்.

மறுமகன் பகிரங்கமாய் கவர்ந்தான்; அபகரித்தான்.

மாதா கோயிலில் மதப் பிரசாரம்; ஆனால் வெளியிலே பாதிரியார் அரசியல் சதியாலோசனையில் முழுமையாக ஈடுபட்டார்.

பாதிரியாரின் கௌரவம், செல்வாக்கு, மதவேதம் எல்லாம் மறுமகனுக்கு லஞ்சம், அரசியல் ஆதாயம் அனைத்தையும் தேடித் தந்தது.

பாதிரியார் இருளின் போர்வையிலே மறைந்து கொள்ளும் மதத்திருடன். மறுமகனோ பட்டப் பகலில் திமிரோடு நடைபயிலும் கொள்ளைக்காரன்.

கீழை நாட்டு மக்களின் நம்பிக்கையெல்லாம் இந்தப் பாதிரியாரின் மேல்தான். பேராசை கொண்டு தங்கள் இரும்புக் கரத்தால் நசுக்கும் அரசியல்வாதியைத்தான் போற்றவார்; புகழ்வார்; வணங்குவார்.

ஒரு புறம் எளிய சமுதாயம், கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள். மறுபுறம் பரிதாப மடந்தை. பாழான வாழ்க்கை; கண்ணீர் சிந்தி கசிந்துருக நான்.

பெண்தானே சமுதாயத்தின் ஒளிவிளக்கு? அதில் எண்ணெயே வற்றி விட்டால் சுடர் மங்காதா? செல்மா சுடர் மங்கிய ஒளி உமிழாத விளக்கானாள். நாசமாக்கப் பட்ட காதல்; சவக்குழிக்கத் துரத்தும் தாய்மை; உதாசினம் செய்யப்பட்ட பெண் என்ன செய்வாள்?

இலை உதிர் காலம்; கதறி ஊளையிடும் காற்று; பழுத்த இலைகள் சிதறி வீழ்ந்தன.

நான் பெய்ரூட் நகரிலே கனவுகளே துணை நிற்க தனித்துக்கிடந்தேன். கனவுகள் விண்ணில் உயர்த்தின; மண்ணில் புதைந்தன.

காயம்பட்ட மான் இனத்தை விட்டு ஒதுங்கி ஒரு மர நிழலில் காயம் ஆற நாவினால் நக்கி, சாகும் வரை தனிமையிலே தவிப்பைதப் போல் நான்.

கராமி நோய்வாய் பட்டார் என அறிந்தேன். தோட்டத்திற்குக் குறுக்கு வழியிலே நடந்தே சென்றேன். கராமி மெலிந்து கட்டிலின் மேல் விழுந்து கிடந்தார். குழிவிழுந்த கண்கள்; ஆழமான கரிய பள்ளத்தாக்கென இருந்தன. பொலிவுற்று இருந்த புன்சிரிப்பு எங்கே போயிற்று? துன்பமும் வேதனையும் ஆட்கொண்டதா; இலையுதிர்ந்த பின் மரக் கிளைகள் காற்றில் நடுங்குவது போல் நடுநடுங்கும் கைவிரல்கள்; நான் நெருங்கினேன் தொட்டேன்; ஆழ நோக்கினேன்.

நடுங்கும் குரலில் கராமி கூறினார்.

''என் மகனே, அடுத்த அறையில் செல்மா அழுது கொண்டிருக்கிறாள். ஆறுதல் கூறு; என்னிடம் அழைத்து வா! என் அருகே அமர்த்து!'' என்றார்.

செல்மா, முகம் புதைத்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். நான் ''செல்மா'' என்றேன். அவள் திடுக்கிட்டு எழுந்தாள்; பயங்கரக் கனவிலிருந்து விடு பட்டவள் போல் அசைந்து எழுந்து அமர்ந்தாள். என்னை மிரள மிரளப்பார்த்தாள்; பதைத்தாள்.

நீண்ட மௌனம், நாங்கள் காதலால் மயங்கிய நினைவுகள், கனவுகள் மிகுந்த அந்த கால கட்டத்தை நினைவுபடுத்தியதே!

செல்மா கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

''அன்பரே! காலம் நம் வாழ்க்கையை எப்படி மாற்றி சிதைத்து விட்டது பார்! வசந்தம் நம்மைக் காதல் தளையால் பிணைத்தது. இன்று சாவின் அரியணை முன் நம்மை இணைக்கின்றதா? காலம் எவ்வளவு பயங்கர மானது?'' என்றாள்.

பழைமையின் பயங்கரத் தோற்றத்தைக் கண்டு அஞ்சி

கைகளால் கண்களை மறைத்துக்கொண்டாள்.

நான் அவள் தலைமேல் கையை வைத்து, ''செல்மா! நாம் புயலுக்கு அஞ்சாத கோபுரம் போல் நிற்போம்! போர்க் களத்தில் எதிரிக்கு அஞ்சாத வீரனைப் போல் போராடுவோம்; அழிக்கப்பட்டால் தியாகிகளாய் உயிர் துறப்போம்; வெற்றி பெற்றால் வீரர்களாய் உயிர் வாழ்வோம்; தடைகளையும் கொடுமைகளையும் தீரத் தோடு எதிர்ப்போம்.

வளையில் சிக்கும் எலியைக் காட்டிலும் விளக்கை வட்டமிட்டு மடியும் விட்டில் பூச்சி அழகானதே! செல்மா மகிழ்ச்சியோடு இரு! வா, கண்களைத் துடைத்துக் கொள்! அப்பாவின் அருகே அமர்வோம். துடிக்கின்ற உயிருக்கு உன் அன்பே ஆதரவு, உன் புன்னகைதான் அவரை குணமாக்கும் மருந்து'' என்றேன்.

''அன்பரே! நீங்களா என்னை சகித்துக்கொள்ளச் சொல்கிறீர்? எப்படி மகிழ்வது? அது எங்கே இருக் கின்றது? நாம் இருவரும் ஒரே நிலையில், ஒரே தன்மையில்; ஒரே சோகத்தில்தானே மிதக்கின்றோம்?'' என்றாள்.

செல்மா எழுந்தாள்; நடந்தாள்; படுக்கை அருகே அமர்ந்தாள்; சிரமப்பட்டு சிரித்து அப்பாவைத் தடவினாள். கராமியோ தான் குணமாகி திடமாக இருப்பதாய் மகளை நம்ப வைக்க முயன்றார்,'.

இருவரும் ஒருவர் துன்பத்தை மற்றவர் அறிந்தனர். ஒருவரின் பெருமூச்சை மற்றவர் கேட்டனர். நான் அந்த இருவரையும் பார்த்தேன்; புரிந்து கொண்டேன். தகப்பனாரின் மனம் மகளின் மோசமான நிலைக்-கு உருகியது? இரண்டு தூய உயிர்களில் ஒன்று மெல்ல மெல்ல பிரிந்து போக, மற்றொன்று காதலையும் மரணத்தையும் தழுவி பெருந்துயரில் சித்திரவதைப் பட்டது.

நாங்கள் மூவரும் விதியின் கரத்திலே நசுங்கி பிழியப்பட்டோம்.

வெள்ளத்தால் நாசமான மாளிகையாய் பெரியவர்.

வெட்டுண்ட அல்லிமலர் ஒத்த அழகிய இளநங்கை.

நீர் வீழ்ச்சியால் வளைந்து போன மலர்ச் செடியாய் இளைஞன், மூவருமே விதியின் கைப்பாவைகள்.

பெரியவர் கராமி செல்மாவின் பக்கம் கைகளை நீட்டி, ''என் அன்பு மகளே என் கைகளைப் பற்றிக் கொள்!'' என்றார். செல்மா கரம் பற்றினாள். பின் ''செல்மா நான் வாழ்க்கையில் பல பருவங்களைக் கண்டேன்; கனிகளை உண்டேன். உன் தாய் உன் மூன்றாம் வயதில் மறைந்தாள். நீ கிடைத்தற்கரிய கருவூலம், உன் வளர்ச்சியே என் மகிழ்ச்சி; நீ உன் தாயின் பிரதி பிம்பம்? உன் பண்பு, அறிவு, அழகு, சாயல் ,ஒயில் எல்லாம் உன் தாயின் மறுபதிப்பு.

நீ என் ஒரே ஆறுதல்! உன் தாயற்ற குறையை நீ போக்கின்றாய்; நான் உனக்கு அம்மை அப்பனாய் இருந்தேன். இனி என் வாழ்விடம் மரணம்தான். நான் வாழ்வாங்கு வாழ்ந்தேன் நீ மகிழ்ந்திருரு? நான் இறந்த பின் என் உயிர் உன்னில் வாழும். என் ஆத்மா விரைவில் உன் தாயின் ஆத்மாவுடன் இணையும் நேரம் நெருங்கு கின்றது'' என்றார்.

முகம் ஒளி வீச; அன்பாய் இனிமையாய் உறுதியாய் இருந்தார். தலையணை அடியில் இருந்த தங்கச் சட்டமிட்ட படத்தைக் காட்டி ''செல்மா இதோ உன் தாய்; பார்!'' என்றார்.

செல்மா, 'ஓ என் அன்புத்தாயே! என் அருமை அம்மா!'' என்று கதறி அழுது படத்திற்கு முத்தம் தந்து, அணைத்து தாயுடன் ஒன்றினாள்.

உலகிலேயே இனிமையான ஒரே சொல் 'அம்மா', இன்பத்தில் திளைக்கும் சொல் அம்மா. துன்பத்தால் துடித்து அழும் போதும் கூவும் சொல் அம்மா. துன்பத்தின் ஆறுதல் அம்மா! வேதனையை நீக்கும் நம்பிக்கை அம்மா.

அம்மா வின் உருவம் அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு, உலகில் எல்லாம் ஈடு இணையற்றவள் அம்மா!

சூரியன் தான் பூமியின் தாய். பூமியோ கம்பீர மலைகளுக்கும் பாடும் நதிகளுக்கும், வான் முட்டும் மரங் களுக்கு ம்கடலுக்கும் அலைக்கும் அனைத்திற்கும் அம்மா.

அம்மா! முழுமையான அன்பும், அழகும் வடிவான மாபெரும் சக்தி. இதுவரை காணாத அம்ாவைக் கண்டாள் செல்மா! முத்தம் கோடி கொடுத்தாள், மயங்கினாள்.

தாயின் நிழலோவியம் கண்டாய்; நான் இனி உனக்கு அவளின் சொல்லோவியம் அளிப்பேன் என்றார்.

''செல்மா! நீ குழந்தையாய் இருந்த போது உன் தாய் தகப்பனை இழந்தாள். கதறினாள்! அழுதாள்! துடித்தாள். என்ன செய்வாள்? சகித்துக் கொண்டாள்.

அன்றுஉன் தாய் என் கைபற்றி, 'இனி உலகில் நீங்களே எனக்கு எல்லாம். மரம் தன் வலிய கிளையை இழந்தால் அது மடிவதில்லை. தன் சத்தையெல்லாம் மற்ற கிளைகளுக்குக் கொடுத்து காலி இடத்தை நிரப்பும். அது போல் இனி நான் உங்கள் வாழ்வை நிரப்புவேன்' என்றாள்.

ஆகவே, 'என் இனிய செல்மா! மரணம் என் உடலையும் உயிரையும் எடுத்தேகும்! அப்போது நீயும் உன் தாய் போல் மனதிடத்துடன் வாழ வேண்டும்!'' என்றார்.

செல்மா கண்ணீர் சொரிந்தாள்; சிலையானாள்.

செல்மா ''என் உயிரே!அம்மையப்பா! என் தாய்க்கு நீங்கள் புகலிடம்; நீங்கள் இல்லையேல் எனக்கு என்ன இருக்கினற்து? என் தாய் என்னிடம் ஆறுதல் தேடினாள். நீங்கள் தான் என் ஆறுதல், துணை, நண்பர் எல்லாம். ஆனால் உங்களை மரணம் என்னிடமிருந்து பிரிக்கு மானால் எனக்கென இருக்கும் ஒரே நண்பர் இவர் தானே!'' என்று என்னைப் பார்த்தாள்.

செல்மா மேலும கதறியபடியே கூறினாள். ''உடைந்த இதயம் ஏமாற்றமமைடந்த உள்ளத்திற்கு ஆறுதல் தருமா? சோகம் என்னை விழுங்கிவிட்டது; என்னை யார் விடுவிப்பார்கள்? என் சகோதரனின் தோள் மீது ஏற்கெனவே சுமையை ஏற்றி விட்டேன். அவர் கண்களை என் கண்ணீர் மறைத்து விட்டது. அவர் இருளிலே இடருகின்றார். நான் அன்போடு நேசிக்கும் என் சகோதரன் என் துக்கத்தைப் பகிர்ந்து கண்ணீர் சொரி கின்றார். என் இதயம் கருகிவிட்டது'' என்றாள்.

செல்மாவின் சொற்கள் என் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்து என்னை செயலற்றவனாக்கியது.

கராமி கைகளை நீட்டி, ''குழந்தாய் நான் அமைதியாக விடைபெறுகின்றேன்; கூட்டின் தடைகள் உடைந்தன. உன் தாய் என்னை அழைக்கின்றாள. விண்ணிலே மேக மூட்டம். கடலிலே அமைதி என் பயணப்படகு தயார், என் கனவுகள் முடியும். என் உயிருடன்உன் உயிர் கலக்கட்டும். முத்தமிட்டும். என் துயரமும் கசப்பும் கலந்த கண்ணீர் விழாமல் இருக்கட்டும். என் கல்லறை மீது மலர்ச் செடிகள் முளைக்கட்டும். நான் உயிரோடு இருக்கும் வரை உன்னை உயிரினும் மேலாக நேசிக்கின்றேன். இறந்த பின்னும் என் உயிர் உன்னைக் கண்காணித்துக் காப்பாற்றும்'' என்றார்.

பின்பு அவர் ''என் மகனே! உன் தகப்பனார் எனக்கு எப்படியோ அவ்வாறே நீ செல்மாவிற்கு உண்மை சகோதரனாய் இரு! அவளின் நண்பனாய் பாதுகாவலனாய் இரு! அவள் துயரத்தைப் போக்கு; மறக்கச் செய். உன் தகப்பனாரிடம் என் அன்பைச் சொல்; உன் உருவில் அவரைக்காண்கின்றேன்'' என்றார்.

அமைதி நிலவிற்று. மரண நிழல் பரவியது. எங்களைப் பார்த்து முணுமுணுத்தார். ''மருத்துவரைக் கூப்பிடாதே! மதகுருவை அழைக்காதீர்! என் உயிர் விண்ணிலே விடுதலை நாடி நிற்கிறது. நான் உலகில்

எந்தப் பாவமும் செய்யவில்லை. சோதிடனால் கிரகங்களின் இயக்க்ததை மாற்ற முடியாது. வைத்தியனின் மருந்தும் பாதிரியின் ஜெபமும் பிரார்த்தனையும் என்னைத் தாமதப்படுத்தி விடும்.''

இரவு ; நள்ளிரவு பாரிஸ் எப்ாண்டி கராமி, கடைசியாக திறந்த விழியால் செல்மாவைப் பார்த்தார். பேச முயன்றார். முடியவில்லை. 'செல்மா? என் செல்மா!'' என்று குளறினார. முகம் வெளுத்தது! தலை தொங்கியது! உதடுகளிலே ஒரு புன்னகை! மரணம் அணைத்தது.

செல்மா அவரைத் தொட்டுப் பார்த்தாள்; சில்லிட்டது. எழுந்து நின்றாள், வெறித்துப் பார்த்தாள்; கண்ணீர் வெளிவரவில்லை; பெருமூச்சும் இல்லை. அசைவில்லை; கண்கள் நிலைத்தன. அவள் குனிந்து நெற்றி நிலத்தில் பட குனிந்து ''ஓ கடவுளே! என் முறிந்த சிறகுகளை குணமாக்கு! இரக்கம் காட்டு'' என்றாள்.

கராமி இறந்து விட்டார். ஆத்மா விண்ணில் பறந்தது. உடல் மண்ணில் புதைந்தது. பாதிரியின் மருமான் (மன்சூர் -பே-கலீப்) செல்மாவின் கணவன், கராமியின் செல்வத்தைக் கவர்ந்தான். ஆனால், செல்மா! துக்கம், வேதனை, துன்பம் இவற்றின் ஆயுள் காலக் கைதி ஆனாள்.

நான் குழம்பினேன்; துக்கம் ஆண்டது; சிந்தனையில் மறந்தேன். கழுகு தன் இரையைக் கொத்திக் கிழித்துத தின்பது போல் இரவும் பகலும் என்னை மாறி மாறி கொத்தித் தின்றன. புனித நூல்களில் அடைக்கலம் புகுந்தேன்? சமயங்களில் பயணம் செய்தேன். சோகத்தை தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. அழுதேன்; கதறினேன் ; என் இதயம் என்னையே கைதியாக்கியது. பைபிளின் 'யோபின்' பொன் மாரிகள், சாலமெனின் கீதங்கள், சேக்ஸ்பியரின் ஆம்லெத் நாடகம் இதயத்தை கொஞ்சம் சாந்தப்படுத்தியது.

○○○

செல்மா மேலும கதறியபடியே கூறினாள். ''உடைந்த இதயம் ஏமாற்றமமைடந்த உள்ளத்திற்கு ஆறுதல் தருமா? சோகம் என்னை விழுங்கிவிட்டது; என்னை யார் விடுவிப்பார்கள்? என் சகோதரனின் தோள் மீது ஏற்கெனவே சுமையை ஏற்றி விட்டேன். அவர் கண்களை என் கண்ணீர் மறைத்து விட்டது. அவர் இருளிலே இடருகின்றார். நான் அன்போடு நேசிக்கும் என் சகோதரன் என் துக்கத்தைப் பகிர்ந்து கண்ணீர் சொரி கின்றார். என் இதயம் கருகிவிட்டது'' என்றாள்.

செல்மாவின் சொற்கள் என் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்து என்னை செயலற்றவனாக்கியது.

கராமி கைகளை நீட்டி, ''குழந்தாய் நான் அமைதியாக விடைபெறுகின்றேன்; கூட்டின் தடைகள் உடைந்தன. உன் தாய் என்னை அழைக்கின்றாள. விண்ணிலே மேக மூட்டம். கடலிலே அமைதி என் பயணப்படகு தயார், என் கனவுகள் முடியும். என் உயிருடன்உன் உயிர் கலக்கட்டும். முத்தமிட்டும். என் துயரமும் கசப்பும் கலந்த கண்ணீர் விழாமல் இருக்கட்டும். என் கல்லறை மீது மலர்ச் செடிகள் முளைக்கட்டும். நான் உயிரோடு இருக்கும் வரை உன்னை உயிரினும் மேலாக நேசிக்கின்றேன். இறந்த பின்னும் என் உயிர் உன்னைக் கண்காணித்துக் காப்பாற்றும்'' என்றார்.

பின்பு அவர் ''என் மகனே! உன் தகப்பனார் எனக்கு எப்படியோ அவ்வாறே நீ செல்மாவிற்கு உண்மை சகோதரனாய் இரு! அவளின் நண்பனாய் பாதுகாவலனாய் இரு! அவள் துயரத்தைப் போக்கு; மறக்கச் செய். உன் தகப்பனாரிடம் என் அன்பைச் சொல்; உன் உருவில் அவரைக்காண்கின்றேன்'' என்றார்.

அமைதி நிலவிற்று. மரண நிழல் பரவியது. எங்களைப் பார்த்து முணுமுணுத்தார். ''மருத்துவரைக் கூப்பிடாதே! மதகுருவை அழைக்காதீர்! என் உயிர் விண்ணிலே விடுதலை நாடி நிற்கிறது. நான் உலகில்

ஏந்தப் பாவமும் செய்யவில்லை. சோதிடனால் கிரகங்களின் இயக்க்ததை மாற்ற முடியாது. வைத்தியனின் மருந்தும் பாதிரியின் ஜெபமும் பிரார்த்தனையும் என்னைத் தாமதப்படுத்தி விடும்.''

இரவு ; நள்ளிரவு பாரிஸ் எப்பாண்டி கராமி, கடைசியாக திறந்த விழியால் செல்மாவைப் பார்த்தார். பேச முயன்றார். முடியவில்லை. 'செல்மா? என் செல்மா!'' என்று குளறினார. முகம் வெளுத்தது! தலை தொங்கியது! உதடுகளிலே ஒரு புன்னகை! மரணம் அணைத்தது.

செல்மா அவரைத் தொட்டுப் பார்த்தாள்; சில்லிட்டது. எழுந்து நின்றாள், வெறித்துப் பார்த்தாள்; கண்ணீர் வெளிவரவில்லை; பெருமூச்சும் இல்லை. அசைவில்லை; கண்கள் நிலைத்தன. அவள் குனிந்து நெற்றி நிலத்தில் பட குனிந்து ''ஓ கடவுளே! என் முறிந்த சிறகுகளை குணமாக்கு! இரக்கம் காட்டு'' என்றாள்.

கராமி இறந்து விட்டார். ஆத்மா விண்ணில் பறந்தது. உடல் மண்ணில் புதைந்தது. பாதிரியின் மருமான் (மன்சூர் -பே-கலீப்) செல்மாவின் கணவன், கராமியின் செல்வத்தைக் கவர்ந்தான். ஆனால், செல்மா! துக்கம், வேதனை, துன்பம் இவற்றின் ஆயுள் காலக் கைதி ஆனாள்.

நான் குழம்பினேன்; துக்கம் ஆண்டது; சிந்தனையில் மறந்தேன். கழுகு தன் இரையைக் கொத்திக் கிழித்துத தின்பது போல் இரவும் பகலும் என்னை மாறி மாறி கொத்தித் தின்றன. புனித நூல்களில் அடைக்கலம் புகுந்தேன்? சமயங்களில் பயணம் செய்தேன். சோகத்தை தவிர வேறு ஒன்றும் தெரியவில்ை. அழுதேன்; கதறினேன் ; என் இதயம் என்னையே கைதியாக்கியது. பைபிளின் 'யோபின்' பொன் மாரிகள், சாலமெனின் கீதங்கள், சேக்ஸ்பியரின் ஆம்லெத் நாடகம் இதயத்தை ரொகஞ்சம் சாந்தப்படுத்தியது.

○○○

8

ஏசு கிறிஸ்துவுக்கும் இஷ்டாருக்கும் இடையே...

பெய்ரூட் நகரை லெபனானின் குன்றுகளோடு இணைக்கும் தோட்டத்தின் நடுவே ஒரு சிறிய கோயில்; பழைமையான கோயில் பண்டைய ஞாபகச் சின்னங் களைத் தேடி ஆராய்ச்சி செய்வோரும் காதலர்கள் மட்டுமே அங்கு செல்வார்கள். இக்கோயில் மறந்தும் மறைந்தும் புறக்கணிக்கப் பட்டு இருக்கும். அதன் தனிமை பக்தர்களுக்கு சொர்க்கம்!

தனிமை நாடும் காதலர்க்கு ஒரு புனித பூமி அது! அந்தக் கோயிலிலே காதல் தேவதை இஷ்தாரின் உருவச் சித்திரம் அவள்அரியணையில் அமர்ந்திருக்க ஏழு நிர்வாண கன்னியர்கள் சுற்றும் முற்றும்!

ஒவ்வொருவரும் தீப்பந்தம், யாழ், தூபகலசம், ஜாடியில் மது, வாசமலர்மாலை, ரோஜா மலர்கள், வில் அம்புகள் ஏந்தி பயபக்தியுடன் நிற்கின்றனர்.

இன்னொரு சுவரில் சிலுவையில் அறையப்பட ஏசு தலை தொங்க துயரமிக்க தாயும், மேரி மகத்லேனாவும் நிற்கின்றனர். அழுது கண்ணீர் வடித்தனர்.

இந்தச் சிற்பங்கள் 15, 16-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டவை. அக்கோயிலில் இரு துவாரங்கள் சூரிய ஒளியை இந்தச் சிற்பங்களின் மேல் பொழியும்படி அமைத்து பொன் வண்ணம் பெற்று நம் கண்களைக் கவர்ந்தன.

ஆலயத்தின் நடுவே சதுர சலவைக்கல் பலிபீடம். ஆண்டாண்டு காலமாய் பலி பீடத்தின் மேல் படிந்த இரத்தக்கறை. நறுமணம், மது, எண்ணெய் எல்லாம் அப்படியே இருந்தன.

கோயிலெல்லாம் ஆழ்ந்த அமைதி. தேவதைகளின் இரகசியம். மதங்களின் வளர்ச்சியைக் காட்டின. கவிஞன், தத்துவ ஞானி இவர்கள் அனைவரையும் வேறு உலகிற்கு அழைத்துச் செல்லும் சூழ்நிலை. நம் முனனோர் மத நம்பிக்கையுடன் பிறந்து, பார்க்க முடியாத ஒன்றின் தேவையை அறிந்து, அதற்குக் குறிகளை வகுத்தார்கள். பொருளும் மறைந்த இரகசியமும் பகிரங்கப்படுத்தின. வாழ்க்கையிலும் மரணத்திலும் அவர்களின் ஆசையெல்லாம் வெளிப்பட்டன.

இந்தக் கோயிலிலே நானும் செல்மாவும் மாதம் ஒரு முறை சந்தித்து அந்த விசித்தரச் சிற்பங்களைப் பல மணி நேரம் காண்போம். ஏசுவையும் இஷ்தாரையும் வணங்கி தூபப் புகையிட்டு, நறுமணத்தைலம் பூசி வழிபட்டோம். நேரம் தியானத்தில் கழியும்.

காதல் தேவதை இஷ்டாரின் பெயரை ஜெபிப்பதிலும் தொழுவதிலும் மன அமைதி பெற்ற இளைஞர்களுக்குக் கணக்கில்லை.

செல்மாவை சந்தித்த நாட்களின் நினைவே இனிமை. அந்த தெய்வீக நாழிகையில் வேதனை, இன்பம், துயரம், நம்பிக்கையாவும் நிரம்பின. நாங்கள் அந்தப் பழைய கோயிலிலே சந்தித்தோம். நிகழ்காலம் பற்றி

விவாதித்தோம். எதிர்காலம் பற்றிய அச்சம்; அடி ஆழத்தில் புதைந்த எண்ணங்கள் வெளி வரும்; வேதனை; துன்பம் துயரம். கற்பனையான நம்பிக்கை, கொல்லும் கனவுகள், நாங்கள் பகிர்ந்து கொண்டோம். காதல் புன்முறுவல் பூக்கும். இதயங்கள் உருகும். செல்மா என் நெற்றியிலே துய முத்தமளிப்பாள். நான் செல்மாவின் சாய்ந்த கழுத்திலே முத்தமிடுவேன். பொன்னிற ஒளிக் கதிர் குன்றுகளை பொன் குன்றாக்கும். செல்மாவின் கன்னம் பொன்னிறமாய் சிவக்கும். மேற்கே மறையும் கதிரவன் ஒளியில் செம்மஞ்சள் வெள்ளமாய் விரியும் தொடுவானத்தைப் பார்ப்போம்.

நாங்கள் உலக இயக்கத்தை, சமூகத்தை, அரசியலை மதத்தைப் பற்றியெல்லாம் பேசுவோம். செல்மா பெண்களின் நிலை, கணவன் மனைவி இடையே உறவு முறை, சமுதாயத்தில் பெண்களின் இழிவு, ஏளனம், அடிமைத்தனம், ஊழல், மணவாழ்விலே புரையோடிய ஆத்ம வியாதி பற்றி எல்லாம் பேசுவாள்.

செல்மா கூறினாள், ''கவிஞர்களும் எழுத்தாளர்களும் பெண்மையைப் புரிந்துகொள்வதில்லை; மாதர்களின் இரகசியங்களை அறியார்; எப்போதும் காமத் திரைக்குப் பின்னால் இருந்தே பெண்களை நோக்குவார்கள்; புறத் தோற்றமே தெரியும்! அகத்தின் அழகை அறியவே மாட்டார்கள்; தீவிர வெறுப்பு எனும் பூதக் கண்ணாடியால் தான் பெண்களைப் பார்ப்பார்கள்; அவர்களுக்கு பெண்ணின் பலவீனமும அடங்கி ஒடுங்கி பணியும் தன்மையுமே தெரியும்.''

ஒருநாள் சுவரிலே உள்ள வண்ணச் சிற்பங்களைக் காட்டி, ''பெண் உள்ளத்தின் சாரம், இதய ஆசைகளின் ரசம் வெளிப்படும் இந்தச் சிற்பங்களைப் பார். காதலுக்கும் துயரத்திற்கும் இடையே இஷ்டாருக்கும் சிலுவைக்கும் அருகேநிற்கும் மேரி மாதாவுக்கும்

இடையே-அவள் ஊசலாடும் இதயத்தே புதைந்துள்ள இரகசியங்களை, தாபங்களை எல்லாம் வெளிப்படுத்தும் அடையாளச் சின்னங்கள் இவை. ஆண் வர்கக்ம் பெருமை பெறும்; கீர்த்தி அடையும்; ஆனால் பெண்ணினம் தான் அதற்கான விலையையெல்லாம் கொடுக்கின்றது'' என்றாள்.

எங்கள் சந்திப்பு கடவுள் அறிவார்; வானில் பறக்கும் பறவைக் கூட்டம் அறியும். நாங்கள் யாருக்கும் அஞ்ச வில்லை; எங்கள் மனச்சான்று உறுத்தவில்லை.

நெருப்பால் தூய்மையான ஆத்மா, கண்ணீரால் கழுவப்பட்ட உள்ளுணர்வு பெற்றோம். மக்களால் அவமானம் வெட்கக் கேடு என்பதை விட மேன்மை யானது எங்கள் தூய ஆத்மா! மனித ஆசைக்கு மாறாக, சம்பிரதாயங் களைத் தகர்த்து, அடிமைத் தனத்தின் சட்ட திட்டங்களி லிருந்து விடுதலை பெற்று விளங்கியது. கடவுளின் முன்னால் கம்பீரமாய் வெட்கமின்றி நின்றன.

மனித சமுதாயம் எழுவது நூற்றாண்டு காலம் நேர்மையற்ற சட்ட திட்டங்களுக்கு தலை வணங்கியது. உன்னதமான, அழியாத சட்டதிட்டங்களை இனி புரிந்து கொள்ளாது. மெழுகுவர்த்தி ஒளிகண்ட கண்களால் கதிரவன் ஒளி காண கூசுகின்றது. ஆன்மீகத் தொத்து நோய் வழி வழியாய் தொடர்கிறது. இந்த சமுதாயம் ஒரு வரப் பிரசாதமாய் ஏற்கிறது. நோயின்றி விடுபட்ட மக்களை அவமானச் சின்னமாய் வெட்கத்தின் பிரதிநிதியாய் கருது கின்றனர். எப்படிப்பட்ட நிலை? இது எப்போது மாறும்? மக்களிடம் விடுதலை பெறும்!

செல்மா தன் கணவன் இல்லம் விட்டு வெளியேறி கோயிலிலே என்னைச் சந்திப்பதால், செல்மாவைத் தவறாக எண்ணுபவர் யார்? உரம் அற்ற உள்ளம் வாய்ந்ததோர்; ஆன் மீகத் தொற்றுநோய் பிடித்தோர்;

அஞ்சி அஞ்சி இருளிலே ஊர்ந்து செல்லும் புழு ஒப்பவர். அவர்கள் உடல் வளமும், உள்ள உரமும் பெற்றவர்களை புரட்சியாளர் என்று தூற்றுகின்றனர்.

கொடுமைச் சிறைக் கூண்டில் வதியும் கைதி வெளியேற கூண்டை உடைக்க, தப்பிச் செல்ல வழி வகை இருந்தும் செயல்படவில்லையானால் அவன் ஒரு கோழையே!

செல்மா கபடு சூது அறியாதவள்; அடக்கு முறையின் பிடியில் அகப்பட்டவள்; துனபத் தூணில் பிணைக்கப் பட்டவள். அவளும் ஒரு கைதியே ! அடிமை விலங்கை உடைத்தெறிய முடியவில்லை. சிறைச்சாலை சன்னல் வழியே பரந்த வான்வெளியையும், பசும்புல் பள்ளத் தாக்குகளையுமே பார்த்து ரசிக்கின்றாள்; இது பாபமா?

அவள் கோயிலுக்கு வந்து ஏசு கிறிஸ்துவுக்கும் இஷ்டார் கடவுளுக்கும் இடையே என் அருகில் அமர்ந்து பேசுவதே கணவனுக்குத் துரோகமா? மக்கள் தோன்றிய படியெல்லாம் தூற்ற வேண்டுமா? செல்மா சதுப்பு நிலத்தைத் தாண்டிவிட்டாள். தனக்கே உரிய தனி உலகில் காலடி வைத்தாள். நரிகள் ஊளையிட்டன. பாம்புகள் சீறின. என்னையும் செல்மாவையும் தூற்றினர்.

மரணத்தின் தோற்றத்தை நேரில் பார்த்த நான் திருடர் முகம் கண்டு அஞ்சுவேனா?

மின்னும் வாளையும் பாயும் ஈட்டியையும் காலடியிலே இரத்த ஆற்றையும் கண்ட வீரன், தெரு விளையாட்டு சிறுவரின் கல்லடிக்கு அஞ்சுவானா?

எங்கள் தூய்மையை எந்த மானிடம் அறியும்? எங்கள் தெய்வீகக் காதலை யார் உணர முடியும்?

○○○

9

பலிபீடத்தின் மேல் !

கடும் கோடை. மக்கள் மலைகளையும் வயல்வெளி களையும் நாடிச் சென்றனர். நான் ஒரு கவிதை நூல் எடுத்து வழக்கமாகப் போகும் கோயிலுக்கச் சென்றேன்.

நாட்டை விட்டுச்சென்ற அரசன், தன் கலைக்கூடம் விட்டு அகன்ற ஓவியன், காவியங்களை இழந்த கவிஞன் இவர்கள் விடும் கண்ணீர் எப்படி இருக்கும்?

எண்ணினேன்; மனம் நெகிழ்ந்தேன். கவிதைகள் என் உள்ளத்தே தேங்கவில்லை; படித்தேன் பொருள் புரிய வில்லை.

மனமெல்லாம் செல்மாவின் வருகையை எதிர் நோக்கித் துடித்தது. செல்மா மெல்ல நடந்து கோயிலை நெருங்கினாள் கைக்குடையை ஊன்றி, மெலிந்து, உலகத் துன்பமெல்லாம் தன் உடலை அழுத்த வளைந்து நடந்தாள்.

என் அருகே அமர்ந்தாள். கண்களிலே பெரிய மாற்ம் சொற்களிலே ஏமாற்றம். என் தலை மேல் கையை வைத்து ''அன்பரே! அருகே நெருங்கி அமருங்கள்; என்

பிரிவுக்காலம் நெருங்கி விட்டது; என் தாகம் தணியப் போகிறது,'' என்றாள்.

நான் பதறினேன் என்னைப் பற்றிய கவலையே இல்லை. நான்எங்கே எப்படி, எவ்வாறு இருக்கின்றேன் என்ற எண்ணமே இல்லை. அருவருக்க விலைமாதர், வேசியர், பொது மாதர், வறுமைக்காகக் கற்பை விற்போர், பரிதாபமாக சமூக நீதிகளால் தண்டிக்கப்பட்ட இளம் பெண்கள், இவர்களுடன் காலம் கழிக்கவே நேரம் போதவில்லை! என்னைப் பற்றி கவலை ஏது?'' என்றாள்.

''செல்மா! நீ யாருக்காக அஞ்சி நடுங்குகிறாய்?'' என்று கேட்டேன்.

''பாதிரியார் என்னைப் படுகுழியில் தள்ளி விட்டார். இப்போது நான் கோயிலில் உங்களைச் சந்திப்பதை அறிந்து கொண்டார். சந்தேகம் உண்டாகிஏவலாளர் காவலர்கள் கண்காணிக்கச் செய்துள்ளார். என் பாதையே என்னை கவனிக்கும். மரங்களே என்சொற்களைக் கேட்கும்.

நான் மதகுருவுக்கு அஞ்சவில்லை. நான் முற்றும் நனைந்துவிட்டேன். பெருமழை இனி என்னசெய்யும்? இன்னும் வாழ்க்கையின் இன்பமே அறியாத இளைஞனான உன்னை வலையிலே வீழ்த்தி இரயாக்கி விடுவாரோ! விதி எல்லா அம்புகளையும் என்மார்பிலே எய்து விட்டது? பாதிரி எனும் நச்சரவு உங்களைக்கடிக்கக் கூடாதே'' என்று பயந்தாள்; மனமுருகினாள்.

''பாம்பு என்னைத் தீண்டாது; ஓநாய் என்னைக் கவ்வாது. இரவும் பகலும் என்னை வஞ்சிக்காது. மக்களின் தீய நாக்கிற்கும், தாழ்ந்த தூற்றலுக்கும், நீசத்தனமான ஏச்சுக்கும் நாம் பிரிவை ஏற்க வேண்டுமா? வேறு வழியில்லையா,'' என்றேன்.

''அன்பரே நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து விடைபெற்று விலகுவது தவிர வேறு வழியே இல்லை.'' என்றாள் செல்மா.

உணர்ச்சி வசப்பட்டேன்; செல்மாவின் கைகளை ஏந்திேனேன்.

''செல்மா! நாம் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப வளைந்து கொடுத்தோம். பாதிரியார் நம்மைப் பந்தாக விளையாடி விட்டார். அவருடைய விருப்பமே ஆட்சி செய்கின்றது; அவரின் கைப்பாவைகள் நாம். மரணம் மட்டும அவர் ஆட்டம் அடங்காது. நாம் கடவுளால் படைக்கப்பட்டதே மரணத்தின் கால்களால் மிதிக்கத் தானா? இறைவன் நமக்கு விடுதலை உணர்வைத் தந்தார். தன் ஆத்மர்விலே கனன்று மேலெழும் கனலைத் தானே அணைப்பவன் நாத்திகன் அல்லவா? நம்மை ஒடுக்குப வரை எதிர்த்து நாம் புரட்சி செய்யவில்லை யானால் நாம் நமக்கே அநீதி செய்கின்றோம். காதல் விலை மதிப்பற்றது; காதல் ஒரு மதிப்பற்ற கருவூலம். காதல் கொடியவர்களின் கால்களில் மிதிபட நாம் அனுமதிக்க லாமா?

நாம் ஏன் மதகுருவும் அவரின் துணைவர்களும் தோண்டும் கால்வாயில் விழ வேண்டும்? வாழ்க்கையே மகிழ்ச்சி; வாழ்வே விடுதலை; நம் கால்களிலே பூட்டப் பட்ட சங்கிலிகளை நாம் ஏன் உடைக்கக் கூடாது?

நாம் இந்த நாட்டையும், மூடப்பழக்கவழக்கங் களையும் அடிமைத்தனத்தையும் உதறிவிட்டு கண் காணாத வேறு நாட்டிற்குப் போய் விடலாமா? கடல் கடந்து செல்ல படகைப் பிடிப்போம்; அறிவுத் தெளிவும், ஆனந்தமும் வாழும் புது நாட்டிலே மறு வாழ்வைத் தொடங்குவோம். இந்த வறண்ட சாலையை விட உயர்ந்து சோலைவனங்களாய் உள்ள நாடுகள் பல. மலர்க் கொடியும், மணம் பொழியும் செடிகளும், பசிய வனக் காடுகளையும் நாடி நாம் பறப்போம்'' என்றேன்.

செல்மா தலை அசைத்தாள். கோயிலின் மேல் முகட்டை அசையாத கண்களால் பார்த்தாள். துயரம் இதழ்களிலே புன்முறுவலாய் பூத்தது.

''இல்லை! என் அன்பரே! கசப்பும், துயரமும் நிரம்பிய வாழ்க்கைக் கோப்பையிலே அடிவரை குடித்து விட்டேன். இன்னும் சில துளிகளே எஞ்சியுள்ளன. அதையும் அமைதியாகக் குடிப்பேன்.

இனி நான் அமைதி, காதல் கலந்த புதுவாழ்விற்கு ஏற்றவளல்ல! என் வலிமை ஒடுங்கிவிட்டது; மகிழ்ச்சியும் இனிமையும் இனி என் உடலில் ஊறாது; இந்தப் பறவையின் சிறகுகள் முறிந்துவிட்டன. விண்ணிலே பறக்க முடியாது; இருட்டறையில் எண்ணெய் விளக்கிற்குப் பழக்கப்பட்ட கண்கள் கதிரவனின் ஒளியைப் பார்க்க வலிவற்று விட்டன.

என்னிடம் மகிழ்ச்சி பற்றி பேசாதீர்கள்! அதன் நினைவே துன்பம் தருகிறது! அமைதி பற்றி கூறாதீர்கள்! அதன் நிழலே என்னை அஞ்ச வைக்கிறது.

என் இதயச் சாம்பலிலே இறைவன் புனிதச் சுடரொளியை ஏற்றிவிட்டார்.

ஒரு தாய் தன் ஒரே மகளை எப்படி காதலிப்பாளோ அப்படி நான் உங்களைக் காதலிக்கின்றேன். அந்தக்காதல் மட்டும் உங்களைப்பாதுகாக்கும். உங்களைப் பின் தொடர்ந்து தூர நாடுகளுக்கு ஓடி விடாமல் தடுப்பதும் இந்தக் காதல்தான். இந்தக் காதல், தூய புடம் போட்ட காதல், என் ஆசைகளையெல்லாம் அழித்து விட்டது.

நீங்கள் இனிமேல் உலகில் சுதந்திரமாய், பண்போடும், புகழோடும் வாழ வேண்டும்.

தன் இன்பத்திற்கு அடிபணியும் காதல் தான் காதலனை அடைய விழையும். ஆனால் வான்வெளியில் பிறந்து இரவின் இரகசியங்களோடு வளர்ந்து, உடலின்பத்தைக் கடந்து வாழும் காதல் இறவாத பேரின்ப நிலைபெறும் தூய காதல்! தெய்வ சந்நிதானத்தில் பயபக்தியோடு நிமிர்ந்து நிற்கும்!

பாதிரியார், நான் உங்களுடன் அமர்ந்து பேசி மகிழும்

இந்த ஒரே இன்பத்தையும் தடை செய்ய, பறிக்க, தடுக்க திட்டம் தீட்டிவிட்டார்.

நான் அறை சன்னலின் வழியே பரந்த உலகையும், அலை மோதும் கடலையும், உண்மையான விடுதலை வாழும் தேசங்களையும், தனிமனித சுதந்திரத்தைப் போற்றும் புண்ணிய பூமியைப் பற்றியும் நினைத்தேன்.

உங்கள் அன்புக் கடலிலே மூழ்கி ஆத்மாவின் நிழலிலே நெருங்கி வசிக்க, வாழ நினைத்தேன். கனவு கண்டேன். பழைய சம்பிரதாயங்களுக்கு எதிராகப் புரட்சி; நீதி, விடுதயையின் நிழலிலே இதயத்தின் ஒளி, இவை என் பலவீனங்கள்? நம் காதல் வலிமை குன்றியதா? வரம்பிற்கு உட்பட்டதா. நாம் கதிரவன் ஒளியின் முன் நிற்க இயலாதவர்களா? என்று கதறி அழுகின்றேன். என் கண்ணீர் துளிகளெல்லாம் என் அன்பரின் முகங்கள்! நீங்கள் கூறிய சொற்கள் என்னுடன் பேசின.

செல்மா! நாம் புயலை எதிர்த்து கோபுரங்களாய் வலிமையுடன் நிற்போம். திடமுடன் போர்க்களத்தில் எதிர்ப்போம். தியாகிகளைப் போல் உயிர் நீப்போம் என்றாயே அவைகள் என்னை வட்மிடுகின்றன. நினைத்தேன். திடங்கொண்டேன். இடர்கள் விலகின துயரம் குறைந்தது; விடுதலை உணர்வு பெற்றேன்.

''நம் காதல் கடலினும் ஆழமானது. விண்மீன்களை விட அளவில் அடங்காதது; விண்ணை விடப் பரந்தது. நம் காதலுக்கு ஈடு இணை இல்லை.

நான் உங்களைப் பார்க்கவே இங்கு வந்தேன். என் மெலிந்த உடலிலே புது வலிவு வளர்ந்தது. மகத்தான ஒன்றை அடைய என் காதலைத் தியாகம் செய்யும் சக்தியை அளிக்கின்றது.

நீங்கள் பண்போடு கௌரவத்தோடு வாழ வேண்டும். வஞ்சனையும், தொந்தரவும் உங்களைத் தொடக்கூடாது. நான் என் இதயத்தை, ஆனந்தத்தை காதலை

பலித்தியாகம் செய்துவிட்டேன்.''

என் செல்மா வானத்தை எட்டும்படி உயர்ந்து விட்டாள்; வானவெளியெல்லாம் சிறப்பு விண்மீனாய் மிதக்கின்றாள்.

நம் செயல்களுக்கெல்லாம் அழகையும் பெருமையும் சேர்ப்பது நேர்மையின் முழுமை உருவம்,. உடலின்பத்தைக் கடந்த தூய காதல்! பற்றற்ற பாசமிக்க காதல்!

செல்மா மேலுமே கூறினாள்.

''நான் இதற்கு முன்பு காயமுற்ற ஆவியுடன் இந்தக் கோயில் தேடி வருவேன் .ஆனால் இன்று தியாகத்தின் அவசரத்தை உணர்ந்து வேதனையின் மதிப்பறிந்து தைரியமாய் வந்தேன். நான் அன்புடன் நேசிக்கும் என் இனிய காதலனை, மடத்தனமான மனிதக்கூட்டத்தி லிருந்து மீட்கவந்தேன் .வேட்கை மிக்க உள்ளத்திலிருந்து காக்க வந்த வீரவனிதையாய் இருக்கின்றேன். இன்று தியாகமூர்த்தி ஏசு நாதருக்கும் காதல் கடவுள் இஷ்டாருக்கும் நேரிலே என் உண்மையான தனித் தன்மையைக் காட்ட வந்தேன்.

''நான் ஒரு நிழலின் அடிவாழ் மரம். சிறிது நேரம் கிளைகள் வெயிலில் அசைந்தன. அன்பரே நான் உங்க ளிடம் விடை பெறவேவந்தேன். நம் பிரிவும் இக்காதல் போலவே மகத்தானது; மகோன்னதமானது. நம் பிரிவு நெருப்பினும், பொன்னினும் பொலிவுற்று மிளிரட்டும்'' என்றாள்.

செல்மா கண்கள் மின்ன என்னைப் பார்த்தாள். தேவதையாய் ஒளியூட்டினாள்,. என்னிடம் ஓடி வந்து தன் மிருதுவான் கைகளால் என் கழுத்தைக்கட்டிப்பிடித்து என் உதடுகள் மீது நீண்ட, ஆழ்ந்த, மயிர் சிலிர்க்க முத்தம் பதித்தாள். இது போல் என்றும் செய்ததில்லை. முதலும் முடிவும் முத்தமே.

கதிரவன் மலை வாயிலில் மறைந்தான். பழத் தோட்டத்தில், பூங்காவில் இருள் பரவியது. செல்மா, கோயிலின் சுவர்களையெல்லாம் ஆழ்நது, துருவி உற்றுப் பார்த்தாள், தன் கண்ணொளியையெல்லாம் ஓவியங் களிலும் சிற்பங்களிலும் பாய்ச்சினாள். ஏசுநாதரின் முன மண்டி யிட்டாள்! பாதங்களை முத்தமிட்டாள்.

''தியாகச் செம்மல் ஏசுவே! நான் உலகின் ஆனந்தம், இன்பம், அனைத்தையும் துறந்து உங்கள்சிலுவையைத் தேர்ந்தெடுத்தேன். வெற்றிப்பூ மாலையை ஒதுக்கி உங்கள் முள் மகுடத்தை ஏற்கின்றேன். நறுமண நீர் ஒதுக்கும் ரத்தத்தில் குளிக்க முற்பட்டேன். மதுவும் அமிர்தமும் உள்ள குவளையை ஒதுக்கிவிட்டு காடியும் கசப்பும் கலந்து பருகுகின்றேன். கர்த்தரே என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறி முடித்தாள்.

செல்மா எழுந்தாள்; என்னைப் பார்த்தாள். ''இப்போது நான் பயங்கரப் பிசாசின் இருண்ட குகைக்கு திரும்பிப் போகின்றேன். என் அன்பரே! எனக்காக இனி வருந்தாதீர்கள்! கடவுளின் நிழல் கண்ட உயிர், பேய் பிசாசு பூதங்களுக்கு அஞ்சாது. சொர்க்கத்தைக்கண்ட கண்கள் உலகின் வேதனை களுக்குக்கலங்காது!'' என்று கூறிக் கொண்டே மெல்ல நடந்து மறைந்தாள்.

நான் என்னையேமறந்து அக்கோயிலிலே எவ்வளவு நேரம் இருந்தேனோ அறியேன்.

சோக முடிவுகள் திரும்பத் திரும்ப ஒலிக்கும்.

காதல் சோகம் அழிவின்மையை வெளிப்படுத்தும மயக்கத்திலிருந்து எழுந்தேன். பாதி இரவு தனித் திருந்தேன்; தடுமாறினேன். செல்மாவின் சொற்களெல்லாம் எதிரொலித்தன. செல்மாவின் தெளிவு, அமைதி, அன்பு, முகபாவம், நம்பிக்கை, காதல், பரிவு, நேர்மை, தூய்மை, திடம் அனைத்தையும் நினைவு கூர்ந்தேன். பிரிவின் பொருள் புரிந்தேன்.

பலித்தியாகம் செய்துவிட்டேன்.''

என் செல்மா வானத்தை எட்டும்படி உயர்ந்து விட்டாள்; வானவெளியெல்லாம் சிறப்பு விண்மீனாய் மிதக்கின்றாள்.

நம் செயல்களுக்கெல்லாம் அழகையும் பெருமையும் சேர்ப்பது நேர்மையின் முழுமை உருவம்,. உடலின்பத்தைக் கடந்த தூய காதல்! பற்றற்ற பாசமிக்க காதல்!

செல்மா மேலும கூறினாள்.

''நான் இதற்கு முன்பு காயமுற்ற ஆவியுடன் இந்தக் கோயில் தேடி வருவேன் .ஆனால் இன்று தியாகத்தின் அவசரத்தை உணர்ந்து வேதனையின் மதிப்பறிந்து தைரியமாய் வந்தேன். நான் அன்புடன் நேசிக்கும் என் இனிய காதலனை, மடத்தனமான மனிதக்கூட்டத்தி லிருந்து மீட்கவந்தேன் .வேட்கை மிக்க உள்ளத்திலிருந்து காக்க வந்த வீரவனிதையாய் இருக்கின்றேன். இன்று தியாகமூர்த்தி ஏசு நாதருக்கும் காதல் கடவுள் இஷ்டாருக்கும் நேரிலே என் உண்மையான தனித் தன்மையைக் காட்ட வந்தேன்.

''நான் ஒரு நிழலின் அடிவாழ் மரம். சிறிது நேரம் கிளைகள் வெயிலில் அசைந்தன. அன்பரே நான் உங்க ளிடம் விடை பெறவேவந்தேன். நம் பிரிவும் இக்காதல் போலவே மகத்தானது; மகோன்னதமானது. நம் பிரிவு நெருப்பினும், பொன்னினும் பொலிவுற்று மிளிரட்டும்'' என்றாள்.

செல்மா கண்கள் மின்ன என்னைப் பார்த்தாள். தேவதையாய் ஒளியூட்டினாள்,. என்னிடம் ஓடி வந்து தன் மிருதுவான் கைகளால் என் கழுத்தைக்கட்டிப்பிடித்து என் உதடுகள் மீது நீண்ட, ஆழ்ந்த, மயிர் சிலிர்க்க முத்தம் பதித்தாள். இது போல் என்றும் செய்ததில்லை. முதலும் முடிவும் முத்தமே.

கதிரவன் மலை வாயிலில் மறைந்தான். பழத் தோட்டத்தில், பூங்காவில் இருள் பரவியது. செல்மா, கோயிலின் சுவர்களையெல்லாம் ஆழ்நது, துருவி உற்றுப் பார்த்தாள், தன் கண்ணொளியையெல்லாம் ஓவியங் களிலும் சிற்பங்களிலும் பாய்ச்சினாள். ஏசுநாதரின் முன மண்டி யிட்டாள்! பாதங்களை முத்தமிட்டாள்.

''தியாகச் செம்மல் ஏசுவே! நான் உலகின் ஆனந்தம், இன்பம், அனைத்தையும் துறந்து உங்கள்சிலுவையைத் தேர்ந்தெடுத்தேன். வெற்றிப்பூ மாலையை ஒதுக்கி உங்கள் முள் மகுடத்தை ஏற்கின்றேன். நறுமண நீர் ஒதுக்கும் ரத்தத்தில் குளிக்க முற்பட்டேன். மதுவும் அமிர்தமும் உள்ள குவளையை ஒதுக்கிவிட்டு காடியும் கசப்பும் கலந்து பருகுகின்றேன். கர்த்தரே என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறி முடித்தாள்.

செல்மா எழுந்தாள்; என்னைப் பார்த்தாள். ''இப்போது நான் பயங்கரப் பிசாசின் இருண்ட குகைக்கு திரும்பிப் போகின்றேன். என் அன்பரே! எனக்காக இனி வருந்தாதீர்கள்! கடவுளின் நிழல் கண்ட உயிர், பேய் பிசாசு பூதங்களுக்கு அஞ்சாது. சொர்க்கத்தைக்கண்ட கண்கள் உலகின் வேதனை களுக்குக்கலங்காது!'' என்று கூறிக் கொண்டே மெல்ல நடந்து மறைந்தாள்.

நான் என்னையேமறந்து அக்கோயிலிலே எவ்வளவு நேரம் இருந்தேனோ அறியேன்.

சோக முடிவுகள் திரும்பத் திரும்ப ஒலிக்கும்.

காதல் சோகம் அழிவின்மையை வெளிப்படுத்தும மயக்கத்திலிருந்து எழுந்தேன். பாதி இரவு தனித் திருந்தேன்; தடுமாறினேன். செல்மாவின் சொற்களெல்லாம் எதிரொலித்தன. செல்மாவின் தெளிவு, அமைதி, அன்பு, முகபாவம், நம்பிக்கை, காதல், பரிவு, நேர்மை, தூய்மை, திடம் அனைத்தையும் நினைவு கூர்ந்தேன். பிரிவின் பொருள் புரிந்தேன்.

என் இதயம் சுக்கல் சுக்கலாய் உடைந்தது கவலைகள் வாழவைத்தன.

''மனிதன் சுதந்திரமாய் பிறக்கின்றான். ஆனால் மூதாதைகள் வகுத்த கடின சட்ட திட்டங்கள் அவனை அடிமையாக்குகிறது. உலகில் அண்ட கோளங்கள் எல்லாம் மாற்ற மற்றவை. நாளைய விருப்பிற்கு இன்றைய விளைவுகளைக் கொடுக்கின்றான். இன்றைய விருப்பத்திற்கு ஏற்ப நேற்றைய தாழ்விற்கு உட்படுகின்றது.

மாறுதலைக் கடக்க முடியாதவன் மனிதன்.

செல்மா வாழ விரும்பவில்லை. ஆனால் சாவைத் தேர்ந்தெடுத்தாள். தியாகத்தின் உன்னதம் சிறந்ததா? புரட்சியின் மகிழ்ச்சி உயர்ந்ததா? ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கின்றேன். புரியவில்லை.

நம் எல்லா செயல்களையும் அழகு மிக்கதாய் பெருமை உள்ளதாய் செய்வது நேர்மை ஒன்றே தான்.

நேர்மையின் முழுமையான உருவம் செல்மா!

○○○

10

சாவதற்கே பிறந்த குழந்தை !

செல்மா திருமணமான பின்பு ஐந்து ஆண்டுகள் கணவனுடன் வாழ்ந்தாள். இருவரையும் இணைக்க குழந்தை ஏதும் பிறக்கவில்லை.

செல்மாவிற்கு 'மலடு' பட்டம் சூட்டப்பட்டது. அலட்சியம், அருவருப்பு, உதாசீனம் இவைகளின் தாக்குதல் அதிகமாகிக் கொண்டே வளர்ந்தது. சந்ததிதான் சாஸ்வதத்தன்மையை நிலைநாட்டும் என்றுஉலகம் நம்புகின்றது.

மன்சூர்-பே-கலீப் பணத்தில் புரண்டான். குடி, பெண்கள் இவைகளே அவன் வாழ்க்கையை ஆட்சி செய்தது. தன் மனைவியை ஒரு எதிரியாக நினைத்தான். வெறுத்தான்; ஒதுக்கினான். செல்மாவின மரணத்தை ஆவலுடன் எதிர்பார்த்தான்.

இரும்பினும் கடினமான மனம்; சவக்குழியைப்போல் பேராசை. ஒரு மகன் பிறந்தால் தான்தன் பெயரும்,

மதிப்பும் காப்பாற்றப்படும் என்று நினைத்தான்.

மகன் மேல் தீராத ஆசை.

செல்மாவின் பேரழகும், பெருங்குணமும் மன்சூரைக் கவரவில்லை. பகைத்து வெறுத்தான்.

குகையில் வளர்ந்த மரம் கனி கொடுக்குமா? அன்பற்ற ஆசையற்ற பாசமற்ற நேசமற்ற குகைதான் மன்சூர். செல்மா விற்கு குழந்தை எங்கே பிறக்கும்.

சிறைக் கூடத்துக்குள்ளே வானம்பாடி கூடு கட்டுமா? தானே கைதி, இன்னும் கைதியாய் பிறந்தால் அடிமைகள் தானே அதிகமாவார்கள்?

செல்மா துக்கத்தின், துயரத்தின் உதாசீனத்தின் இருப்பிடம். இந்த அவல வாழ்க்கைக்கு ஒரு வாரிசு தேவை தானா?

விண்ணிலே கதிரவன். வயல்வெளியிலே பல மலர்ச் செடிகள். இயற்கையின் காதலுக்குமுகிழ்க்கும் மலர்கள் தான் குழந்தைகள்.

ஆனால் மனித இனத்தின் குழந்தைகளோ காத லுக்கும் இரக்கத்திற்கும் இடையே மலரும் மலர்கள்!

செல்மாவின் அழகிலே கணவனின் கருணை ஒரு போதும் ஆட்சி செய்ததில்லை.

ஆனால் தினமும் விண்ணோக்கி இறைவனை தனக்கு ஒரு மனச் சாந்தியும் ஆதாரமும் ஒருங்கிணைந்த செல்வ மகனையும் அளிக்குமாறு வேண்டினாள்.

பிரார்த்தனை பலனளித்தது.

செல்மாவின் குகையிலே வளர்ந்த மரம் கனி கொடுக்க அரும்பாகி, மொட்டாகி, மலர முற்பட்டது.

சிறைக் கூண்டிலே வானம்பாடிப் பறவை தன் சிறகுகளால் ஒரு கூட்டினைப் பின்னத் தொடங்கியது.

புனிதமான வெகுமதியைப் பெற்றதற்காக விண்ணோக்கி இறைக்கு வாழ்த்துக் கூறினாள்.

உரமிக்க , உறவுள்ள ஒரு தாயாகி மகிழ்ந்தாள்.

நாட்களை எண்ணி எண்ணி ஆவலோடு காத்திருந்தாள். சொர்க்கத்தின் இனிய தேவகானத்தைத் தன் காதிலே தேனெனப் பாய்ந்து ஒலிக்கும் நாளையும், நேரத்தையும் எதிர்நோககிக் காத்திருந்தாள்.

செல்மா தன் சிந்தும் கண்ணீரிலே ஒளிமயமான எதிர்காலத்தின் விடியலைக்காணத் துடித்தாள்.

பிரசவ வேதனைப் படுக்கை; மரணமும் வாழ்வும் போராடும படுக்கை. மருத்துவரும் செவிலியரும் இங்கும் அங்கும் ஓடி ஓடி துடித்தனர்.

இந்த உலகிலே புதியதாக வரும் விருந்தாளியின் வருகையைக் காண ஏங்கினர்.

இரவு கெடிய இரவு, நேரம் நகரவே இல்லை. ஊர்ந்து ஊர்ந்து மெல்ல அடிமேல் அடி வைத்து அசைத்தது.

செல்மா தொடர்ந்து வேதனைக்குரலால் கூவித் துடித்தாள். நெஞ்சைப் பீறிட்டு எழும் ஒரு கதறல்; சூன்யமான அண்ட கோளத்தையே அதிர வைக்கும் ஒரு கதறல். மெலிந்து சக்த் இழந்து போன செல்மாவின் வேதனைக் கூக்குரல். வாழ்க்கை. மரணம் இரண்டும் கால்களாய் மிதிக்க சிக்கித் திணறி வேதனையோடு விழுந்து பரிதாபமாய் அலறும் செல்மாவின் கதறல்.

கதிரவன் உதயமாகப் போகிறான். இரவெல்லாம் வாழ்க்கையுடன் போராடிய செல்மா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கண்களைத் திறந்தாள்.

மதிப்பும் காப்பாற்றப்படும் என்று நினைத்தான்.

மகன் மேல் தீராத ஆசை.

செல்மாவின் பேரழகும், பெருங்குணமும் மன்சூரைக் கவரவில்லை. பகைத்து வெறுத்தான்.

குகையில் வளர்ந்த மரம் கனி கொடுக்குமா? அன்பற்ற ஆசையற்ற பாசமற்ற நேசமற்ற குகைதான் மன்சூர். செல்மா விற்கு குழந்தை எங்கே பிறக்கும்.

சிறைக் கூடத்துக்குள்ளே வானம்பாடி கூடு கட்டுமா? தானே கைதி, இன்னும் கைதியாய் பிறந்தால் அடிமைகள் தானே அதிகமாவார்கள்?

செல்மா துக்கத்தின், துயரத்தின் உதாசீனத்தின் இருப்பிடம். இந்த அவல வாழ்க்கைக்கு ஒரு வாரிசு தேவை தானா?

விண்ணிலே கதிரவன். வயல்வெளியிலே பல மலர்ச் செடிகள். இயற்கையின் காதலுக்குமுகிழ்க்கும் மலர்கள் தான் குழந்தைகள்.

ஆனால் மனித இனத்தின் குழந்தைகளோ காத லுக்கும் இரக்கத்திற்கும் இடையே மலரும் மலர்கள்!

செல்மாவின் அழகிலே கணவனின் கருணை ஒரு போதும் ஆட்சி செய்ததில்லை.

ஆனால் தினமும் விண்ணோக்கி இறைவனை தனக்கு ஒரு மனச் சாந்தியும் ஆதாரமும் ஒருங்கிணைந்த செல்வ மகனையும் அளிக்குமாறு வேண்டினாள்.

பிரார்த்தனை பலனளித்தது.

செல்மாவின் குகையிலே வளர்ந்த மரம் கனி கொடுக்க அரும்பாகி, மொட்டாகி, மலர முற்பட்டது.

சிறைக் கூண்டிலே வானம்பாடிப் பறவை தன் சிறகு களால் ஒரு கூட்டினைப் பின்னத் தொடங்கியது.

புனிதமான வெகுமதியைப் பெற்றதற்காக விண் ணோக்கி இறைக்கு வாழ்த்துக் கூறினாள்.

உரமிக்க , உறவுள்ள ஒரு தாயாகி மகிழ்ந்தாள்.

நாட்களை எண்ணி எண்ணி ஆவலோடு காத் திருந்தாள். சொர்க்கத்தின் இனிய தேவகானத்தைத் தன் காதிலே தேனெனப் பாய்ந்து ஒலிக்கும் நாளையும், நேரத்தையும் எதிர்நோககிக் காத்திருந்தாள்.

செல்மா தன் சிந்தும் கண்ணீரிலே ஒளிமயமான எதிர்காலத்தின் விடியலைக்காணத் துடித்தாள்.

பிரசவ வேதனைப் படுக்கை; மரணமும் வாழ்வும் போராடும படுக்கை. மருத்துவரும் செவிலியரும் இங்கும் அங்கும் ஓடி ஓடி துடித்தனர்.

இந்த உலகிலே புதியதாக வரும் விருந்தாளியின் வருகையைக் காண ஏங்கினர்.

இரவு கெடிய இரவு, நேரம் நகரவே இல்லை. ஊர்ந்து ஊர்ந்து மெல்ல அடிமேல் அடி வைத்து அசைத்தது.

செல்மா தொடர்ந்து வேதனைக்குரலால் கூவித் துடித்தாள். நெஞ்சைப் பீறிட்டு எழும் ஒரு கதறல்; சூன்யமான அண்ட கோளத்தையே அதிர வைக்கும் ஒரு கதறல். மெலிந்து சக்த் இழந்து போன செல்மாவின் வேதனைக் கூக்குரல். வாழ்க்கை. மரணம் இரண்டும் கால்களாய் மிதிக்க சிக்கித் திணறி வேதனையோடு விழுந்து பரிதாபமாய் அலறும் செல்மாவின் கதறல்.

கதிரவன் உதயமாகப் போகிறான். இரவெல்லாம் வாழ்க்கையுடன் போராடிய செல்மா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கண்களைத் திறந்தாள்.

சுற்று முற்றும் பார்த்தாள்; புன்முருவல் பூத்த முகங்கள்; அழகாய் மலர்ந்த மலர்கள்; மகிழ்ச்சி முகிழ்ந்த மக்கள்.

பிறப்பும் இறப்பும் போராடிக் கொண்டிருந்தது. கண்களை மூடியபடியே அழுகையினூடே ''ஓ என் மகனே!'' என்று கூவினாள்.

செவிலி புதிய விருந்தாளியை பட்டாடையிலே போர்த்தி செல்மா பக்கத்திலே படுக்கவைத்தாள்.

மருத்துவரோ தலையை அசைத்துக் கொண்டே செல்மாவையும் குழந்தையையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார்.

மாளிகையிலே பொங்கிய ஆனந்தம் அருகில் உள்ள வர்களை யெல்லாம் துயிலெழுப்பியது. காலையைக் கூவி அழைக்கும் பறவைக் கூட்டம் கிரீச்சிட்டு கூவின. செல்மாவின் குழந்தையும் கிரீச்சிட்டு அழுதது. செல்மாவின் அங்கமெல்லாம் பூரித்து பொங்கியது. தாய்மை சுரந்த- தன் மகனை அணைத்து பாலூட்டத் தவித்தாள்.

மாளிகையிலே பெருங் கூட்டம், வாழத்தொலிகள், மன்சூர்-பே.கலிப் தனக்கு மகன் பிறந்ததைக்கொண்டாட மதுக்கோப்பைகளை நிரப்பினான். விழா, பிறந்த விழாக் கொண்டாட்டம். ஆடினர் பாடினர். குடித்தனர். உண்டனர். ஓடினர், ஒரே குதூகலம், மகிழ்ச்சி வெள்ளம்? தத்தளித்தன மன்சூர் இன்பக் கடலிலே அலை மேல் மிதந்தனர்.

கைகால்களை உதைத்துக் கொண்டு முதல் முறையாகத் தன் தாயின் முகத்தைப் பார்த்தது. மார்பருகே கைக் குழந்தையை செல்மா இன்பம் பொங்க பால் உண்ணக் கொடுத்தாள். ஒரே ஒரு உறுஞ்சல்; செல்மா இந்த உலகில் பிறந்த இன்பத்தை யெல்லாம் பெற்றாள். மயக்கமுற்றாள்.

சிறிது நேரம் கழிந்தது. குழந்தை கண்களை மூடியது; பால் வழிந்தது. பட்டாடைகள்நனைந்தன. இறப்பதற் காகவே பிறந்த குழந்தை அது; விரைவில் திரும்பிப் போகவே வந்த புது விருந்தாளி, சுற்றி இருந்தவர்கள் கண்ணீர் சொரிந்தார்கள்.

மாளிகையின் கூடத்திலே ஊரில் இருந்தவர் அனை வரும் செல்மாவின்மகன் ஆரோக்கியத்துடன் இருக்க வாழ்த்து கூறிக்கொண்டே குடித்து கூத்தாடினர். விருந்து உண்பவரின் வாழ்த்துக்களை ஏற்காமல் புது விருந்தாளி கண்மூடிக்கொண்டது. தன் தாயை அழைக்கப் பிறந்த குழந்தை இறந்து விட்டது.

செல்மா ''என் மகனை என்னிடம் கொண்டு வாருங்கள்! நான் என்உயிரை அணைத்துக் கொள்ள வேண்டும்,'' என்று கூவினாள்.

வைகறையில் பிறந்து உதயத்தில் இறந்து விட்டது. எண்ணத்தை போல் பிறந்த, நிழலாய் மறைந்தது.

தன் தாய்க்கு ஆறுதல் அளிக்கப் பிறந்தது.

செல்மாவின் உயிரையே எடுத்தே இறந்தது.

இரவின் முடிவிலே பிறந்தது; பகலின் தோற்றத்திலே மறைந்தது.

இரவின்கண்களிலே பொழிந்த பனித்துளிபகலின் வெம்மையிலே உலர்ந்து மறைந்தது.

கடலின் அலை வெண்முத்தை கடற்கரை சேர்த்தது. கோல முத்தை அதன் அடி ஆழத்தில் புதைத்தது. அரும்பாகி மொட்டாகி மலர்ந்தது அல்லி மலர்; மரணம், காலடியில் மிதித்துச சிதைத்தது.

அருமை மகன் செல்மாவின் இதயத்தை ஒளி பெறச் செய்தான்; அதன் மறைவுப செல்மாவின் ஆத்மாவை அழித்தது.

இதுதான் மனிதனின் வாழ்வு.

சமுதாயத்தின் முடிவும் இதுவே!

சூரியன், சந்திரன், மண்ணுலகம், விண்வெளி, நட்சத்திரங்கள் எல்லாவற்றின் முடிவும் இதுவே!

செல்மா ''என் குழந்தையைக்கொடுங்கள்நான் அணைக்கத் துடிக்கின்றேன்; என் மகனுக்குப் பாலூட்டத் தவிக்கின்றேன்; கொண்டு வாருங்கள்'' என்று கூவினாள்.

மருத்துவர், ''செல்மா உன் மகன் இறந்து விட்டான்; தாயே பொறுமையாய் சகித்துக்கொள்'' என்றார்.

செல்மா, ஒரு பயங்கரமான கூக்குரலிட்டாள். உடனே அமைதியானாள்; பெருமகிழ்வோடு சிரித்தாள்; முகம் ஒளிப்பிழம்பாய் தோன்றியது.

''என்குழந்தையை என்னிடம் கொடுங்கள். என் அருகே படுக்கவையுங்கள்; இறந்து விட்ட என் உயிரைப் பார்க்க வேண்டும்'' என்றாள்.

இறந்த குழந்தையை, பட்டாடை சுற்றிய பச்சிளங் குழந்தையை செல்மாவிடம் கொடுத்தார்கள். அப்படியே வாங்கிமார்பின் மேல் அணைத்துக் கொண்டாள்.

''என் மகனே? இத்தனை நாள் எங்கிருந்தாய்; நான் வேண்டிய போதெல்லாம் வரவில்லையே ஏன்? என்னை இந்த பாழ்பட்ட உலகிலின்று அழைத்துப் போக வந்தாயா? இந்த குருட்டுக் குகையிலிருந்து பேரொளி படர்ந்த விண்ணுலகம் எடுத்தேகத்தான் என் வயிற்றில் பிறந்தாயா? வா? நானும் உன்னைத் தொடர்கிறேன் என்னை வழி நடத்திச் செல்.'' என்று இன்னும் பலப்பல

கூறி புலம்பினாள்; கதறினாள்; ஓலமிட்டாள்; அலறினாள்.

மாளிகை சன்னல் வழியே கதிரவன்தன் ஒளிக்கதிர் களை வீசினான். மௌனத்தின் பெருமை; மரணத்தின் நிழல்; இரண்டு உடல்கள் மேல் பேரொளி. உயிர்கள் பறந்தன. இனி இவ்வுடல்களால் என்ன பயன்?

மன்சூர்-பேக்-கலீப் மாளிகைக் கூடத்திலே மதுவின் கோப்பையிலே மங்கையர் புடைசூழ மயங்கி ஆடிக் கொண்டிருந்தார். மகிழ்ச்சி விழா துக்க விழாவானது. மன்சூர் கண்ணீர் சிந்தவில்லை; பேச்சில்லை; சலன மில்லை; ஆடவில்லை சிலையாய் நின்றார்.

அடுத்த நாள் செல்மாவின் உடல் சவப்பெட்டியுள் வைக்கப்பட்டது. திருமண ஆடையே சவச் சல்லாவாக போர்த்தப்பட்டது; பட்டுத் துணியால் சுற்றப்பட்ட குழந்தையை செல்மாவின் மார்பின் மேல் அணைத்தனர். அக்குழந்தைக்குச் சவப்பெட்டி தாயின் மார்பகமே. அதன் மூடி செல்மாவின் அணைத்த கைகளே!

செல்மாவும் குழந்தையும் ஒரே சவப்பெட்டியில் மரண ஊர்வலம் புறப்பட்டது; உடன் சென்றது கூட்டம்.

நானும் நடந்தேன்; நகர்ந்தேன்.

இடுகாட்டிலே பாதிரியார் மந்திரங்களை முணு முணுத்தார். உதவி குருக்கள் ஜெபம் செய்தனர். இருளடைந்த முகங்கள்; முட்டாள் தனம் மூடி மறைக்க வெறுமை, முகத்திரையிட்டது.

சவப் பெட்டியைக் குழியில் தாழ இறங்ககினர்; மண்மூடினர்.

ஒருவன், ''என் வாழ்நாளிலேயே இன்று தான் இரு உடல்களை ஒரே சவப்பெடடியில் பார்க்கிறேன்.''

இன்னொருவன், ''இந்தக்குழந்தை இரக்கமற்ற தகப்பனிடமிருந்து விடுதலை செய்து அழைத்துப் போகவே பிறந்ததா?''

வேறொருவன், ''மன்சூர்-பே. கலீப்பைப் போய் பாருங்கள்! மனைவியையும் மகனையும் ஒரே நாளில் இழந்து வேதனைப்படுபவனாய் தெரியவில்லை.

மற்றொருவன்; ''மன்சூருக்கென்ன? அவன் மாமனோ மதக்குரு. நாளையே பணக்காரன் வீட்டிலே வலிமை மிக்க ஒருத்தியை மணமுடித்து வைப்பார்.''

அங்குக் கூடிய கூட்டம் பாதிரிக்கும், மன்சூர்-பே-கலீப்பிற்கும் ஆறுதல் கூறி வழி நடந்தனர். எல்லோரும் இடுகாட்டை விட்டுச் சென்றனர்.

நான் அங்கு அன்னியனாய் நின்றேன். செல்மாவும் குழந்தையும் எனக்குச் சம்மந்தமற்றவராய் நினைத்தனர்.

குழிதோண்டும் வெட்டியான் புதைக்குழிக்கு அருகே நின்றான்.

நான் அவனை அணுகி ''பாரிஸ் எப்பாண்டி கராமி எங்கே புதைக்கப்ட்டார்? உனக்குத் தெரியுமா?'' என்றேன்.

அவன் என்னை உற்று நோக்கினான். பிறகு ''இங்கே தான், இதே இடத்தில் தான். நான் அவரை முதலில் புதைத்தேன். அவரின் மேல் அவர் மகளை வைத்தேன். அந்தப் பெண்ணின் மகனோ அவள் மார்பின்மேல் இளைப்பாறுகின்றான்.

அந்த மூவரின் மேலும் இந்த மண்வெட்டியால் மண்ணைக் குவிக்கின்றேன்!'' என்றார்.

''நண்பா, நீகராமி, செல்மா, குழந்தை மூவரை

மட்டும புதைக்வில்லை; என் இதயத்தையும் இதிலே போட்டு புதைத்து விட்டாயே'' என்றேன்.

வெட்டியான் மரமல்லிகை மரங்களுக்கிடையே மறைந்தான்.

நான் ''செல்மா! செல்மா!'' என்று கூவினேன்! கதறினேன்! துடித்தேன்; துவண்டேன்; கல்லறை மேல் வீழ்ந்தேன்.

''இங்குதான், கடல் கடந்து காதலின் கைதியாய் வாழ்கின்ற கிப்ரானின் எல்லா நம்பிக்கைகளும் புதையுண்டு இருக்கின்றது. அவன் இன்பம், காதல் அன்பு, ஆசை அனைத்தையும் இழந்து கண்ணீர் வற்றி வறண்டு போக கூவுகின்றான்.''

கல்லறையை வாழ்த்தி மலர்களை தூவுங்கள்.

ஓ! என் தேவதையே!

செல்மா...செல்மா

○○○

கலீல் ஜிப்ரானின்
நான்கு நாடகங்கள்

‘இராம்’ – கம்பீரத் தூண்கள் நிறை நகர்

நாடகக் களம் :

ஒரு சிறிய காடு; அதில் மாதுளஞ்செடிகளும், ‘அக்குரூட்’ மரங்களும், ‘பாப்லர்’ மரங்களும் நிறைந்த காடு. இந்தக் காட்டில் ‘ஓரன்டீஸ்’ ஆற்றுக்கும் (நகர் எல் அஸ்ஸி) ‘எர்மில்’ எனும் கிராமத்திற்கும் இடையே ஓர் தனிமையான பழைய வீடு இருக்கிறது. அந்த வீட்டைச் சுற்றி மரங்க ளெல்லாம் வெட்டி அகற்றப்பட்டு திறந்த வெளியாய் உள்ளது.

நாடகக் காலம் :

1883-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15-ஆம் நாளின் பிற்பகல் நேரம்.

நாடகக் கதா மாந்தர்கள் :

‘நஹா வாண்டி’ன், ‘செயின் அபீடென்’ 40 வயது; இவர் ஓர் பெரிஸிய நாட்டு முஸ்லீம் துறவி; மாயையும் மர்மமும் மிக்க மனிதர்.

‘நஜிப் ரயிமி’ : 30 வயது நிறைநதலெபனான் நாட்டு அறிவியல் மேதை.

தெய்வீக அமீனா : வயது தெரியாது. தீர்க்க தரிசனமும், மர்மமும் நிறைந்த மாது. அந்தப் பகுதியிலேயே பிரபலமான, பள்ளத்தாக்கின் தேவக் கன்னி எனப்படுபவர்.

✲ ✲ ✲

திரை மேலே உயர்த்தப்பட்டது. செயின் அபீடென் தன் ஒரு கையின் மேல் தலையைச் சாய்த்துக் கொண்டு, அங்குள்ள மரத்தடியிலே அமர்ந்திருக்கின்றார். தன் னுடைய நீண்ட கைக் கோலால் தரையின் மேல் வட்ட வடிவமான உருவங்களை வரைந்து கொண்டிருக்கின்றார். நஜீப் ரயிமி அந்தத் திறந்த வெளியிருந்து ஓர் குதிரை மேல் சிறிது நேரத்தில் வெளிப்படு கின்றார். குதிரையிலிருந்து இறங்கி, குதிரையின் கடிவாள லகானை மரத்தின் வேரில் கட்டுகின்றார். தன்ஆடைகளின் மேல் உள்ள தூசியைத் தட்டிச் சுத்தப்படுத்திக் கொண்டு மெல்ல 'ஜெயின் அபீடென்'ஐ நெருங்குகின்றார்.

நசீப் : ஐயா! உங்களுக்கு அமைதியும் சமாதானமும் அமையட்டும்.

செயின் : உங்களுக்கும் அவ்வாறே அமைதி நிலவட்டும்! (தன் முகத்தை மறுபக்கம் திருப்பி, தனக்குத் தானே முணுமுணுக்கின்றார்) சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால் உயர்ந்த மேலை நிலையை? அது ஓர் தனிப்பட்ட சமாச்சாரம்!

நசீப் : செய்வீக அமீனாவின் வாழ்விடம் இதுதானா?

செயின் : அவர் வாழும் பல இடங்களில் இதுவும் ஒன்று. அவர் எங்கும் வாழ்வதில்லை; இருப்பினும் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்றார்.

நசீப் : நான் பலரையும் விசாரித்தேன் .யாருக்கும் தெய்வீக அமீனா கணக்கற்ற இடங்களில் வாழ் கிறார் எனத் தெரியவில்லை.

செயின் : உனக்குச் செய்தி சொன்ன எல்லா மக்களும் ஒன்றும் அறியாதவர்கள் என்பதை இது நிரூபிக் கின்றது. அவர்களுக்குக் கண்களைக் கொண்டு பார்ப்பதைத் தவிர வேறு பார்வை இல்லை; காதுகளால் கேட்பதைத் தவிர வேறு வழியாக கேட்டு அறியார் என்பது தெளிவாகின்றது!

தெய்விக அமீனா எங்கும் நிறைந்திருக் கின்றார். (தன் கைக்கோலால் கிழக்குத் திசையைக் காட்டுகின்றார்) அவள் சமவெளி களிலும், பள்ளத்தாக்கு களிலும், காடு மேடு களிலும், மலை உச்சி களிலும் சுற்றி அலைந்து திரிகின்றாள்.

நசீப் : அவள் இன்று இங்குத் திரும்பி வருவாளா?

செயின் : சொர்க்கத்தின் சித்தம் அதுவானால் அவள் இன்று இங்கு வரக்கூடும்.

நசீப் : (செயினுக்கு எதிரே ஓர் பாறை மேல் உட்கார்ந்துகொண்டு செயினையே ஊடுருவிப் பார்த்துக்கொண்டிருந்தார்.) தங்களுடைய தாடி தாங்கள் ஓர் பெர்சிய நாட்டார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

செயின் : ஆம்; நான் நஹாவாண்டில் பிறந்தேன். ஷீசாரில் வளர்ந்தேன்; நஷாபூரில் கல்வி பயின்றேன்; நான் இந்த உலகத்தின் கிழக்கேயும் மேற்கேயும் அலைந்து திரிந்து பயணம் செய்தேன்; நான் சென்ற இட மெல்லாம் ஓர் அன்னியனாகவே இருப்பதாய் உணர்ந்தேன். இப்போது இங்குத் திரும்பி வந்தேன்.

நசீப் : நாம் நமக்கே எப்போதும் அன்னியர்கள்தான்!

செயின் : (நசீப்பின் விளக்கக் குறிப்பை அலட்சியமாக ஒதுக்கிவிட்டு) உண்மையிலேயே நான் ஆயிரம் ஆயிரம் மக்களுடன் சொற்போரிட்டேன்; உரை யாடினேன்; நான் கண்டதெல்லாம் யாருமே இல்லை. ஆனாலும் தங்கள் சுற்றச்சார்பிலே திருப்தியுற்றோர், அவர்களுக்குத் தெரிந்த ஒரே ஒரு சிறைச்சாலையிலே தங்களைத் தாங்களே அடைத்துக் கொண்டு, உலகை-இந்தப் பரந்த பாருலகைத் தங்கள் கண்களால் காணாமல் இருக்கின்றார்கள்.

நசீப் : (செயின் வார்த்தைகளைக் கேட்டு கலக்கமும் தடுமாற்றமும் அடைந்து) மனிதன் இயற்கை யாகவே தான் பிறந்த இடத்தை மிகவும் நேசித்து ஒன்றி விடுவதில்லையா?

செயின் : எந்த ஒரு மனிதனின் எண்ணங்களும், இதயமும் ஓர் வரையறைக்குள் அடங்கி ஒடுங்கி விடுகின்றதோ அவனே வாழ்க்கையில் கட்டுப் படுத்தப்பட்டதைக் காதலிக்கின்றான். நெடுந் தூரப் பார்வையற்ற ஒருவன்தான் நடக்கும் பாதையில் ஒரு முழத்திற்கு மேல் பார்க்க இயலாத நோஞ்சானாய் இருக் கின்றான். அவன் சாய்ந்து ஓய்வு கொள்ளும் சுவரின் மேல் ஒரு முழம்கூடப் பார்க்க இயலாதவனாய் இருக்கின்றான்.

நசீப் : வாழ்க்கையின் மிகப்பெரிய ஆழத்தை நம் உள் மனக்கண் கொண்டு எல்லோராலும் ஊடுருவிக் காண முடிவதில்லை.

கண் பார்வைக் குறைந்தவர்களை, நாம் தூரத்தில் இருப்பதையும், மங்கலாக உள்ளதையும் காண வேண்டுமெனக் கட்டளை யிடுவது மிகவும் கொடுமையானது.

செயின் : நீ சொல்வது மிகவும் சரி; ஆனாலும் திராட்சை யிலிருந்து ரசத்தைப் பிழிவதும் கொடுமை யல்லவா?

நசீப் : (சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்த மௌனத் திற்குப் பிறகு) பல ஆண்டுகளாகத் தெய்வீக அமீனா பற்றிய கதைகளைக் கேட்டுக்கொண் டிருக்கின்றேன். அக்கதைகள் என்னை மிகவும் கவர்ந்தன; வசீகரித்தன. நான் அவளைச் சந்திக்கத் தீர்மானித்தேன். அவளுடைய மர்மங் களையும் ரகசியங்களையும் பற்றிக் கேட்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

செயின் : இந்த உலகத்தில் உள்ள எந்த மனிதனாலும் தெய்வீக அமீனாவின் இரகசியங்களைச் சொந்தமாக்கி உரிமை கொண்டாட இயலாது; அவர்களுக்குத் தகுதி இல்லை.

ஒருவன் நந்தவனத்திலே நடப்பது போலக் கடலுக்கடியில் நடக்க இயலாது; எந்த மனித னாலும் முடியாது; அதுபோலவே!

நசீப் : என்னை மன்னிக்கவும். ஐயா நான் என்னுடைய நோக்கத்தை, கருத்தை உங்களுக்குத் தெளி வாக்கிட இயலவில்லை. தெய்வீக அமீனாவின் இரகசியங் களையும் மர்மங் களையும் தெரிந்து எனதாக்கிக் கொள்ளும் திறமை எனக்கில்லை என்பதை உணர் கிறேன். என்னுடைய முக்கிய மன நம்பிக்கை என்ன வெனில், தெய்வீக அமீனா, 'இராம்'- கம்பீரத் தூண்கள் நிறைந்த மாநகரில் எப்படி நுழைந்தார் எனும் கதையை அவரே சொல்லக் கேட்க வேண்டும் என்பதே! அவர்கள் அந்தப் பொன் நகரிலே என்ன வெல்லாம் கண்டுகளித்தார்கள் என்பதையும் அறியத் துடிக்கிறேன்.

செயின் : அவளுடைய கனவுக் கதவுகளுக்கு நேரே நீங்கள் உண்மையான நம்பிக்கையுடன் நிற்க வேண்டும். அவ்வளவே! அக்கதவுகள் திறந் தால் நீங்கள் உங்கள் விருப்பத்தை அடைவீர். கதவுகள் திறக்க வில்லை யானால் பழியை யெல்லாம் நீங்களே உங்கள் மேல் உரிமை யாக்கிக் கொள்ள வேண்டும்; ஏற்க வேண்டும்!

நசீப் : உங்களுடைய வித்திரமான வார்த்தைகளை நான் அறிய இயலாதவனாய் இருக்கின்றேன்.

செயின் : அவை மிகவும் சாதாரணமானவை... நீங்கள் வெற்றி பெற்றால் கிடைக்கும் பெரிய வெகுமதியை ஒப்பு நோக்கும்போது இது

மிகவும் சாதாரணம். தெய்வீக அமீனாவிற்கு மக்களைப் பற்றி மிக அதிகமாகத் தெரியும்; அம்மக்களுக்கே தங்களைப் பற்றி அவ்வளவு தெரியுமா என்பது சந்தேகம்! அவள் ஒரு சிறிய பார்வையிலேயே உங்கள் உள்ளத்தின் அடித் தளத்தில் மறைந்து உள்ள அனைத்தையும் ஆராய்ந்து அறிந்து கொள்வாள். அவள் நீங்கள் தகுதியும் மேன்மையும் நன்மதிப்பும் உள்ளவ ரானால் உங்களுடன் பேசுவதற்கு மகிழ்ச்சி அடைவாள். அப்போது உண்மையான ஒளி வெள்ளத்தின் பாதையை உனக்குக் காட்டுவாள். இல்லையேல் உன்னை ஒதுக்கி விலக்கி விடுவாள். நீங்கள் இருப்பைப் பற்றி யாருமே பேச மாட்டார்கள்.

நசீப் : நான் தகுதியும் மேன்மையும் உள்ளவன் என்பதை நிரூபிக்க என்ன செய்ய வேண்டும்? என்ன சொல்ல வேண்டும்?

செயின் : வெறும் வார்த்தைகளாலும் செயல்களாலும் தெய்வீக அமீனாவை நெருங்க முயல்வது வெறும் கேலிக்கூத்து; வீண் முயற்சி! அவள் பார்ப்பதும் இல்லை; கேட்பதும் இல்லை! ஆனால் அவள் தன் ஆத்மாவின் காதுகள் மூல மாகவே கேட்பாள்! நீ சொல்லாததை யெல்லாம் கேட்பாள்; நீ பார்க்க இயலாததை யெல்லாம் அவள் தன் ஆத்மாவின் கண்களால் கண்டு கொள்வாள்!

நசீப் : உன் வார்த்தைகள் எவ்வளவு அழகாகவும், விவேகமாகவும், அனுபவப்பூர்வமாகவும் உள்ளன!

செயின் : தெய்வீக அமீனாவைப் பற்றி நான் ஒரு நூறாண்டு காலம் பேசினாலும்கூட, நான் சொல்வதெல்லாம் அழகின் பாட்டைப் பாடும் ஒருவன் எவ்வளவு திணறுவானோ,

அவனுடைய புல்லாங்குழலின் ஒரு சிறிய ரீங்காரமாகவே அமையும்!

நசீப் : இந்த விசித்திரமான, விந்தையான பெண்மணி எங்கே பிறந்தாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

செயின் : அவளுடைய உடம்பு 'டெமாஸ்கஸ்' நகரின் சுற்றுப்புறத்திலேயும், மற்ற எல்லா இடங் களிலுமுள்ள பொருள்களைவிடச் சிறந்ததாகக் கடவுளின் வயிற்றிலிருந்து பிறந்தது!

நசீப் : அவளின் பெற்றோர்கள் பற்றி என்ன அறிவீர்?

செயின் : அதனால் பலன் ஏதும் உண்டா? அதன் முக்கியத்துவம் தான் என்ன? பொருள்களின் மேற் புறத்தோற்றத்தை மட்டும் பார்த்து, அப் பொருளின் முக்கிய குணநலன்களைத் தெரிந்து கொள்ள முடியுமா? திராட்சை ரசமுள்ள கோப்பையைப் பார்த்தே அதன் சுவையைச் சொல்ல இயலுமா?

நசீப் : நீங்கள் உண்மையையே பேசுகின்றீர்கள்! இருந் தாலும் ஆத்மாவிற்கும் உடலுக்கும் ஒரு இணைப்பு, பந்தம், ஒட்டுறவு இருக்க வேண்டும்! உடம்பிற்கும் அதன் சுற்றுப்புறச் சூழ் நிலைக்கும் ஒரு ஒட்டுறவு இருக்கின்றதல்லவா? அதுபோல்? நான் வாய்ப்பிலும் அதிருஷ்டத்திலும நம்பிக்கை வைக்கவில்லை. தெய்வீக அமீனாவின் பின்னணியை அறிந்து கொள்வதில் நம்பிக்கை யுடன் இருக்கின்றேன். அவளுடைய இரகசிய வாழ்க்கையைத் துருவி ஆராய இது முக்கியமாக மதிப்புமிக்கதாக இருக்கும். இதுவே என் விருப்பம்.

செயின் : நன்றாகப் பேசினீர்கள்! அவருடைய தாயாரைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது;

அவள், அமீனா பிறந்த உடனே இறந்து விட்டாள். அமீனா ஒரே குழந்தை. அமீனாவின் தகப்பனார் பெயர் சேக் அப்துல்கனி; இவர் புகழ்பெற்ற குருட்டுத் தீர்க்கதரிசி. இவர் மிகவும் தெய்வீகமானவர் என எண்ணப் பட்டார்; அவருடைய காலக்கட்டத்தில் மாய மந்திரங்களில் அவர் ஒரு பெரிய குருவாகக் கருதப்பட்டார். அவருடைய ஆத்மா கடவுளின் கருணையைப் பெறட்டும்! அவர் தன் மகளிடம் தீவிரமான பாசம், அன்பு கொண்டிருந்தார்; வெளிமிக்க பிடிப்பு; பற்று அவளை மிகவும் தெளிவுடன் படிக்க வைத்து, தன் அறிவை யெல்லாம் அவளுக்குப் புகட்டிக் கொட்டினார். வயது வளர வளர அமீனா தன் தகப்பனாருடைய எல்லா அறிவையும் ஞானத்தையும் எடுத்துக் கொண்டாள். உண்மையிலேயே அமீனாவின் அறிவோடு ஒப்பிடும்போது, சேக் அப்துல்கனி கற்ற தெல்லாம் கொஞ்சமே! தன் பெண்ணைப் பற்றி அவர் கூறுகின்றார்.

''என்னுடைய வலிமை மிக்க இருட்டறையி லிருந்து வெளிவந்த பெரு ஒளி வெள்ளம் என் வாழ்க்கைப் பாதையை வெளிச்சமுடைய தாக்கியது.''

அமீனாவிற்கு இருபத்து மூன்று வயதாக இருந்தபோது அவளை அவர் தகப்பனார் ஓர் யாத்திரை செல்வதில் உடன் அழைத்துச் சென்றார்!

அவர்கள் 'டெமாஸ்கஸ்' பாலைவனத்தைக் கடந்து, வெறும் பொட்டல் நிலத்தை அடைந்தபோது, பிரகாசமான நகர் அவர் களுக்குப் பின்புறத்தில் மறைந்து விட்டது; குருடரான அமீனாவின் தகப்பாருக்குக்

காய்ச்சல் வந்து பின்பு இறந்துவிட்டார். அமீனா அவரை குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஏழு நாட்கள் பகலும் இரவும் அதைக் கண்காணித் தாள். இப்போது அவரின் ஆத்மாவைக்கூவி அழைத்தும், அவருடைய ஆத்மாவில் மறைந்துள்ள இரகசியங்களைக் கேட்டுக் கொண்டும் இருந்தாள். ஏழு நாட்களுக்குப் பிறகு அன்றைய இரவில் அவளுடைய தகப்பனாரின் ஆவி அவளை அவ்விடத்தி னின்றும் கண்காணிப்பிலிருந்து விலக்கி, தென் கிழக்குத் திசையிலே பயணத்தைத் தொடரும்படி பணித்தது. அவளும் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள்.

(செயின் பேசுவதை நிறுத்தி, அடிவானத்தை உற்று நோக்கி, சில விநாடி மௌனத்திற்குப் பிறகு மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.)

அமீனா தன் பயணத்தைத் தொடர்ந்துபெரும் போராட்டத்துடன் வழி நடந்து அந்தப் பெரும் பாலைவனத்தின் இதயமாக அமைந்த நடுப் பகுதியை வந்தடைந்தாள். அந்த இடம்தான் 'ராப் எல் கலாயி!'' இதுவரை எந்த ஒட்டகப் பயணியரும் அந்த இடத்தைத் தொடவோ, கடந்து செல்லவோ இல்லை; நான் அறிந்தவரை.

இஸ்லாமிய மதம் ஆரம்பமான ஆதி காலத்தி லேயே சில நாடோடிகள் இந்த இடத்தை அடைந்ததாகக் கூறுவார்கள்.

மற்ற யாத்திரிகர்கள் எல்லோரும் அமீனா எங்கோ வழி தவறி இறந்துவிட்டாள் என்று துக்கப் பட்டனர். அவள் பட்டினியால் இறந் திருக்கலாம் என்றும் அழுது புலம்பினர். அவர்கள் 'டெமாஸ்கஸ்' நகரை அடைந்த வுடன் அங்குள்ள மக்களிடம் அமீனாவின்

மறைவைப் பற்றி சொல்லிச் சொல்லி அழுது புலம்பினர். ஷேக் அப்துல் கனியை அறிந்தவர்களும் தெரிந்தவர்களும் விசித்திரமான பெண்ணான அமீனாவைப் பற்றித் தெரிந்தவர்களும் அழுது புலம்பினார்கள். என்றாலும் ஆண்டுகள் கழியக் கழிய, அமீனாவை அனைவரும் மறந்துவிட்டனர்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு அமீனா 'முயீசில்' என்ற இடத்தல் 'தெய்வீக அமீனா'வாகத் தோன்றினாள். அவளுடைய இயற்கையைக் கடந்த தெய்வீக அறிவும், ஞானமும், அழகும், அவளுடைய தோற்றமும்மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அவளது தோற்றம், நீலநிற ஆகாயத்திலிருந்து ஒரு வெள்ளித் துணடு சொர்க்கத்தின் இரவில் வீழ்வது போல இருந்தது.

நசீப் : (செயின் கூறிய கதையை ஆழ்ந்து ரசித்துக் கேட்டாலும் இடையிலே குறுக்கிட்டு) அந்த நாட்டு மக்களுக்கு அமீனா தன்னை யார் என்று விளம்பரப்படுத்தினாளா?

செயின் : அவள் தன்னுடைய பழைய கடந்தகால நிகழ்ச்சி பற்றி ஒன்றுமே கூறி வெளிப்படுத்தவில்லை. அவள் தன் முகத்திரையை விலக்கியே பெரிய மத குருக்கள், பெரறிவாளர்கள் முன் நிமிர்ந்து நின்றாள். அவள் பேச்சோ தெய்வீகம் ததும்பியது. உலகில் அழிவற்ற பொருள் பற்றியே பேசினாள். கம்பீரமான தூண்கள் நிறைந்த நகர் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பேசினாள். அவளுடைய பேச்சுத் திறமை சொல்வன்மை மிக்கதாயும், சொல்நயமும் பொருள் நயமும் தெளிந்ததாயும், கேட்பவரின் இதயத்தையும் அறிவையிம் கவர்ந்து ஆட்சி செய்வதாயும்

இருந்தது. ஒவ்வொரு நாளும் அந்த தெய்வீக அமீனாவைப் பின்பற்றும் பக்தரின் தொகை அதிகரித்தது. அந்த நகரின் அறிவாளிகளுக்குப் பொறாமை அதிகரித்தது; அரசனிடம் குற்றம் கூறினர்; முறையிட்டனர். உடனே அம் முஸ்லீம் தலைவர் தெய்வீக அமீனாவைத் தான்முன்னே வந்துநிற்கப் பணித்தார். அவள் அவர் முன்னே தோன்றியவுடன் அவள் கைகளிலே பொன் முடிப்பைத் திணித்து, உடனே அந்த நகரின் எல்லையைத் தாண்டிச் செல்லும்படி துரிதப்படுத்தினார்.

தெய்வீக அமீனா பொன் முடிப்பை ஏற்க மறுத்து விட்டு, இரவு நேரத்திலே அந்த நகரைவிட்டு வெளி யேறினாள்

கான்ஸ்டாண்டி நோபிள், டமாஸ்கஸ், ஓம்ஸ், திரிபோலி முதலிய எல்லா நகரங்களையும் தன் பெரும் யாத்திரைப் பயணத்திலே கடந்து சென்றாள்! ஒவ்வொரு ஊரிலும் அங்குக் குழுமி யிருந்த மக்களை அணுகி, அவர் உள்ளங்களிலே அறிவுப் பேரொளியை ஏற்றி வைத்தாள். அவளுடைய மாயமான மயக்கும் சக்தி சிறந்தது. இருந்தாலும் ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊரின் மதத்தலைவன் மிகக் கடுமையாக எதிர்த்தான்.

அதனால் ஒவ்வொரு ஊரிலிருந்தும் அவள் நாடு கடத்தப்பட்டதே பெற்ற பரிசாயிற்று. கடைசியாக தெய்வீக அமீனா இனி தனித்தே வாழ்வது என்று முடிவு செய்து, சில வருடங் களுக்கு முன்பு இந்த இடத்தை அடைந்தாள். கடவுளின் பேரன்புதவிர மற்ற எல்லா வற்றையும் வெறுத்து ஒதுக்கினாள். கடவுளின் மாய மர்மங்களை, பரம இரகசியங் களை அறியத் தியானத்தில் ஆழ்ந்தாள்.

நான் கூறிய அனைத்தும் தெய்வீக அமீனாவின் வாழ்க்கைச் சரித்திரத்திலே ஒரு சிறு பகுதியே!

ஆனால் கடவுளால் அளிக்கப்பட்ட ஆசீர்வாத சக்தியால் நான் தெய்வீக அமீனாவின் எடுத்துக்காட்டான, உயர்வான, சீரிய, லட்சிய வாழ்க்கையை அறிந்து கொண்டேன். அதே சக்திதான் என் இதயத்தைப் போதையேறச் செய்துவெற்றி கொண்டு இந்த உலகியல் வார்த்தைதகளால் தெய்வீக அமீனாவின்அற்புதமான சக்தி களை விவரிக்க இயலாதபடி செய்கின்றது. இந்த உலகைச் சூழ்ந்துள்ள பெரும் ஞானத்தை முழுமையாக ஒரே கோப்பையில் வடித்தெடுக்க மனிதனால் முடியுமா?

நசீப் : ஐயா, நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டவன்; நீங்கள் மிக முக்கியமான செய்தி களையெல்லாம், மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் எனக்களித்தீர்கள்! முன்பு இருந்ததைவிட இப்போது தெய்வீக அமீனாவைக் காணும் ஆவல், ஆசை அதிகமாகி விட்டது.

செயின் : (நசீப்பை ஊடுருவும் கண்களால் நோக்கி) நீங்கள் ஓர் கிறிஸ்துவர்தானே; இல்லையா?

நசீப் : ஆமாம். நான் ஒரு கிறிஸ்துவனாகவே பிறந்தேன். நான் என் முன்னோர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவன்; அவர்கள் எனக்கு ஒரு பெயரையும் ஒரு மதத்தையும் விருப்பப் பட்டு கொடுத்துள்ளனர். நான் நினைக் கின்றேன். இவ்வுலகில் உள்ள எல்லா மதங்களையும் அழித்துவிட்டு, ஒதுக்கிவிட்டு நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடி ஒற்றுமையாய் ஒரு மிகப்பெரிய மதத்தை, கடவுள் நம்பிக்கையை நுகர்ந்து உலக சகோதரத் துவத்தை நிறுவலாம்.

செயின் : நீங்கள் மிக புத்திசாலித்தனத்துடன் பேசு கின்றீர்கள். இப்படிப்பட்ட ஓர் ஐக்கிய மத நம்பிக்கையை உருவாக்கவதில் தெய்வீக அமீனாவை விட அறிந்தவர் யாரும் இல்லை. அவள் எல்லா நம்பிக்கைவாதிகளுக்கும் வழித்

தோன்றல் களுக்கும், காலைப் பொழுதில் மேலிருந்து வண்ணம் மிகுந்த மலர்களின் மேல் விழும் பனித்துளிகளால் ஒளிபட்டு மின்னும் வைர, மாணிக்க, செம்பவளக் கற்களைப் போல மின்னுகின்றாள்; பளிச்சிடுகின்றாள்; ஆம்... தெய்வீக அமீனா ஒரு காலை நேர பனித்துளி... *(செயின் தன் பேச்சை நிறுத்து கின்றார். கிழக்குத் திசையை நோக்குகின்றார்; மிகவும் கவனமாகக் கேட்கின்றார். பிறகு எழுந்து நின்று, நசீப்பை உன்னிப்பாய் விறைப்புடன் இருக்கக் கட்டளையிடுகின்றார். செயின் உணர்ச்சியால் உந்தப்பட்டு முணு முணுக்கின்றார்.)* தெய்வீக அமீனா அதோ நெருங்குகின்றாள்! என் நல்ல அதிர்ஷ்டம் உமக்குமாகுக!

நசீப் : *(தடுமாறும் மெல்லிய சொற்கள் எதிரொலிக்க)* என் நீண்ட கால கவலையும் ஆவலும் விரைவில் வெகுமதியைப் பெறப் போகறது! *(நசீப் தன் கைகளை நெற்றியின் மேல் வைத்துக் கொள்கிறார்; தன் புடைக்கும் நரம்பு களை அமைதிப்படுத்துகின்றார். பிறகு அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையிலே ஒரு குண மாறுதலை உணர்கின்றார். செயின் கூறிய வார்த்தைகளை நினைத்து, தவறி விடும் சாத்திக் கூறை உணர்கின்றார். வரப்போகும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் தன்மையிலே ஆழ்ந்து திளைக்கின்றார். ஓர் அசையாத பளிங்குச் சிலை போல நிலைத்து நிற்கின்றார்.)*

அமீனா-அந்தத் தெய்வீக அமீனா உள்ளே நுழைந்து அந்த இருவருக்கும் எதிரே நிற்கின்றாள். நீண்ட பட்டு உடைகள் அவளை மூடி உள்ளன. அவளுடைய தோற்றம், முகபாவம், உடற்கூறு, அசைவுகள், வெளிப்படும் பேரொளி எல்லாம் பழங்காலத்தில் துதித்து வழிபட்ட ஒரு தெய்வ மங்கையாக அவளைக் காட்சி அளிக்க

செய்கின்றன. அவள் இந்தக் காலத்திலே இருக்கும் நாகரீக நங்கையாகத் தெரியவில்லை.

அவளுடைய வயது என்னவாக இருக்கும் என்று யாராலும் மதிப்பிடவே முடியாது. அவள் முகம் இளமைப் பொலிவுடன் தோன்றினாலும், எதையும் வெளிப் படுத்தவே இல்லை. அவருடைய ஆழ்ந்த கண்கள் ஓராயிரம் வருடங்களின ஞானத்தையும், அறிவையும், வேதனை, வருத்தம், துன்பம் அனைத்தையும் பிரதிபலிக்கின்றன. நசீப், செயின் இருவரும் ஆடாமல் அசையாமல் மரியாதையுடன் நிற்கின்றனர். கடவுளின் தீர்க்கதரிசியின் முன் நிற்பது போல் உள்ளது.)

அமீனா : (நசீபை ஆழ்ந்து நோக்கியபின், அவர் இதயத்தையே ஆழப் பாய்ந்து துருவி நோக்குவதுபோல் தன் அற்புதமான கண் களால் பார்க்கின்றாள். நம்பிக்கையுடன் அமைதிக் குரலில்) நீங்கள் இங்கே எங்களைப் பற்றி அறிவதற்காக இருக்கின்றீர்கள். உங்களைப் பற்றியே உங்களுக்குத் தெரிந்ததை விட அதிகமாக எங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாது. உங்களிடமிருந்து என்ன உங்களுக்குக் கேட்கின்றதோ அதையேதான் நீங்கள் எங்களிடமிருந்தும் கேட்பீர்கள்!

நசீப் : (பிரமித்து நரம்புத் தளர்ச்சியும், அதிர்ச்சியும் அடையத் தெரிந்தார்) நான் முன்னமே பார்த்தேன்; கேட்டேன்; நம்பினேன்... நான் திருப்தியுற்றேன்.

அமீனா : மனத் திருப்தியின் ஒரு பகுதியைத் தெரிந்து கொண்டதிலேயே மனத்திருப்தி அடைந்து விடாதீர்கள். எவன் ஒருவன் வாழ்க்கையின் ஊற்றை ஒரு காலியான குவளையிலே ஒரே மூச்சில் குடிக்கின்றானோ அவன் இரண்டு குவளை நிறைந்ததாய் வெளிப்படுவான். (அமீனா தன் கையை அவர் பக்கம் நீட்டினாள்;

அவர் அக்கையை தம் இரு கரங்களால் பற்றி ஆச்சரியமும் பக்திப்பூர்வமான பயமும் கொண்டு கை விரல்களின் நுனிகளை முத்த மிட்டார். அவரையும் அறிாயமல் உணர்ச்சியும், பலமும் ஆட்கொண்டன. அவள் உடனே தன் மற்றொரு கையை செயின் அபிடீன் பக்கம் நீட்டினாள். அவரும் கைகளை முத்தமிட்டார். நசீப் மிகவும் மகிழ்சசி அடைந்தார். தான் சரியாக வழிமுறைகளைப் பின்பற்றியதாகத் திருப்தியடைந்தார். தெய்வீக அமீனா மெதுவாக அங்கிருந்து விலகி மறைந்தாள்.)

அமீனா : (மழமழப்பான பாறை மேல் அமர்ந்தாள். நசீப்பிடம் பேசலானாள்) கடவுளின் நாற்காலிகள் அதோ உள்ளன. அமருங்கள். (நசீப் அருகிலேயே உட்கார்ந்தார்; செயினும் அதே போல் அமர்ந்தார். அமீனா மேலும் நசீபுடன் பேச்சைத் தொடர்ந்தாள்.) உங்கள் கண்களிலே கடவுளின் உண்மையான பேரொளியைக் காண்கின்றோம். யார் கடவுளின் உண்மை ஒளியைப் பார்க்கின்றார் களோ அவர்கள் தான் எங்கள் உள்ளத்தில் பொதிந்துள்ள உண்மை நிலையைக் காண் பார்கள். நீங்கள் கபடமற்றவர்கள்; உண்மையான வர்கள்; நீங்கள் உண்மையையே விரும்பி நேசிக் கின்றீர்கள். ஆகவே உண்மையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆசைப்படு கின்றீர்கள். உங்களிடம் பேசுவதற்கு வார்த்தைகள் இருப்பின் கேளுங்கள். நாங்கள் உண்மையான மறுமொழி சொல்கின்றோம்.

நசீப் : மக்கள் கூட்டத்தினரிடையே விவாதிக்கப் படும் முக்கியமான உட்பொருளாய் உள்ள சங்கதி பற்றி தங்களைக் கேட்டறிய வந்தேன். உங்கள் முன் நான் நின்று என்னையே நான் உணர்ந்த பொழுது, வாழ்க்கையின் பொருள்

என்ன என்பதை முழுமை யாகவும் பெரிய அளவிலும் உணர்ந்தேன்; புரிந்து கொண்டேன். உண்மையைத் தெரிந்தேன்; கடவுளை அறிந்தேன்; என்னையே நான் தெளிந்தேன். இப்போது மற்ற எல்லாம் முக்கிய மில்லை. ஓர் மீன் பிடிக்கும் வலைஞன் கடலிலே தன் வலையை வீசி, ஒருநாள் உணவிற்குத் தேவையான மீன்களைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் போது வலையை இழுக்க, அதிலே விலை மதிக்க முடியாத முத்துக் குவியல் இருக்கக் கண்டால் எவ்வளவு களிப்படைவான்!

அமீனா : இராம்-கம்பீரத் தூண்கள் நிறைந்த நகரில் நுழைந்ததை நீங்கள் கேள்விப்பட்டதை, உங்கள் இதயத்தில் மேலோங்கி நிற்பதைக் காண்கின்றேன். இப்போது நீங்கள் மேலும் அப் பொன் நகரைப் பற்றி அறிய ஆசைப்படுவதை, கேட்க விரும்புவதை உணர்கின்றேன்.

நசீப் : (வெட்கப்பட்டார். இருப்பினும் கேட்பதற்கு ஆழ்ந்த ஆர்வம் காட்டினார்.) என் குழந்தைப் பருவத்தில் இருந்தே இராம்-கம்பீரத் தூண்கள் நிறைந்த பெருநகரின் பெயர் என் கனவு களிலும் என்னைத் தழுவியது; என் எண்ணங் களையே மென்று விழுங்கியது; அர்த்தம் பொதிந்த மறைவான, பிரம்மாண்டமான முக்கியத்துவம் என் இதயத்திலே பெரும் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தது.

அமீனா : (தலையை நிமிர்த்தி, கண்களை மூடி நசீபிடம் பக்திபூர்மாய்ப் பேசினாள். அப்பேச்சுகள் அவளுடைய இதய வெளியிலிருந்து வெளிப் படுவது போலிருந்தது.) ஆம். நாங்கள் அந்தப் பொன்னகரை அடைந்தோம்; உள்ளே நுழைந்தோம்; எங்கள் ஆத்மாவெல்லாம்

அதன் இரகசியங்கள் நிறைந்தன. சில காலமே அங்குப் பயணம் செய்தோம். எங்கள் கைகளி லெல்லாம் மாணிக்கமும் முத்தும் பவளமும் நிறைந்தன; காதுகளில் இன்னிசை நிரம்பி வழிந்தது; கண்கள் அழகான காட்சிகளைக் கண்டு வியப்படைந்தன.

நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் களிப் புற்றதையும் எவர் சந்தேகிக்கின்றார்களோ அவர்கள் கடவுளுக்கும் மனித இனத்திற்கும் எதிரே, தங்களையே நம்பாமல் சந்தேகிக் கின்றார்கள்.

நசீப் : (மெதுவாக, கஷ்டப்பட்டு, பணிவாக) நான் ஒரு சிறு குழந்தை; தவழ்ந்து, தள்ளாடி, மழலை மொழி பேசி எண்ணியதை வெளிப் படுத்த முடிய வில்லை. நீங்கள் மேலும் தயவு செய்து எனக்கு எல்லாவற்றையும் விளக்கு வீர்களா? நான் பல கேள்விகள் கேட்பதைத் தயவு செய்து மன்னிக்கவும்.

அமீனா : நீங்கள் விரும்பிவதை யெல்லாம் கேளுங்கள்; கடவுள் உண்மையை அறியப் பல கதவுகளை வைத்திருக்கின்றார்; நம்பிக்கை கொண்டு யாரெல்லாம் கதவுகளைத் தட்டுகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் கடவுள் கதவுகளைத் திறக்கின்றார்.

நசீப் : நீங்கள் இராம்-கம்பீரத்தூண்கள் நிறை மாநகரை அடைந்து உள்ளே நுழையும்போது உங்கள் உடலால் நுழைந்தீர்களா? அல்லது ஆவியாய் மாறி நுழைந்தீர்களா? இந்தப் பொன்னகரம் உலகில் கிடைக்கும் மின்னிப் பளபளக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு கட்டப்பட்டதா? உலகில் உள்ள ஓர் குறிப்பிட்ட இடத்தில் நிர்மாணிக்கப்பட்டதா? அல்லது இது ஓர் கற்பனை நகரமா? அன்றி இது

ஓர் தெய்வீக ஆவியுலகமா? கடவுளின் தீர்க்க தரிசிகள் மட்டும் தன்னையே மறந்த மன நிலையில் அடையும் திருநகரா? எல்லாம் வல்ல இறைவன், அழி வில்லாத, முடிவற்ற தன்மை எனும் திரையைத் தீர்ககதரிசி களின் ஆத்மாவின் மேல் போர்த்தும் போது சேரும் பொன்னகரமா?

அமீனா : உலகில் உள்ள எல்லாம், பார்க்க இயலாததும் காண முடிவதும் எல்லாம் தெய்வீக மானவையே! நான் பொன்னகரில் என் உடலுடன்தான் நுழைந்தேன். இந்த உடலே என் மிகப்பெரிய ஆவியின், ஆத்ம சக்தியின் உலகியல் வெளிப்பாடு தானே; தெள்ளத் தெளிய தெரிவிப்பதுதானே! இந்த உடம்பு என்பது என்ன? எல்லோரும் தங்கள் ஆத்மாவைப் பாதுகாப்பாக வைப்பதற்கான பெட்டகம் தானே! இந்த உடம்பும் நிலையான தல்ல; தற்காலிகமானதே! நான் இராம் நகருள் நுழையும்போது என் உடம்பை என் ஆத்மாவி னுள் மறைத்து வைத்துக்கொண்டு நுழைந்தேன். ஏனெனில், இந்தப் பூமியின் மேல் இருக்கும் போது உடலும் ஆவியும் எப்போதும் இருக்கும் ஒன்றுதானே! எவன் ஒருவன், உடம்பையும் உயிரையும் பிரிப்பதற்காக, வெட்டித் துண்டாட முயற்சி செய்கின்றானோ, அல்லது ஆத்மாவை உடம்பிலிருந்து பிளக்க முயல் கின்றானோ அவன் தன் இதயத்தை, உண்மை யிலிருந்து விலகிச் செல்ல ஏவுகின்றான். மலரும் அதன் நறுமணமும் ஒன்றே! குருட னுக்கு மலரின் அழகும் தெரியாது, வண்ணமும் காண இயலாது. அவன் என்ன நினைப்பான்? மலர் என்பது நறுமணத்தை மட்டும் பரந்த ஆகாய வெளியிலே பரப்புகின்றது என்றுதான் நினைப்பான். மூக்கடைப்பு ஏற்பட்டுள்ள

ஒருவன் என்ன நினைப்பான்? மலர்கள் என்பன அழகான வண்ணங்களும், கவரும் அமைப்பும், ஓவியமும் கொண்டது என்று தான் நம்புவான். மலர்களுக்கு உள்ள நறுமணம் பற்றி உணர முடியாது.

நசீப் : அப்படியானால, இராம்-கம்பீர தூண்கள் நிறைந்த நகர் என்பது ஓர் கற்பனைநகரா? மனத்தளவில் நிர்மாணமானதா?

அமீனா : (தயை நிறைந்தவளாய்) காலமும் இடமும் ஆத்மார்த்த நிலையே; நாம் பார்ப்பதும கேட்பதும் தெய்வீகமானவையே; நீ கண்களை மூடிக்கொண்டால் உன் உள் மனத்தால் எல்லா வற்றையும் அடி ஆழம் வரை துருவி நோக்குவாய்; இந்த உலகத்தையும் காண முடியும்; மண் ணுலகில் இருப்பதும் ஆகாய மண்டலத்தில் வாழ்வதும் அழிவற்ற, முடிவற்ற, எப்போதும் நிலைத்திருப்பவையு மான எல்லாம் தெரியும்; புரியும்.

உலகின் இயக்கம், தேவையான சட்டதிட்டம், நியதி, முன் எச்சரிக்கைகள் எல்லாம் உனக்கு பழக்கப்பட்டுவிடும். உலகம் எவ்வளவு பெருமையும் உயர்வும் உள்ளது என்பதைத் தெரிந்து அறிந்து புரிந்து கொள்வாய். உலகம், அருகாமைக்கு அப்பாலும் அது தனதாக்கிக் கொண்டிருக்கும் பெருமையை நீ உணர்வாய். ஆம்... நீ கண்களை மூடிக்கொண்டு, உன் இதயத்தைத் திறந்து, உன் உள்ளுணர்வால்,. ஞானத்தால் அறியும் சக்தியால் இந்த உலகத்தின், பிரபஞ்சத்தின், பேருலகின் ஆரம்பத்தையும் முடிவையும் கண்டு தெளிவாய். எது ஆரம்பமாகின்றதோ அதுவே முடிவாகவும் அமையும்; எது முடிவா கின்றதோ அதுவே கட்டாயம் ஆரம்பமாகவும் அமையும்.

நசீப் : ஒவ்வொரு மனிதனாலும் கண்களை மூடிக் கொண்டு வாழ்க்கையின் உண்மையை, ஆடையால் மறைக்கப்படாத உண்மையை, உயிர் வாழ்க்கையை, நிலைத்த தன்மையைப் பார்க்கவும் உணரவும் முடியுமா?

அமீனா : கடவுள் மனிதனுக்கு நம்பிக்கையையும், நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பையும் ஏற்கும் பெரும் சக்தியைக் கொடுத்திருக்கின்றார். அந்த நம்பிக்கை அவன் கண்களின் மேல் மூடி மறைத் திருக்கும் திரையை நீங்கி அவன் விரும்புவதை, வேண்டுவதை அடையும் சக்தியை அளிக்கின்றது. கடைசியாக அவன் தன்னையே காண்கின்றான்; உணர்கின்றான்; சுயதரிசனம்.

எவன் உண்மையான தன்னையே காண் கின்றானோ அவன் கற்பனை அற்ற வாழ்க்கையின் உண்மையைத்தானே காண் கின்றான். தனக் காகவும், மக்களினத்திற் காகவும், எல்லாவற்றிற் காகவும் உண்மையைக் காண்கின்றான்.

நசீப் : (தன் இருகைகளையும் தன் வயிற்றின் மேல் வைத்துக்கொண்டு) அப்படியானால் நான் பார்க்கும், கேட்கும், தொடும், நினைக்கும் எல்லாம், இப்பிரபஞ்சத்தில் பேருலகில் உள்ள எல்லாம் என் இதயத்திலேயே, இங்கேயே இருக்கின்றதென்கின்றீர்களா?

அமீனா : இந்த மிகப்பெரிய பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் உன்னிலேயே இருக் கின்றன; உன்னுடனேயே உள்ளன; உனக்காகவே படைக்கப் பட்டுள்ளன.

நசீப் : அப்படியானால் நான் உண்மையாகவே சொல்ல முடியும், இராம்-கம்பீரத்தூண்களால் ஆன திருநகர்-வெகுதூரத்தில் இல்லை; அது என் னுள்ளிலேயே இருக்கிறது; உலகப்

பொருளே நசீப் ரயீமீ ஆக உள்ளது. நசீப் ரயிமீயாக நிலைத் திருக்கின்றது.

அமீனா : உலகில் தோன்றியுள்ள பொருளெல்லாம் உன்னிலேயே நிலைத்திருக்கின்றன. உன்னில் இருக்கும் எல்லா பொருள்களும் உலகில்- உலகத் தோற்றத்தில்-இருக்கின்றன. உனக்கும் உன் அருகில் இருக்கும் பொருளுக்கும் இடையே கரையும் இல்லை, தடுப்பும் இல்லை, வரப்பும் இல்லை. உனக்கும் தூரத்தில் இருக்கும் பொருளுக்கும் இடையே தூரமும் இல்லை; இடைவெளியுமில்லை. எல்லாப் பொருள்களும் தாழ்ந்ததிலிருந்து உயர்ந்தது வரை, சிறியது முதல் பெரியது வரை எல்லாம் உன்னுள்ளேயே சமமாக வேற்றுமை யின்றி ஒன்றி இருக்கின்றன. ஒரு அணுவில் இந்தப் பூமியில் உள்ள எல்லா மூலப் பெருள் களும் இருப்பதைக் காண்பாய்! உன் உள்ளத்தில் ஏற்படும் ஒரு சலனம், ஒரு இடப் பெயர்ச்சியை, உலகில் உள்ள உயிர் வாழ்ந் திருத்தலின் சட்டங்கள் அனைத்திலும் காண்பாய். ஒரு துளி தண்ணீரிலே, முடிவற்ற பெருங்கடலின் இரகசியங்கள் அனைத்தையும் காண்பாய்! உன்னில் ஒரே ஒரு தோற்றத்தில் இந்த உலகில் உள்ள எல்லா சிருஷ்டியையும் காண்பாய்.

நசீப் : (இந்த பேச்சின் பரப்பையும் ஆழத்தையும் உணர்ந்து புளகாங்கிதம் அடைந்தார். சிறிது இடை வெளிக்குப் பிறகு அமீனா கூறிய எல்லா வற்றையும் புரிந்து தெரிந்து கொண்ட திருப்தி யுடன்) நீங்கள், 'ராபி எல் காலி' பாலை வனத்தின் நடுப்பகுதியை அடையப் பல நாட்கள் பயணம் செய்தீர்கள் என்று சொன்னார்கள். உங்கள் தகப்பனாரின் பரிசுத்த ஆவி தங்களை வழி நடத்திச் சென்று பல

உண்மைகளை வெளிப் படுத்தி, அலைந்து திரிந்த போதெல்லாம் பாதுகாத்து, கடைசியாகப் பொன்னகரை அடைய வழிகாட்டியது என்றனர்.

யாராவது இந்த பொன்னகரை அடைய ஆவல் கொண்டால், நீங்கள் அந்தச் சமயத்தில் தெய்விக ஆவிக்கு ஆட்பட்டிருந்தது போலவே இருக்க வேண்டுமா? உங்களுக்கு இருந்த பேரறிவு- ஞானம்- அவர்களிடம் இருக்க வேண்டுமா? தாங்கள் பார்வை இட்ட அந்த வானுலக- தேவலோக- நகரில் நுழைய, தெய்வீக ஆத்மாவும் ஞானமும் வேண்டுமா? அவசியமா?

அமீனா: நாங்கள் பெரிய பாலைவனத்தை நடந்து கடந்தோம்; பசிப்பிணியின் கொடுமையாலும் தாகத் தவிப்பாலும் பைத்தியமாகியும், பகலெல்லாம் பயமும், இரவிலே பெரும் திகிலும், முடிவின் மையின் பயங்கர மௌனமும் எல்லாம் அனுபவித்த பிறகே பொன்னகரின் மதில் சுவர்களைக் கண்டோம். ஆனால், கடவுளின் இருப்பிடத்தை ஒரு முழம்கூட நடக்காமல் அடைந்தவர்கள், எங்களுக்கு முன்னே போய்ச் சேர்ந்தவர்கள் பலர். அவர்கள் தங்கள் உடலையோ, ஆத்மாவையோ வருத்தி வேதனைக்குள்ளாக்காமல் கடவுளின் இருப்பிடத்தை ஒரு முழம்கூட நடக்காமல் அடைந்தவர்கள். எங்களுக்கு முன்னே போய்ச் சேர்ந்தவர்கள் பலர். அவர்கள் தங்கள் உடலையோ, ஆத்மாவையோ வருத்தி வேதனைக்குள்ளாக்காமல் கடவுளின் பேரழகையும், பேரொளியையும் கண்டுகளித்தார்கள். உண்மையாக நான் உங்களுக்குச் சொல்லுவேன்; புனித நகரை அடைந்து பார்த்தவர்கள் பலர் தாங்கள் பிறந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்லவில்லை. (அமீனா-தெய்வீக அமீனா-பேச்சை நிறுத்தி,

கொஞ்ச நேரம் பேசாமல் அமைதியாக இருந்தாள்) இலை உதிர் காலம் தூவும் ஒவ்வொரு விதையும் பூமியின் இதயத்திலே ஆழ்ந்துபடிகின்றது; ஒவ்வொரு விதையின் ஓடுகளும் வெவ்வேறு விதமாகப் பிரிந்து உடைந்து பின் விதையின் கருவிலிருந்து இலைகள் தளிர்க்கின்றன; பூக்கள் மலர் கின்றன; காய்க்கின்றன. பழுக்கின்றன. இந்த வளர்ச்சி மாற்றம் எந்த முறை யிலே, பாங்கிலே நிகழ்கின்றதோ, அதை யெல்லாம் பொருட் படுத்தாமல் அந்த மரங்களும் செடிகளும் பயிர் களும் ஒரு நீண்ட, தனிப்பட்ட புண்ணிய யாத்திரையை மேற்கொள்கின்றன. சூரியனின் முகத்தெதிரே உயர்ந்து நிற்பது ஒன்றே அதன் சேவை மனப்பாங்கு; லட்சிய யாத்திரை.

செயின்: (முன்னும் பின்னும் நளினமாகச் சாய்ந்தாடு கின்றார்; தெய்வீக அமீனாவின் உபதேசம் உள்ளத்தைக் கவர்ந்து ஆழப்பதிய, ஒரு உயர்ந்த பேருலகில் ஆழ்ந்து திளைத்தார்; உணர்ச்சி வயப்பட்ட குரலிலே பயபக்தியுடன் தொழுகை செய்து கூவுகின்றார்) கடவுள் மிகப் பெரியவர்! இறைவன் இணையற்றவர்!

நம்முடைய தேவைகளை நன்கு அறிந்த, கருணையே வடிவான அல்லாவைத்தவிர வேறு இறைவனே இல்லை!

அமீனா: அல்லாதான் மிகப்பெரியவர்... அல்லாவைத் தவிர வேறு கடவுளே கிடையாது... அல்லா தவிர உலகில் ஏதும் இல்லை.

செயின்: (தெய்வீக அமீனா கூறிய சொற்களை அப்படியே திரும்பச் சொல்கிறார்; மெல்லக் கேட்கும்படி முணுமுணுக்கின்றார்; உடல் நடுங்குகின்றது. தீவிர ஆசையுடன் கூறு கின்றார்)

நசீப் : (தெய்வீக அமீனாவை கனவிலே காண்பது போல் கூர்ந்து பார்க்கின்றார். பின்பு பலமிக்க அடங்காத குரலிலே கூறுகின்றார்)

கடவுளைத் தவிர வேறு கடவுளே இல்லை.

அமீனா : (ஆச்சரியமடைகின்றாள்) அல்லாவைத் தவிர வேறு கடவுளே இல்லை... அல்லாவைத் தவிர வேறு பொருள்களே இல்லை. நீங்கள் இந்தச் சொற்களைக் கூறிவிட்டுக்கூட ஒரு கிறித்துவ னாகவே இருக்கலாம். கடவுள் நல்ல தன்மையே உருவானவர்; வார்த்தைகளிலோ, பெயர்களிலோ பாகுபாடு இல்லை என்பதை நன்கு புரிந்தவர். கடவுள் தன் ஆசீர்வாதங் களை மறுப்பாரா? முழுமையை அடைய வேறு வேறு மார்க்கங் களைப் பின்பற்றுவோரைக் கடவுள் ஒதுக்கு வாரா? அப்படியானால் உலகில் ஒரு மனிதன் கூட கடவுளுக்குப் பூஜை செய்யமாட்டான்; தொழ மாட்டான்; ஆராதிக்க மாட்டான்.

நசீப் : (தலைகுனிந்து, கண்களை மூடி, தெய்வீக அமீனாவின் தொழுகையை-அல்லாவின் வணக்கத்தை - அப்படியே ஒப்பிக்கின்றார். தலை நிமிர்ந்து சொல்கின்றார்) கடவுள்- அவரை அடைய உண்மையான வழியைக் காட்டு கின்றார்; அக்கடவுளை நான் வணங்கு கின்றேன். நான் தொடர்ந்து தொழுகையைக் கடவுளுக்குக் கூறுவேன்; என் வாழ்க்கை முடியும் வரை வணங்குவேன்; நான் உண்மையைத் தேடி அலைகின்றேன். என் கடவுள் வணக்கம் எல்லாம் அந்தக் கடவுளுக்கே; இறைவனுக்கே! அவர் எங்கிருந் தாலும் சரியே; அவர் எப்படி இருந்தாலும் சரியே; எந்தப் பெயரிட்டு அழைக்கப் பட்டாலும் சரியே- நான் கடவுளை நேசிக் கின்றேன்; காதலிக்கின்றேன்; வணங்கு

கின்றேன்; வாழ்த்து கின்றேன்...என் வாழ் நாள் முழுவதும் நான் கடவுளைக் காதலிப்பேன்!

அமீனா : உங்கள் வாழ்க்கைக்கு முடிவே இல்லை. நீங்கள் எப்போதும் எங்கும் வாழ்வீர்கள்.

நசீப் : தெய்வீக அமீனாவே! என் உடம்பே பல அணுக்களின் சேர்க்கையால் ஆனது. நான் உலகில் உயிர் வாழும் வரை இந்த நானும் என்னுடன் இருக்கும் என்பதை அறிவேன். ஆனால் என் எண்ணங்களும் சிந்தனைகளும் சேர்ந்த அந்த நான் என அழைக்கும் நானும் அழியாமல் உடன் இருக்குமா?

மங்கலான, புதிய எழுச்சி, ஒளியை ஆடையாக அணிந்து தூங்கும் காலையும் நிலையாக இருக்குமா? நம் நம்பிக்கைகளும் ஆசைகளும், இன்பமும் துன்பமும் உடன் இருக்குமா? நடுங்கும் கற்பனைகளும் கனவுகளும் என் தூக்கத்தைக் கெடுத்துத் தொல்லை கொடுக் கின்றனவே; உண்மையின் வெளிச்சத்திலே பிரகாசிக் கின்றனவே இவை அனைத்தும் அழியாமல் நிலைத்து என்னுடன் இருக்குமா?

அமீனா : (வான் நோக்கிக் கண்களை உயர்த்தி, பரந்த வான வெளியிலே எதையோ அடைவது போல் நோக்கினாள். மிகவும் தெளிவான, பலமான அழுத்தமான குரலில் பேச்சைத் தொடர்ந்தாள்) உலகில் உள்ள பொருள் அனைத்தும் என்றும் நிலைத்திருக்கும். உயிர் வாழ்ந்திருத்தல் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதே முடிவின்மை என்பதற்கு சாட்சி; அதுவே நிருபணம். ஆனால் நம்மை நாமே உணர்ந்து கொள்ளுதல்-அதாவது முழுமையான ஞானம்- பேரறிவின் தெளிவு- இல்லையென்றால் மனிதனால் நிலைத்திருத்தல் இருக்கின்றதா, இல்லையா என்பதே தெரியாது. முடி வின்மையின் நிலைத்த தன்மை மாற்றப்படு

மானால் அது இன்னும் அழகாக மாற வேண்டும். அது மறையுமானால், அதுவே மறுபடியும் இன்னும் கம்பீரமான தோற்றத் துடன் திரும்பி வர வேண்டும். அது உறங்கு மானால், அதன் கனவிலே இன்னும் சிறப்பான எழுச்சி கனவாக உதிக்க வேண்டும்.

அது ஒவ்வொரு சிறப்பாகவும் உயர்வாகவும் பெரிதாகவும் தோன்றும். நான் மிகவும் பரிதாபப்படுகின்றேன். யாரைக் கண்டு? யார் மூலப்பொருள்களின் நிலைத்த தன்மையை ஒப்புக்கொள்கின்றார்களோ அவர்களைக் கண்டு பரிதாப்படுகின்றேன். கண்களும் மூலப் பொருளால் ஆனதுதானே! அதே நேரத்தில் கண் களை ஒரு சாதனமாகக் கொண்டு, பார்க்கும் பொருள்களை, பிம்பங்களைக் கொண்டுள்ள முடிவின்மை யையே சந்தேகிக்கின்றான்.

வாழ்க்கையை இரண்டு கூறுகளாகப் பிரிக்கும் மனிதனைக் கண்டு மனங்கசிந்து பரிதாபப்படு கின்றேன். அதே சமயத்தில் ஒரு பகுதியிலே நம்பிக்கை வைத்தும், மற்றப்பகுதியைச் சந்தேகித்தும் வாழ்பவனைக் கண்டு பரிதாபப்படு கின்றேன்.

சூரியனின் ஒளி படர்ந்து பிரகாசிக்கும் மலையையும் சமவெளியையும் முறைத்துப் பார்க்கும் மனிதனைக் கண்டு கவலைகொள் கின்றேன். மெல்லிய கிளைகளினூடே, தென்றல், மெல்லிய பாட்டு பாடுவதைக் கேட் கின்றான்; மல்லிகைமலரின் நறுமணத்தை முகர்ந்து களிக் கின்றான்; அவன் தனக் குள்ளவே சொல்லிக் கொள்கின்றான்: ''இல்லை... நான் பார்ப்பதும், கேட்பதும் வேகமாய் மறைந்துவிடும்; நான் உணர்வதும் அறிந்ததும் அழிந்துபோகும்!'' இப்படிப்பட்ட ஓர் தாழ்ந்த ஆத்மா, பயபக்தி யுடன் பார்த்தும்

சிந்தித்தும், அவனுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களைக்கண்டும், அதன் நிலைத்த தன்மையை-சாசுவதம் என்பதை மறுக் கின்றானோ அவன் வானவெளியிலே மறையும் ஆவிபோல் நிலைத்துவிடுவான். ஏனெனில் அவன் இருட்டைத் தேடி அலைகின்றான்; உண்மைக்கு, பின் முதுகைக் காட்டுகின்றான். வீணாக அவன் ஓர் வாழும் ஆத்மா! அதன் நிலைத்த தன்மையையே மறுக்கின்றான். கடவுளால் படைக்கப்பட்டு இருக்கும் மற்றப் பொருள்களையும் அவன் வெறுக்கின்றான்.

நசீப் : (உணர்ச்சிவயப்பட்டு) தெய்வீக அமீனாவே நான் நிலைத்து இருக்கும் என்னையே நம்பு கின்றேன். உங்களுடைய அறிவுரைகளைக் கேட்டும் அவற்றை நம்பாமல் இருப்பார் களானால் அவர்கள் மனிதர்கள் அல்ல; கடினமான பாறையை விட இறுகிய வர்கள்தான்!

அமீனா : கடவுள் ஒவ்வொரு ஆத்மாவிலும் அவர்களை வழிகாட்டி நடத்திச் செல்லப் பேரொளியை வைத்திருக்கின்றார். ஆனால் மனிதன் தன்னை விட்டு வெளியே இருக்கும் உயிர்களைக்கண்டு கொள்ளப் போராடுகின்றான்; அவன் தேடி அலையும் உயிர், தன் உள்ளேயே இருப்பது தெரியாமல் தவிக்கின்றான்.

நசீப் : நம் உடம்பை விட்டு வெளியே ஏதாவது பேரொளி உள்ளதா? அதைக்கொண்டே நம்முள் ஆழமாக இருப்பதை அறியும் வழியில் ஒளிவிளக் கேற்றி வைக்க இயலுமா? நமக்கே சொந்தமான சக்தி நம்முடைய ஆத்மாவை விழிப்புறச் செய்யுமா? நம்முள் வாழும் மறதியை விழித் தெழச் செய்யும் சக்தியைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியுமா? அழிவற்ற நிலையான ஞானத்தை அடைய

வழிகாட்ட முடியுமா? (சிறிது நேரம் மௌன மாக இருந்தார்; மேலும் தொடர்ந்து கேட்க பயப்பட்டாரோ என்னவோ! பிறகு தன்னையே சுதாரித்து, தயக்கத்தை விலக்கி விட்டு) உங்க ளுடைய தகப்பனாரின் ஆத்மா, மண்ணுலகில் ஆத்மா சிறைப்பட்டிருப்பதின் இரகசியத்தை உங்களுக்கு வெளிப்படுத்தியதா?

அமீனா : காலியாக உள்ள வீட்டின்கதவுகளை வழிப் போக்கன் தட்டுவதால் லாபமே இல்லை; வீண் தான். கதவு எப்படித் திறக்கும்? மனிதன் வாய் மூடி ஊமையாய் நிற்கின்றான்; அவன் தனக் குள்ளேயே இருக்கும் நிலைத்தலற்ற தன்மைக்கும், சுற்றச் சார்பில் உள்ள உண்மைக்கும் இடையே நிற்கின்றான். நம் முன்னேயே இருக்கும் ஒன்றை நாம் வைத்துக் கொள்ள வில்லையானால் நம் சுற்றச் சார்பில் உள்ள எந்தப் பொருளை நாம் நமதாக்கிக் கொள்ளமுடியும்? என் தகப்பனாரின் ஆத்மா என்னை, என் ஆத்மா அவருடைய ஆத்மாவைக் கூவி அழைத்தபோது கூப்பிட்டது. என் உள்ளே உள்ள ஞானம்-பேரறிவிற்கு-ஏற்கெனவே தெரிந்ததைத்தான் என் வெளிப்புறப் பேரறிவிற்கு-ஞானத்திற்கு-விரித்துக் காட்டியது.

ஆகவே, கபடமின்மை, நேர்மை, எளிமையாக எண்ணிப்பார்க்கும்போது, என்னுள்ளே தோன்றிய பசியும் தாகமும்தான் நான் உணவும், நீரும பெற- சுற்றச் சார்பிலிருந்து பெற்றுக் கொள்ள காரணமாய் அமைந்தன. என்னுள்ளே அன்பும் ஏக்கமும் தோன்றவில்லையானால், நான் பொன்னகரில் காதலையும். அன்பையும், விரும்பியவற்றையும், ஏங்கியதையும் பெற் றிருக்க முடியாது! உண்மை தானே!

நசீப் : ஒவ்வொரு மனிதனும் தன் தசைநாரிலிருந்து

நூலை நூற்று, தன் அன்பையும் ஏக்கத்தையும் தன்னுடைய ஆத்மாவிற்கும் இறந்தவரின் ஆத்மாவிற்கும் இடையே ஒட்டவைக்க முடியுமா? யாராவது பெரும்பேறு பெற்ற மக்கள், ஆவிகளுடன் பேசும் சக்தி பெற்ற வர்கள் இருக்கின்றார்களா? அவர்களுடைய விருப்பமும் காரண காரியமும் புரியுமா?

அமீனா : பூவுலகில் வாழும் மக்களுக்கும் முடிவின்மை யிலே வாழும் மக்களுக்கும் இடையே தொடர்பும் நிலையான போக்குவரத்தும் இருக் கின்றன. இது கண்ணுக்குப் புலப்படாத பெரிய சக்தியால் நிகழ்கின்றது; எண்ணத்தால் ஈடேறு கிறது. பல சமயங் களில் தனி மனிதன், தன் எண்ணத்தின் பயனாகப் பிறந்தது என்று நம்பி, ஒரு செயலைச் செய்வான். அந்த எண்ணம் தன் மனதின் கட்டளை என நினைப்பான். ஆனால் உண்மையில் அவன் அக்காரியத்தைச் செய்ய, அளவறிந்து செயல்பட வைத்து, வழிநடத்திச் செல்வது எது? பலப்பல பெரியோர்கள் எவ்வாறு பெரும் புகழ் பெற்றார்கள்? தங்களை முழுமையாக ஆத்மாவின் கட்டளைக்கு அடிபணிய வைத்துச் செயல்பட்டதால்தான்; ஒரு கை தேர்ந்த பாடகனின் கைகளிலே எப்படி முழுமையாக வயலின் சரணடைகிறதோ அப்படியே இந்தப் பெரியோர் களும் முழுமை யாக சரணடைந்தனர்.

புனிதமான தெய்வீக உலகிற்கும், பொருள் வயப்பட்ட இப்பூவுலகிற்கும் இடையே ஓர் பாதை இருக்கிறது; அதில் நாம் தூக்க மயக்கத் துடன் மெய்ம்மறந்து நடக்கின்றோம். அதன் வலிமை நமக்குத் தெரிவதில்லை; அது நம்மை அடைகின்றது. நாம் நம்மையேஉணரும் போது நமக்குத் தெரிகின்றது. நல்ல செயல்கள், நல்ல சொற்கள், பேரழகு இவற்றைத் தினசரி வாழ்க்கையிலே விளைவிக்கக்கூடிய செடி

களை வளர்க்கும் விதைகளைப் பத்திரமாகப் பூமியில் ஊன்றுவ தற்காக, நம் கைகளிலே விதை களை வாரிக்கொண்டு வந்திருக்கின்றோம் என்பது தெரிகிறது.

நம் வாழ்க்கைக்கும் இறந்து போனவர்களின் வாழ்க்கைக்கும் இடையே அந்தப் பாதை இல்லாமல் இருந்தால் மக்களுக்கிடையே கலைஞனோ, அறிஞனோ தீர்கக்தரிசியோ தோன்ற முடியாது. (அமீனா தன் குரலைத் தாழ்த்தி, நிர்ப்பந்திக்கும் முணுமுணுப்பாய் மேலும் தொடர்கின்றாள்) நான் உண்மையாய் உனக்குக் கூறுகின்றேன்; காலத்தின் வெளிப்பாடு இதை நிரூபிக்கும். மேல் உலகிற்கும் பூவுல கிற்கும் இணைப்பும், பந்தமும், உறவும் உள்ளன; தாயும் குழந்தையும் பிணைந்து உறவுடன் வாழ வில்லையா அப்படியே நம் உள் மனசாட்சியை ஈர்க்கும் சக்தியுடைய உள்ளுணர்வு மிக்க சுற்றுப் புறச் சூழ்நிலை நம்மைச் சூழ்ந்துள்ளது; நமக்கு உள்ள பேரறிவு, நீதிக்கு முன் னெச்சரிக்கை செய்கிறது; ஒரு சக்தி நம்மி லேயே உள்ள சக்திக்குப் பலமளிக்கிறது.

'நாம் எதைச் சந்தேகிக்கின்றோமோ அதற்குச் சரணடைகின்றோம் என்பதை நம் சந்தேகம் பொய்யாக்குவதில்லை; பலப்படுத்தி அரணாக்கு கின்றது' என்று நான் உனக்குக் கூறுகிறேன்.

நம்மை நாமே திருப்திபடுத்திக் கொள்வதில் அவசரமாகச் செயல்படுகின்றோம் என்பது ஓர் உண்மை; ஆத்மா அதன் நோக்கத்தை அடைய முயல்கிறது; அது முழுமை அடைவதிலிருந்து நம்மைத் திசை திருப்பிவிடாது. ஆத்மா இருப்பதை உணர்ந்து நாம் நம்மை அதனுடன் இணைத்துக் கொள்வது நம் உண்ளுணர்வை மூடி மறைக்காது, உலகத்தின் பார்வையி

லிருந்து நாம் நடப்பதை நிறுத்திவிட்டால்கூட நாம் நடந்து கொண்டே இருக்கின்றோம், அவர்களும் நடந்து கொண்டிருந்தால்...நாம் அசைவற்று நின்றிருந்தால்கூட நாம் அவர் களுடன் அசைந்து கொண்டிருக்கின்றோம், அவர்கள் நகர்வதால்...நாம் நம்மையே மௌன மாக்கிக் கொண்டால்கூட நாம் பேசிக் கொண்டே இருக்கின்றோம், அவர்களுடைய குரலொலி மூலமாக...

அவர்களுடையவிழிப்புணர்வின் செல்வாக்கை நம் தூக்கம் துரத்திவிடாது. அவ்வாறே நம் முடைய விழிப்புணர்வு அவர்களின் கனவு களை நம் கற்பனையிலிருந்து திசை திருப்பி விடாது. ஏனெனில் அவர்களும் நாமும் இரு வேறு உலகில் இருந்தாலும் ஒரு உலகால் அணைத்து இணைக்கப்பட்டுள்ளோம். நாமும் அவர்களும் இரு ஆத்மாக்கள், இருப்பினும் ஒரே ஆத்மாவால் மூடி மறைக்கப் பட்டுள்ளோம். நாமும் அவர்களும் இருவேறு நிலையில் வாழ்ப வர்கள்; ஆனால் ஒரு முடிவற்ற, எல்லாம் வல்ல மனசாட்சியால் ஒன்றாக்கப்பட்டுள்ளோம். அந்த மன உணர்வு எல்லாவற்றையும் கடந்து மேலோங்கி நிற்பது. அதற்கு ஆரம்பமும் இல்லை; முடிவும் இல்லை.

நசீப் : (முகத்தில் ஒளிக்கதிர் வீச, தெய்வீக அமீனா வெளிப்படுத்திய பேருண்மைகளை உணர்ந்தும் நினைத்தும் அதே வழியில் சிந்தித்துக் கொண்டும்) அந்த நல்ல நாள் வருமா? மனிதன் தன் விஞ்ஞான அறிவால், அனுபவத்தால் மண்ணுலக வெளிப்படையான செயல்களால் கண்டுபிடிக்க முடியுமா? கடவுளின் மூலமாகத் தான் ஆத்மா விற்குத் தெளிவாகின்றது! கடவுளை நம் இதயம் ஏங்கி, பேராவலுடன் வேண்டுவதால் அறியமுடி

கின்றது. முடிவின்மைக்கு வெளிப்படுத்த, நம் உயர்வான, முன்மாதிரியான நம்மையே நிலை நிறுத்த, மரணத்திற்காக காத்துக்கொண்டிருக்க வேண்டுமா?

இப்போது நாம் மத நம்பிக்கையின் கை விரல் கொண்டு உணரும் இரகசியங்களை எல்லாம் நம்முடைய கைவிரல்களைக் கொண்டே தொட்டு உணரும் நாள் எப்போதாவது வருமா?

அமீனா : ஆம். அந்த நாள் விரைவில் வரும். ஆனால் ஒரு கேள்வியும் கேட்காமல் வெறுமனே பார்ப்பவர்கள் எவ்வளவு அறிவற்ற முட்டாள் களாய் இருக்கின்றார்கள்! தங்களின் ஐம்புலன் களைக்கொண்டே, மனத்தால் மட்டும் உணரக் கூடிய நிலைத்த தன்மையைக் காண் கின்றார்கள்! அவர்கள் நிலைத்த தன்மை (கடவுள்) அவர்களுடைய ஐம்புலன்களக்கும் புலனாகும்வரை அதை நம்பாமல், கேட்ப வர்கள் வற்புறுத்துகின்றார்கள்! நம்பிக்கை என்பது இதயத்தின் உணர்வல்லவா? பார்வை என் கண்களின் உணர்வல்லவா? குயிலின் கீதத்தை மட்டும் கேட்பவன் எவ்வளவு குறுகிய உணர்வுள்ளவன்! அது மரத்தின் கிளைகளின் மேல் பறவை பறப்பதைக் கண்டும், அதன் குரலைக் கேட்டும், அழகைப்பார்த்த பிறகும் கூட அதன் இருத்தலைச் சந்தேகித்து, அதைக் கைகளால் பிடித்துப் பார்த்த பிறகே சந்தேகம் தீர்ந்தவனாவது எவ்வளவு குறுகலான அறிவைக் காட்டுகிறது! கடவுளின் ஒரு பகுதியை உணர்ந்தாலே போது மில்லையா?

உண்மையை-அதன் பேரழகான உண்மை நிலையை- கனாக் காண்பவன் எவ்வளவு விசித்திரமானவன்! பிறகு அதை ஓர் உருவமாக வடித்தெடுக்க முயற்சி செய்து, வெற்றி

பெறாமல் தோற்று, பின்பு தான் கண்ட கனவையே சந்தேகித்து, உண்மையை நிந்தித்து, பழித்துக் கடைசியாகப் பேரழகையே சிதைத்தால் அது எவ்வளவு விசித்திரமானது!

ஒருவன் திட்டமிட்டு, கற்பனை செய்து ஒரு பொருளை அதன் எல்லாக்கோணங்களிலும் வடிவங்களிலும் பார்த்து, அதை முழுமையாக நிரூபிக்க முடியாமல் தவித்து, அதன் மேல் போக்கான அளவுகளும், சொல்லால் நிரூபணங்களும் செய்ய இயலாமல் தோற்று, பின்பு தன் நினைப்பும், சிந்தனையும், கற்பனையும் ஒன்றும் அற்ற காலியான பொருள் என்று ஏங்கினானென்றால், அவன் எப்படிப்பட்ட குருடன்! கண்பார்வை அற்ற கபோதி!

ஆனால் இவன் உண்மையாகச் சிந்தித்துப் பார்த்தால், நடந்தவற்றை எண்ணித் தியானம் செய்தால், வானவெளியிலே பறக்கும் பறவை எவ்வளவு உண்மையானதோ அதே போல் தன் எண்ணங்களும் உண்மையானவை என்று திட்ட வட்டமாக உணர்ந்து கொள்வான். ஆனால் அது இன்னும் நிலையான உருவமாக மாறவில்லை. அந்த எண்ணமே எழுத்தாலும் நிரூபிக்க இயலாது. ஏனெனில், அந்த ஞானம் மிக உயரத்தில் உள்ளது; மிகவும் பரந்து விரிந்துள்ளது; அதை இந்த நேரத்தில் யாராலும் சிறையிட முடியாது; அது ஆத்மாவிலே ஆழமாக ஊன்றப்பட்டுள்ளது; அத உண்மைக்குச் சரணடையச் செய்வது கடினம்!

நசீப் : (நம்பிக்கை கொண்டு இருந்தாலும் மேல் தெரிந்துகொள்ளும் ஆவலுடன்) எல்லாக் கற்பனைகளிலும் உண்மையான உயிர்ப்பிராணி உள்ளதா? எல்லா எண்ணங்களிலும் கற்பனைகளிலும் உண்மையான பேரறிவு-ஞானம்-இருக்கின்றதா?

அமீனா: நிச்சயமாக. ஆத்மாவின் கண்ணாடி அதற்கு எதிரே நிற்காத எதையும் பிரதிபலிக்காது. அப்படி இருக்கும்போது கற்பனை உருவங் களை எப்படி பிரதிபலிக்கும்? அமைதியான ஏரியானது நீர் பரப்பிலே தன் அடி ஆழத்தில் மலையின் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் என்பது இயலாத ஒன்று; முடியவே முடியாது. அந்த நீர் நிலையிலே மரங்களின் நிழலோ, ஏரிக்கு அருகாமையில் இல்லாமல் இருக்கும் மேகக் கூட்டமோ பிரதிபலிக்காது! இல்லாத ஒரு பொருளின் நிழல் பூமியின் மேல் தன் வெளிச்சத்தால் விழும்படி செய்யவும் இயலாது. உண்மையாக உயிர்த்திருந் தால்தான் பார்க்கவும், கேட்கவும், தொட்டு உணரவும் முடியும். ஒரு பொருளை அறிந்திருந் தால்தான் நீ அதை நம்புவாய். உண்மையான நம்பிக்கைவாதி தன் ஆத்மிக பகுத்துணர்வால் காண்கின்றான். மேல்பரப்பை ஆராய்ச்சி செய்து துருவிப் பார்க்கும் ஒருவரால் தன் தலையில் உள்ள கண் களைக் கொண்டு காண முடியாது. அவன் உள் ளுணர்வால், உள்ளதை எண்ணங்களால் தெரிந்துகொள்ள முடியும்; ஆனால் வெளிப் புறத்தைப் பரீட்சை செய்து பார்ப்பவனால் தன் கோரிக்கை மூலம், கற்றுணர்ந்த எண்ணங்கள் மூலம் தெரிந்து கொள்ள முடியாது.

நம்பிக்கை மிக்கவன், தன் ஆழ்ந்த ஐம் புலன்கள் மூலம் பலவிதமான தோற்றங் களையும், மற்றவர் உபயோகித்த தோற்றங் களையும் தன் புனிதமான அறிவால், பழக்க மாகப் பெற்ற உணர்வால் அறிமுகப்படுத்திக் கொள்கின்றான்.

நம்பிக்கை மிக்கவன் தன் ஐம்புலன்களையும் தன்னைச் சுற்றியுள்ள பாதுகாப்புச் சுவர் களாகக் காண்கின்றான். அவன் பாதை மேல் நடக்கும் போது கூறுகின்றான்: ''இந்த

நகரத்திலே வெளியே செல்ல வாயிலே இல்லை; ஆனால் இதனுள் எல்லாம் முழுமை யாக இருக்கிறது.''

(அமீனா எழுந்து நின்று, நடந்து, நசீபை அடைந்து, சிறிது மௌனத்திற்குப் பிறகு சொல் கின்றாள்) நம்பிக்கை மிக்கவன், எல்லாப் பகல் களிலும் எல்லா இரவுகளிலும் வாழ்கின்றான்; ஆனால் நம்பிக்கையற்றவன் சிலமணி நேரமே வாழ்கின்றான்.

எவன் ஒருவன் தன் கைகளைத் தன் முகத் திற்கும் இந்த உலகத்திற்கும் இடையே வைத்துக் கொண்டு, தன் கைகளிலே உள்ள குறுகிய கோடு களை மட்டும் காண்கின்றானோ அவனுடைய வாழ்க்கை எவ்வளவு சிறியது! யார் சூரியனுக்குத் தங்கள் புறமுதுகைத் திருப்பிக் காட்டுகின்றார் களோ அவர்கள் தங்களுக்கே என்ன அநீதி இழைத்துக் கொள் கிறார்கள்! அவர்கள் காண்ப தெல்லாம் தங்க ளுடைடிய நிழலையே! பூமியின் மேல் அவர் களின் உடம்பின் நிழலே படரும்!

நசீப் : (எழுந்து நின்று, போவதற்குத் தயாராகின்றார்) நான் மக்களிடம் இராம்-கம்பீரத்தூண்கள் தூங்கும் மாநகர்-ஓர் கற்பனையில் தோன்றிய தெய்வீக நகர் என்று சொல்லட்டுமா? தெய்வீக அமீனா தன் அன்பாலும், ஏங்கி விரும்பியதாலும் அதன் நம்பிக்கைக் கதவின் வழியாக உள்ளே நுழைந்தார் என்று சொல்லட்டுமா?

அமீனா : சொல்லுங்கள், இராம்-கம்பீரத் தூண்களால் ஆன மாநகர்-ஓர் உண்மையான மாநகர், என்றும் நிலைத்திருக்கின்றது. அதிலே கண் கூடாகத் தெரியும் கடல்கள், மலைகள், காடுகள், பாலை வனங்கள் எல்லாம் உண்மையாக நிலைத்து முடிவின்மையில்

உள்ளன! தெய்வீக அமீனா அதை அடையு முன்பு, பெரிய பாலைவனங்களை நடந்து கடந்து, தாகத்தால் தவித்துத் துன்பப் பட்டு, பசியால் துடித்துச் சித்திரவதை செய்யப் பட்டு, தனிமையின் துயரத்தையும், பயத்தையும் அனுபவித்து முடிவாகப் பொன்னகருள் நுழைந்தாள் என்று கூறுங்கள்!

அந்தப் பொன்னகரம் காலம் எனும் பலவான் களால் நிர்மாணிக்கப்பட்டது; உலகில் உள்ள பளபளக்கும், மின்னும் மூலப் பொருள்களால் கட்டப்பட்டது. அவற்றை மக்களிடமிருந்து மறைத்து வைக்கவில்லை; ஆனால் மக்கள் அதைக் கண்டு திகைத்து நிற்கின்றார்கள்...

அவர்களுக்குச் சொல்லுங்கள், இராம் நகரை அடையுமுன்பு பாதை தவறிவிட்டார்களா? அவர்கள் கரடு முரடான பாதையின் மேல் பழியைச் சுமத்தாமல், அவர்களைஅழைத்துச் சென்ற வழிகாட்டியின் மேல் பழி சொல்லட்டும்!

சொல்லுங்கள், எவன் ஒருவன் தன்னுடைய உண்மை எனும் ஒளி விளக்கை ஏற்றி வழி நடக்க வில்லையானால் அவனால் கட்டாயம் இருண்ட, அடைய முடியாத பாதையைக் காண முடியாது. (அமீனா ஆகாயத்தை நோக்கித் தன் அன்பு பொங்கும் கண்களால் பார்த்தார். அவருடைய முகத்திலிருந்து அமைதியும் இனிமையும் கெப்புளித்து ஒளிமயமாக விளங்கியது)

நசீப் : (மெதுவாக அமீனாவை நெருங்குகின்றார்; தலைகுனிந்து, அவளுடைய கைகளைத் தாங்கி முணுமுணுக்கின்றார்.) மாலை நெருங்கு கின்றது; மக்கள் வசிக்கும் இடத்திற்கு நான் உடனே திரும்ப வேண்டும்; விரைவில் இருட்டு, பாதையைக் கல்வி விழுங்கிவிடும்.

அமீனா : கடவுளின் பேரருளால், ஒளி வெள்ளம் உனக்குப் பாதையில் வெளிச்சத்தைக் காட்டும்.

நசீப் : நீங்கள் என் நடுங்கும் கரங்களில் அளித்த மிகப்பெரிய தீப்பந்தத்தின் பேரொளியில் வழி நடப்பேன்.

அமீனா : நீங்கள் உண்மையின் ஒளியில நடந்து செல்லுங்கள். எந்த பெரும் புயல் காற்றாலும் அந்த பேரொளியை அணைக்க இயலாது. (அமீனா கூர்ந்து, நெடுநேரம் நசீப்பைப் பார்க் கின்றாள். பிறகு கிழக்கு நோக்கிப் பயணமா கின்றார். அடர்ந்த மரங்களுக்கிடையே நடந்து சென்று மறைகின்றாள்)

செயின் : நான் உங்களுடன் மக்கள் வாழும் இடத்திற்குத் துணையாக நடந்து வரட்டுமா?

நசீப் : நீங்கள் உடன் வந்தால் மிகவும் களிப் படைவேன். நீங்கள் தெய்வீக அமீனாவிற்கு மிகவும் அருகில் நெருக்கமாக வாழ்ந்ததாக நம்புகின்றேன். உங்களைக் காண, பெருமை யுடன் பொறாமை கொண்டு என்னுள் சொல்லிக் கொள்கின்றேன். ''நான் உறுதி யாகக் காத்திருக்க வேண்டுமா?''

செயின் : நாம் சூரியனிலிருந்து வெகுதூரத்தில் தங்கி வாழலாம்; ஆனால் சூரியனை நெருங்கி வாழ முடியாது. நான் இங்கு அடிக்கடி வந்து புத்திமதி கேட்கின்றேன்; ஆசீர்வதிக்கப்படு கின்றேன்; பின்பு நான் திருப்தியுடன், நிறை வுடன் திரும்பிச் செல்கின்றேன். (நசீப் குதிரையின் கடிவாளவார் களை அவிழ்த்துக் கொண்டு குதிரையை முன் நடத்தி, செயின் அபீடென் உடன் செல்ல நடந்து கொண்டே சென்றார்.)

(திரை இறங்குகிறது)

○○○

குருடன்

(THE BLIND)

(நாடகம்)

நாடகப் பாத்திரங்கள்

நடிகர்கள் :

1. டேவிட் ரக்பி : குருடன், இசைப்பாடகன், 30 வயது
2. எலன் : குருடனின் மனைவி, வயது 40
3. அன்னா : எலனின் மகள், முன் கணவன் மகள்.
4. கிங்ஸ்டன் : அடுத்த வயலின் சொந்தக்காரன்
5. பைத்தியக்காரன்

நாடக அரங்கம் :

டேவிட் ரக்பியின் வீட்டில் கீழே பெரிய கூடம். அதில் ஒரு நூலகம்.

காலம் :

தை மாதம், இரவு 11 மணி. வெளியில் பனிமழை பொழி கின்றது.

திரை மேலே உயர்கின்றது.

வைத்தியக்காரன் கூடத்தின் மையப்பகுதிக்கு நடந்து சென்று, மேடை மேல் காலடி வைத்து, கணப்புத்தீ அருகே உள்ள நாற்காலியில் அமர்கின்றான். டேவிட் ரக்பியும் அன்னாவும் சோபாவில் உட்கார்ந்து இருக்கின்றனர். அன்னா ஒரு கவிதையைப் படித்துக் கொண்டு இருக்கின்றாள். டேவிட்தான் குருடு ஆயிற்றே. பாடலை உற்றுக் கேட்டுக் கொண்டு இருக்கின்றார். கவிதையைப் படித்து முடித்தவுடன் அன்னா பேசுகின்றாள்.

அன்னா: அப்பா, நீங்கள் பாடுவது போல என்னால் பாட முடியவில்லை. நீங்கள் மிக மிக அழகாக உணர்ச்சி பொங்க பாடுகின்றீர்.

(அப்போது டேவிட் பாடலின் கடைசி இரண்டு மூன்று அடிகளைப் பாடிக்காட்டுகிறார். ஆழ்ந்த மௌனம் நிலவுகின்றது. வெளியே வீசும் குளிர் காற்றின் சீற்றம் கேட்கின்றது)

அப்பா, நான் இன்னும் ஒரு கவிதை படிக்கட்டுமா?

டேவிட்: என் அன்பு மகளே! வேண்டாம். இரவு நேரமாகிவிட்டது! நீ மிகவும் களைத்து விட்டாய்.

அன்னா: அப்பா, எனக்குக் களைப்பே இல்லை. நீங்கள் கேட்கும்படி கவிதை பாடும் போது எனக்குக் களைப்பே ஏற்படுவதில்லை. நான் இன்னும் சிறிது நேரம் இங்கேயே இருந்து படிக்கட்டுமா?

(அப்போது டேவிட் சட்டைப் பையிலிருந்து கடிகாரத்தை எடுத்து, கை விரல்களால் தடவி மணி என்ன ஆயிற்று என்று உணர்கின்றார்.)

டேவிட்: மகளே! காலம் கடந்துவிட்டது. நீ நினைப்பது போல் இல்லை. நீ உடனே படுக்கப்போகா விட்டால் அம்மா உன்னைக் கோபித்துக் கொள்வாள்! என்னையும் கோபிப்பாள்.

அன்னா: அம்மா என்னை இன்னும் சிறு குழந்தை யாகவே நினைக்கின்றாள். நானும் அம்மாவின் வயதே வளர்ந்துவிட்டேன். இது புரிய வில்லையே அம்மாவிற்கு!

டேவிட்: (சிறிது ஆழ்ந்த சிந்தனைக்குப்பின்) ஆமாம்! அப்பாவிற்கும்கூடத்தான்.

அன்னா: அப்பா! உங்களுக்க எல்லாம் புரியும், தெரியும்.

டேவிட்: அன்னா! நான் உன் அப்பாவாகவே இருக்க விரும்புகின்றேன்.

பைத்தியக்காரன் : அவள் (டேவிட்டை) அப்பாவென்று அழைக்கின்றாள். இருப்பினும் டேவிட் அவளுடைய இதயத்தின குழந்தை. ஒவ்வொரு மனிதனும் அவன் நேசிக்கின்ற பெண்மணி யின் குழந்தையே!

அன்னா: (அப்போது அன்னா டேவிட்டின் மேல் கைகளைக் கோர்த்து அணைத்தபடி) நீங்கள் தான் என் அப்பா! சொல்லுங்கள், என் அப்பா என்று சொல்லுங்கள். என் தாயை நீங்கள் மணந்தபோது நான் சிறிய குழந்தை. என் தாயின் முதல் கணவனை எனக்கு ஞாபகமே இல்லை! அதாவது என்னைப் பெற்ற அப்பாவை!

டேவிட்: ஆமாம் ஆமாம்! எனக்கு நன்றாகத் தெரியுமே! நீ நான் பெற்ற மகளாகவே இருக்க விரும்பு கின்றேன். குருடனுக்கு என்றும் ஒரு மகள் அவசியம் தேவை.

அவனுக்கே உரித்தான ஒரு மகள், அவன் காண் பதற்காகவே ஒரு மகள் தேவை. எனக்குக் கவிதை களைப் படித்து விளக்க, என் கை விரல்கள் எழுத்துக்களைத் தடவித் தடவிச் சோர்ந்துவிடும் போது படித்துக்காட்ட ஒரு

மகள் அவசியம். கண்களும் இருளிலே சுழன்று ஓய்ந்துவிடும்.

அன்னா: அப்பா! இப்படிக் கூறுவதால் கட்டாயம் என்னைப் புண்படுத்த மாட்டீர்! இந்த உலகி லேயே நான் உங்களைத்தான் அதிகமாய் நேசிக் கிறேன். உங்களுக்கே தெரியும். நீங்கள்தான் என் இதயம் கவர்ந்த அப்பா என்று. நான் உயிருடன் இருக்கும் வரை உங்களை விட்டுப் பிரிய மாட்டேன். அப்பா உங்களுக்கு நினைவில்லை, போன கோடையிலே நம்மை எல்லாம் மகிழ்வித்த பாடல் :

"நீயே என் கடவுளின் இதயக்குழந்தை
நீங்களே என் உணர்ச்சி வெள்ளம்!
நீங்கள் என் சதையின் சதையுமில்லை
உங்கள் இரத்தத்திலே மாணிக்கச்
செந்நீர் கலந்தோடுகின்றதே!"

அப்பா இந்தப் பாடல் நினைவில்லையா?

டேவிட்: ஆமாம் மகளே! நன்றாக நினைவிருக்கின்றது! (சிறிது நேர மௌனம்)நீ என்னை எவ்வளவு நேசிகக்கின்றாய் என்பதை நன்றாய் அறிவேன். உனக்குத்தான் என்னை முழுமையாகத் தெரியும். நான் குருடனல்லவா! நீதான் மகளே என் கண்கள்.

அன்னா: (சத்தமிட்டு) அப்பா! இல்லையப்பா! நான்தான் உங்களை நேசிக்கின்றேன். நீங்கள்தான் என் தேவை! நீங்கள் ஒருவர்தான் இந்த உலகிலேயே கண்கள் படைத்தவர். மற்றவ ரெல்லாம் குருடர்கள்.

பைத்தியக்காரன் : கழுகும் புழுவும் சந்தித்துப் பேசினால் ஒவ்வொன்றின் பார்வைக்கும் மற்றது குருடாகவே தோன்றும்.

டேவிட்: *நீங்கள் நீடூழி வாழ்க! (சிறிது அமைதி) இனி நாம் மேற்கொண்டு எதுவும் பேச வேண்டாம். நேரமாகி விட்டது. அருகே வாருங்கள். உங்கள் அழகு முகங்களைப் பார்க்கின்றேன். (அன்னா தன் முகத்தைத் திருப்பி அப்பாவைப் பார்த்தாள். அவர் அவள் முகத்தைக் கைகளில் ஏந்தி விரல் களால் மெல்ல முகம் முழுவதும் தடவினார்.)*

அன்னா! நான் குருடன் ஆன பின்பு உன் முகம் ஒன்றைத்தான் பார்க்கின்றேன் என்பது உனக்குத் தெரியுமா? உன் முகம் ஒன்றைத்தான் என் கை விரல்களால் காண்கின்றேன். ஆ! எவ்வளவு அழகான முகம்! (கை விரல்களால் தலை முடியைக் கோதி விடுகின்றார்!) உன் கூந்தல்தான் என்ன அழகு! என்ன மென்மை! எவ்வளவு அடர்த்தி! பொன்நிற முடி! அன்னா, என் கண் களைப் பொன்னிறம் கூச வைக்கின்றதே!

(டேவிட்டும் அன்னாவும் மௌனமானார்கள். டேவிட்டின் கைவிரல்கள் அன்னாவின் பொன்னிற முடிமேல் மெல்லத் தடவிக் கொண்டிருந்தது.)

அன்னா: *அப்பா! நான் உங்களுக்கு ஒரு இரகசியம் சொல்லப் பேகின்றேன்.*

டேவிட்: *சொல்லம்மா? நான் கேட்கின்றேன்.*

அன்னா: *அப்பா, நான் என் கைவிரல்களாலேயே எப்படிப் பார்ப்பது என்று எனக்கு நானே பாடம் படிக்கின்றேன். உங்களுக்குத் தெரியுமா? நான் உங்கள் புத்தகங்களை என் அறைக்கு எடுத்துப் போய்-அது தான் எழுத்துக்கள் மேலே உயர்த்தி அச்சிடப் பட்டுள்ளதே. அதை-விரல்களால் தடவி*

அறிந்து படிக்கின்றேன். விளக்கு வெளிச்சம் இல்லாமல் இருந்தால்கூட என்னால் படிக்க முடியுமே! அம்மாவிடம் சொல்லி விடாதீர்கள்! இதெல்லாம் அம்மாவிற்குப் புரியாது. அப்பா! நான் நீங்கள்தொட்டு உணருவது போல கற்க வேண்டும். உங்களைப் போலவே இருக்க விரும்புகின்றேன். உங்கள் இருண்ட உலகிலே நானும் துணையாக வாழ ஆசைப்படுகின்றேன். அப்பா நான் உங்கள் உலகில் வாழ உங்களுக்குத் தடை ஏதும் இல்லையே?

(சிறிது நேர மௌனம். டேவிட் மிகவும் நெகிழ்ந்து மனம் இளகிப் போனார்.)

டேவிட்: (தன் கைகளால் டேவிட் முகத்தை மூடிக் கொண்டார்) அன்னா, அன்பு மகளே! பேசு! மேலும் பேசு.

அன்னா: அப்பா, முன்பு ஒரு நாள் நான் பார்பாராவின் பிறந்தநாள் விழாவிற்குப் போனேன் இல்லையா! அங்கு என் தோழிகள் 5, 6 பேர் வந்திருந்தார்கள். அப்பா, பார்பாராவிற்கு உங்கள் இசைப் பாடல்கள் என்றால் உயிர், எவ்வளவு நேசிக் கின்றார் தெரியுமா? நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடிப் பல விளையாட்டுக்களை விளையாடினோம். எனக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஒரு புது விளையாட்டைக் காண்பிடித்தேன். ஆனால் அது உண்மையில் விளையாட்டு இல்லை. அது ஏறக்குறைய ஒரு...ஒரு... 'தெய்வ வழிபாடு' போலத்தான்.

(அன்னா சொல்லச் சிறிது தயங்குகிறாள்)

டேவிட்: அன்னா, சொல்லம்மா! நான் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

அன்னா: அப்பா! நான் ஒரு துணியால் கண்களைக் கட்டிக் கொண்டேன். ஒருவர் பின் ஒருவராக எல்லோரை யும் என் அருகில் அமரச் சொன்னேன். அவர் களின் முடி முதல் அடி வரை என் விரல்களால் தொட்டு உணர்ந்து அவர் யார் என்று சரியாகச் சொல்லிவிட்டேன். ஒரு தப்பும் ஆகவில்லை.

டேவிட்: மகளே! என் இதயத்தின் குழந்தையே!

அன்னா: அப்பா! இத்துடன் எல்லாம் முடிந்துவிட வில்லை. மேலும் ஆச்சரியம் பல உள்ளன. அவர்கள் முகத்தை நான் இருளிலே தொட்ட போதெல்லாம் என் உள்ளத்திலே ஏதோ பெரிய உணர்ச்சிகள் உண்டாயின. (அவள் முகத்திலே ஒரு பேரொளி வீசியது) அதற்கு முன்பு எப்போதும உணர்ந்தறியாத அன்பு, பாசம், காதல் என் உள்ளத்தே ஊறின. அந்த என் தோழிகளை இதற்கு முன்பு எப்போதும் நேசிப்பதைவிட ஆயரம் மடங்கு நேசிப்பதாய் உணர்ந்தேன். அவர்களும் என்னை மிகவும் நேசிப்பதாய் மனம் மகிழ்ந்தது. இதெல்லாம் மிகவும் விசித்திரம் இல்லையா? எவ்வளவு இன்பம் தெரியுமா?

(சிறிது நேரம் அமைதி)

அன்று மாலை முதல் முறையாக நீங்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றீர் என்று உணர்ந் தேன். என் உள்ளத்தில் ஏதோ ஒன்று 'பலர் உங்களை அறிவார், அவரெல்லாம் உங்களை நேசிக்கின்றார்' என்று சொல்றிற்று.

என் கண்களைக் கட்டியிருந்த துணியை விலக்கிய பின் என் தோழிகள் முகத்தைக் கண்டேன். அப்போது அவை முற்றும் மாறுபட் டிருந்தன. ஏதோ ஒரு கற்பனைக் கனவு

கண்டதுபோல் உணர்ந்தேன். அதற்குப் பிறகு நாங்கள் விளை யாடவே இல்லை. எல்லோரும் அமைதியாய் அமர்ந்து பேசிக் கொண்டே இருந்துவிட்டோம்.

நாங்கள் ஏழு பேரும் சகோதரிகள் போல இருந்தோம். இருந்தாலும் ஒவ்வொருவரும் தாயாக இருக்க விரும்பினோம்.

டேவிட்: *(நீண்ட மௌனத்திற்குப் பிறகு டேவிட் தன் மகள் அன்னாவின் கைகளை எடுத்து முத்த மிட்டார்)*

என் மகளே! என் அன்பு மகளே! கடவுள் என் கண்களைப் பறித்துக் கொண்டார். ஆனால் உன்னையே எனக்குக் கொடுத்தார். கடவுள் எவ்வளவு கருணை உள்ளவர்!

அன்னா: *(எழுந்து டேவிட் அருகே அமர்ந்து)* கடவுள் எனக்கு எவ்வளவு நல்லது செய்துள்ளார்! உங்களையே எனக்குக் கொடுத்துவிட்டாரே!

டேவிட்: *(அன்னாவை உச்சிமோந்து முத்தமிட்டு, அவளது கை விரல்களை எடுத்து தன் குழி விழுந்த கண் களின் மேல் மெல்லத் தடவிக் கொண்டார்.)*

என் இனிய பெண்ணே! என் அன்பு அன்னா!

(டேவிட்டும் அன்னாவும் மௌனமாய் உட்கார்ந் திருந்தனர்.)

(எலன் உள்ளே நுழைகின்றாள்! சிறிது நேரம் டேவிட்டையும் அன்னாவையும் பார்க் கின்றாள். மனம் எரிச்சலடைகின்றது. கோபம் பொங்கு கிறது. தன்னையே அடக்கிக் கொண்டு அமைதியாய் இருப்பதாய் வெளிக்குக் காட்டிக் கொள்கிறாள். அந்த அறையிலே மேலும் கீழும் நடக்கின்றாள். இருவரையும் கடைக்கண்ணால் காண்கின்றாள்)

அன்னா: அம்மா! நீங்கள் இங்கே இருக்கின்றீர்கள்.

எலன் : (உதாசீனமாக) ஆமாம். இங்குதான் இருக்கின்றேன்.

டேவிட்: நேரமாகின்றது இல்லையா, எலன்?

எலன் : ஆம் நேரமாகின்றது.

(அன்னாவிடம்) வா, நீ ஏன் இவ்வளவு நேரம் இங்கே இருக்கின்றாய்? நீ ஏன் இன்னும் படுத்துத் தூங்கவில்லை?

டேவிட்: எலன், இன்னும் பனி பொழிகின்றதா, இல்லையா?

எலன் : ஆமாம், பெரும் புயலே வீசுகின்றது! இரவெல்லாம் பனி பொழியுமானால் நாளைக்கு வீட்டை விட்டு வெளியே போகவே முடியாது.

பைத்தியக்காரன் : ஆனால் இது ஒரு நேர்மைமிக்க புயல். மரங்களிலே உலர்ந்த கிளைகளை முறித்து விடும். செத்துப்போன எல்லாவற்றையும் இப்புயல் காட்டிலே புதைத்துவிடும்.

(எலன் பலகணி அருகே செல்கின்றாள். வெளியே உற்றுப் பார்க்கின்றாள். உடனே விருட்டென்று திரும்பி அன்னாவையும் டேவிட்டையும் அமைதியிழந்து பார்க்கின்றாள்)

டேவிட்: பனிப்புயல் காற்று எப்போதும் எனக்கு அமைதியைக்கொடுக்கின்றது. பனிபொழியும் போது நான் தெளிவாக எல்லாவற்றையும் கேட்க முடிகின்றது.

எலன் : ஆமாம். ஆமாம். இதற்கு முன்பு நீங்கள் இப்படிச் சொன்னதை நானும் கேட்டிருக்கின்றேன். இதையே எப்போதும் சொல்லுகின்றீர்கள். அதுவே என்னைக் கொதிப்படையச் செய் கின்றது.

அன்னா: ஓ அம்மா! நீங்கள் எப்படி இதைச் சொல்ல முடியும்? பனி பொழிவு ஒவ்வொருவருக்கும் அமைதியான உணர்வைக் கொடுக்குமல்லவா?

எலன் : (அன்னாவைப் பார்த்து கோபமாக) நிறுத்து. உன் பிதற்றலை நிறுத்து. நீ இப்படிச் சொல்லிப் பெரிய அறிவாளி என்று காட்டிக் கொள்கின்றாயா? சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை பெரிய அறிவாளி அல்ல.

(சிறிது நேரம் அமைதி)

நாம் இப்போது இதைப்பற்றிப் பேச வேண்டாம். நேரமாகின்றது. அன்னா நீ உன் அறைக்குப் போ. நான் கதவுகளையும் பலகணிகளையும் மூடிக் கொள்கின்றேன். நானே கணப்புத் தீயை கவனித்துக் கொள்கின்றேன்.

டேவிட்: இவ்வளவு நடு இரவு ஆகிவிட்டது என்பதே எனக்குத் தெரியவில்லையே. அன்னா எனக்குக் கவிதைகளைப் படித்துக காண்பித்துக் கொண் டிருந்தாள். ஒருகால் அதில் நேரமானதே தெரிய வில்லையோ! (அன்னாவின் பக்கம் திரும்பித் தன் கை விரல்களை அவள் தலைமேல் வைத்து) மகளே! படுக்கப் போ. நன்றாகத் தூங்கு. இனிய அழகான கனவுகளைக் காண்பாயாக. நானும் மேலே போகின்றேன் விரைவில்.

அன்னா: அப்பா, வணக்கம் நல்லிரவு ஆகுக! (அன்னா தாயின் பக்கம் திரும்பிக் குரலை மாற்றி)

அம்மா! நல்லிரவு அமைக!

எலன் : (உணர்வற்று) நல்லிரவு. (அன்னா மெல்ல மாடிப்படி ஏறினாள். ஓரிரு முறை மெல்ல

திரும்பி டேவிட்டின் முகத்தைப் பார்த்தாள். டேவிட்டும் தன் கண்ணற்ற முகத்தைத் திருப்பி படி ஏறும் ஓசைக்கேற்பத் தலையை உயர்த்தினார். எலன் அமைதி இழந்து மேலும் கீழும் நடக்கின்றாள்.)

எப்படிப்பட்ட புயல்! பெரும்புயல்.

டேவிட்: எலன்! இன்று நீ கோபமாய் இருக்கின்றாய், இல்லையா? விசித்திரமாக மேலும் கீழும் நடக்கின்றாயே!

(எலன் திடீரென்று நடப்பதை நிறுத்திவிட்டு, அசையாமல் நிற்கின்றாள்)

எலன் : எனக்குக் கோபமில்லை. அமைதியாய்த்தான் இருக்கின்றேன். உங்கள் எலன் அமைதி கேட்கவில்லையா? எல்லாவற்றையும் கேட்கும் சக்தி உமக்கு இருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

டேவிட்: (அமைதியாக) இல்லை. எல்லாவற்றையும் கேட்க இயலாது. இருட்டிலே மெல்ல மெல்லப் பேசுவது என் காதுகளில் ஒலிக்கும். சில சில சலசலப்புகள்.

பைத்தியக்காரன் : கிசுகிசுப்பு பேச்சு தவிர வேறுஎதைக் கேட்கச் சகிக்கும்! மறைபொருள் பேச்சே காதுக்கு எட்டும்.

(டேவிட் கொஞ்சம் திரும்பிப் படிகளில் ஏறும் சத்தத்தையே கேட்டு நின்றார். எலன் கைகளால் அசைத்துச் சைகை காட்டித் தன் மனநிம்மதியை வெளிப் படுத்தினாள். டேவிட் மாடிப் படியில் மெதுவாக ஏறினார்.)

டேவிட்: எலன், நல்லிரவு வணக்கம்.

எலன் : நல்லிரவு உங்களுக்கு. நீங்கள் நன்றாக உறங்குவீர்கள் என்று நம்புகின்றேன்.

பைத்தியக்காரன் : இந்த பெரும்புயல் வீசும் இரவில் யாரால் நிம்மதியாகத் தூங்க முடியும்? எரி மலையின் வாய்ப்புறத்திலே யாரால் அமைதி யாக உட்கார முடியும்? கண்ணிமைகளே முட்களாய் குத்தும் போது யாரால் கண்களை மூட முடியும்? (டேவிட் மேல் மாடிக்குச் சென்றுவிட்டார். எலன் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். பலகணி அருகே சென்று திறந்தாள். வெளியே உற்றுப் பார்த்தாள். வீசும் பனிக் காற்றிலிருந்து முகத்தைப் பாதுகாத்துக் கொண்டாள். யாரும் வரவில்லை. பலகணியை மூடினாள். மணி என்ன ஆயிற்று என்று கடிகாரத்தைப் பார்த்தாள். இன்னும் 12 மணி ஆகவில்லை. அறையில் மேலும் கீழும் நடந்தாள்)

பைத்தியக்காரன் : அழகான ஆரணங்கே நட. மேலும் நட. நீ சேரும் இடம் ஒன்று இருக்கின்றது. அதையும் தாண்டி இன்னும் ஒரு இடம் இருக்கின்றது.

(கடிகாரத்தில் 12 மணி அடித்தது. உடனே மூன்று மெழுகுவத்திகளை ஏற்றினாள். ஜன்னல் அருகே அவற்றை வைத்தாள்.)

எண்ணிப்பார். கலங்கரை விளக்கமே கப்பல் களுக்கு வழிகாட்டி. கப்பல் புயலிலே சிக்கி மூழ்கும்.

(சில நிமிட நேரம் மௌனம். எலன் கதவை நோக்கி ஏதாவது சிறு சத்தம் வருகின்றதா என்று கூர்ந்து கவனிக் கின்றாள். வெளிக்கதவு மெல்ல, சத்தமின்றித் திறக்கப் படுகின்றது. பிறகு உள் கதவும் திறந்து கிங்ஸ்டன் உள்ளே நுழைகின்றான்)

எலன் : அன்பரே! என் அன்புக்கினியவரே! கடைசியாக நீங்கள் வந்துவிட்டீர்களா!

கிங்ஸ்டன்: (மெல்லிய குரலில்) நான் நீண்ட நேரம் வெளியே காத்திருந்தேன். ஒருகால் நடு இரவே வராமல் போய்விடுமோ என்று அஞ்சினேன். (அவன் கூடத்தின் உள் அறைக்கு சென்று மேலே அணிந்த சட்டையையும், தொப்பி, மப்ளர்துண்டு எல்லாவற்றையும் தொங்க விட்டான். கூடத்திற்கு வந் துஉள் கதவை மூடி தாளிட்டான்)

வெளியே பனிப்படலம். அதில் பாதி உடல் வரை மூழ்கிவிட்டேன். ஜன்னல் அருகே மூன்று மெழுகு வர்த்திகள் எரிய ஆரம்பிக்குமுன் பொழுதே புலர்ந்துவிடும் என்று நினைத்தேன்.

எலன் : (கிங்ஸ்டனை அழைத்துச் சென்று இருவரும் 'சோபா'வில் அமர்ந்தனர்) என் அன்புக் காதலரே! நான் எப்படிப்பட்ட சூழ்நிலையில் தவிக்கின்றேன் என்று உங்களால் எண்ணிப் பார்க்க முடியாது. நீர் கொட்டும் பனியிலே வெளியே! நான் இரு மிருகங்களுக்கு இடையே உள்ளே! என்னால் இனியும் தாங்கிக் கொள்ள முடியாது. கிங்ஸ்டன்! என்னால் இனி பொறுக்க முடியாது.

கிங்ஸ்டன்: உரக்கப் பேசாதே! அவர்களுக்குக் கேட்கப் போகிறது! மெல்ல பேசு!

எலன் : (டேவிட் சலசலப்புப் பேச்சுப் பற்றிக் கூறியதை நினைவு கூர்ந்தாள். மெல்லிய குரலில்) ஓ! நான் இனியும் மெல்லப் பேச முடியாது. நான் மெல்ல பேச விரும்பவும் இல்லை. நான் கத்திப் பேச விரும்புகிறேன்! கிரீச்சிட ஆசைப் படுகிறேன். கத்தி கூச்சலிடாவிட்டால் என் தொண்டையே அடைத்துக்கொள்ளும்.

கிங்ஸ்டன்: தெரியும், எனக்கு நன்றாகத் தெரியும். கொஞ்சம் பொறுமையாக இரு.

எலன் : பொறுமையா? பொறுமை... யாரிடம் நான் இன்னும் பொறுமையாக இருக்க வேண்டும்? அந்தச் செத்துப்போன மீனிடமா? (அவள் அவனை அணைத்து முத்தமிடுகின்றாள்) அன்புக் காதலரே! நாம் இவ்வளவு பொறுமை யாக இத்தனை காலம் இருந்தது போதாதா?

கிங்ஸ்டன்: காத்திருப்பது தவிர வேறென்ன செய்ய முடியும் நாம்?

எலன் : (எழுந்து நின்று காமம் பொங்கப் பேசு கின்றாள்) நாம் ஏன் காத்திருக்க வேண்டும்? நாம் எதற்காகக் காத்திருக்க? உனக்குத் தெரியாது. உனக்கு இங்கே என்ன நடக் கின்றது என்பது தெரியாது; புரியாது. (உணர்ச்சி வசப்பட்டு கைகளைப் பிசைந்து கொண்டே) என் பேச்சைக் கேளுங்கள். நான் ஒரு இருட்டு, குருட்டு வீட்டிலே வாழ்கின்றேன். என் சொந்தப் பெண்ணே, என் உடம்பின் சதையும் இரத்தமும் ஆன மகளே குருடாகி உலவு கின்றாள். என் டேவிட் என்ன செய்கின்றாரோ அப்படியே இவளும் செய்கின்றாள். மெல்ல நடந்து கதவு, மேஜை முதலியவற்றைத் தொட்டுத் தொட்டு ஒரு குருடி எப்படி நடப்பாளோ அப்படியே நடக்கின்றாள். பேசும் போதுகூடக் குருடன் போலவே பேசு கின்றாள். சில சமயங்களில் அவள் குர லொலியே இருட்டிலிருந்து வெளிவருவது போல உணர்கின்றேன். அவள் அவருடன் இருக்கும்போது பொருள்களின் உருவம், நிறம், அமைப்புப் பற்றியெல்லாம் பேசுவ[illegible] இல்லை. அவர்கள் பாட்டு, இசை, உ[illegible] மணம் பற்றி மட்டுமே பேசுகின்றனர்[illegible] பேசுவது போல நையாண்டியா[illegible] காட்டுகின்றாள்) ஓ! நான் என் [illegible] ஒத

கிங்ஸ்டன்: (மெல்லிய குரலில்) நான் நீண்ட நேரம் வெளியே காத்திருந்தேன். ஒருகால் நடு இரவே வராமல் போய்விடுமோ என்று அஞ்சினேன். (அவன் கூடத்தின் உள் அறைக்கு சென்று மேலே அணிந்த சட்டையையும், தொப்பி, மப்ளர்துண்டு எல்லாவற்றையும் தொங்க விட்டான். கூடத்திற்கு வந் துஉள் கதவை மூடி தாளிட்டான்)

வெளியே பனிப்படலம். அதில் பாதி உடல் வரை மூழ்கிவிட்டேன். ஜன்னல் அருகே மூன்று மெழுகு வர்த்திகள் எரிய ஆரம்பிக்குமுன் பொழுதே புலர்ந்துவிடும் என்று நினைத்தேன்.

எலன் : (கிங்ஸ்டனை அழைத்துச் சென்று இருவரும் 'சோபா'வில் அமர்ந்தனர்) என் அன்புக் காதலரே! நான் எப்படிப்பட்ட சூழ்நிலையில் தவிக்கின்றேன் என்று உங்களால் எண்ணிப் பார்க்க முடியாது. நீர் கொட்டும் பனியிலே வெளியே! நான் இரு மிருகங்களுக்கு இடையே உள்ளே! என்னால் இனியும் தாங்கிக் கொள்ள முடியாது. கிங்ஸ்டன்! என்னால் இனி பொறுக்க முடியாது.

கிங்ஸ்டன்: உரக்கப் பேசாதே! அவர்களுக்குக் கேட்கப் போகிறது! மெல்ல பேசு!

எலன் : (டேவிட் சலசலப்புப் பேச்சுப் பற்றிக் கூறியதை நினைவு கூர்ந்தாள். மெல்லிய குரலில்) ஓ! நான் இனியும் மெல்லப் பேச முடியாது. நான் மெல்ல பேச விரும்பவும் இல்லை. நான் கத்திப் பேச விரும்புகிறேன்! கிரீச்சிட ஆசைப் படுகிறேன். கத்தி கூச்சலிடாவிட்டால் என் தொண்டையே அடைத்துக்கொள்ளும்.

கிங்ஸ்டன்: தெரியும், எனக்கு நன்றாகத் தெரியும். கொஞ்சம் பொறுமையாக இரு.

எலன் : பொறுமையா? பொறுமை... யாரிடம் நான் இன்னும் பொறுமையாக இருக்க வேண்டும்? அந்தச் செத்துப்போன மீனிடமா? (அவள் அவனை அணைத்து முத்தமிடுகின்றாள்) அன்புக் காதலரே! நாம் இவ்வளவு பொறுமை யாக இத்தனை காலம் இருந்தது போதாதா?

கிங்ஸ்டன்: காத்திருப்பது தவிர வேறென்ன செய்ய முடியும் நாம்?

எலன் : (எழுந்து நின்று காமம் பொங்கப் பேசு கின்றாள்) நாம் ஏன் காத்திருக்க வேண்டும்? நாம் எதற்காகக் காத்திருக்க? உனக்குத் தெரியாது. உனக்கு இங்கே என்ன நடக் கின்றது என்பது தெரியாது; புரியாது. (உணர்ச்சி வசப்பட்டு கைகளைப் பிசைந்து கொண்டே) என் பேச்சைக் கேளுங்கள். நான் ஒரு இருட்டு, குருட்டு வீட்டிலே வாழ்கின்றேன். என் சொந்தப் பெண்ணே, என் உடம்பின் சதையும் இரத்தமும் ஆன மகளே குருடாகி உலவு கின்றாள். என் டேவிட் என்ன செய்கின்றாரோ அப்படியே இவளும் செய்கின்றாள். மெல்ல நடந்து கதவு, மேஜை முதலியவற்றைத் தொட்டுத் தொட்டு ஒரு குருடி எப்படி நடப்பாளோ அப்படியே நடக்கின்றாள். பேசும் போதுகூடக் குருடன் போலவே பேசு கின்றாள். சில சமயங்களில் அவள் குர லொலியே இருட்டிலிருந்து வெளிவருவது போல உணர்கின்றேன். அவள் அவருடன் இருக்கும்போது பொருள்களின் உருவம், நிறம், அமைப்புப் பற்றியெல்லாம் பேசுவதே இல்லை. அவர்கள் பாட்டு, இசை, உணர்வு, மணம் பற்றி மட்டுமே பேசுகின்றனர். (அன்னா பேசுவது போல நையாண்டியாக நடித்துக் காட்டுகின்றாள்) ஓ! நான் என் மகளை

முழுமையாக வெறுக் கின்றேன். நான் டேவிட், அன்னா இருவரையும் வெறுக் கின்றேன். அவர்கள் வாழும் குருட்டு உலகத்தையும் வெறுக்கின்றேன். அது உலகமே இல்லை. ஒரே அருவருப்பு. அது வாழ்க்கையே இல்லை. அது ஓர் பனிப்படலம். கெட்ட கனவு. அது உண்மையற்ற பொய். இனி ஒரு நாளும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. என்னைப் பைத்தியம் பிடிக்க வைக் கிறது. (எலன் அவன் பக்க்ம திரும்பி ஆசை யோடு அவன் தோள் மேல் கைகளை போட்டு அணைத்துக் கொண்டு) என்னை நீங்கள் அழைத்துச் செல்லுங்கள். இந்த இருண்ட குகை யிலிருந்து என்னை விடுவித்துச் செல்லுங்கள். கிங்ஸ்டன்! இது ஓர் சிறைச் சாலை.

கிங்ஸ்டன்: அது எப்படி முடியும் எலன்? நாம் எங்கே போவது? கொஞ்ச நாள் பொறுத்துக் கொள். நாம் இருவரும் எங்காவது ஓடிவிட முடியாது. ஊரில் உள்ள மக்கள் நம்மைப்பற்றி என்ன சொல் வார்கள்?

எலன் : மக்களின் சுடுசொற்கள் பற்றிக் கவலையே இல்லை எனக்கு! யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் கவலை இல்லை. என்னைப் பற்றியும் உன்னைப் பற்றியும்தான் நான் நினைக் கின்றேன். நம் காதலே முக்கியம். ஊரில் உள்ளவர் என்ன சொல்வார்கள்? ''எலன், அவருடைய குருட்டுக் கணவனை விட்டு விட்டு ஓடி விட்டாள்'' என்றல்லவா? நான் என்ன பதில் சொல்வேன் தெரியுமா? ''எலன் அவனை விட்டோட காரணம் அவர் தன் மகள் அன்னாவின் மேலேயே காலத்தையும் கவனத்தையும் செலவிடுவதால் தான்'' என்பேன்.

பைத்தியக்காரன் : அம்மா...நீ இதை விட்டுவிட்டுப் பல

நாட்களுக்கு முன் அல்லவோ போய்விட்டாய். அழகு அணங்கே! நீ இந்த வீட்டில் இருப்ப தாகப் பாசாங்கு அல்லவோ செய்து கொண் டிருக்கின்றாள்.

கிங்ஸ்டன்: அவர்கள் வேறு விதமாகவும் பேசுவார்கள். ''இளமை இளமையை நாடுகின்றது.'' உன்னை விட இளையவனை நீ திருமணம் செய்து கொள்ளக் காரணமே இல்லை.

(தன் பேச்சை நிறுத்திவிட்டுச் சிறிது நேரம் கழித்து மேலும் பேசலானாள்) எலன், என்னை மன்னித்துவிடு. நான் சொன்னது தவறு. மக்கள் பேசிக் கொள்வதைத்தான் நான் இப்போது சொன்னேன்.

எலன் : (எழுந்து நெட்டையாக நின்று கொண்டு) ஓ கடவுளே! கிங்ஸ்டன், நீங்கள் எப்படி சொல்ல முடியும்? நான் இருவரையும்விட (டேவிட், அன்னா) சிறியவள் தெரியுமா? நான் என் மகளை விட இளையவள்! அவள் ஒரு கிழம், அது ஒரு கிழடு. இருவருமே வயதான கிழங்கள். பழங் கதைகளில் வரும் கதா பாத்திரங்கள். அவர்கள் வீட்டிலே நடமாடுவ தில்லை. புத்தகப் புழுக்கள், அவர்கள் வீட்டிலே நடப்பதில்லை. ஊர்ந்தே செல் கின்றார்கள். பேசுவதோ அடுத்தவர்க்கு கேட்காது. இருவரும் செய்வதெல்லாம் பழமைதான். நடப்பதே நத்தை வேகம்தான்.

ஓ கிங்ஸ்டன்! உனக்குத் தெரியுமே நான் இளமையின் உருவம். என் உள்ளத்தே கொழுந்து விட்டெரியும் தீச்சுடரை நீ அறிவாய். உனக்குத் தான் என்னை முழுமையாகத் தெரியும்!

கிங்ஸ்டன்: (எழுந்து நின்று என்னைக் கைகளில் ஏந்திக் கொண்டு) ஆமாம். ஆமாம். எனக்கு

உன்னை நன்றாகத் தெரியும். நான் உன்னை அறிவேன். நான் உன்னையே நினைத்து நினைத்து உருகு கின்றேன். எந்தத் தொல்லைக்கும் நான் காரண மாக இருக்க விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலே எலன், நம் மேல் வீண் வதந்திகள் வரக் கூடாது. நான் என்ன நினைக்கின்றேன் என்றால்... (பேச்சை நிறுத்தி, உற்றுக் கேட்டான் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவள் மெல்ல முணு முணுத்தாள். 'உனக்குக் காலடிச் சத்தம் கேட்கிறதா?' அசையாமல் நின்றான். ஒரே மௌனம். முதல் மாடியிலே காலடிச் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாயிற்று)

எலன் : (மெதுவான குரலில் பேசி கிங்ஸ்டன் வாயின் மேல் கையை வைத்து, சைகையால் ஒரு மூலையில் வைத்திருக்கும் புத்தக அலமாரிக்குப் பின்புறம் போய் ஒளிந்து கொள்ளச் சொன்னாள்) ஆமாம். அந்தக் குருடன்தான். (கிங்ஸ்டன் நுனி பாதத்தினால் சத்தம் இன்றி நடந்து போய்ப் பதுங்கினான். மாடியின் மேல் நடக்கும் காலடி ஓசை அதிகமாகி மாடிப்படியில் ஒவ்வொன்றாய் இறங்கிவந்தது. எலன் கூடத்தின் நடுவே விறைப்பாக நின்றாள். பற்றி எரியும் கோபம். எரிச்சல், ஏமாற்றம். டேவிட் படியில் இறங்கி வருகின்றார். மெல்ல நெருங்கினான். டேவிட் வைக்கும் அடி ஒவ்வொன்றும் எலனின் நரம்புகளை தளரச் செய்துவிட்டது. ஆறு ஏழு அடி வைத்தபின் டேவிட் நின்றான்)

டேவிட்: நீ அங்கே நிற்கின்றாய் இல்லயா எலன், நீதானே!

எலன் : ஆமாம் நான்தான் இங்கே நிற்கின்றேன். என்ன

வேண்டும் உமக்கு? நீ ஏன் கீழே இறங்கி வந்தாய்?

(டேவிட் கூடத்தின் வழியே நெருங்கி வந்து சிறிது நின்றார்)

டேவிட்: நான் ஏன் கீழே வந்தேன்? *(தமக்குத்தாமே பேசிக் கொண்டு)* நான் ஏன் கீழே இறங்கி வந்தேன்? ஏன்?

(தன் கைகளை உயர்த்தித் தலையைத் தொட்டு) ஓ! ஆமாம். எனக்கு இப்போது தெரிகிறது. *(அவர் புத்தக அலமாரியை நோக்கிச் சில அடிகள் எடுத்து வைத்தார். திடீரென்று நடப்பதை நிறுத்திக் கொண்டார். அது அவர் மனத்தை மாற்றிக் கொண்டதுபோல் இருந்தது. பிறகு சோபாவை நோக்கி நடந்து போய் முன்பு கிங்ஸ்டன் உட்கார்ந்த இடத்தில் அமர்ந்தார். சோபவைத் தம் கை விரல்களால் எதையோ மறந்ததை தடவுவது போல் தடவித் தேடினார்)*

எலன் : *(நரம்பெல்லாம் தளர்ந்து சோர்ந்து மிகவும் உலர்ந்து அதிரும் குரலிலே)* டேவிட்! என்ன இது? நீ ஏன் கீழே இறங்கி வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? நான் உனக்கு ஏதாவது செய்ய வேண்டுமா?

டேவிட்: *(சோபாவைத் தடவிக் கொண்டே)* இல்லை! நீ எனக்குச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை.

(தம் கைகளை உயர்த்திக் கண்களின் மேல்ர படிய வைத்தார். கைவிரல்களை நீக்கிக் கீழே தாழ்த்தியபோது அவர் முகத்தில் குழிவிழுந்திருந்த கண்களில் புதுவிதமான பொருள் பொதிந்த விளக்கம் தெரிந்தது. அழுத்தமான சொற்களால்)

எலன், நாம் மட்டும்தான் இந்த கூடத்தில்

இருக்கின்றோமா? நானும் நீயும் மட்டுமே தானா?

எலன் : ஆமாம் அதிலென்ன சந்தேகம்? நாம் இருவர் மட்டுமதான். நீங்கள் என்ன பொருளில் கேட்கின்றீர்?

டேவிட்: (சுற்றும் முற்றும் உற்று நோக்கி) என்ன விசித்திரம்! எல்லாம் எவ்வளவு விசிதிரமாய் இருக்கின்றன!

எலன் : என்ன விசித்திரம்?

டேவிட் மறுபடியும் புத்தக அலமாரி பக்கம் திரும்பு கின்றார். அங்கேதான் கிங்ஸ்டன் மறைந்து இருக் கின்றான். எலன் சைகையால் அவனை விலகிச் செல்லக் காட்டுகின்றாள். அவனும் நகர்கின்றான்.)

என்ன விசித்திரம்? உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?

டேவிட்: (புத்தக அலமாரி அருகே செல்கின்றார்) எனக்கு என்ன வேண்டும் என்பதை அறிய மிகவும் ஆவலுடன் இருக்கின்றாய் அல்லவா? எலன்! நான் கீழே வந்த காரணம் என்னுடைய பாட்டுப் புத்தகத்தை-குருடர்களின் சங்கம் வெளியிட்ட நூலை-எடுத்துச் செல்ல வந்தேன். மேலே போகு முன்பு உடன் எடுத்துப போக மறந்து விட்டேன். அதைத் தேடி, என் கையால் எடுத்துக் கொள்வேன். ஒருவேளை அன்னா அதை எடுத்துப் போய் இல்லையென்றால்...

எலன் : (கோபம் கொப்புளிக்க) அன்னா ஏன் உன் குருட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு உறங்கப் போகின்றாள்? ஓ சொர்க்கமே! என்ன

இதெல்லாம்? (டேவிட் பதில் சொல்லாமல் மெல்ல நடக்கின்றார்)

பைத்தியக்காரன் : அன்னா இரவின் மொழியைக் கற்க விரும்புகின்றாள். என் அழகான ஆரணங்கே! அந்த இரவின் மொழியிலே ஒவ்வொரு நட்சத்திமும் ஒரு வார்த்தை. கடவுளால் மட்டும் தான் வாக்கியங்களை உருவாக்க முடியும். (டேவிட் புத்தக அலமாரியில் ஒவ்வொரு வரிசையாக உணர்கின்றார். ஒர நூலை எடுக்கின்றார். கூடத்தின் மத்திய பாகத் திற்கு வந்து மேஜை மேலே வைக்கின்றார். சிறிது நேரம் அமைதி.)

டேவிட்: எலன் இந்தக் கூடத்தில் நாம் இருவர் மட்டும் தான் இருக்கின்றோம் என்கிறாயா? நீயும் நானும் மட்டுமா?

எலன் : என்ன முட்டாள்தனமான பொருளற்ற கேள்வி இது? நான்தான் சொன்னேனே நாம் மட்டும் தான் என்று! வேறு யார் இங்கே இருக்க முடியும்?

டேவிட்: நாம் இருவர் மட்டும்தான் இந்த வீட்டில் இருக்கின்றோம் என்றால் இந்த வீட்டில் பேயோ பிசாசோ குடியேறியுள்ளது. இருந் தாலும் நீ யாரு மில்லை என்று கூறுகின்றாய்! (அவர் தன் குருட்டுக்கண்களால் கிங்ஸ்டனைப் பார்க் கின்றார்)

இங்கு நம்மைத் தவிர வேறு மூன்றாம் மனிதன் இருப்பதாய் உணர்கின்றேன். விந்தையான நிலை. ஐயுறுகின்றேன்! (சிறிது நேர அமைதி) எலன், உனக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டா? (கொஞ்சம் மௌனம்) விசித்திரம் இது! ஒருவன் இறந்து போகுமுன்பே பேயாகி

வீட்டில் குடிபுக முடியுமா? உயிரோடு நிம்மதியாகத் தூங்க முடியுமா?

பைத்தியக்காரன் : எங்கள் இரவுக் காவல்காரனைத் தெரியாதா? இறந்தவர்தான் பேய் பிசாசு ஆகி வீட்டில் குடி புகுவார்.

(எலன், டேவிட்டை நெருங்கி நல்லவள் போல் பாசாங்கு செய்து, மாறுபட்ட, இயற்கையற்ற குரலில் பேசுகின்றாள்.)

எலன் : ஓ! என் அன்பரே வாருங்கள். நீங்கள் மிகவும் களைத்திருக்கின்றீர். போய் நன்றாகப் படுத்து உறங்குங்கள். இதோ நீங்கள் தேடிய புத்தகம். நன்றாக நீண்ட தூக்கம் தூங்குங்கள்.

டேவிட்: ஆமாம். நான் சோர்வடைந்திருப்பதாகவே நினைக்கின்றேன்.

(திடீரென்று அவளிடமிருந்து விலகி காற்று எப்படி வீசுகின்றது என்று உற்றுக் கேட்கின்றார்)

எலன்! இந்தப் பேய்க் காற்று இந்த வீட்டிற்குள் ஒரு பேய் பிசாசை ஏவி விட்டிருக்கும்போலும். பாவம் இந்தப் பேய்! நாம் அதற்கு என்ன செய்யலாம்? பேய்க்கு மிகவு ம்குளிருமானால் நாம் அதற்குப் புகலிடம் தர முடியாது. அதற்கு பசி இருந்தால் நாம் உணவு தர முடியாது. சதை எப்போதும் சதையை உண்டே வாழ்கின்றது. எலன்! மனித இனம்தான் மனிதர்களுக்கு வசதியும் சுகமும் தர முடியும். ஆனால் புயலிலே அலைக்கழிக்கப்பட்ட பேய் பிசாசுக்கு நாம் என்ன செய்ய முடியும்? பாவம் பிசாசுகள். பாவம் ஆத்மாக்கள். ஐயோ பாவம் கெட்ட காற்று கருப்புகள்!

எலன் : (கிரீச்சிட்டு கத்தாமல் அடக்கிக் கொண்டு)

நீங்கள் ஏன் இப்படித் தாறுமாறாய் பேசுகின்றீர்கள்? இந்தப் பிதற்றலைத் தயவு செய்து நிறுத்துங்கள். பேய் பிசாசு பற்றிய பேச்சே வேண்டாம். நேரம் ஆகிறது. கொஞ்ச நேரம் நான் தனியாக இருக்க விரும்புகின்றேன்.

டேவிட்: ஓ... நீ தனியே இருக்க விரும்புகின்றாயா?

பைத்தியக்காரன் : என் அழகிய ஆரணங்கே! நீ கட்டாயம் தனியாகவே இருப்பாய்! நீண்ட, வெகு நீண்ட நேரம் நீ தனியாகவே இருக்கப் போகின்றாய்.

(டேவிட், எலன்பக்கமிருந்து திரும்பிக் கதவுகளருகே செல்கின்றார். மாடிப்படியின் அருகே நிற்கின்றார். எலன், டேவிட் மேலே போகப் போகின்றார் என்று நினைக்கின்றாள். கிங்ஸ்டனுக்கு இன்னும் கொஞ்ச நேரம் மௌனமாய் அசையால் இருக்கும்படி சைகை செய்கின்றாள். டேவிட்டோ எலன் ஆச்சரியப்படும்படியாக வேகமாய்க் கதவுகள் அருகே சென்று சாவியைத் திருப்பி கதவைத் தாளிடுகின்றார். கதவின் குறுக்கே அடைத்துக் கொண்டு நின்று மிகவும் உரத்த குரலில் கூவுகின்றார்.)

டேவிட்: அன்னா, அன்னா! (கொஞ்சம் அமைதி. எலன், கிங்ஸ்டன் இருவரும் பயத்தால் ஆடாமல் அசையாமல் உறைந்து போகின்றார்கள்! டேவிட் மறுபடியும் கூப்பிடுகின்றார்) அன்னா, அன்னா!

(அன்னாவின் காலடிச் சத்தம் உடனே கேட்கின்றது. மேல் மாடியில் வேகமாய் நடந்து வரும் சத்தம் கேட்கிறது)

அன்னா : அப்பா! இதோ வந்துவிட்டேன். என்ன வேண்டும்?

டேவிட்: அன்னா கீழே இறங்கி வா! உடனே கீழே வா!

(அன்னா அவசரமாகப் படிகட்டின் மேல் நிற்கின்றாள்.)

அன்னா : அப்பா! இதோ வந்துவிட்டேன். இதோ வருகின்றேன்.

எலன் : (கோபம் பொங்க) ஓ குருட்டுப் பிணமே! என் மகளின் கண்களால் காணப் போகின்றாயா? வரட்டும் அவள்! சபிக்கப்பட்ட பெண்! எல்லாத் தாய்களின் சபிக்கப்பட்ட பெண்களும் வரட்டும்!

(அன்னா படிக்கட்டின் தலைப்பில் வந்து நிற்கின்றாள். நீண்ட இரவு ஆடை அணிந்திருக்கின்றாள். நீண்டு வளர்ந்த கூந்தல் தோள்களின் மேல் புரளுகின்றது. இந்த மிகவும் அசாதாரணமானக் காட்சியைக் காண்கின்றாள். ஒரு கணம் அதிர்ச்சி அலைகள் பரவுகின்றன.)

டேவிட்: அன்னா! நீ கீழே இறங்கி வருகின்றாயா? வா உடனே!

(அன்னா இரண்டு மூன்று படிகள் இறங்கி சிறிது நேரம் நின்று, மறுபடியும் இறங்கி மெல்ல வருகின்றாள்!

அன்னா : அப்பா! இதோ இங்கே இருக்கின்றேன். வந்து விட்டேன்.

(படி இறங்கிவந்து டேவிட் அருகே போய் நின்று கொண்டாள். எலன், கிங்ஸ்டன் இருவரும் பயத்தால் நடுநடுங்கி, முகம் பேய் அறைந்தது போல் கலங்கி நிற்கின்றனர்.)

டேவிட்: (கிங்ஸ்டன் நிற்கும் மூலையைப் பார்த்தபடி) அன்னா இந்தக் கூடத்திலே உன்னையும் உன் அன்னையையும் என்னையும் தவிர வேறு யார் இருக்கின்றார் சொல்! யார் என்று உடனே சொல்!

(எலன், கிங்ஸ்டன் இருவரும் பேரிடி விழப் போகின்றது என்று துடிக்கின்றார்கள்)

டேவிட்: உரக்கக் கத்தியபடி, தலையை உயர்த்தி வானைப் பார்க்கின்றார்)

அன்னா : (மெதுவாக அதே சமயம் மிகவும் வேதனை யுடன்) இங்கே யாரும் இல்லை. (எலன், கிங்ஸ்டன் இருவரும் காலில் உள்ள பல மெல்லாம் இழந்து கீழே விழுந்து விடுவது போல் தோன்றினர்.)

டேவிட்: ஓ கடவுளே! நான் என்ன உணருகின்றேன் என்பதைப் பாரக்க உலகில் ஒருவர்கூட இல்லையா? அன்னா, உன்னை மறுபடியும் கேட்கின்றேன்! இந்தக் கூடத்தில் இன்னும் யார் இருக்கின்றார் சொல்!

அன்னா : (ஆழ்ந்த சிந்தனையுடன் டேவிட் கைகளைப் பற்றிக் கொண்டு) நம்மைத் தவிர வேறு யாரும் இங்கு இல்லை. இங்கு வேறு யாருமே இல்லை!

பைத்தியக்காரன் : இப்போது அன்னா ஒரு உண்மையைக் கூறிவிட்டாள். அவளைப்போல் இவ்வளவு அழகா என்னால்கூட சொல்ல முடியாது!

டேவிட்: (அன்னாவிடம்) நான் என்ன உணரு கின்றேனோ அதை உன்னால் காண முடியும் என்று நினைத்தேன். இப்போது நான் தனியனாய் நிற்கின்றேன்; ஆனால் இருட்டில் இல்லை. என்னுடைய செத்துப்போன கண்கள் இறந்து போன மனிதனின் பேய் பிசாசை என் சொந்த வீட்டிலேயே காண்கின்றன. (திடீரென்று தன் கைகளை அன்னாவின் தோள்களின் மேல் போட்டு)

அன்னா : (மெதுவாக) அப்பா, நம்மைத்தவிர வேறு யாரும் இங்கே இல்லை. யாரும இல்லை. (டேவிட் திடீரென்று கதவுகளைத் திறந்து

கிங்ஸ்டன் நிற்கும் திசையில் கை விரல்களைக் காட்டி, அதிகாரக் குரலில் உத்தரவிட்டார்)

டேவிட்: செத்த பிணத்தின் பேயே! வெளியே போ! என் வீட்டை விட்டு வெளியே போ! மறுபடியும் இந்த வீட்டிலே புகுந்து பைசாசத்தின் குடி வீடாய் மாற்றாதே!

(கிங்ஸ்டன் தள்ளாடியபடியே அடிமேல் அடி வைத்து நடக்கின்றான். எலன் சைகை காட்டுகின்றாள். அவனை அசையாமல் மௌனமாய் இருக்கும்படி கைகளால் பேசுகின்றாள். அவன் மேல் அங்கி, தொப்பி, மப்ளர் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்து வெளியேறுகின்றான். கதவுகள் வழி பனிப்புயல் வீசுகின்றது. எலன் கதவுகள் அருகே ஓடுகின்றாள்! அவசரம் அவசரமாக ஒரு மழைக் கோட்டை எடுத்து ஒரு நிமிடம் நின்று திரும்பிப் பார்த்து)

எலன் : (கிரீச்சிட்டு) நானும் வெளியேறுகின்றேன். ஓ குருட்டு ஜன்மமே! (அன்னாவைச் சுட்டிக்காட்டி) நீ ஒரு சூனியக்காரி. நீ மெல்லிய விரல்களுடைய ஒரு திருடி. இந்த இருட்டுலகிலே நீ சிறையிரு. இந்த விடியாத இரவில் நீ தவித்துக் கொண்டிரு!

(எலன் வெளியே போய்க் கதவுகளை வேகமாக அறைந்து மூடுகின்றாள்)

அன்னா : இப்போது இங்கே நம் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை அப்பா! விளங்குகின்றதா?

(அன்னா தன் கைகளை டேவிட்டின் தோள்களின் மேல் போட்டு மேலே பார்க்கின்றாள். டேவிட் உட்கதவுகளை மூடுகின்றார்.

டவிட் : அன்னா இப்போது எனக்குப் புரிகின்றது. எல்லாம் எனக்குத் தெரிகின்றது.

பைத்தியக்காரன் : புயல்காற்று பனிமேல் படிந்த அவரின் பாதச் சுவடுகளை அழித்துவிடும். பனி உருகும். வசந்தம் வரும். நண்பரே! வயல்வெளியில் உள்ள எல்லா மரங்களின் மலர்களும் இதழ் விரித்து சூரியனை வரவேற்கும்.

(திரை விழுகிறது)

○○○

லாசரஸும் காதலியும்

> ''நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் நம்புங்கள், கடவுளின் புகழைப் பாடுங்கள்!'' என்றார் ஏசு. அவர்கள் இறந்தவனின் கல்லறைக்கு அருகே இருக்கும் கற்களைத் தூக்கினார்கள். ஏசுநாதர் தலை நிமிர்ந்து கண்களை வான் நோக்கிப் பார்த்து, ''இறைவனே! அப்பா! என் குரலைக் கேட்டீர்கள். நன்றி கூறுகின்றேன். என் முறையீட்டை நீங்கள் எப்போதும் கேட்பீர்கள். மக்கள் என் அருகே நிற்பதால்தான் நான் கூறு கின்றேன். நீங்கள்தான் என்னைத் தூதுவனாய் அனுப்பி இருக்கின்றீர்கள் என்று நம்புவார்கள்...''

அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது உரத்த குரலிலே பேசினார்.

> ''லாசரஸ் நீங்கள் இங்கே வாருங்கள்.'' இறந்தவர் உயிர்த்து வந்தார். கை கால்கள் எல்லாம் புதை குழியில் மூடும் துணிகளால் கட்டப்பட்டு இருந்தன. அவர் முகம் ஒரு கைத்துண்டால் முடிக்கப்பட்டு இருக்கும்.

ஏசுநாதர் அவர்களிடம் கூறினார்.

> ''முடிச்சுகளை அவிழ்த்துவிடுங்கள்.
> அவர் வெளியே போகட்டும்.
>
> ஜான் 11.40-44.

நாடக பாத்திரங்கள்

1. *லாசரஸ்*
2. *மேரி-லாசரஸின் சகோதரி*
3. *மார்த்தா-லாசரஸின் சகோதரி*
4. *லாசரஸின் தாயார்*
5. *பிலிப்ஸ்-ஒரு சீடர்*
6. *பைத்தியக்காரன்*

காட்சி :

'லாசரஸின் வீட்டின் வெளியே பூந்தோட்டம். லாசரஸின் தாயாரும் சகோதரிகளும் பெத்தனியில் உள்ள வீட்டுத் தோட்டத்தில்.

காலம் :

திங்கள் கிழமை பிற்பகல் நேரம். ஏசுநாதர் உயிர்த் தெழுந்த நாளுக்கு மறுநாள். ஏசுநாதர் நாசரத்தின் புதை குழியிலிருந்து உயிர்த்தெழுந்தார்.

(திரை மேலே உயர்கின்றது)

மேரி, வலதுபுறம் அமர்ந்து மலையை உற்று நோக்கு கின்றாள்.

மார்த்தா இடதுபுறம் கதவு அருகே உள்ள தறியில் அமர்ந்து நெய்கின்றாள்.

பைத்தியக்காரன் ஒரு மூலையில் உட்கார்ந்து இருக் கின்றான். இடது மூலைச்சுவர்மேல் சாய்ந்து இருக்கின்றான்.

மேரி : *(மார்த்தா பக்கம் திரும்பி)* போதும் வேலை செய்தது. முடித்துக்கொள். காலம் கடந்து வேலை செய்யாதே. நேரமாகின்றது.

மார்த்தா : அம்மா நீ என் வேலை பற்றி நினைக்க வில்லை. என் சோம்பேறித்தனம்தான் நம்

இறைவன் கூறியது பற்றி உன்னைச் சிந்திக்க வைக்கிறது! ஓ கடவுளே! அன்பின் ஆருயிரே!

பைத்தியக்காரன் : ஒரு நாள் வரும். அன்று ஒரு நெசவாளி கூட இருக்க மாட்டான். அன்று, ஆடை அணியவே ஆள் இருக்க மாட்டார். நாமெல்லாம் சூரியனின் ஒளியிலே ஆடையின்றி நிற்போம்!

(ஒரு நீண்ட மௌனம். அந்தப் பெண்கள் பைத்தியக்காரன் கூறிய சொற்களைக் கேட்கவில்லை போலும்)

மேரி : நேரமாகின்றது.

மார்த்தா : ஆமாம். நேரம் ஆகின்றது. எனக்குத் தெரியும். (அவர்களின் தாய் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகின்றார்.)

தாய் : அவர் இன்னும் திரும்பி வரவில்லையா?

மார்த்தா : இல்லை அம்மா. இன்னும் வரவே இல்லை. (மூன்று பெண்களும் மலையின் பக்கம் திரும்பிப் பார்க்கின்றனர்.)

பைத்தியக்காரன் : அவனே திரும்பி வரமாட்டான். நீங்கள் பார்க்கப் போவதெல்லாம் உடம்பிலே துடிக்கும் உயிர்தான்.

மேரி : அவர் இன்னும் அந்த உலகத்திலிருந்து திரும்பி வரவில்லை என்று உணர்கின்றேன்.

தாய் : நம்முடைய ஆசானின் மரணம் அவரை மிகவும் ஆழமாகப் பாதித்துவிட்டது. அவர் ஒரு கவளம் உணவுகூட உண்ணவில்லை. அவர் இரவில் உறங்குவதும் இல்லை. ஆமாம் நண்பரின் மரணம் அவரை மிகவும் பாதித்து விட்டது.

மார்த்தா : இல்லை அம்மா! வேறு ஏதோ காரணம் இருக் கின்றது. காரணத்தை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

மேரி : ஆமாம். உண்மைதான். ஏதோ காரணம் இருக்கின்றது. எனக்கும் அது தெரியும். இந்தச் சில நாட்களில் நானும் தெரிந்து கொண்டு இருக் கின்றேன். ஆனால் அது என்ன என்று விவரித்துக் கூற முடியவில்லை. அவர் கண் பார்வை ஆழ்ந்து உள்ளது. என்னை வெறித்துப் பார்க்கும் பார்வையில் என் மூலமாக வேறு எதையோ காண்பதாய் நினைக்கின்றேன். மிகவும் மென்மை யான பண்புடன் பழகுகின்றார். ஆனால், அந்த மென்மை இங்கு இல்லாத ஒருவருக்காக இருப்பதாய் உணர்கின்றேன். அவர் மௌனமாய் இருக்கின்றார். ஆனால் அந்த மௌனம் அவர் உதடுகளைக் கட்டுப்படுத்தும் மரணத்தின் அடைப்பு போல் உள்ளது.

(ஒரு ஆழ்ந்த மௌனம் அந்த மூன்று பெண்களின் மேலும் பரவுகின்றது)

பைத்தியக்காரன் : ஒவ்வொருவரும் மற்றவர் முலமாக, வேறு யாரையோ பார்க்கின்றார்கள்.

தாய் : (மௌனத்தைக் கலைத்து) அவர் திரும்பி வருவாரா? சமீப காலமாக அவர் நீண்ட நேரத்தை மலையிலேயே தனிமையில் கழிக் கின்றார். அவர் இப்போது நம்முடன் இருக்க வேண்டும்.

மேரி : அம்மா, நீண்ட காலமாக அவர் நம்முடன் இருக்க வில்லையே.

மார்த்தா : ஏன்? அவர் எப்போதும் நம்முடன்தானே இருக் கின்றார். அந்த 3 நாட்கள் மட்டும்தான் அவர் நம்முடன் இல்லை.

மேரி : 3 நாட்கள்? அந்த 3 நாட்கள்? மார்த்தா நீ சொல்வது சரிதான். மூன்றே நாடகள்தான்.

தாய் : என் மகன் மலையிலிருந்து திரும்பி வர வேண்டுமென்று ஆவலுடன் இருக்கின்றேன்.

மார்த்தா : அம்மா! அவர் கட்டாயம் விரைவில் திரும்பி வந்துவிடுவார்! கவலைப்படாதே அம்மா.

மேரி : (விசித்திரமான குரலில்) சில சமயங்களில் மலையிலிருந்து திரும்பி வரவே மாட்டார் என்று உணர்கின்றேன்.

தாய் : புதைகுழியிலிருந்து அவர் திரும்பி வருவா ரானால் கட்டாயம் அவர் மலை மேலிருந்து திரும்பி வந்துவிடுவார். என் அன்பு மகள்களே! நமக்காகத் தன் உயிரையே கொடுத்த ஒருவரைக் கொன்றே விட்டார்கள். ஆனால் நேற்று...

மேரி : அதன் புதிர்; அதன் வேதனை!

தாய் : என்ன கொடுமை! எண்ணவே துயரம்! என் மகனை என் இதயத்திற்கு அளித்த அவருக்கா இந்தக் கொடுமை! (மௌனம்)

மார்த்தா : ஆனால் லாசரஸ் காலம் கடந்து இவ்வளவு நேரம் மலை மேல் தங்கக் கூடாது.

மேரி : கனவு காண்பவர்க்கு சந்தனக் காட்டிலே வழி தவறி விடுவது சுலபமாய் இருக்கலாம். லாசரஸ் மலை மேல் அமர்ந்து கனவு காணும் இடத்தை நான் அறிவேன். இடத்தை நேசித்து அசை யாமல் உட்காருவார். அம்மா! அந்த இடம் ஒரு நீரோடைக்கு மிக அருகே இருக்கிறது. அந்த இடத்தை முன்பின் அறிந்தவர்தான் தெரிந்து கொள்ள முடியும். என்னை ஒருமுறை அங்கு அழைத்துச் சென்றார். நாங்கள் இரு பாறை களின் மேல் அமர்ந்தோம், குழந்தைகள் போல. வசந்த காலம். மலர்ந்த மலர்ச்செடிகள்! இந்த இடத்தின் அழகு பற்றி நாங்கள் குளிர் காலத்தில் நிறைய பேசி இருக் கின்றோம். அதைப் பற்றி ஒவ்வொரு முறை பேசும் போதும் அவர் கண்களிலே புத்தொளி தோன்றிப் பளபளக்கும்.

பைத்தியக்காரன் : ஆமாம் அது ஒரு விசித்திரமான ஒளி. பேரொளியின் நிழல்தான் அது...

மேரி : அம்மா, லாசரஸ் எப்போதும் நம்மை விட்டு விலகியே இருப்பார்; நம்முடன் இருப்பது போலவே தோன்றும்.

தாய் : நீங்கள் என்னென்னவோ சொல்கின்றீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. (சிறிது நேர இடைவெளி) நான் என் மகன் விரைவில மலை யிலிருந்து திரும்பி வருவதையே ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். (சிறிது நேரம் கழித்து) நான் உடனே உள்ளே போக வேண்டும். மொச்சைக் கொட்டையை அதிகமாய் வேக வைத்துவிடப் போகிறார்கள்!

(தாய் கதவைத் திறந்து உள்ளே செல்கிறார்)

மார்த்தா : மேரி, நீ கூறுவதெல்லாம் எனக்குப் புரிய வேண்டுமென்றுவிரும்புகிறேன். நீ பேசும் போது வேறு யாரோ பேசுவது போல் உணர் கின்றேன்.

மேரி : (குரல் சிறிது விசித்திரமாய் அமைய) ஆமாம் சகோதரியே எனக்குத் தெரியும்.

நீ பேசும் போதெல்லாம் வேறு யாரோ பேசுவது போலவே உணர்கின்றேன்.

(நீண்ட நேர மௌனம். மேரியின் எண்ணம் எங்கோ வெகு தூரத்திற்குப் போய் உலவியது. மார்த்தா சிறிது விசித்திர ஆர்வத்துடன் இருக்க, லாசரஸ் உள்ளே நுழை கின்றார். மலையை விட்டு வந்திருக்கின்றார். வீட்டிற்கு வெளியே பாதாம் மர நிழலில் உள்ள புல் தரை மேல் விழுகின்றார்.)

ஓ லாசரஸ் ! நீ மிகவும் களைந்துவிட்டாய். மிகவும் பலம் இழந்து காணப்படுகின்றாய். நீ இவ்வளவு தூரம் நடந்திருக்கக் கூடாது.

லாசரஸ்: (மறந்த நிலையில் பேசுகின்றார்) நடப்பதா? நடந்து போவதா? எங்கே? போகும் இடம் தெரிய வில்லை; தேடித் தேடியும் கிடைக்க வில்லை. மலைமேல் இருப்பது மிகவும் நல்ல வேலை.

பைத்தியக்காரன் : நன்று, அது என்ன? ஒரு முழத் தூரத்தில் உள்ள மற்றொரு மலைதானே!

மார்த்தா : (சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு) அண்ணா உனக்கோ உடம்பு சரியில்லை. நாள் முழுவதும் எங்களை விட்டுத் தூர இருக் கின்றாய். எங்களுக்கு ஒரே கவலை. லாசரஸ் நீ இங்கு வந்தவுடன்தான் எங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகின்றது. ஆனால் நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்றால் உடனே எங்கள் மகிழ்ச்சி ஒரே பயமாக மாறுகிறது.

லாசரஸ்: (மலையின் பக்கமாக முகத்தைத் திருப்பி) உன்னைவிட்டு நீண்ட நேரம் பிரிந்திருக் கின்றேனா? என் கண நேர மலைவாசத்தை மிகப் பெரிய பிரிவாக நினைப்பது விசித்திரம். உண்மையிலேயே ஒரு கண நேரத்திற்கு மேல் மலையிலே தங்குகின்றேனா?

மார்த்தா : அண்ணா நீ நாள் முழுமையும் அல்லவா மலை மேலேயே வசிக்கின்றாய்!

...நினைக்க! ஒரு நாள் முழுவதும ... யார் இதை நம்புவார்கள்? ...னம். தாய் கதவின் வழியே ...கின்றாள்)

...ன்பு மகனே! நீ திரும்பி வந்து ... பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். ...ன்றது. பார், மலைமேல் மூடுபனி ... பரவுகின்றது. மகனே உன்னைப் ...நான் பயப்படுகின்றேன்.

பைத்தியக்காரன் : அவர்கள் மூடுபனியைக் கண்டே பயப்படுகின்றார்கள். மூடுபனியே அவர்களுக்கு ஆரம்பமும் முடிவும்.

லாசரஸ்: ஆம், நான் மலையிலிருந்துதான்உங்களிடம் வந்தேன். இதுவே பரிதாபம். எல்லாம் பரிதாபம்.

தாய் : லாசரஸ் என்ன அது? எல்லாவற்றிற்கும் என்ன அது 'பரிதாபம்?'

லாசரஸ்: ஒன்றுமில்லை, அம்மா ஒன்றுமில்லை.

தாய் : நீ விசித்திரமாகப் பேசுகின்றாய். லாசரஸ் உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடிய வில்லை. நீ வீட்டிற்கு வந்த பிறகு ஒன்றுமே சொல்ல வில்லை.

நீ சொன்ன கொஞ்சமும் எனக்கு மிகவும் விசித்திரமாக அன்னியமாய் இருக்கின்றது.

மார்த்தா : ஆமாம்! விசித்திரம்தான்.

(சிறிது நேர அமைதி)

தாய் : இப்போது இங்குதான் மூடுபனி படர்கின்றது. நாம் வீட்டிற்கு போகலாம் வாருங்கள். என் குழந்தைகளே, வாருங்கள்.

(தாய், லாசரஸை முத்தமிடுகின்றாள். மிகவும் மென்மை யான முத்தம். வீட்டில் நுழைகின்றாள்.)

மார்த்தா : ஆமாம். இங்குக் காற்றே குளிர்ந்து உள்ளது. நான் நெய்யும் துணியை உள்ளே எடுத்தாக வேண்டும்.

மேரி : (புல் தரை மேல் லாசரஸ் அருகில் உட்கார்ந்து, பாதாம் மரத்தடியில் மார்த்தாவுடன் பேசு கின்றாள்) இந்தச் சித்திரை மாத மாலை நேரம் உன்னுடைய ஆடைக்கும் தறிக்கும்

லாசரஸ்: (மறந்த நிலையில் பேசுகின்றார்) நடப்பதா? நடந்து போவதா? எங்கே? போகும் இடம் தெரிய வில்லை; தேடித் தேடியும் கிடைக்க வில்லை. மலைமேல் இருப்பது மிகவும் நல்ல வேலை.

பைத்தியக்காரன் : நன்று, அது என்ன? ஒரு முழத் தூரத்தில் உள்ள மற்றொரு மலைதானே!

மார்த்தா : (சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு) அண்ணா உனக்கோ உடம்பு சரியில்லை. நாள் முழுவதும் எங்களை விட்டுத் தூர இருக் கின்றாய். எங்களுக்கு ஒரே கவலை. லாசரஸ் நீ இங்கு வந்தவுடன்தான் எங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகின்றது. ஆனால் நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்றால் உடனே எங்கள் மகிழ்ச்சி ஒரே பயமாக மாறுகிறது.

லாசரஸ்: (மலையின் பக்கமாக முகத்தைத் திருப்பி) உன்னைவிட்டு நீண்ட நேரம் பிரிந்திருக் கின்றேனா? என் கண நேர மலைவாசத்தை மிகப் பெரிய பிரிவாக நினைப்பது விசித்திரம். உண்மையிலேயே ஒரு கண நேரத்திற்கு மேல் மலையிலே தங்குகின்றேனா?

மார்த்தா : அண்ணா நீ நாள் முழுமையும் அல்லவா மலை மேலேயே வசிக்கின்றாய்!

லாசரஸ்: நினைக்க நினைக்க! ஒரு நாள் முழுவதும மலை மேலா? யார் இதை நம்புவார்கள்? (சிறிது மௌனம். தாய் கதவின் வழியே வெளியே வருகின்றாள்)

தாய் : ஓ என் அன்பு மகனே! நீ திரும்பி வந்து விட்டதிலே பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நேரம் ஆகின்றது. பார், மலைமேல் மூடுபனி படர்ந்து பரவுகின்றது. மகனே உன்னைப் பற்றியே நான் பயப்படுகின்றேன்.

பைத்தியக்காரன் : அவர்கள் மூடுபனியைக் கண்டே பயப்படுகின்றார்கள். மூடுபனியே அவர்களுக்கு ஆரம்பமும் முடிவும்.

லாசரஸ்: ஆம், நான் மலையிலிருந்துதான்உங்களிடம் வந்தேன். இதுவே பரிதாபம். எல்லாம் பரிதாபம்.

தாய் : லாசரஸ் என்ன அது? எல்லாவற்றிற்கும் என்ன அது 'பரிதாபம்?'

லாசரஸ்: ஒன்றுமில்லை, அம்மா ஒன்றுமில்லை.

தாய் : நீ விசித்திரமாகப் பேசுகின்றாய். லாசரஸ் உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடிய வில்லை. நீ வீட்டிற்கு வந்த பிறகு ஒன்றுமே சொல்ல வில்லை.

நீ சொன்ன கொஞ்சமும் எனக்கு மிகவும் விசித்திரமாக அன்னியமாய் இருக்கின்றது.

மார்த்தா : ஆமாம்! விசித்திரம்தான்.

(சிறிது நேர அமைதி)

தாய் : இப்போது இங்குதான் மூடுபனி படர்கின்றது. நாம் வீட்டிற்கு போகலாம் வாருங்கள். என் குழந்தைகளே, வாருங்கள்.

(தாய், லாசரஸை முத்தமிடுகின்றாள். மிகவும் மென்மை யான முத்தம். வீட்டில் நுழைகின்றாள்.)

மார்த்தா : ஆமாம். இங்குக் காற்றே குளிர்ந்து உள்ளது. நான் நெய்யும் துணியை உள்ளே எடுத்தாக வேண்டும்.

மேரி : (புல் தரை மேல் லாசரஸ் அருகில் உட்கார்ந்து, பாதாம் மரத்தடியில் மார்த்தாவுடன் பேசு கின்றாள்) இந்தச் சித்திரை மாத மாலை நேரம் உன்னுடைய ஆடைக்கும் தறிக்கும்

நல்லதல்ல. நான் உன் தறியை உள்ளே எடுத்துச் செல்ல உதவட்டுமா?

மார்த்தா : இல்லை, இல்லை. நானே தனியாக என் வேலையைச் செய்வேன். நான் எப்போதுமே என் வேலையைத் தனியாகத்தானே செய்தேன். (மார்த்தா தறியை வீட்டிறக்குள் எடுத்துச் செல்கின்றாள். பிறகு திரும்பி வந்து துணியை எடுக்கின்றாள். காற்று வீசுகின்றது. பாதாம் மரம் அசைகிறது. மலரிதழ்கள் மரத்திலிருந்து மேரி, லாசரஸ் இருவரின் மேலும் சொரிகின்றன.)

லாசரஸ்: வசந்தம் நமக்கு இதம் அளிக்கும். மரங்கள் கூட நமக்காகக் கண்ணீர் சிந்தும். இந்த மண்ணில் எல்லாம் இருக்கின்றன. உலகில் உள்ள எல்லாம், நம் தாழ்வையும், துயரத்தையும் தெரிந்து உணரு மானால் நமக்காகப் பரிதாபப் பட்டுக் கண்ணீர் விடும்.

மேரி : நமக்கு வசந்தம் இன்பமளிக்கின்றதே. வசந்தம் துயரத்திரை மூடியிருந்தாலும் நமக்காகப் பரிதாபப்படுகின்றது. நாம் வசந்தத்தையும் துயரத்தையும் நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொள்வோம்! இறைவனின் இனிமையான மௌனத்தைக் கண்டு நாம் வியப்படைவோம். அவரே நமக்கு உயிர் அளித்தார். அவருடைய உயிரையே நமக்காக அர்ப்பணித்தார். நாம் இனிப் பரிதாபம் பற்றிப் பேச வேண்டாம் லாசரஸ்.

லாசரஸ்: பரிதாபம். என் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளின் ஆசைகளைக் கிழித்தெறிந்த பரிதாபம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளின் இதயத்தின் தீராப்பசி. ஆயிரம் ஆயிரம் வசந்தங்களுக்குப் பிறகு நாம் இந்தக் குளிர்காலத்தின் பக்கம் திரும்பி இருக் கின்றோம்.

மேரி : அண்ணா! நீங்கள் கூறுவதின் பொருள் என்ன? நீங்கள் ஏன் ஆயிரம் ஆயிரம் வசந்தங்களைப் பற்றிப் பேசுகின்றீர்கள்? நீங்கள் மூன்று நாட்கள் இடைவெளியில்தான் இருக்கின்றீர்கள். மூன்று குறுகிய நாட்கள். ஆனால் நம் துயரமோ உண்மை யிலேயே மூன்று நாட்களைவிட நீண்டன.

லாசரஸ்: மூன்று நாட்கள்? இது மூன்று நூற்றாண்டுகள், மூன்று யுகங்கள் போல் அல்லவா தோன்று கிறது! காலமெல்லம்..காலமெல்லாம் என் ஆத்மா காலம் ஆரம்பமாகும் முன்பே இருந்து காதலிக்கிறது.

பைத்தியக்காரன் : ஆமாம். மூன்று நாட்கள். மூன்று நூற் றாண்டுகள். மூன்று யுகங்கள். என்ன விசித்திரம்! அவர்கள் எப்போதும் எல்லாவற்றையும் எடைபோட்டு, அளந்து பார்க்கவே விரும்பு கின்றனர். இதெல்லாம் பகல் நேரத்தை அளக்கும் சூரிய வட்டமும், தராசும்தான்.

மேரி : (மிகவும் திகைத்து) உங்கள் ஆத்மா, காலம் ஆரம்பமாகும் முன்பிருந்தே காதலிக்கின்றது. லாசரஸ், நீ ஏன் இப்ப எல்லாம் பேசுகின்றாய்? இது ஒரு கனவுதான். வேறு ஒரு தோட்டத்திலே காணும் கனவுதான். இப்போது நாம் நம் தோட்டத்தில் இருக்கின்றோம். ஜெருசலத்தி லிருந்து கல்லெறியும் தூரத்தில்தான் நாம் இருக் கின்றோம். அண்ணா உமக்கு நன்றாகத் தெரியும், நம்முடைய இறைவன் வாழ்க்கை. சாதல் எனும் கனவிலிருந்து விழித்தெழுவார். அவர் நம்முடன் என்றும் இருப்பார். இறைவனின் புகழ், பெருமை எல்லாவற்றிற்கும் உயிர் வாழும் சாட்சியாக நீங்கள் அவரின் சீடராக இருப்பீர்.

லாசரஸ்: இங்கே கனவும் இல்லை; உயிர்த்தெழும்

கிளர்ச்சியும் இல்லை. நீ, நான், இந்தத் தோட்டம் எல்லாம் மாயை. இது நிசத்தின் நிழல். நான் நேசிக்கும் ஆசானின் கூடவே இருக்கின்றேன். அங்கேதான் உண்மையும் உள்ளது; கிளர்ச்சியும் உள்ளது.

மேரி : உன் காதலரா?

லாசரஸ்: என் காதலர்தான்.

பைத்தியக்காரன் : ஆமாம், ஆமாம். அவரின் காதலர் இந்த அண்டவெளி, ஒரு கன்னிப் பெண். இவளே ஒவ்வொருவருக்கும் காதலி.

மேரி : ஆனால் உன் காதலர் யார்? யார் உன் காதலர்?

லாசரஸ்: என் இருண்ட குட்டை இதயத்துடன் நான் அவரைத் தேடி அலைந்தேன். காணவில்லை. மரணம் என்னும் சிறகு படைத்த தேவதை வந்து என் ஏக்கத்தை அவருடைய எதிர் பார்ப்பிற்கு வழி நடத்திச் சென்றது. நான் கடவுளின் இதயத்தே அவளுடன் வாழ்ந்தேன். நான் அவருடன் நெருங்கினேன். அவள் என்னை அணுகினாள். நாங்கள் இருவரும் இணைந்து ஒருவரானோம். நாங்கள் சூரியனின் ஒளிரும் ஓர் உருண்டை யானோம். நாங்கள் நட்சத்திரங்களின் இடையே கவிதையானோம். மேரி, இவை எல்லாம் இவற்றிற்கும் இதற்கு மேலும் ஒரு குரல், ஆழ்ந்த பாதாளத்திலிருந்து ஒரு குரல், உலகத்தின் ஒரு குரல் என்னைக் கூவி அழைத்தது. பிரிக்க முடியாத அதைக் கிழித்துக்கொண்டு கூவியது. ஆயிரம் ஆயிரம் ஆண்டு ஆண்டுகளாய் நான் விண் வெளியிலே அவளுடன் இணைந்திருந்தேன். ஒரு குரல் என்னைத் திருப்பிக் கூப்பிட்டது. அதை யாராலும் தடுத்துக் காப்பாற்ற முடியவில்லை.

மேரி : (விண்ணைப் பார்த்து) ஓ... ஆசீர்வதிக்கப்பட்ட

தேவதையே! எங்கள் மௌனத்தின் நேரமே! எனக்கு இந்த ஒன்றைப் புரிய வையுங்கள். மரணம் கண்டுபிடித்த இந்த புதிய பூமியிலே நான் ஒரு அன்னியனாக இருக்க மாட்டேன். அண்ணா, சொல்லுங்கள்! மேலும் சொல் லுங்கள்! நான் என் இதயத்தை முழுமையாய் நம்பி உம்மைப் பின் தொடருகின்றேன்.

பைத்தியக்காரன் : உன்னால் முடியுமானால் பின் தொடருங்கள். சின்னப் பெண்ணே! ஆமை ஒரு புள்ளிமானைத் தொடர்ந்து போக முடியுமா?

லாசரஸ்: நான் ஒரு நீரோடை. என் இறைவன் ஒரு கடல். அவரே என் காதலர். நான் அவரைத் தேடி ஓடு கின்றேன். நான் கடலை அடைந்தபோது, மறுபடியும் மலைக்கே கொண்டு வரப்பட்டுப் பாறைகளிடையே விரைந்தோட வைக்கப் பட்டேன். நான் மௌனத்திலே சிறை செய்யப் பட்ட கவிதை. நான் என் காதலருக்காக ஏங்கு கின்றேன். சொர்க்கக் காற்று என்னை விடுதலை செய்தபோது நான் பச்சைப் பசு மலையிலே கூவிக் கொண்டிருந்தேன். அப்போது என்னை ஒரு குரல் கட்டிப் பிடித்தது. என்னை மறுபடியும் மௌனத்திலே திணித்தது. நான் இருண்ட பூமியிலே வேர் விட்டேன். மரம் வளர்ந்து, மலராய் மலர்ந்தேன். என் மணம் விண்வெளி யெங்கும் பரவி மணங்கமழ்ந்தது. என் காதலரையே கவர்ந்தது. மறுபடியும் என்னை ஒரு கை எட்டிப் பிடித்து என்னைப் பூமியின் ஆழத்திலே வேராய் வளரவிட்டது. இருண்ட பூமியில் வேரானேன்.

பைத்தியக்காரன் : நீ வேராக மண்ணிலே படருவா யானால் கிளைகளினூடே வீசும் புயலிலிருந்து தப்பித்துக் கொள்வாய். நீ கடலை அடைந்த

பிறகு கூட நீரோடையாகப் பாய்வதே மிகவும் நல்லது. தண்ணீர் எப்போதும் மேல் நோக்கிப் பாய்வதே மிகவும் நல்லது.

மேரி : (தனக்குத்தானே) விநோதம். விசித்திரம்! (லாசரஸைப் பார்த்து) அண்ணா விரைந் தோடும் நீரோடையாக இருப்பது மிகவும் நல்லதே! இன்னும் பாடப்படாத கவிதையாக இருப்பதே நல்லது. இருண்ட மண்ணின் மடியிலே வேராய்ப் படர்வதே நல்லது. ஆண்டவனுக்கு எல்லாம் தெரியும். அவர் எங்களுடன் இருக்கத் திரும்பக் கூப்பிட் டுள்ளார். மரணத்திற்கும், வாழ்விற்கும் இடையே திரை ஏதும் இல்லை என்பதை நாங்கள் நன்கு அறிவோம். மரணமின்மையின் உயிர் சாட்சி நீங்கள்தான் என்பது உமக்குத் தெரிய வில்லையா? காதலால் ஒரு வார்த்தை கூறினால் மரணம் எனும் மாயையில் சிதறிக் கிடக்கும் எல்லா உயிர்ப் பொருள்களையும் ஒன்றாக இணைக்கும் என்பதை நீங்கள் பார்க்க வில்லையா? நம்புங்கள். நம்பிக்கை வையுங்கள். நம்பிக்கை ஒன்றுதான் நம் ஆழ்ந்த ஞானம். இதில்தான் இதமான சுகம் காண முடியும்.

லாசரஸ்: இன்ப நலம், சுகம் ஒரு துரோகத்தின் உருவம்; மரணத்தின் ஊற்று. சுகம் நம் ஐம்புலன் களையும் ஏமாற்றி, காலத்தின் அடிமைகளாய் மாற்றும். எனக்கு சுகமே வேண்டாம். எனக்கு ஆசைகள் வளரும். நான் என் ஆசைத் தீயால் விண் வெளியையும், என் காதலையும் பொசுக்கி விடுவேன். நான் எல்லையற்ற விண் வெளியில் என் துணையுடன் இருப்பேன். துணை எது தெரியுமா? என் மறுபக்கமே நானே ஓ... மேரி, மேரி, நீ ஒரு போது என் சகோதரி. ஒருவரைப் பற்றி ஒருவராக நாம் அறிவோம்.

நம் உறவினர் களுக்கே நம்மைப்பற்றி ஒன்றும் தெரியாது. மேரி நான் சொல்வதைக் கேள். உள் இதயத்தில் நான் சொல்வதைக் கேள்.

மேரி : லாசரஸ், உங்கள் பேச்சை உற்றுக் கேட்கின்றேன்.

பைத்தியக்காரன் : இந்த உலகம் முழுவதுமே உன் பேச்சைக் கேடகட்டும். இப்போது விண் வெளியே மண் ணுலகுடன் பேசும். ஆனால் மண் ணுலகம் செவிடு, காது கேட்காது. மண்ணுலகம் என்னை யும் உன்னையும் போல் செவிடு.

லாசரஸ்: நாங்கள் விண்வெளியில் இருக்கின்றோம். நானும் என் காதலியும் எல்லோரும் ஆகாய வெளியில் இருக்கின்றோம். நாங்கள் பேரொளியில் இருக்கின்றோம். நாங்களே பேரொளி. பழங்கால ஆவிகள் போல் நாங்கள் திரிகின்றோம். அவை தண்ணீரின் மேல் நடமாடுகின்றன. அது எப்போதும் முதல் நாள். நாங்கள் காதலே உருவானவர்கள். வெள்ளை மௌனத்தின் இதயத்திலே வாழும் காதலர்கள். பிறகு ஒரு குரல் பேரிடி போல் ஒலித்தது. கணக்கற்ற வேல்கள் காற்று மண்டலத்தை ஒரே சமயம் துளைப்பது போல் கூவியது: ''லாசரஸ், உடனே வா!'' இந்தக் கூப்பாடு விண்வெளியெங்கும் எதிரொலித்தது. மறுபடியும் எதிரொலித்தது. நான் பொங்கிப் பெருகும் பேரலை போல் விம்மினேன். வீடு இரண்டாய்ப் பிளந்தது. ஆடைகள் கிழிந்தன. கலங்கரை விளக்கம் சாய்ந்து வீழ்ந்தது. செலவாகாத பேரிளமை வீரிட்டது. கோபுரம் சாய்ந்தது. மண் மேல் மிகப் பெரிய பள்ளத்தை ஏற்படுத்தியது. மறுபடியும் ஒரு பேரொலி: ''லாசரஸ், உடனே வா!'' விண்ணிலே கட்டிய மாளிகையிலிருந்து நான் மண் மேல்

வீழ்ந்தேன். சமாதிக்குள்ளே ஒரு சமாதியாய்ப் புகுந்தேன். இந்த உடம்பே ஒரு அடைபட்ட குகையாய் மாறியது.

பைத்தியக்காரன் : ஒட்டகப் பயணத்தின் தலைவனே! எங்கே உன் ஒட்டகங்கள்? எங்கே உங்கள் வியாபாரிகள்? பசித்த பூமி எல்லோரையும் விழுங்கி விட்டதா? பாலைவன ஊதைக் காற்று அவர்களுக்கு மரணப் போர்வை போர்த்தி மணலால் மூடி விட்டதா? இல்லை, நாசரத்தின் ஏசுநாதர் கையை உயர்த்தினார், ஏசுநாதர் பல சொற்களை மொழிந்தார். இப்போது சொல்லுங்கள் எங்கே உங்கள் ஒட்டகங்கள்? எங்கே உங்கள் வியாபாரிகள்? எங்கே போயிற்று உங்கள் செல்வக்களஞ்சியம்? பாதச் சுவடு அற்ற பாலைவன மணல் வெளியிலா, பாதையற்ற பாலை வனத்திலா? மறுபடியும் பாலைவன ஊதைக் காற்று அடித்து மணலை விலக்கி அவர்களை வெளிப்படுத்தும். கட்டாயம் மறுபடியும் மறுபடியும் பாலைவன ஊதைக் காற்று வீசும்.

மேரி : இது ஒரு கனவு. மலையின் உச்சியிலே காணும் கனவு. என் அண்ணனை எனக்குத் தெரியும். அவர் வாழும் உலகத்தையும் பயணம் செய்யும் உலகையும் நான் அறிவேன். நான் ஒருபோதும் அந்த உலகைப் பார்த்ததில்லை. இருந்தாலும் நீங்கள் கூறுவதெல்லாம் எனக்கு விசித்திர மாகவே இருக்கின்றது. மலைப் பள்ளத் தாக்கில் யாரோ கூறும் கதை போல் உள்ளது என்னால் துல்லியமாகக் கேட்க முடிய வில்லையே!

லாசரஸ்: மலைப் பள்ளத்தாக்கிலே எல்லாம் மாறுபட்டு, வேறுபட்டு இருக்கின்றன. அங்கே தூக்கி நிறுத்தலும் இல்லை, நீட்டி அளப்பதும் இல்லை. அங்கே உன் காதலருடன்

அமைதியாய் இருப்பாய்! (சிறிது மௌனம்)

ஓ...என் காதலே! விண்வெளியெங்கும் மணக்கும் என் காதல் ஓவியமே! எனக்காகப் பறக்க இறக்கை விரிக்கப்பட்டு விட்டதா? சொல்லுங்கள். என் இதயத்தின் அமைதியிலே ஒலிக்கட்டும்! என்னைத் தேடி அலை கின்றாயா? என் பிரிவு உனக்கு வேதனை அளிக் கின்றதா? நானும் விண்வெளியில் மணம் கமழ்கின்றேனா? பறக்கச் சிறகை விரித்து விட்டேனா? என் இன்னுயிர்க் காதலே சொல். கொடுமை இரு மடங்கா கின்றதா? ஏசுநாதருக்கு இன்னொரு சகோதரன் அந்த உலகிலே இருக்கின்றானா? உன்னை இன்னுயிர் வாழ்விலிருந்து மரணத்தற்கு அழைக்கின்றாரா? உமக்குத் தாய், தந்தை, சகோதர சகோதரிகள், நண்பர்கள் என்று மந்திர தந்திர மாய்ப் புதிராய் இருக்கின்றீர்களா? ஆசீர் வதிப்பதிலேயே கொடுமைகள் இரண்டாக உருப் பெற்றதா?

மேரி : இலலை அண்ணா, இல்லை. இந்த ஒரு உலகத்திற்கு ஒரே ஒரு ஏசுநாதர்தான் இருக் கின்றார். மற்ற எல்லாம் வெறும் கனவுதான் உங்கள் காதலியேகூட ஒரு கனவுதான்.

லாசரஸ்: (உணர்ச்சி பொங்க) இல்லை. இல்லை! ஏசுநாதர் கனவாக இல்லையென்றால் அவர் ஒன்றுமே இல்லை. அவருக்கு இந்த ஜெருசலத் திற்கு அப்பால் என்ன இருக்கின்றது என்று தெரிய வில்லையானால் அவரே ஒன்றும் இல்லாத வர்தான். விண்வெளியில் இருக்கும் என் காதலி பற்றி அறியாதவராய் இருந்தால், அவர் ஒன்று மில்லாதவர்தான். அவர் என் ஆண்டவரும் இல்லை. ஓ... என் தோழரே! ஏசுநாதரே! நீங்கள் ஒருமுறை உணவு

மேஜையண்டை எனக்கு ஒரு கோப்பைத் திராட்சை ரசம் கொடுத்தீர்கள். ''என் நினைவாக இதை அருந்து'' என்று பணித்தீர்கள். ஒரு சிறு ரொட்டித் துண்டைக் கிண்ணத்திலே உள்ள திராட்சை இரசத்திலே தோய்த்து, ''இதை உண்ணு. இது என்னுடைய ரொட்டித் துண்டின் என்பங்கு'' என்றீர். ஓ... என் நண்பரே! நீங்கள் என் தோள்களின் மேல் கைகளைப் போட்டு, ''மகனே!'' என்று அழைத்தீர்கள். என் தாயும் சகோதரிகளும் தங்கள் இதயத்திலே கூறிக் கொண் டார்க்ள: ''அவர் எங்கள் லாசரை நேசிக் கின்றார்?'' நான் உங்களை நேசிக்கின்றேன். நீங்கள் விண்ணிலே கோட்டைகளைக் கட்டப் போய் விட்டீர்கள். நான் என் காதலியிடம் சென்றேன். சொல்லுங்கள்! இப்போது சொல்லுங்கள்! என்னை ஏன் மறுபடியும் கொண்டு வந்தீர்கள்? எல்லாம் அறிந்த உங்கள் இதயத்திற்குத் தெரியாதா, நான் என் காதலியுடன் இருப்பேன் என்று. லெபனான் நாட்டு மலைச் சிகரங்களின்மேல் உலவும் போது அவளை நீங்கள் பார்த்ததில்லையா? கட்டாயம் நீங்கள் அவளை என் கண்மணிப் பாவையில் கண்டீர்கள். நான் உங்கள் எதிரில் சமாதியின் வாயில்படியில் நின்றபோது நீங்கள் பார்க்கவில்லையா? உங்கள் காதலி சூரியனில் இல்லையா? உம்மைவிடப் பெரியதாக ஏதோ ஒன்று உம்மிடமிருந்து அவளைப் பிரிக்க வில்லையா? உங்கள் பிரிவிற்குப் பிறகு என்ன சொல்கின்றீர்கள்? நான் இப்போது உங்களிடம் என்ன முறையிடட்டும்?

பைத்தியக்காரன் : அவர் என்னையும் திரும்பி வரச் சொன்னார். ஆனால், நான் கீழ்ப்படிய வில்லை. எனவே, எல்லோரும் என்னைப் பைத்தியக்காரன் என்கின்றனர்.

மேரி : லாசரஸ் ! எனக்கு ஒரு காதலர் விண்ணிலே இருக் கின்றாரா? என் ஏக்கம் ஒரு இன்னுயிரை இந்தப் பூமிக்கும் அப்பால் உருவாக்கி இருக்குமா? அவருடன் இருக்க நான் இறக்க வேண்டுமா? ஓ... என் அன்பு அண்ணாவே! சொல்லுங்கள் எனக்கு ஒரு துணைவன் உள்ளாரா? அப்பாடியனால் நான் வாழ்ந்து இறந்து மறுபடியும் பிறந்து இறந்துவிடத் தயாராய் இருக்கின்றேன். எனக்கு ஒரு இனிய துணைவன் காத்துக் கொண்டிருப்பாரானால் நான் என்னையே திருப்திப்படுத்திக் கொள்வேன். அவருக்காக நான் எல்லா வற்றிலும் திருப்தி கொள்வேன்.

பைத்தியக்காரன் : ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒரு காதலன் விண்ணிலே இருக்கின்றான். ஒவ்வொரு பெண்ணின் இதயமும் அண்ட வெளியிலே ஒரு இன்னுயிரை உற்பத்தி செய் கின்றது.

மேரி : (மென்மையாக அவர் கூறியதைச் சொல்லிக் கொண்டே) எனக்கு ஒரு ஆருயிர் விண் வெளியில் காத்துக்கொண்டிருக்கின்றதா?

லாசரஸ்: எனக்குத் தெரியாது. ஆனால் உனக்கு ஒரு காதலன் இருந்திருந்தால், அந்த உயிரை நீ கட்டாயம் எங்காவது எப்போதாவது எப்படி யாவது கட்டாயம் சந்திப்பாய். யாருமே உங்கள் இருவரையும் பிரிக்க முடியாது.

பைத்தியக்காரன் : அவர் இங்கேயே இருப்பார். உன்னைக் கூப்பிடுவார். ஆனால் உலகில் உள்ள மிகப் பலருக்கும் 'இறைவன் குரல்' கேட்காதது போல் உனக்கும் கேட்காது.

லாசரஸ்: (மேடையின் மத்தியில் வந்து) காத்திருக்க! ஒவ்வொரு பருவத்திலும் அடுத்த பருவத்

திற்காகக் காத்திருக்கவா; மறுபடியும் அந்தப் பருவத்திலே மேற்கொண்டு வரும் இன்னொரு பருவ காலத்திற்கு எதிர்பார்த்திருக்கவா? உலகில் உள்ள எல்லாம் முடியும் என்று எதிர்பார்த்து உன் முடிவே நெருங்கிவிடும். உன் முடிவே உனக்கு ஆரம்பமும் ஆகிவிடும். எல்லோருடைய பேச்சுக் களையும் கேட்டுப் புரிந்து கொள்வதற்குள் சொற்கள் உருகி மௌனமாகிவிடும். உன் இதயத்தே தோன்றி வெளிப்படும் குரலைப் பாதுகாத்திடு. அதுதான் உன் தூக்கத்திலும் குர லெழுப்பும்.

பைத்தியக்காரன் : கடவுளின் குழந்தைகள் மனிதரின் குழந்தைகளை மணந்து கொண்டார்கள். பிறகு அவர்களை திருமண விலக்கு செய்து கொண் டார்கள். இப்போது மனிதரின் குழந்தைகள் இறைவனின் குழந்தைகளுக்காக ஏங்கு கின்றார்கள். எல்லோரையும் கண்டு பரிதாபப் படுகின்றேன். பாவம், மனிதனின் குழந்தைகள்! ஐயோ பாவம் கடவுளின் குழந்தைகள்! (மௌனம்)

மார்த்தா : (வாயிற்படியில் வந்து நிற்கின்றாள்.) லாசரஸ் ஏன் வெளியிலேயே இருக்கின்றாய். வீட்டிற்குள் வா; நம் அன்னை உணவு தயார் செய்துவிட்டாள். (சிறிது அமைதி இன்றி) நீயும் மேரியும் சேர்ந்து இருக்கும்போது, பேசிக் கொண்டே இருக் கின்றீர்கள். பேச்சுக்கு, பேச்சு; யாருக்குமே நீங்கள் என்ன பேசிக் கொள்கின்றீர்கள் என்று புரியவே இல்லை.

(மார்த்தா சிறிது நேரம் நிற்கின்றாள். பிறகு வீட்டினுள் போகின்றாள்.)

லாசரஸ் : (தனக்குத்தானே பேசிக்கொள்கின்றான். மார்த்தா கூறியது எதையும் கேட்டதாகவே தெரிய

வில்லை.) ஓ...நான் வீணுக்கு வாழ்ந்து விட்டேன். என் உயிர் உணர்வெல்லாம் நைந்து எரிந்து விட்டேன். எனக்குப் பசிக்கின்றது. தாக மெடுக்கின்றது. எனக்குக் கொஞ்சம் ரொட்டியும் திராட்சை இரசமும் தருகின்றீர்களா?

மேரி : (லாசரசை நெருங்கி அவன் தோள் மேல் கைகளைப் போட்டுக்கொண்டு) அண்ணா, நான் கொடுக்கின்றேன். வீட்டிற்குள் வாருங்கள். நம் அன்னை உணவு சமைத்துத் தயாராக வைத் திருக்கின்றார்.

பைத்தியக்காரன் : அவர் கேட்கும் ரொட்டியை உங்களால் தயாரித்துத் தர முடியாது. அவர் கேட்கும் திராட்சை இரசத்தைப் பிழிந்து ஊற்ற உங்களிடம் குவளையே இல்லை.

லாசரஸ்: நான் உங்களிடம் எனக்குப் பசி, தாகம் என்று சொன்னேனா? எனக்கு நீங்கள் தயாரிக்கும் ரொட்டியை உண்ணப் பசி இல்லை. உங்கள் திராட்சை இரசத்தைப் பருகத் தாகமில்லை. என்னுடைய காதலரின் கைகள் இந்த வீட்டுக் கதவுகளின் தாழ்ப்பாள்களைத் திறக்கு மட்டும் நான் வீட்டிற்குள் நுழைய மாட்டேன். அவர் என் அருகே நின்று உபசரிக்காமல், நான் விருந்தில் கலந்து கொள்ள மாட்டேன். (தாய் கதவின் வழியாக உற்றுப் பார்க்கின்றாள்.)

தாய் : லாசரஸ், நீயேன் இப்போது வெளியில் கொட்டும் மூடுபனியில் நிற்கின்றாய்? மேரி, நீயும் ஏன் வீட்டிற்குள் வரக்கூடாது? உணவு தயாராகி மேஜை மேல் உள்ளது! மெழுகு வர்த்திகளை ஏற்றி வைத்திருக்கிறேன். பிறகு நீங்கள் ஏன் இருட்டில் நின்றுகொண்டு பேசிப்பேசிப் பொழுதைக் கழிக்கின்றீர்கள்? பேச்சையே மெல்லுகின்றீர், பிதற்றுகின்றீர்!

லர்சரஸ்: என்னைப் பெற்றெடுத்த தாயே என்னைச் சமாதியில் நுழையச் செய்வாள். அவள் என்னை அழைத்து உண்ணவும் குடிக்கவும் செய்வாள். பிணப் போர்வையால் மூடிய முகத்தை உடைய மக்களிடையே அமரச் செய்வாள். உலர்ந்து சுருங்கிய கைகளால் நிரந்தர சொர்க்கத்தில் வாழ ஆசீர்வதிப்பாள். மண் கோப்பையிலிருந்து உயிரை உற்பத்தி செய்வாள்.

பைத்தியக்காரன் : வெண் பறவைகள் தெற்கு நோக்கிப் பறந்து செல்கின்றன. அங்கே சூரியன் எல்லா உயிர்களையும் நேசிக்கின்றான்; காதலிக் கின்றான்! உன்னை விண்வெளியிலே நடு வானத்திலே எது ஏந்தி நின்றது? உன்னை மண்ணுக்குத் திரும்பக் கொண்டு வந்தது யார்? அவர்தான் உன் அன்பு நண்பர், ஏசுநாதர். நாசரத்திலே உதித்த ஏசு கிறிஸ்து. இறக்கைகள் அற்ற உன் மேல் பரிதாபம் கொண்டு உன்னை ஏசுநாதர் விண்ணிலிருந்து மண்ணுக்குக் கொண்டு வந்தார். ஓ வெண்மைப் பறவையே! இங்குக் கடும் குளிர். உன் உடலெல்லாம் நடுங்குகின்றது. வடக்குக் காற்று உன் சிறகுகளிலே சிரிக்கின்றதே!

லாசரஸ்: நீ ஒரு வீட்டிலே கூரையின் கீழ் இருப்பாய். நீ நான்கு சுவர்களுக்குள் கதவு, ஜன்னல்கள் அமைந்திருக்கும் வீட்டிற்குள் வசிப்பாய், நீ இங்கேயே இருப்பாய்,. ஆனால் உனக்கு விண்ணுலக ஞானப்பார்வை இருக்காது. உன் உள்ளம் இங்கிருக்கும். என்ஆத்மா அங்கே தான் இருக்கும். நீங்கள் எல்லோரும் மண் ணுலகில் வசிக்கின்றீர்கள். ஆனால் உன் உயிரும் உணர்வும் விண்ணுலகில் வாழ்கின்றன. நீங்கள் மண் மேல் நெளிகின்றீர்கள். நான்

அண்டவெளியிலே மிதக்கின்றேன். நீங்கள் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் அடிமைகள். உங்களை நீங்களே வணங்கி வழிபடுகின்றீர்கள். நீங்கள் தூக்குகின்றீர்கள்; ஆனால் கனவு காண்பதில்லை. நீங்கள் விழித் திருக்கின்றீர்; ஆனால் மலைச் சரிவுகளிலே நடப்பதில்லை. நேற்று உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் கண்டு வெறுத்து விட்டேன். நான் அந்த உலகத்தைத் தேடி அலைகின்றேன். அதை நீங்கள் மரணம் என்கின்றீர்கள். நான் விரும்பி ஏங்குவது இறப்பதற்காகத்தான். நான் இந்த விநாடி, இங்கே நின்று கொண்டிருக்கின்றேன். நீங்கள் எதை உயிர் வாழ்க்கை என்று கூறுகின்றீர்களோ, அதை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றேன்.

மார்த்தா : (லாசரஸ் பேசிக் கொண்டிருக்கும்போது வீட்டை விட்டு வெளியே வந்து) ஆண்டவன் நம் துன்பங்களையும் துயரங்களையும் கண்டார். அவரே உன்னை எங்களிடம் அழைத்து வந்தார். இருந்தாலும் நீ எதிர்த்துப் போரிடுகின்றாய்! ஓ... ஆடைகள் எல்லாம் நெய்த நெசவாளியையே எதிர்க்கின்றன. கட்டிய வீடுகள் எல்லாம் கொத்தனார்களையே எதிர்த்துப் போரிடுகின்றன!

மேரி : (கடவுள்) அவருக்கு நம் இதயம் தெரியும். நமக்குக் கருணை பொழிகின்றார். அவர் கண் மணிப் பாவையிலே தன் இறந்த மகனைப் புதைத்து வைத்திருப்பதையும், அவளுடைய துயரம் இறைவனையே தாங்கி நிற்பதையும் கண்டார். ஒரு கணம் ஆடாமல் அசையாமல் நின்றார். மௌனமானார். (சிறிது இடைவெளி) பிறகு நாங்கள் அவரைத் தொடர்ந்தோம், உன் சமாதிக்கு.

லாசரஸ்: ஆமாம்! அது என் தாயின் துயரம்தான். உன் துயரம்தான் பரிதாபம். சுய பரிதாபம். அதுவே என்னைத் திரும்பக் கொண்டுவந்தது. சுய பரிதாபம் எவ்வளவு தன்னலமானது! எவ்வளவு ஆழமானது! நான் எதிர்த்துப்போரிட்டேன் என்று சொல்லிக்கொள்கின்றேன். வசந்தத்தைக் குளிர் காலமாக மாற்றக் கூடாது என்று தெய்வீகத்திற்கே முறையிடுகின்றேன். நான் ஏக்கத்தால் மலை உச்சிக்கு ஏறினேன். உங்கள் துக்கமும் துயரமும் என்னைப் பள்ளத் தாக்கிற்குத் திரும்பக் கொண்டு வந் துவிட்டன. நீங்கள் தன் மகன், தன் அண்ணன் எப்போதும், உங்களுடனே வாழ்வெல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்பினீர்கள். உங்கள் அக்கம் பக்கத்தார் ஒரு அற்புதம் நிகழ வேண்டு மென்று விரும்புகின்றார். நீயும், உங்கள் அண்டை வீட்டாரும் உங்கள் அப்பன் பாட்டன் பூட்டன் எல்லோரும் அற்புதம் நிகழவே ஆசைப் படுகின்றனர். வாழ்க்கையில் நடை பெறும் மிகச் சாதாரணமான நிகழ்ச்சிகளை நீங்கள் நம்ப வேண்டும். நீங்கள் எவ்வளவு கொடியவர்கள்; உங்கள் இதயம் எப்படி இருப்பினும் கடியதாக உள்ளது; உங்கள் கண்கள் எவ்வளவு இருண்ட இரவாய் இருக்கின்றது; இதற்காக நீங்கள் தீர்க்கதரிசி களை விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வரச் செய்கின்றீர். உங்கள் மகிழ்ச்சிக்காக அவர் பெருமையைப் பலியிடுகின்றீர். பிறகு தீர்க்கத் தரியையே சிலுவையில் அறைகின்றீர்.

மார்த்தா : (கடிந்துரைத்து) எங்கள் துன்பத்சை் சுய பரிதாபம் என்கின்றாரா? உன் அழுகை யெல்லாம் சுய பரிதாபம் அன்றி வேறென்ன? பொறுமையாயிரு! இறைவன் உனக்களித்த வாழ்க்கையை நீ ஏற்றுக்கொள்.

லாசரஸ்: அவர் எனக்கு வாழ்க்கையைக் கொடுக்க வில்லை. உனக்கு என் உயிரை அளித்தார். அவர் என்னிடமிருந்து என் காதலியின் உயிரை எடுத்துக்கொண்டார். அதை உனக்குக் கொடுத்துவிட்டார். இது உன் கண்களையும் காதுகளையும் திறந்துவிட்ட ஒரு அற்புத நிகழ்ச்சி. அவர் என்னைப் பலி பீடத்தில் தியாகம் செய்யுமுன் அவர் தன்னையே பலி யிட்டுக்கொண்டார். (விண்ணோக்கி முறை யிடுகின்றார்.) அப்பனே! இவர்களை மன்னித்து விடு! அவர்கள் செய்வது அவர்களுக்கே தெரிய வில்லை.

மேரி : (ஆச்சரியத்துடன்) இந்தச் சொற்களைக் கூறியவரே அவர்தான் (ஏசுநாதர்தான்). சிலுவையிலே தொங்கி இருக்கும் போதுதான் இந்தச் சொற்களைப் புகன்றார்!

லாசரஸ்: ஆம். இந்தப் புனித மொழியைச் சொன்னது எனக்காகவும் அவருக்காகவுமேதான். முன்பின் தெரியாதவர்களுக்குப் புரியும். ஆனால் அவர் களைப் புரிந்து கொள்ள முடியாது. இந்தப் புனித மொழிகளைச் சொன்னதே உங்கள் கண்ணீர், எனக்காகக் கெஞ்சி அழும்போது அல்லவா? இது உங்கள் ஆசையன்றி அவருடைய எண்ண மில்லை. அவருடைய உள் உணர்வு (ஆத்மா) அடைக்கப்பட்ட கதவு களின் அருகே நின்று என்னை உங்களுகுக் கொடுக்கும்படி ஆதி அந்தம் அற்ற பரம் பொருளை வேண்டவில்லையா? அந்தப் பழமையான ஏக்கம்தான், ஒரு மகனுக்கும் அண்ணனுக்கும் ஏங்கிய விருப்பம்தான் என்னைத் திரும்ப அழைத்து வந்தது.

தாய் : (நெருங்கி வந்து தோள்களின் மேல் கை போட்டு) லர்சரஸ், நீ எப்போதுமே கீழ்ப்

படியும் மகன். என் பாசத்திற்குரிய மகன். இப்போது ஏன் இப்படி மாறிவிட்டாய்? என்னஆயிற்று? எங்களுடன் இனிதே இருந்து எல்லாத் தொல்லைகளையும் மறந்துவிடு!

லாசரஸ்: (கைகளை உயர்த்தி) என் தாயும் என் சகோதரர்களும் என் சகோதரிகளும்தான் என் பேச்சைக் கேட்கின்றனர்.

மேரி : இவைகளும் அவர் (கடவுளின்) மொழியே!

லாசரஸ்: ஆம். இந்தச் சொற்களை எனக்காகவும், அவருக்காகவுமே அவர் கூறினார். எல்லோருக்கும்-மண்ணைத் தாயாகவும், விண்ணைத் தந்தையாகவும் கொண்டவர்களுக்குக் கூறினார். யார் யார் சுதந்திரமாய்ப் பிறந்தார்களோ, யார் யாருக்கு நாடு, மொழி, இனம், நிறம் என்று பேதம் இல்லையோ, அவர்களுக்காகவே புகன்ற மொழிகள் இவை.

பைத்தியக்காரன் : என் கப்பல் தலைவனே, பாய்மரங்கள் விரிக்கப்பட்டுக் காற்று வீச ஆரம்பித்துவிட்டது. கடலிலே பயணம் செய்யத் தயாராகி விட்டாய். நீ ஆசீர்வதிக்கப் பட்ட தீவுகளைத் தேடிப் புறப்பட்டு விட்டாய். எந்தக் காற்று என் பாதையை மாற்றி விட்டது? இந்தக் கடற்கரைக்கு நீ எப்படி, ஏன் வந்து சேர்ந்தாய்? நாசரத்தின் ஏசுநாதர்தான் தன் உயிர் மூச்சால் காற்றிற்கு ஆணையிட்டு, வெற்றுப் பாய்மரத்தின் மேல் உயிர்க்காற்றை வீசச் செய்து, எங்கே நிறைந்து இருந்ததோ அங்கே அந்தக் காற்றை வெளியேற்றி விட்டார்.

லாசரஸ்: (திடீரென்று எல்லோரையும் மறந்தார். தலையை விண்ணோக்கி நிமிர்த்தி, கைகளை மேலே உயர்த்தி) ஓ... என் காதலியே! உன் கண்களிலே காலை மலர்கின்றது. அந்தப்

புலரும் பொழுதிலே ஆழ்ந்த இருண்ட இரவின் புதிர்கள் மௌனமாய் இருக்கினற்ன! ஒரு முழு நாள் பொழுது ஒரு சத்தமற்ற சத்தியத்தை வெளிப்படுத்தியது. நான் முழுமை அடைந்தேன். எல்லாம் வாய்த்து நிறைந்தது. ஓ... என் காதலியே! இந்த உயிர் நம்மிரு வருக்கும் இடையே துகிலாய் மறைக் கின்றது. இந்த மரணத்திற்காக நான் வாழ்ந்து மறுபடியும் உயிர் வாழ்வதற்காக இறக்க வேண்டுமா? இந்தப் பசுமையெல்லாம் மாறி பழுப்பும், மஞ்சளுமாக மாறும் வரை நான் ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டுமா? இலை யெல்லாம் உதிர்ந்து நான் நிர்வாணமாய் நிற்கவா? இதே மாற்றம் மறுபடியும் மறுபடியும் நிகழவா? (சிறிது இடைவெளி) நான் கடவுளைச் சபிக்க முடியாது! ஆனாலும் ஏன், எல்லா மனிதர் களுக்கும் நான் ஏன் மறுபடியும் திரும்பி வர வேண்டும்? எல்லா ஆடு மேய்ப்போரையும் விட்டுவிட்டு நான் மட்டும் ஏன் பசும் புல் வெளியை விட்டுப் பாலைவனத்தற்கு விரட்டப்பட வேண்டும்?

பைத்தியக்காரன் : நாசரத்தின ஏசுநாதரே! அப்போது சொல்லுங்கள். ஏன் என்னை இப்படிச் சோதிக் கின்றீர்கள். நான் கீழே இறக்கப்படுவது நியாயமா? சாதாரண, கீழான, துக்கம் தோய்ந்த கல் உங்கள் பெருமைக்குப் புகழிற்கு உயர்கின்றது. நீங்கள் இந்தக் காதலனை அவன் காதலியிடமிருந்து பிரித்து விட்டீர். நீங்கள் ஏன் ஒரு உலகிற்கு என்னை அழைக்கின்றீர்? நீங்கள் அந்த உலகை விட்டு விரைவில் விலகிச் செல்வீர்கள் என்பது தெரிந்திருந்ததே. (ஒரு பெருங்குரலில் கூவினார்) ஏன்? ஏன்? என்னை ஏன் நீங்கள் முடிவற்ற நித்தியத்தின் இருதயத்தி லிருந்து இந்த வாழும் மரணத்திற்கு அழைத்து

வந்தீர்? ஓ...நாசரத்தின் ஏசுநாதரே; நான் உங்களைச் சபிக்க மாட்டேன். நான் உங்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பேன்.

(மௌனம். லாசரசின் பலமெல்லாம் இழந்து நீராய் ஓடிவிட்டது. தலை மாரிபின் மேல் சாய்ந்து தொங்கியது. சிறிது நேர ஆச்சரியமான மௌனத்திற்குப் பின் தன் தலையைத் தூக்கினார். முகத்திலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு மிக உரக்கக் கூவி கிரீச்சென்ற குரலில்.)

நாசரத்தின் ஏசுநாதரே! என் நண்பரே! நாம் இருவரும் சிலுவையில் அறையப்பட்டோம். என்னை மன்னித்து விடுங்கள்! மன்னியுங்கள். என்னை முழுமையாய் மன்னித்து விடுங்கள். நான் உங்களை ஆசீர்வதிக்கின்றேன். இப்போதும் எப்போதும் உங்களை வாழ்த்து கின்றேன்.

(இந்த நேரத்தில் ஒரு சீடர் தோன்றுகின்றார். மலையின் பக்கமிருந்து ஓடி வந்தார்.)

மேரி : பிலிப்ஸ்

பிலிப்ஸ் : அவர் உயிர்த்தெழுந்து விட்டார். மரணத்தி லிருந்து நம் ஆண்டவன் உயிர்த்தெழுந்தார். அவர் உடனே திருக்கோயிலின் முன் மண்டபத்திற்குப் போய்விட்டார்.

பைத்தியக்காரன் : அவர் உயிர்த்தெழுந்தார். பாருங்கள்! ஏசு மறுபடியும் சிலுவையில் அறைய்ப்படுவார்! ஒருமுறை அல்ல, ஆயிரம் முறை சிலுவையில் அறையப்படுவார்.

மேரி : பிலிப்ஸ், நண்பரே! என்ன சொல்லுகின்றீர்?

மார்த்தா : (சீடர் பிலிப்ஸ் பக்கம் ஓடிச் சென்று கைகளைப் பற்றிக் கொண்டு) உங்களைப் பார்ப்பதிலே எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா?

ஆனால் யார் உயிர்த்தெழுந்தது? யாரைப் பற்றி நீங்கள் பேசுகின்றீர்கள்?

தாய் : (பிலிப்ஸ் பக்கம் நடந்து வந்து) மகனே! வா... உள்ளே வா! இன்று இரவு எங்களுடன் உணவு உண்ணலாம். வா, மகனே!

பிலிப்ஸ் : (அவர்கள் பேச்சால் கொஞ்சமும் நெகிழாமல்) நம் ஆண்டவர் (ஏசுநாதர்)தான் புதை குழியிலிருந்து உயிர்த்தெழுந்தார். எழுந்தவுடன் திருக் கோயிலின் முகப்பு மண்டபத்திற்குள் சென்றார். (ஒரு ஆழ்ந்த மௌனம்)

லாசரஸ்: இப்போது நீங்கள் எல்லோரும் நான் கூறுவதைக் கேளுங்கள். எசுநாதர் உயிர்த்தெழுந்திருந்தால் எல்லோரும் அவரை மறுபடியும் சிலுவையில் அறைவார்கள். அப்போது அவரை மட்டும் சிலுவையில் ஏற்ற மாட்டார்கள். இப்போது நானும் ஏசுநாதரைப் பிரகடனப் படுத்துவேன். அப்போது என்னையும் சிலுவையில் ஏற்று வார்கள்.

(அவர் மிகவும் கண்ணியமாய் உயர்ந்து நின்று மலையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்) என் அருமைத் தாயே, சகோதரிகளே! நானும் ஏசுநாதரைத் தொடர்வேன். அவர்தான் எனக்கு உயிர் அளித்தார். அவரே என் உயிரைப் பறிக்கும் மரணத்தைக் கொடுக்கும் வரை தொடர்வேன். என்னையும் சிலுவையில் அறைவார்கள். அந்தச் சிலுவை ஏற்றம் இந்தச் சிலுவையில் அறைவதை முடிவு கட்டும். (சிறு மௌனம்) நான் இப்போது ஏசுநாதரின் ஆவியை அடைய வழி காண்பேன். என்னை விடுதலை செய்வார். அவர்கள் என்னை இரும்புச் சங்கிலியால் பிணைத்தாலும் நான் கட்டுக்குள் அகப்பட மாட்டேன்.

என்னை ஆயிரம் தாய்மார்களும் ஆயிரம் ஆயிரம் சகோதரிகளும் வந் துஎன் ஆடையைப் பற்றி வேண்டினாலும் என்னை யாராலும் நிறுத்தி வைக்கமுடியாது. கிழக்குக் காற்று எங்கெல்லாம் வீசுகின்றதோ, அங்கெல்லாம் நான் போவேசன். நான் என் காதலியை அறையும் மாலைச் சூரிய ஒளியிலே தேடுவேன். என் பகல் கால மெல்லாம் அமைதியிலே இளைப்பறட்டும். என் காதலியைப் புலரும் காலைப்பொழுது வரை இரவெல்லாம் தேடுவேன்.எல்லா விடியலும் தூங்கி வழிகின்றன. எல்லா மனிதர்களிலும் நான் ஒருவன் மட்டுமே இருமுறை வாழ்வின் துன்பங்களை அனுபவித்து இருமுறை மரண மடைந்து இருமுறை முடிவற்ற சொர்க்கத்தைக் கண்டவன் ஆவேன்.

(லாசரஸ் தன் தாயின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். பிறகு சகோதரிகளின் முகங்களைக்த துருவிப் பாரத்தார். பிறகு பிலிப்ஸின் முகத்தையும் நோக்கினார் மறுபடியும் தன் தாயின் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். பிறகு தூக்கத்திலே எழுந்து நடக்கும் ஒருவனைப் போல் திரும்பி மலையின் பக்கம் ஓடினார். விரைவில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார். எல்லோரும் அதிர்ச்சியால் வெலவெலத்து நின்றார்கள்.)

தாய் : மகனே, என் மகனே! என்னிடம் திரும்பி வா!

மேரி : அண்ணா, என் அண்ணா! எங்கே போகின்றீர்? வாருங்கள். எங்களிடம் ஓடி வாருங்கள்!

மார்த்தா : (தனக்குத்தானே) மிகவும் கரிய இருட்டு. அண்ணன் வழி தடுமறி விடுவாரே?

தாய் : (கிரீச்சிட்டு அழுது) லாசரஸ்! என் மகனே!

(சிறிது மௌனம்)

பிலிப்ஸ் : அவர், நாமெல்லாம் எங்குப் போவோமோ, அங்கேதான் போயிருக்கின்றார். மறுபடியும் திரும்பி வரவே மாட்டார்.

தாய் : (மேடையின் பின் முனைக்குச் சென்று, தன் மகன் லாசரஸ் எங்கே மறைந்தாரோ அங்கே நின்று) லாசரஸ், லாசரஸ், என் மகனே! என்னிடம் ஓடிவா!

(வீறிட்டு அலறினாள். லாசரஸ் ஓடும் காலடிச் சத்தம் மெல்ல மெல்லக் குறைகின்றது.)

பைத்தியக்காரன் : இப்போது லாசரஸ் போய்விட்டார். நீங்கள் யாரும் எட்ட முடியாத தூரத்தில் போய் விட்டார். இப்போது உங்கள் துயரம் வேறு ஒருவர் மேல் பட வேண்டும். (சிறிது இடைவெளி) லாசரஸ், ஏழை லாசரஸ் தியாகிகளிலே முதன்மை யானவர். தியாகிகள் எல்லோரிலும் மிக உயர்ந்தவர்! சிறந்தவர்! உண்மையானவர்!

-திரை-

○○○

அசில்பான்

(ஓரங்க நாடகம்)

இடம் :

பூரட் நகரில் யூசப் முஷிராவின் வீடு,

நேரம் :

1901ஆம் வசந்தத்தின் மாலை நேரம்.

நாடக நடிகர்கள் :

பால் அசில்பான்-பாடல் கலைஞர், எழுத்தாளர்
யூசப் ஷிரா: எழுத்தாளர், அறிவியல் மேதை
ஏலன் : யூசப்பின் சகோதரி
சலீம் மோவாட் : கவிஞர், புல்லாங்குழல் கலைஞர்
கலீல் பேடேமர் - அரசாங்க அதிகாரி

யூசப் முஷிராவின் மிகப்பெரிய மாளிகை, அழகான விசாலமான கூடம், வேலைப்பாடு நிறைந்த பெரிய மேசை. அதன் மேல் புத்தகங்கள், செய்தித்தாள்கள், மாத வார இதழ்கள் நிறைந்து உள்ளன. அழகுநாற்காலியில் அமர்ந்து கலீல் பேடேமர் துருக்கி நாட்டு சுருட்டை புகைத்துக கொண்டு மெய்ம்மறந்து இருக்கினற்ார. ஏலன் ஆடையில் அலங்கார பூவேலை செய்து தைத்துக் கொண்டு இருக்க,

யூசப் முஷிரா சிகரெட்டைப் புகைக்கின்றார்.

திரை விலகுகின்றது

கலீல் : (யூசப்பைப் பார்த்துப் பேசுகின்றார்).

நான் இன்று உங்களின் அழகுக்கலை பற்றிய கட்டுரையை, விமர்சனத்தைப் படித்தேன்; ரசித்தேன்; பூசித்தேன். அதில் தொனித்த ஐரோப்பிய புகழுரைப் பாணியை நான் இது வரை படித்த எல்லாவற்றிலும் மிகமிக சிறப் பானதாகப் போற்றிப் புகழ்வேன். ஆனாலும் மேல்நாட்டு படிப்பு, நாகரீகம் இதன் ஆளுமையிலே உள்ள கேடுகளைக் கூர்ந்து உணர்கின்றேன்.

யூசப் : நண்பரே நீங்கள் கூறுவது சரியாகவே இருக்கலாம். இருந்தாலும் உங்கள் செயல் பாடுகள் உங்கள் எண்ணங்களுக்கு மாறுபட்டு முரண்படுகின்றனவே! நீங்கள் மேற்கத்திய நாகரிக உடைகளை அணிந்து கொள்கின்றீர். அவர்களின் பாத்திரங்களையே உங்கள் சமையல் அறையில் உபகோகிக்கின்றீர். அவர் களின் மேசை நாற்காலிகளிலேதான் அமர்ந்து உண்ணுகின்றீர். இவற்றிற்கெல்லாம் மேலாக நீர் அரபிக் இலக்கியங்களைப் படிக்காமல் மேற்கு நாட்டு இலக்கியங்களையே அதிகமாய்ப் படிக்கின்றீர்.

கலீல் : இவையெல்லாம் வெளித்தோற்றம். உண்மை யான பண்பாட்டிற்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லவே இல்லை.

யூசப் : ஆம். மிகவும் முக்கியமான உயிரோட்டமுள்ள தொடர்பும் உயிர் சத்தும உள்ளன. இந்தப் பண்பாட்டை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். அப்போதுதான் உங்களுக்குத் தெரியும்;

புரியும். நம் பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, சமூக ஏற்பாடு, மத, இன நம்பிக்கைகள் அனைத்தின் மேலும் இதன் தாக்கமும் ஆதிக்கமும் இருப்பதைக் கலையும் பண்பாடும் பிரதி பலிக்கும். இதை வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் செயலிலும் உணர்வீர்.

கலீல் : நான் ஒரு சுதேசியவாதி; நான் எப்போதும் சுதேசியாகவே இருப்பேன். என் உடை ஐரோப்பிய பாணியில் இருந்தாலும்கூட என் உணர்வு மட்டும் எப்போதும் சுதேசியமே.

யூசப் : சரி அப்படியானால் அரபிக் இலக்கியம் அழிந்து மறைந்து போக நீ சபிப்பாயா? தண்டிப்பாயா?

கலீல் : அது எப்படி முடியும்?

யூசப் : பழைய பண்பாடும் பழக்க வழக்கங்களும் புதுமையான மாற்றங்களால் உயிரூட்டப்படா விட்டால் கட்டாயம் அதற்கு அறிவு சார்ந்த மாற்றம் இன்றி அழிந்து ஒழியும்.

கலீல் : இதற்கு ஆதாரம் என்ன? எங்கே?

யூசப் : என்னிடம் ஆயிரம் ஆயிரம் சான்றுகள் உள்ளன. ஆதாரம் ஏராளம்!

(இந்தச் சமயத்தில் பால் அசில்பான், சலீம் மோவாட் இருவரும் நடந்து வந்தனர். எல்லோரும் எழுந்துநின்று மரியாதை செலுத்தினர்)

கலீல் : அன்பு சகோதரர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக! (பால் அசில்பானைப் பார்த்து) வருக! வருக! சிரிய நாட்டின் இசைக்குயிலே வருக!

(ஏலன் கனிவாகப் பால்அசில்பானை பார்க்கின்றாள். முகம் மலர, கன்னங்கள் சிவக்க, மகிழ்ச்சி பொங்கியது.)

சலீம் : யூசப் அவர்களே, பாலைப் புகழ்வதை

நிறுத்துங்கள்!

யூசப் : ஏன்?

சலீம் : (கடுமையாக இருப்பதாய் பாசாங்குடன்) ஏன் தெரியுமா? அவர் மரியாதையற்ற பெருமையற்ற புகழ் குறைந்த செயலைச் செய்திருக்கின்றார். ஒரு விசித்திரமான மனநிலைக்கு இடமளித்து விட்டார். அவர் ஒரு பைத்தியக்காரர்.

பால் : (சலீமை நோக்கி) அப்பனே! என் குறைபாடு களைப் பெரிதாக்கிக் காட்டவா உம்மை என்னுடன் அழைத்து வந்தேன்?

ஏலன் : சலீம், அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது? புதுமை யாக என்ன தவற்றை பால் அவர்களிடம் கண்டு விட்டீர்?

சலீம் : புதிய தவறு ஒன்றுமில்லை. ஆனால் பழைய தவறுதான். அதை எல்லையற்ற முடிவிற்கு இழுத்துவிட்டதால் புதியதாகத் தோன்றுகின்றது என்ன செய்ய?

யூசப் : என்ன நிகழ்ந்தது என்று சொல்லுங்களேன்!

சலீம் : (பாலை நோக்கி) நண்பரே நான் அதைப்பற்றி பேசுவதை விரும்புகின்றீரா? இல்லை நீங்களே விளக்கமாக ஒப்புதல் விளக்கமளிக்க விரும்பு கின்றீரா?

பால் : தயவு செய்து நீங்கள் பேசாமல் சமாதியின் மௌனத்தை கடைப்பிடியும். இன்றேல் கிழவியின் இருதயம் போல் அசையாமல் இருந்து விடும்!

சலீம் : பிறகு நான் பேசுகின்றேன்.

பால் : இந்த இனிய மாலைப்பொழுதைக் கெடுத்துக் குழப்ப சபதம் பூண்டுவிட்டாயா?

புரியும். நம் பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, சமூக ஏற்பாடு, மத, இன நம்பிக்கைகள் அனைத்தின் மேலும் இதன் தாக்கமும் ஆதிக்கமும் இருப்பதைக் கலையும் பண்பாடும் பிரதி பலிக்கும். இதை வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் செயலிலும் உணர்வீர்.

கலீல் : நான் ஒரு சுதேசியவாதி; நான் எப்போதும் சுதேசியாகவே இருப்பேன். என் உடை ஐரோப்பிய பாணியில் இருந்தாலும்கூட என் உணர்வு மட்டும் எப்போதும் சுதேசியமே.

யூசப் : சரி அப்படியானால் அரபிக் இலக்கியம் அழிந்து மறைந்து போக நீ சபிப்பாயா? தண்டிப்பாயா?

கலீல் : அது எப்படி முடியும்?

யூசப் : பழைய பண்பாடும் பழக்க வழக்கங்களும் புதுமையான மாற்றங்களால் உயிரூட்டப்படா விட்டால் கட்டாயம் அதற்கு அறிவு சார்ந்த மாற்றம் இன்றி அழிந்து ஒழியும்.

கலீல் : இதற்கு ஆதாரம் என்ன? எங்கே?

யூசப் : என்னிடம் ஆயிரம் ஆயிரம் சான்றுகள் உள்ளன. ஆதாரம் ஏராளம்!

(இந்தச் சமயத்தில் பால் அசில்பான், சலீம் மோவாட் இருவரும் நடந்து வந்தனர். எல்லோரும் எழுந்துநின்று மரியாதை செலுத்தினர்)

கலீல் : அன்பு சகோதரர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக! (பால் அசில்பானைப் பார்த்து) வருக! வருக! சிரிய நாட்டின் இசைக்குயிலே வருக!

(ஏலன் கனிவாகப் பால்அசில்பானை பார்க்கின்றாள். முகம் மலர, கன்னங்கள் சிவக்க, மகிழ்ச்சி பொங்கியது.)

சலீம் : யூசப் அவர்களே, பாலைப் புகழ்வதை

நிறுத்துங்கள்!

யூசப் : *ஏன்?*

சலீம் : *(கடுமையாக இருப்பதாய் பாசாங்குடன்) ஏன் தெரியுமா? அவர் மரியாதையற்ற பெருமையற்ற புகழ் குறைந்த செயலைச் செய்திருக்கின்றார். ஒரு விசித்திரமான மனநிலைக்கு இடமளித்து விட்டார். அவர் ஒரு பைத்தியக்காரர்.*

பால் : *(சலீமை நோக்கி) அப்பனே! என் குறைபாடு களைப் பெரிதாக்கிக் காட்டவா உம்மை என்னுடன் அழைத்து வந்தேன்?*

ஏலன் : *சலீம், அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது? புதுமை யாக என்ன தவற்றை பால் அவர்களிடம் கண்டு விட்டீர்?*

சலீம் : *புதிய தவறு ஒன்றுமில்லை. ஆனால் பழைய தவறுதான். அதை எல்லையற்ற முடிவிற்கு இழுத்துவிட்டதால் புதியதாகத் தோன்றுகின்றது என்ன செய்ய?*

யூசப் : *என்ன நிகழ்ந்தது என்று சொல்லுங்களேன்!*

சலீம் : *(பாலை நோக்கி) நண்பரே நான் அதைப்பற்றி பேசுவதை விரும்புகின்றீரா? இல்லை நீங்களே விளக்கமாக ஒப்புதல் விளக்கமளிக்க விரும்பு கின்றீரா?*

பால் : *தயவு செய்து நீங்கள் பேசாமல் சமாதியின் மௌனத்தை கடைப்பிடியும். இன்றேல் கிழவியின் இருதயம் போல் அசையாமல் இருந்து விடும்!*

சலீம் : *பிறகு நான் பேசுகின்றேன்.*

பால் : *இந்த இனிய மாலைப்பொழுதைக் கெடுத்துக் குழப்ப சபதம் பூண்டுவிட்டாயா?*

சலீம் : இல்லை. நம் நண்பர்களுக்கு என்ன நடந்தது என்று சொல்ல விரும்புகின்றேன்! நீ எப்படிப் பட்ட மனிதன் என்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?

ஏலன் : (சலீமை நோக்கி) என்ன நடந்தது? சொல்லுங்கள்!

(பாலை நோக்கி) பால் அவர்களே! சலீம் கூறும் குற்றம் குறைகள் உங்கள் நற்பண்புகளை வெளிச்சமிட்டுக் காட்டு வதாகவும் அமையலாமில்லையா?

பால் : நான் எந்தக் குற்றமும் செய்யவுமில்லை. மிக உயர்ந்த நற்செயலையும் பெற்றுவிடவில்லை. என் நண்பர் சலீம் மிகவும் ஆவலுடன் பேசி விளக்க விரும்புவது குறிப்பிடத்தக்க சிறந்த சங்கதியுமல்ல. மேலும் இதைப் பற்றி நாம் விரிவாகப் பேசி வீணாக பொழுதைப் போக்கவும் விரும்பவில்லை.

ஏலன் : நல்லது. நாம் கதையைக் கேட்போம்.

சலீம் : (ஒரு சிகரெட்டை உருட்டியபடியே யூசப் பக்கத்தில் அமர்ந்து-)

நண்பர்களே! தன் மகன் திருமணத்தை முன்னிட்டு ஜாலால் பாஷா திருமண விருந்து வைபவத்தை நீங்கள் அறிவீர்கள். அவர் நகரின் எல்லா பிரமுகர்களையும் விருந்துக்கு அழைத்தார் அல்லவா? (பாலைக் காட்டி) இந்த ராஸ்கலையும் என்னையும்கூட அழைத்தார். என்னை அவர் அழைத்த காரணம் என்ன தெரியுமா? நான் பால் அவர்களின் நிழல் என்பது பொதுவான நம்பிக்கை. நான் பாலுடன் இல்லையென்றால் அவர் பாடவே மாட்டார். வாழ்க அவர் இதயம்!

நாங்கள் தாமதமாகவே வந்தோம். அங்கே ஏற்கெனவே கவர்னர், பாதிரியார், அழகான சீமாட்டிகள், கவிஞர்கள், தளபதிகள்

எல்லோரும் அமர்ந்திருந்தனர்.

நாங்கள் திராட்சை ரசம் நிறைந்த கோப்பைகளுக்காக அருகில் அமர்ந்தோம். எல்லா விருந்திரும் வானுலகிலிருந்து வந்த தேவ கன்னியைப் பார்ப்பது போல் பக்திப்பரவசத்துடன் பால் அவர் களைக் கண்ணிமைக்காமல் பார்த்தனர்.

அழகு கொஞ்சும் ஆரணங்குகள் பால் அவர்களிடம் மலர்களையும், மதுக்கிண்ணங்களையும் அன்பு பொங்க அளித்து மகிழ்ந்தனர். ஏதன்ஸ் நகரில் போர்க்களத்தில் வெற்றிவாகை சூடி வீரமாய்ப் பவனி வரும் வீரர்களுக்குப் பெண்கள் வரவேற்பு அளிப்பதுபோல் இருந்தது.

சுருங்கச் சொன்னால் பால் தான் மகிழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் கௌரவமான மரியாதைக்கும் உரிய பரம்பொருள் போலிருந்தார். நான் என் புல்லாங்குழலை எடுத்து ஒரு இனிய இசையைத் தவழவிட்டேன்.

உடனே பால் அவர்கள் தன் திருவாயைத் திறந்து 'அல்பரீட்' கவிஞரின் பாடல் ஒன்றைப் பாடினார். விருந்தினர் அனைவரும் மெய்ம் மறந்து இன்னிசையை ரசித்து மகிழ்ந்தனர். 'எல்முசோலீ' எனும் மிகப்பெரிய இசைக் கலைஞர் தேவ லோகத்திலிருந்து மண்ணுலகம் சேர்ந்து காற்றின் இன்னிசையில் நனைந்து திளைத்தார். திடீரென்று கலைஞர்பால் தன் பாடலை நிறுத்திக் கொண்டார். கொஞ்சம் திராட்சை ரசத்தால் தொண்டைய நனைத்துக் கொண்டு சரி செய்த பின் பாடலைத் தொடர்வார் என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால் பால் மௌனமாய்

நிலைத்தார்.

பால் : நிறுத்துங்கள். இந்த அறிவு கெட்ட நிலை தொடர வேண்டாம். என் நண்பர்கள் யாருக்கும் என் பாடலிலே ஆர்வமே கொஞ்சமும் இல்லை.

யூசப் : தயவு செய்து மேற்கொண்டு மீதியையும் பாடுங்கள்.

பால் : உங்களுக்கு அரட்டை அடிப்பதுதான் பிடிக்கும் போலும். என் பாடல்களிலே ஆர்வமில்லை. விடைபெறுகிறேன்.

ஏலன் : (கனிவுடன் பாலைப் பார்த்து) தயவு செய்து உட்காருங்கள். எந்தக் கதை எப்படியோ இருந்து போகட்டும். நாங்கள் எல்லோரும் உங்கள் இசையைக் கேட்டு ரசிக்கவே இருக் கின்றோம். (பால் அமர்ந்தார். உற்சாகமில்லை.)

சலீம் : (பேச்சைத் தொடர்ந்தார்) 'அல்பரீட்' கவிஞரின் ஒரு பாடலைப் பாடினார்என்று சொன்னேன் அல்லவா? இது பசித்த ஏழைக்குக் கடவுளின் ரொட்டித் துண்டு ஒன்றைக் கொடுத்து சுவைக்க வைத்தவுடனே உணவு மேசையை உதைத்துத் தள்ளிக் கோப்பைகளையும் உணவுத் தட்டு களையும் உடைத்துக் கவிழ்த்ததற்கு ஒப்பான தாகும். நைல் நதி மணல் பரப்பில் மௌனமாய் அமர்ந்திருக்கும் மனித முக சிங்கம் (ஸ்பீனிக்ஸ்) போன்று இருந்தார் பால். அழகான ஆரணங்குகள் ஒருவர் பின் ஒருவராக இருக்கையிலிருந்து எழுந்து கவிஞர் பால் அவர்களைப் பாடும்படி வேண்டிக் கொண்டனர். அவர் 'தொண்டை சரி யில்லை. கம்மிவிட்டது' என்று பாட மறுத்தார். பிறகு மரியாதைக்குரிய பெரிய விருந்தினர்கள் அனைவரும் பாடும்படி கேட்டு முற்றுகை

யிட்டனர். கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் உறுதியாக மறுத்தார். கடவுள் அவர் இதயத்தைக் கல்லால் செய்து, சங்கீதத்தை அதில் நிலைக்கச் செய்துவிட்டார் போலும். நடு நிசி நெருங்கியது. ஜலால்பாஷா அவரைப் பக்கத்து அறைக்கு அழைத்தார். கை நியைப்பொற்காசுகளைக் கொட்டித் திணித்தார். ''கவிஞரே! நீங்கள் பாடாவிட்டால் இந்த விருந்தின் உயிருணர்வே குறைந்து சோபிக்காது. இந்தப் பரிசை நீங்கள் வெகுமதியாய் நினைக்காதீர். இதை ஒரு அன்பும் போற்றுதலும் நிறைந்த அடையாள மாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எங்களை ஏமாற்றத் திற்கு ஆளாக்கி விடாதீர்'' என்று பணிவன்புடன் வேண்டிக் கொண்டார். பால் பொற்காசுகளை வீசி எறிந்தார். வெற்றிவாகை சூடிய மன்னனின் குரலொலியால் ''என்னை அவமானப்படுத்து கின்றீர். நான் என்னையே காசுக்கு விற்க வர வில்லை. நான் உங்களின் நலம் நாடும் நண்பனாகவே இங்கு வந்துள்ளேன்.''

ஜலால்பாஷா பொறுமை இழந்தார். கடுமையான வார்த்தைகளை கொட்டினார். உடனே பால் அங்கிருந்து சடாரென்று எழுந்து மோசமான சொற்களால் சபித்துக் கொண்டே வெளியேறி னார். நான் என் புல்லாங்குழலை எடுத்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந் தேன். அழகான சீமாட்டிகள், சுவையான உணவு, இனிய திராட்சை ரசம் எல்லா வற்றையும் தியாகம் செய்து விட்டு வெதும்பிய உள்ளத்தோடு செல்கின்றேன். என் உறுதிமிக்க நண்பனுக்காக அனைத்தையும் துறந்தேன். ஆனால் நண்பன் பால் என் தியாகத் திற்கு நன்றி கூறவும் இல்லை. நான் அவர்பால் கொண்ட

பக்தியைப் புகழ்ந்துரைக்கவும் இல்லையே! என்ன சொல்ல!

யூசப் : (சிரித்துக் கொண்டே) உண்மையிலேயே இது மிகவும் சுவாரஸ்யமான கதை. இது கண்மணியின் கரும்பாவை மேல் பொன் ஊசியால் எழுதத் தக்க தகுதி வாய்ந்த ஒன்று தான்.

சலீம் : நான் இன்னும் முடிக்கவில்லையே! மிகவும் சுவாரஸ்யமான பகுதி இனிதான் வரப் போகிறது. எந்த இந்திய, பாரசீகக் கதை கூறுபவனும் இப்படிப்பட்ட கோரமான முடிவைக் கண்டு பிடிக்கவே இல்லை.

பால் : (ஏலனைப் பார்த்து)

சகோதரி, உனக்காக மட்டும் நான் இங்கே தங்கிவருவேன். தயவு செய்து இந்தத் தவளை ஓலமிடுவதை நிறுத்தட்டும்.

ஏலன் : அவன் என்ன வேண்டுமானாலும் கத்தட்டும். நாங்கள் எல்லாம் உங்கள் பக்கம்தான். இது உறுதி.

சலீம் : (இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகைத்துக் கொண்டே)

நாங்கள் பாஷாவின் மாளிகையை விட்டு வெளி யேறினோம். பால் பணக்காரர்களை சபித்தார். நான் மனதிற்குள்ளேயே பாலை சபித்துத் திட்டித் தீர்த்தேன். ஆனால் பாஷாவின் மாளிகையிலிருந்து நேரே நாங்கள் வீட்டிற்குச் சென்றோம் என்று நினைக்கின்றீர்களா? இல்லவே இல்லை. கேளுங்கள்! இதுதான் ஆச்சரியம்! அபீப் வீடு பாஷாவின் மாளிகைக்கு நேர் எதிரில்தான் இருக் கின்றது. தெரியு மல்லவா? இடையில் ஒரே ஒரு தோட்டம்தான் இரண்டையும் பிரிக்கின்றது.

அபீப் குடிக்க, பாட, கனவு காண விரும்புவான். (பாலைக் காண்பித்து) இவரை வணங்கிவழி படுவான். பால் வெளியே வந்தார். நடுத்தெருவில் நின்றார். நெற்றியை சிறிது தடவினார். ஆம், தளபதி பெரிய புரட்சியை அடக்க ஆழ்ந்து சிந்திப்பதைப் போல் திட்டமிட்டார். உடனே திடீரென்று அபீப்பின் வீட்டிற்குள் நுழைந்தார். கதவிலே உள்ள மணியை இசைத்தார். அபீப் என்னையும் பாலையும் பார்த்தான். அவன் கண்கள் பிரகாசமாக விரிந்தன. சொர்க்கத்தின் கதவுகள் திறந்து எங்களை அவன் எதிரே இறக்கி வைத்தது போல மகிழ்ந்தான்.

''நீங்கள் இந்த இனிய நேரத்தில் எப்படி இங்கு வந்தீர்கள்? என்ன மகிழ்ச்சி?'' என்றான். அபீப். உடனே பால் கூறினார்: ''நாங்கள் ஜலால் பாஷாவின் மகன் திருமணத்தைக் கொண்டாட உங்கள் வீட்டிற்கு வந்திருக்கின்றோம்.''

அபீப்-''ஏன் பாஷா வீடு உங்களுக்குப் பெரியதாக அமையவில்லையா?''

பால்-''பாஷாவின் வீட்டில் உள்ளவர்க்கு ரசிக்கும் காதுகள் இல்லை. எங்கள் இனிய இசையை உங்கள் வீட்டிலிருந்து இசைக்கப் போகின்றோம். கொண்டு வாருங்கள் சாராயத்தையும் நொறுக்குக் கார வகை களையும்! இதற்கு மேல் எந்தக் கேள்வியும் கேட்காதீர்!''

பிறகு நாங்கள் இருவரும் வசதியாக அமர்ந்தோம். முதலில் குடித்தோம். மறுபடியும் குடித்தோம். உடனே பால் எழுந்து சென்று பாஷா வீட்டை நோக்கியுள்ள ஜன்னல் களின் கதவுகளைத் திறந்தார். என்னிடம் குழலைக் கொடுத்தார். ''இக்குழல் தான் உம் கைத்தடி, மோசஸ் அவர்களே இதை இசைக்

கருவியாக்கி மிக நன்றாக விடாமல் தொடர்ந்து பாடுங்கள்!'' என்றார். உடனே கீழ்ப்படிந்தேன். வாசித்தேன். பால், பாஷா வீட்டின் பக்கம் திரும்பி உரத்த குரலில் எட்டுக கட்டையில் பாட ஆரம்பித்தார்.

(சலீம் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். பிறகு உரத்த குரலில்) கடந்த 15 ஆண்டு களாய்ப் பால் எனக்கு நண்பர்; அவரை நன்கு அறிவேன். நாங்கள்ஒன்றாகப் பள்ளியில் படித்தோம். அவர் மகிழ்ச்சியில் திளைத்த போதும் துக்கத்தில் தவித்த போதும் பாடிய பாடல்களை நன்றாகக் கேட்டிருக் கின்றேன்.

ஒரு கைம்பெண்ணின் ஒரே குழந்தை இறந்து விட்டால் அவள் எப்படி ஓலமிட்டு அழுது புலம்புவாளோ அப்படிப் பால் புலம்பிய தையும் கேட்டிருக்கின்றேன். காதலர் கொஞ்சிக் குலாவி இன்ப இசை பாடுவதுபோல் பாடு வதையும் கேட்டிருக்கின்றேன். வெற்றி வீரனைப் போல் வெற்றிப்பண் பாடியதையும் கேட்டிருக் கின்றேன். அவருடைய மௌனத் தையும் இர வெல்லாம் கேட்டிருக்கின்றேன். அந்த மௌனம் பலரைத் தாலாட்டித் தூங்க வைத் திருக்கிறது. அவர் லெபனான் நாட்டின் சமவெளியிலே பாடியபோது அவரை மாதா கோயிலின் மணி யோசையுடன் இணைந்து வான வெளி யெல்லாம் அமைதியும் ஆராதனையும் தவழ்ந்து நிறைந்தன. அவர் பாடல்களை ஆயிரம் முறை கேட்டு ரசித்தேன். அவருடைய சங்கீத ஞானத்தை நன்கு அறிவேன். இருந் தாலும் நேற்று இரவு பாஷாவின் வீட்டை நோக்கிப் பாடினார் அவல்லவா? இந்த மாமனிதரின் வாழ்க்கையை, பேராற்றலை நான் அறிந்தது சிறிதே? இப்போது தான் நான் அவரை முழுமையாகப் புரிந்து கொண்டேன். இதற்கு முன்பு நான் அறிந்தது அவரின்

நாவன்மையைத்தான் நேற்று இரவுதான் அவரின் இதயத்தையும் ஆத்மாவின் சங்கீதத்தை யும் கேட்டுணர்ந்தேன்...

பால் பாடல் பின்பாடலாகத் தொடர்ந்து பாடினார். காதலர்களின் ஆத்மா எங்கள் தலையைச் சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது; பழைய நினைவு களை அழைத்து இன்பமூட்டியது.

இரவு எதையெல்லாம் மூடி மறைத்து வைத்ததோ அதையெல்லாம் வெளிப் படுத்தியது. மனித வாழ்வின் நமப்பிக்கை களையும் கனவுகளையும் விளக்கியது. (பால் அவர்களைச் சுட்டிக்காட்டி) சீமான்களே! இந்த மாமனிதர் கலையின் உச்சியையே எட்டிவிட்டார். நட்சத்திரங்களையே தொட்டு விட்டார். பொழுது விடியும்வரை அவர் விண்ணிலே உயர உயரப் பறந்தாரே அன்றி மண்ணிலே இறங்கவே இல்லை. இதற் குள்ளாக விரோதிகளை எல்லாம் வெற்றி கொண்டு அடிபணிய வைத்துவிட்டார்.

இவர் குரலைக் கேட்கக் கேட்க பாஷாவின் வீட்டில் அமர்ந்திருந்தோர் எல்லாம் ஜன்னலை மொய்த்து கொண்டு கேட்டனர். நிரம்பி வழிந்த கனவான்கள் வெளியே வந்து தோட்டத்தில் மரத்தடியில் அமர்ந்து ரசித்தனர். யாரை எல்லாம் உதாசீனம் செய்து அவமானப் படுத்தி விருந்தி லிருந்து வெளியேற்றினரோ அவர்களெல்லாம் அவரின் குரலிலே இசையிலே மதிமயங்கித் தெய்வீகக் கீதம் இதய மெல்லாம் நிரம்ப மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர். சிலர் போற்றிப் புகழ்ந்து பாராட்டினர். பலர் சபித்தனர்.

ஜலால் பாஷா கோபக் கனல் கக்க அடிபட்ட சிங்கம் போல் மாளிகைக் கூடத்திலே மேலும்

கீழும் சிங்கநடை போட்டார். பாலைத் திட்டித் தீர்த்தார். விருந்தினர்கள் ஆடுவதையும் உண்பதையும் விட்டுவிட்டு அவர் பாடலிலே மயங்கி மகிழ்ந்தனர். இப்போது இதுவே முடிவு. நீங்கள் இந்த மாமனிதரை பற்றி என்ன நினைக்கின்றீர்? பால் பேரறிவாளரா? பைத்தியக்காரரா?

கலீல் : நான் பால் அவர்களைக் குற்றம் குறை கூற மாட்டேன். எனக்கு அவரின் அந்தரங்கமும் நோக்கத்தின் இரகசியமும் தெரிந்ததாக நினைக்கவில்லை. இது ஒரு தனிமனித சங்கதி. இது அவரை மட்டுமே சார்நத்து. ஒரு கலைஞனின் குணத்தை உணர்கின்றேன். அதிலும் ஒரு இசைக் கலைஞன் சாதாரண மக்களைவிட வேறுபட்டவன், மாறு பட்டவன். சாதாரண அளவு கோலைக் கொண்டு இசைக் கலைஞனின் செயல் பாட்டை அளக்க முடியாது. நான் கலைஞன் என்று குறிப்பிடும்போது, இந்தக் கலைஞர்கள் தங்களின் கற்பனைக்கும் எண்ணங்களுக்கும் புதுப்புது உருவங்களை வார்த்தெடுப்பார்கள். அவையெல்லாம் நண்பர் களிடையேயும் மக்களிடையேயும் புதுமை யானதாக முன் அறிமுகம் அற்றதாக இருக்கும். மக்கள் மேற்கே பார்த்து நகரும்போது கலைஞர்கள் கிழக்கே ஓடுவார்கள். கலைஞனின் உள் மாற்றங்கள் அவனுக்கே புரியாது. கேளிக்கையில் திளைக்கும் மக்களிடையே அவன் ஒரு சோகத்தின் உருவம். துக்கம் தோய்ந்தோ ரிடையே அவன் மகிழ்ச்சி மிக்கவன்.

அவன் பலமிக்கவரிடையே ஒரு நோஞ்சான்; நோஞ்சான்களிடையே ஒரு பலவான். அவன் சட்டதிட்டங்களுக்கு மேற்பட்டவன். மக்கள்

விருப்பத்திற்கு ஆட்பட்டவனுமல்ல, கட்டுப் பட்டவனுமல்ல.

யூசப் அவர்களே; 'நுண்கலை பற்றிய உங்கள் கட்டுரைக்கும் பேச்சுக்கும் அர்த்தத்தில் வேறு பாடோ மாறுபாடோ இல்லை. மறுபடியும் திரும்பத்திரும்ப நான் கூறுவது இதுதான்:

''நீங்கள் முன்னிறுத்தும ஐரோப்பிய நாகரிக உணர்வு வெகுவிரையில் நம் சமுதாயத்தையும், நாடடையும் அழித்து ஒழித்துவிடும். இது உண்மை!''

யூசப் : நேற்று இரவு பால் நடந்து கொண்ட பழக்க வழக்கம் நடை உடை பாவனை எல்லாம் நீர் எதிர்க்கும் ஐரோப்பிய நாகரீகத்தின் தாக்கமா?

கலீல் : பால் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு நான் திகைக்கின்றேன். பாலிடம் எனக்கு உள்ள மதிப்பு மரியாதை வேறு.

யூசப் : பாலுக்கு அவர் விருப்பத்திற்கு ஏற்றபடி கலையையும் இசையையும் வெளிப்படுத்த உரிமையும் சுதந்திரமும் இல்லையா?

கலீல் : ஆம். விரும்பியபடியே செயல்பட அவருக்கு உரிமை உண்டு. இருப்பினும் நம்முடைய சமூகத்தின் பழக்கவழக்கம் இப்படிப்பட்ட சுதந்திரத்தை அளிக்கவில்லை. நம்முடைய மனம் அப்படி. நம் பழக்கவழக்கம் தனி மனிதனுக்கு அவன் விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதிப்ப தில்லை.பால் நேற்று இரவு நடந்துகொண்ட விதம் கண்டனத்துக்கு உட்பட்டதே.

ஏலன் : இந்தச் சம்பவம் குறித்து நாம் ஆர்வமுடன் விவாதிக்கின்றோம். பால் அவரின் கருத்து அறிய அவரும் விளக்கமளிக்கட்டுமே! கட்டாயம் அவரால் தன் செயலுக்குப்

பாதுகாப்பான வாதத்தை, விளக்கத்தக் கூற முடியும். அவருக்குத் திறமையும் தகுதியும் உள்ளன.

பால் : (நீண்ட மௌனத்திற்குப் பிறகு) சலீம் இதை ஆரம்பிக்கவில்லை. நேற்று இரவு நடந்ததெல்லாம் நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். கலீல் கூறியபடி நான் இப்போது விமர்சனத்திற்கு ஆட்பட்டிருக்கின்றேன். ஆகவே நான் இதற்கு விளக்கமளிக்க என் எண்ணங்களைக் கூற அவசியம் உண்டு.

நீண்ட நெடுங்காலமாக நான் உங்கள் விமர்சனத் திற்கு உள்ளாகியிருக்கின்றேன். நான் கெட்டுவிட்டவன், மரியாதைக்கும் போற்றுதலுக்கும் தகதி அற்றவன் என்கின்றீர். இந்தக் கடுமையான விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் என்ன காரணம்? என் குணம், கொள்கை, கோட்பாடு இவற்றின் மேல் தொடுக்க்கப்படும் தாக்குதல். என்ன நானே மாற்றிக்கொள்ள முடியாது. விரும்பினாலும் மாறவே மாட்டேன். இதுவே என் சுதந்திரம், இதை விற்கவும் மாட்டேன்; புகழ் உரைகளால் அதை யாராலும் வாங்கவோ, அழிக்கவோ முடியாது. இந்த நகரத்திலே ஏராளமான பாடகர்களும் சங்கீத வித்துவான்களும் வாழ்கின்றார். இங்கே கவிஞர்கள், அறிவாளிகள், விமர்சகர்கள் இருக்கின்றார்கள். பலப்பல பிச்சைக்காரர்கள் உள்ளனர். அவர்கள் எல்லாம் தங்கள் குரலை, பாடலை, அறிவை, மனசாட்சியைக் காசுக்கு விற்கின்றார்கள்; ஒரு தட்டு சோற்றுக்கும், ஒரு குவளை சாராயத் திற்கும் விலை போகின்றார்கள். நம்முடைய நவாப்புகளும் பெரும்புள்ளிகளும் கலைஞர்

களை மிகவும் மலிவான விலைக்கு வாங்கிவிடு கின்றார்கள். அவர்களைக் காட்சிப் பொருளாக்கு கின்றார்கள்.

தெருக்களிலே தங்கள் கோச் வண்டி, குதிரை இவற்றை ஓடவிட்டுப் பெருமையைப் பறை சாற்றுவதுபோல், இவர்களை அரண்மனை ஆடல் பாடல் கூடங்களிலே மணிமண்டபங் களிலே பாட, பேச, ஆட வைத்து பெருமைப் படுகின்றார்கள்.

ஆம். இவர்களுடைய அடிமைகளைவிட கவிஞரும், பாடகரும், நாட்டியக்காரரும் கொஞ்சம் மேம்பட்டவர்கள்தான். இவர் களைத் திருமண விழாவிலே பாட அழைக் கின்றார்கள்; விருந்து உபசாரத்தில் பேசவும், சவ ஊர்வலத்தில் தேம்பி அழவும், சுடுகாட்டிலே புகழ்பாடவும், கூலிக்கு மாரடிக்க வைக்கின்றார். இவர்கள் இன்பம், துன்பம், சோகம் இவைகளை இசைக்கும் பொறிகள்? கருவிகள். முக்கிய நிகழ்ச்சிகள் இல்லாதபோது இந்தப் பேசும் இயந்திரங்கள் ஊமைகளாய்க் கேட்பாரற்று மூலையில் முடங்கிக் கிடக்கும். நான் பணக்காரரைக் குற்றம் குறை கூற மாட்டேன். இந்தப் பாடகர், அறிவாளி, பேச்சாளர், கவிஞர் அனை வருக்கும் தன்மானம் சுயமரியாதை எதுவுமே யில்லை. இவர்களால் சிறிய சலுகைகளை உதறித் தள்ள முடியவில்லை. மானம் கெட்டு வாழ்வதை விடச் சாவே தமேல் என்று எண்ணத் தோன்றவில்லை. மனிதத் தன்மையே மானபங்கப்படுத்தப்படும் அவல நிலையை எதிர்த்து இறக்கத் துணிவு இல்லவே இல்லை.

கலீல் : (உணர்ச்சிவசப்பட்டு) ஆனால் விருந்தாளி

களும் விருந்தளிப்பவரும் நீங்கள் பாடும்படி கெஞ்சி கேட்டுக் கொண்டனரே! உங்கள் பாடல் அவமானப்படுத்தப்பட்டது என்று எப்படி கூறலாம்?

பால் : என்னால் பாஷாவின் மாளிகையில் பாட முடிந் திருந்தால் நான் மகிழ்ச்சியாகப் பாடி இருப்பேன். நேற்று இரவு சுற்றுமுற்றும் பார்த்தேன். பணக்காரர்கள் நிறைந்து இருந்தனர். அவர்களின் காதுகளுக்குப் பொற் காசுகளின் ஓசைதான் இனிக்கும்; சுவைக்கும். அவர்களின் ஞானமே மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சித் தங்களை மேலும் மேலும் உயர்த்திக் கொள்வதே! வாழக்கைச் சித்தாந்தமே இதில் தான் உள்ளது.

அப்படிப்பட்ட மனிதர்களுக்கு இன் னிசைக்கும் நாயின் குரைப்புக்கும் வேறுபாடு தெரியாது. உண்மையான பண்ணிசைக்கும் டப்பாங்குத்துப் பாட்டிற்கும் வேறுபாடு புரியாது. என்னால் குருடர்களுக்கு ஐம்பொன் சிலைகளைச் செய்து காட்ட முடியாது; செவிடர் களுக்குத்தெய்வீக கீதத்தின் இன்னிசையைச் செவி வழியே இசைக்க முடியாது.

இன்னிசை என்பது மனித உள்ளுணர்வின் மொழி. மறைந்திருக்கும் மின்சார சக்தி பாடகனின் துடிக்கும் இதயத்தையும் கேட்பவரின் ஆத்மாவையும் துடிக்கச் செய்ய வல்லது. யாரால் கேட்கவும் முடியாமல் புரிந்து கொள்ளவும் இயலவில்லையோ அவர்களுக்கு இசைக் கலைஞனின் இதயத்தின் விரிவை, கொள்ளளவை அளந்து கணக்கிட இயலாது. இன்னிசை என்பது 'வைலனின்' உணர்ச்சி துடிக்கும் நரம்பு? கம்பிகள். இவை தளர்ந்து விட்டால் இசையே வராது. செயலற்றுவிடும்.

நேற்று இரவு பாஷாவின் மாளிகையிலே வந்து கலந்து கொண்ட விருந்தினரைக் கண்டவுடன் என் ஆத்மாவின் கம்பிகள் எல்லாம் தளர்ந்து தொங்கிவிட்டன. நான் அங்குப் பார்த்தவர் பலரும் பொய்யான தோற்றமும் காலியான நெஞ்சமும் கொண்டவர்களே; மடையர்களும் மலடுகளுமே; ஆணவம், அகங்காரம் கொண்டு வீண் பகட்டு செய்து நடிப்பவர்களே. என்னைப் பாடச் சொல்லி வேண்டினர்; நானோ மறுத்து பராமுகமாய் இருந்து விட்டேன். விலைக்கு வாங்கிய தவளைகளாய் ஓலமிட்டிருந்தால் யாருமே செவி சாய்த்துக் கேட்டிருப்பார்களா? இல்லை.

கலீல் : (ஏளனமாய் நையாண்டி செய்து) நீங்கள் அபீப்பின் வீட்டிற்குப் போய் நடு இரவிலிருந்து பொழுது புலரும் வரை பாடிப் பாடிக் களித்தீர்கள். இல்லையா?

பால் : நான் பாடினேன். ஏன்? என் உள்ளமெல்லாம் உயிரெல்லாம் நிறைந்து வழிந்த இன்னிசையைப் பொழிந்தேன். இரவைத் தூற்றினேன். காலம், நேரம், உலகம் அனைத்தையும் குற்றம் சாட்டினேன். பாஷாவின் மாளிகையில் என் ஆத்மாவின் நரம்புகள் தளர்ந்து தோய்ந்து விட்டன. அதை அபீப்பின் வீட்டில் முறுக்கேற்றி முடுக்கி இசைக்க வைத்தேன்.

நீங்கள் என்னைப் பற்றி, இன்னிசை பற்றி என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு எல்லாச் சுதந்திரமும் உண்டு.

இசைக்கலை என்பது வானவெளியிலே உயர உயரப் பறந்து விண்ணைத் தொட வல்லது? மண்மேல் மகிழ்ச்சியாக நடந்து திரிந்து

கர்ஜனை செய்ய வல்லது. யாராலும் அதன் குணத்தை மாற்ற முடியாது. கலையை யாராலும் விற்கவும் முடியாது, வாங்கவும் இயலாது. நம் நாட்டினர் இந்த உண்மையை நன்றாக உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய கலைஞர்கள் சிவப்பு கந்தகத்தைப் போல் மிகவும் அரிதான வர்கள். அவர்களை மரியாதையுடன் நடத்துங்கள்! அவர்கள் தெய்வீகத் திராட்சைரசம் நிறைந்த மதுக் கிண்ணம் போன்றவர்கள்.

யூசப் : பால்? நீங்கள் கூறுவதை நானும் ஒப்புக் கொள் கின்றேன். நான் புதுமையாகப் பலவற்றை அறிந்து கொண்டேன். நீங்கள்தான் உண்மையான உயர்வான கலைஞர். நான் கலையை ரசிக்கும் ஒரு ரசிகன். கலையை உணர்ந்து அறியத் தேடி அலைபவன். நமக்குள் மாறுபாடு, வேறுபாடு உள்ளன. அதற்கு உதாரணம் பழைய திராட்சை ரசத்திற்கும் புதிய புளிப்பான திராட்சைச் சாற்றுக்கும் உள்ள வித்தியாசம் போன்றது.

கலீல் : எனக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை. எனக்கு எதுவுமே திருப்தி ஏற்படுத்திவிடாது. உங்கள் தத்துவத்தின் அடிப்படையே வெளி நாட்டுத் தாக்கத்தால் உண்டான நோய்.

யூசப் : நீங்கள் நேற்று இரவு பால் பாடிய பாடல்களைக் கேட்டிருந்தால் அதை நோய் என்று எண்ண மாட்டீர். (இந்த நிலையில் பணிப்பெண் உள்ளே வந்து உணவும், மதுவும் தயார், வாருங்கள் என்றாள்)

யூசப் : (இருக்கையை விட்டு எழுந்தார்) இன் விருந்து தயார். பால் அவர்களின் குரலைப்போல இன்பம் பயக்கும்.

(எல்லோரும் எழுந்தார்கள். யூசப், சலீம், கலீல்

மூவரும் கூடத்தை விட்டு வெளியேறினர். ஏலன், பால் இருவரும் கண்ணொடு கண் நோக்கிப் புன்னகை பூத்தனர்.)

ஏலன் : (மென்மையாக முணுமுணுத்தாள்). நேற்று இரவு நீங்கள் பாடிய பாடலெல்லாம் நான் கேட்டேன். தெரியுமா?

பால் : அன்பே? நீ என்ன சொல்கிறாய் அன்பே?

ஏலன் : (நாணத்துடன் முகம் உலர்ந்து) நான் என் சகோதரி மேரியின் வீட்டில் இருந்தேன். உங்கள் பாடல் களை எல்லாம் ஆனந்தமாய்க் கேட்டேன். ஆகவே துணைக்குப் போய் இருந்தேன். அவள் மிகவும் பயப்படுவாள்.

பால் : உம் சகோதரி பைன் பார்க்கில் உள்ளரா?

ஏலன் : இல்லை, அபீப் வீட்டிற்கு எதிரே தெருவின் மறு பக்கம்தான் இருக்கின்றாள்.

பால் : என் இன்னிசையை முழுமையாய் ரசித்துக் கேட்டாயா?

ஏலன் : ஆம், உங்கள் ஆத்மாவின் அழைப்பை நடுநிசி முதல் பொழுது புலரும் வரை ரசித்து ருசித்தேன். கடவுளே உங்கள் இனிய குரலில் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தேன்.

யூசப் : (பக்கத்து அறையிலிருந்து கூப்பிட்டார்) இன் விருந்து குளிர்ந்துவிடுகிறதே! (ஏலன், பால் இருவரும் விரைந்தனர்)

(திரை விழுகிறது)

○○○

வேமன் பதிப்பகம்

19, நியூ காலனி, ஜோசியர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

ஆ.மா. சகதீசனின் மொழிபெயர்ப்புகள்:

1. உமர்கயாம் பாடல்கள் 1096.

(2 தொகுதிகள் விரிவாக. வசன கவிதை)
சுவாமி கோவிந்த தீர்த்தர் ஆங்கிலம், சகதீசன் தமிழ்

2. கலீல் ஜிப்ரான் நூல்கள்

1. ஞானம்; காதல், இதயம் (3 நூல்களின் தொகுதி)
2. லெபனானின் மனிதன் (கலீல் ஜிப்ரான்)
3. உருவகக் கதைகள் வாழ்க்கை வரலாறு
4. ஆத்ம புரட்சி (6 சிறுகதைகள்)
5. நாடோடி, தீர்க்கதரிசி, ஊர்வலம், பூலோகக் கடவுள் (4 நூல்களின் தொகுதி)
6. சிந்தனையும் புன்னகையும் (3 நூல்கள்)
7. புனித போதனைகள் (4 நூல்கள் தொகுதி)
8. கலீல் ஜிப்ரான் பூந்தோட்டம் (3 நூல்கள்)
9. ஞான மொழிகள் ஆத்ம தரிசனம் (2 நூல்கள்)
10. கலீல் ஜிப்ரான் முறிந்த சிறகுகள், 4 நாடகங்கள் (4 நூல்கள்)

3. மற்ற நூல்கள்

1. ஈசாப் நீதிக் கதைகள்
2. பெண் பொம்மையா? பட்டாம்பூச்சியா?
3. ஹிப்னாட்டிசம்